இனம் பேணற் கென்றெழுந்த வின்குறட்குத் தந்தம்
மனம்போன வாறு மயங்கிப் – புனைந்துரைத்த
பான்மை தவிர்த்துநூற் பாங்குரைத்தார் பாவாணர்
மேன்மை பிறங்கிற்று மேல்.

நரிசூ லுறவரிமா நல்கிதென்றே யற்றைப்
பரிமே லழகர் பயந்துரைத்தார்; ஒற்றைப்
புரிமேல் கரிநடந்த பொய்யைப்பா வாணர்
எரிமே லேறிந்தா ரிகழ்ந்து.

வல்லார்ந்த செந்தமிழில் வாய்ந்த திருக்குறள்போல்
சொல்லார்ந்த மற்றவற்றில் சொல்லரிதாம் – சொல்லார்ந்த
செந்தமி முள்ளுஞ் செயவரிதாம் பாவாணர்
முந்துரை செய்நூன் முறை.


– பாவலரேறு பெருஞ்சித்திரனார்

‘பெரியார் குடில்’
பி.11. குல்மொகர் குடியிருப்பு,
35, செவாலியே சிவாசி கணேசன் சாலை,
தியாகராயர்நகர், சென்னை – 17.

பாவாணர் தமிழ்க்களஞ்சியம் 3

# பாவாணர்

# தமிழ்க்களஞ்சியம்–3



## திருக்குறள் தமிழ் மரபுரை

பொருட்பால் – 2

தமிழ்மண் அறக்கட்டளை

# பாவாணர்
## தமிழ்க் களஞ்சியம்

3

### திருக்குறள் தமிழ் மரபுரை – 3

*உரையாசிரியர்*

மொழிஞாயிறு **ஞா. தேவநேயப் பாவாணர்**

**தமிழ்மண் அறக்கட்டளை**

*சென்னை - 600 017*

நூற் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | **பாவாணர் தமிழ்க் களஞ்சியம் - 3** |
| உரையாசிரியர் | : | மொழி ஞாயிறு ஞா.தேவநேயப்பாவாணர் |
| பதிப்பாளர் | : | கோ. இளவழகன் |
| முதல் பதிப்பு | : | 1967 |
| மறுபதிப்பு | : | 2009 |
| தாள் | : | 16 கி வெள்ளைத்தாள் |
| அளவு | : | 1/8 தெம்மி |
| எழுத்து | : | 11 புள்ளி |
| பக்கம் | : | 8 + 256 = 264 |
| நூல் கட்டமைப்பு | : | இயல்பு (சாதாரணம்) |
| விலை | : | உருபா. **245/-** |
| படிகள் | : | 1000 |
| நூலாக்கம் | : | பாவாணர் கணினி<br>தி.நகர், சென்னை - 17. |
| அட்டை வடிவமைப்பு | : | வ. மலர் |
| அச்சிட்டோர் | : | ஸ்ரீ வெங்கடேசுவரா<br>ஆப்செட் பிரிண்டர்சு<br>இராயப்பேட்டை, சென்னை - 14. |

வெளியீடு

**தமிழ்மண் அறக்கட்டளை**

***"பெரியார் குடில்"***

பி.11 குல்மொகர் குடியிருப்பு,

35 செவாலிய சிவாசி கணேசன் சாலை, தியாகராயர் நகர்,

சென்னை - 600 017. தொ.பே. 2433 9030

மின்னஞ்சல் : tm_pathippagam@yahoo.co.in

இணையதளம் : www.tamilmann.in

# பதிப்புரை

*தமிழுக்கும் தமிழருக்கும் வளமும் வலிமையும் சேர்க்கக் கூடிய பழந்தமிழ் நூல்களையெல்லாம் தேடியெடுத்துத் தமிழ் கூறும் உலகிற்கு வழங்கும் தொலைநோக்குப் பார்வையுடன்* ***தமிழ்மண் பதிப்பகம்*** *தொடங்கப்பட்டது. அதன் வாயிலாக மொழிஞாயிறு பாவாணரின் நூற்றாண்டு நினைவாக அவர் எழுதிய நூல்கள் அனைத்தையும் சேர்த்து அவருடைய மறைவுக்குப் பிறகு 2000-த்திலும், பல்வேறு இதழ்களிலும், மலர்களிலும் வெளிவந்து, நூல் வடிவம் பெறாத பாவாணரின் அரிய கட்டுரைகளை எல்லாம் தொகுத்து 2001- லும் ஒருசேர வெளியிட்டு உலகெங்கும் உள்ள தமிழர்களுக்கு வழங்கினோம். பாவாணர் வழி நிலை அறிஞர்களான முதுமுனைவர்* ***இரா. இளங்குமரனார்*** *அவர்களும், மருத்துவர்* ***கு.பூங்காவனம்*** *அவர்களும் இவ்வரிய கட்டுரைப் புதையல்கள் நூல் வடிவம் பெறுவதற்கு மிகவும் உறுதுணையாக இருந்தனர். இப்பெருமக்களை நன்றியுணர்வுடன் நினைவுகூர்கிறேன்.*

*“சொல்லாராய்ச்சித் துறையில் தேவநேயர் ஒப்பற்ற தனித் திறமையுடைவர் என்று* ***மறைமலையடிகளும்,*** *நாவலந் தீவுக்கு நந்தமிழே தாயென்று* ***பாவேந்தரும்,*** *தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் நற்றொண்டு ஆற்றியவர் பாவாணர் என்று* ***பேரறிஞர் அண்ணா*** *அவர்களும், வெட்ட வெட்டக் கிடைக்கும் தங்கச் சுரங்கம் போன்றவர் என்று தமிழிறிஞர்* ***இராசமாணிக்கனாரும்,*** *தமிழகம் மொழித்துறையிலே பாவாணர் போன்ற ஒரு அறிஞரை இன்னும் பெற்றுத் தரவில்லை என்று* ***பன்மொழிப் புலவர் அப்பாத்துரையரும்,*** *குறைமதியர் தேக்கிவைத்த கரையிருளை நீக்க வந்த மறைமலையார் வழிவந்த நிறைமலையார் பாவாணர் என்று மேனாள் பேரவைத்தலைவர்* ***தமிழ்குடிமகன்*** *அவர்களும், தமிழர் யார்? எதிரிகள் யார்? என்று ஆய்ந்து அறிந்து காட்டியவர் பாவாணர் என்று பேராசிரியர்* ***இளவரசு*** *அவர்களும், ஓராயிரம் ஆண்டுகள் ஓய்ந்து கிடந்தபின் வாராது போல வந்த மாமணி” பாவாணர் என்று முதுமுனைவர்* ***இளங்குமரனார்*** *அவர்களும் குறிப்பிட்டுள்ள பெருமைகளுக்குரிய பேரறிஞரின் நூல்களை மீள்பதிப்பக வெளியிடுவதில் பெருமை கொள்கிறேன்.*

“பாவாணர் நூல்கள் அத்தனையும் தமிழ்மொழிக்கு ஏற்றம் உரைப்பன. தமிழை ஆரிய இருளினின்று மீட்டுக் காப்பன. வீழ்ந்து பட்ட தமிழனுக்கு விழிப்பூட்ட வல்லன. ஆயிரமாயிரம் ஆண்டுகளாக அடிமைப்பட்டுக்கிடக்கும் தமிழ்மொழியை மீட்கவல்லது” என்று பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் கூற்றை இக் களஞ்சிய வெளியீட்டில் பதிவு செய்வது எமது கடமையாகும்.

பாவாணரைத் தூக்கிப் பிடித்தால்தான் தமிழினம் உருப் படமுடியும் - உயரமுடியும். பாவாணர் கொள்கைகள் தமிழர் உள்ளமெல்லாம் நிலைத்து நிற்பதற்கும், பாவாணர் நூல்கள் தமிழர் இல்லமெலாம் இடம் பெறுவதற்கும் முன் குறிப்பிட்ட 2000 - 2001 காலக்கட்டத்தில் வெளியிடப்பட்ட பாவாணரின் அறிவுக் கருவூலங்களையெல்லாம் ஒட்டு மொத்தமாக சேர்த்து ஒரே வீச்சில் **பாவாணர் தமிழ்க் களஞ்சியம்** எனும் தலைப்பில் எம் அறக்கட்டளை வெளியிடுகிறது.

மறைக்கப்பெற்ற மாபெரும் வரலாற்றையும், சிதைக்கப் பெற்ற ஒப்புயர்வுயற்ற மொழியையும் கொண்ட தமிழினத்தின் முன்னேற்றம் கருதி இவ்வருந்தமிழ் புதையல்களை தமிழ் கூறும் நல்லுலகிற்கு வழங்க முன் வந்துள்ளோம். தமிழ் மொழியை மூச்சாகவும், பேச்சாகவும், செயலாகவும் கொண்டு ஒருநாளின் முழுப்பொழுதும் தமிழாகவே வாழ்ந்த செம்புலச்செம்மல், தனித்தமிழ்க் கதிரவன் மொழிஞாயிறு பாவாணர் நூல்களை வாங்கிப் பயன் கொள்வீர்.

இளமையிலேயே பொதுத்தொண்டிலும், தனித்தமிழ் இயக்கத் தொண்டிலும் நான் ஈடுபாடு கொள்வதற்குக் காரணமாக இருந்தவர்கள் **பெரும்புலவர் நக்கீரன்** அவர்களும், அவர்தம் இளவல் **புலவர் சித்திரவேலன்** அவர்களும் ஆவர். இவர்களை இவ்வெளியிட்டின் வாயிலாக நன்றியுணர்வோடு நினைவு கூறுகிறேன். தந்தை பெரியாரின் தன்மதிப்பு இயக்கக் கொள்கை களாலும், மொழிஞாயிறு பாவாணரின் தனித்தமிழ் இயக்கக் கொள்கைகளாலும் ஈர்க்கப்பட்டவன். அத்தகு பின்புலத்தோடு பதிப்புப்பணியில் என் காலடிச் சுவடுகளைப் பதித்து வருகிறேன்.

**கோ. இளவழகன்,**
**பதிப்பாளர்.**

# அதிகார அகரவரிசை

## பொருட்பால் - 3 (உறுப்பியல்)


1. அமைச்சு ........................................ 1
2. அரண் ........................................ 60
3. அவையஞ்சாமை ........................ 49
4. அவையறிதல் ............................. 42
5. இகல் ........................................ 121
6. இரவச்சம் ................................ 235
7. இரவு ........................................ 130
8. உட்பகை .................................... 135
9. உழவு ........................................ 219
10. கயமை ..................................... 240
11. கள்ளுண்ணாமை ................... 157
12. குடிசெயல்வகை ..................... 214
13. குடிமை ..................................... 182
14. குறிப்பறிதல் (பொருள்) ........... 37
15. கூடா நட்பு ............................... 106
16. சான்றாண்மை ......................... 197
17. சூது ........................................ 162
18. சொல்வன்மை ............................... 7
19. தீ நட்பு ...................................... 102
20. தூது ........................................ 126
21. நட்பாராய்தல் ............................. 92
22. நட்பு ........................................ 87
23. நல்குரவு .................................. 225
24. நன்றியில் செல்வம் ................ 205
25. நாடு ........................................ 54
26. நாணுடைமை ........................... 210
27. பகைத்திறந் தெரிதல் .............. 130
28. படைமாட்சி ................................ 74
29. படைச் செருக்கு ....................... 81
30. பகைமாட்சி .............................. 195
31. பண்புடைமை ............................ 201
32. பழைமை ..................................... 97
33. புல்லறிவாண்மை ...................... 116
34. பெண்வழிச் சேறல் ................. 144
35. பெரியாரைப் பிழையாமை ...... 139
36. பெருமை .................................. 192
37. பேதைமை .................................. 111
38. பொருள் செயல்வகை .............. 68
39. மருந்து ..................................... 168
40. மன்னரைச் சேர்ந்தொழுகல் .. 32
41. மானம் ...................................... 187
42. வரைவின் மகளிர் ................... 149
43. வினை செயல்வகை ................. 21
44. வினைத்திட்பம் .......................... 16
45. வினைத்தூய்மை ........................ 12

# உள்ளடக்கம்

பக்கம்

*பதிப்புரை* ... iii
*குறுக்க விளக்கம்* ... v
*அதிகார அகரவரிசை* ... vi

## II பொருட்பால் - 3 (உறுப்பியல்)

2. உறுப்பியல்

1. அமைச்சு

(1) அமைச்சு (அதி. 64) ... 1
(2) சொல்வன்மை (அதி. 65) ... 7
(3) வினைத்தூய்மை (அதி. 66) ... 12
(4) வினைத் திட்பம் (அதி. 67) ... 16
(5) வினை செயல்வகை (அதி. 68) ... 21
(6) தூது (அதி. 69) ... 26
(7) மன்னரைச் சேர்ந்தொழுகல் (அதி. 70) ... 32
(8) குறிப்பறிதல் (அதி. 71) ... 37
(9) அவையறிதல் (அதி. 72) ... 42
(10) அவையஞ்சாமை (அதி. 73) ... 49

2. நாடு

நாடு (அதி. 74) ... 54

3. அரண்

அரண் (அதி. 75) ... 60

4. பொருள் (கூழ்)

பொருள் செயல்வகை (அதி. 76) ... 68

5. படை

(1) படைமாட்சி (அதி. 77) ... 74
(2) படைச்செருக்கு (அதி. 78) ... 81

6. நட்பு

(1) நட்பு (அதி. 79) ... 87

| | | | | |
|---|---|---|---|---|
| (2) | நட்பாராய்தல் | (அதி. 80) | ... | 92 |
| (3) | பழைமை | (அதி. 81) | ... | 97 |
| (4) | தீ நட்பு | (அதி. 82) | ... | 102 |
| (5) | கூடா நட்பு | (அதி. 83) | ... | 106 |
| (6) | பேதைமை | (அதி. 84) | ... | 111 |
| (7) | புல்லறிவாண்மை | (அதி. 85) | ... | 116 |
| (8) | இகல் | (அதி. 86) | ... | 121 |
| (9) | பகைமாட்சி | (அதி. 87) | ... | 125 |
| (10) | பகைத்திறந் தெரிதல் | (அதி. 88) | ... | 130 |
| (11) | உட்பகை | (அதி. 89) | ... | 135 |
| (12) | பெரியாரைப் பிழையாமை | (அதி. 90) | ... | 139 |
| (13) | பெண்வழிச் சேறல் | (அதி. 91) | ... | 144 |
| (14) | வரைவின் மகளிர் | (அதி. 92) | ... | 149 |
| (15) | கள்ளுண்ணாமை | (அதி. 93) | | 157 |
| (16) | சூது | (அதி. 94) | ... | 162 |
| (17) | மருந்து | (அதி. 95) | ... | 168 |
| (18) | குடிமை | (அதி. 96) | ... | 182 |
| (19) | மானம் | (அதி. 97) | ... | 187 |
| (20) | பெருமை | (அதி. 98) | ... | 192 |
| (21) | சான்றான்மை | (அதி. 99) | ... | 197 |
| (22) | பண்புடைமை | (அதி. 100) | ... | 201 |
| (23) | நன்றியில் செல்வம் | (அதி. 101) | ... | 205 |
| (24) | நாணுடைமை | (அதி. 102) | ... | 210 |
| (25) | குடி செயல்வகை | (அதி. 103) | ... | 214 |
| (26) | உழவு | (அதி. 104) | ... | 219 |
| (27) | நல்குரவு | (அதி. 105) | ... | 225 |
| (28) | இரவு | (அதி. 106) | ... | 230 |
| (29) | இரவச்சம் | (அதி. 107) | ... | 235 |
| (30) | கயமை | (அதி. 108) | ... | 240 |
| | அருஞ்சொற்பொருள் அகரமுதலி | | ... | 245 |
| | பாட்டு முதற்குறிப்பு அகரவரிசை | | ... | 251 |

# திருக்குறள்

# தமிழ் மரபுரை

## III பொருட்பால் – 3 (உறுப்பியல்)

# 2

# உறுப்பியல்

*இதுகாறும் அரசன் இலக்கணங்களையும் கடமைகளையும் வினை செ-யும் முறைகளையும் கூறியவர், இனி அரசியலின் ஏழுறுப்புகளையும் 45 அதிகாரத்தால் கூறுமாறு எடுத்துக்கொண்டு, அவற்றுள் ஆட்சிக்கு இன்றியமையாத துணையும் அரசனுக்கு அடுத்தபடியாகச் சிறப்பு வா-ந்த வனுமான அமைச்சன் இயலையுஞ் செயலையும் பத்ததிகாரத்தாற் கூறத் தொடங்கி, முதற்கண் அமைச்சிலக்கணங் கூறுகின்றார்.*

## அதி. 64 - அமைச்சு

*அதாவது, அமைச்சனின் இலக்கணமுங் கடமையும்.*

**631.** ***கருவியுங் காலமுஞ் செ—கையுஞ் செ—யு***
***மருவினையு மாண்ட தமைச்சு.***

**(இ-ரை.)** கருவியும் - வினைக்கு வேண்டுங் கருவிகளும்; காலமும் - அதற்கேற்ற காலமும்; செ-கையும் - அதைச் செ-யும் வகையும்; செ-யும் அருவினையும் - அவ்வகையிற் செ-யும் அரிய வினையும்; மாண்டது அமைச்சு - வெற்றிபெற எண்ணும் ஆற்றலிற் சிறந்தவனே அமைச்சனாவான்.

'கருவிகள்' படையும் படைக்கலமும் பொருளும் துணையும். 'காலம்' தொடங்கி முடிக்குங் காலங்கள். 'செ-கை' நால்வகை ஆம்புடையும் (உபாயமும்), தொடங்கும் வகையும், கையாளும் விரகும் (தந்திரமும்), இடையூறு நீக்கும் வழியும் ஆம். பெரும்பயன் தரும் சிறந்த வினை யென்பார் 'அருவினை' என்றார். 'அமைச்சு' சொல்லால் அஃறிணையாதலின் அத் திணைமுடிபு கொண்டது. இதே பின்னுங் கொள்க.

"இவை யைந்தனையும் வடநூலார் மந்திரத்திற் கங்க மென்ப" என்று பரிமேலழகர் கூறுவதால், வடநூலுக்குத் தமிழ்நூல் முதனூலானமை தெளி வாம். இக் குறளிற் கூறப்பட்டவை நான்கேயன்றி ஐந்தல்ல. செ-கையைத் தொடக்கமும் முடிவும் என இரண்டாக வடநூலார் பிரித்தது வீணான பிற்கால விரிவுபாடாகும். திருக்குறளை வடநூல் வழியதாகக் காட்டல் வேண்டியே, 'செ-கை' எனவே, அது தொடங்கு முபாயமும் இடையூறு நீக்கி முடிவு போக்குமாறும் அடங்கின" என்று பரிமேலழகர் தம் நச்சுக் கருத்தை வெளி யிட்டுள்ளார் என்க.

## 632. வன்கண் குடிகாத்தல் கற்றறித லாள்வினையோ டைந்துடன் மாண்ட தமைச்சு.

**(இ-ரை.)** வன்கண் - மனவுறுதியும்; குடி - நற்குடிப் பிறப்பும்; காத்தல் - குடிகளைக் காத்தலும்; கற்றறிதல் - அறநூல்களையும் அரசியல் நூல்களையும் கற்று வேண்டுவன விலக்குவன அறிதலும்; ஆள் வினையோடு - முயற்சியோடுகூடிய; ஐந்து உடன் மாண்டது அமைச்சு - ஐங்கூறுகளும் ஒருங்கே சிறப்பாக அமைந்தவனே அமைச்சனாவான்.

'குடி' யென்றது வேளாண்குடியை. இதை,

**"நூலெனிலோ கோல்சாயும் நுந்தமரேல் வெஞ்சமராம்**
**கோலெனிலோ வாங்கே குடிசாயும் – நாலாவான்**
**மந்திரியு மாவான் வழிக்குத் துணையாவான்**
**அந்த வரசே யரசு"** **(ஔவையார் தனிப்பாடல்)**

என்பதனால் அறிக. 'குடிகாத்தல்' என்பதனை ஒன்றாக்கிக் 'கற்றறிதல்' என் பதைக் கற்றலும் அறிதலும் என இரண்டாகப் பகுத்தல் ஒருசிறிதும் பொருந் தாது. கற்றலே அறிதல் ஆதலின், அது இரண்டாகாமை அறிக. 'ஐந்தும்' என்னும் முற்றும்மை தொக்கது. ஆள்வினையோடு கூடி என எச்சமாக்கின், இவ் வைந்தும் எனச் சுட்டு வருவிக்க.

பரிமேலழகர் முந்தின குறளில் நாற்கூற்றை ஐங்கூறாக்கிய குற்றத்தை நிலைநிறுத்தவே, இக் குறளில் ஐங்கூற்றை நாற்கூறாக்கிக் "குடிகாத்தல் - குடிகளைக் காத்தலும்"என்று உரை கூறினார். மேலும், மேற்குறளிற்கும் இதற்கும் முடிபோட்டு, "மேற்சொல்லிய அவ் வங்கங்க ளைந்துடனே திருந்த வுடையானே அமைச்சனாவான்" என்றும், 'அவ் வைந்தெனச் சுட்டு வரு

விக்க. இந் நான்கனையும் மேற்கூறியவற்றோடு தொகுத்துக் கூறியது, அவையு மவற்றோடு கூடியே மாட்சிமைப்பட வேண்டுதலானும் அவற்றிற்கு ஐந்தென்னும் தொகை பெறுதற்கும்'' என்றும், ''ஒரு பொ-யை மறைக்க ஒன்பது பொ- சொல்ல வேண்டும்'' என்னும் பழமொழியை மெ-ப்பித்தார். மேற்குறள் ஒழுங்காக எண்ணும்மை பெற்றுத் தனியாக முடிந்து நிற்பதையும் இவ் வதிகாரத்தின் முதலைந்து குறள்களும் அமைச்சனின் வெவ்வே றிலக்கணத்தைக் கூறித் தனித்தனி முடிந்து நிற்பதையும் நோக்குக.

## 633. *பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்*
## *பொருத்தலும் வல்ல தமைச்சு.*

**(இ-ரை.)** பிரித்தலும் - போர் வந்தவிடத்துப் பகைவரின் துணைவரை அவரினின்று பிரித்தலும்; பேணிக்கொளலும் - தம் துணைவரைத் தம்மி னின்று பிரியாவாறு இன்சொல்லாலும் கொடையாலும் பேணிக்கொள்ளுத லும்; பிரிந்தார்ப் பொருத்தலும் - முன்பு தம்மினின்றும் தம் துணைவரினின் றும் பிரிந்து போனவரைத் தேவையாயின் திரும்பவும் சேர்த்துக்கொள்ளு தலும்; வல்லது அமைச்சு - வல்லவனே அமைச்சனாவான்.

பிரித்தலுள், பகைவரின் துணைவரை ஒருவரோடொருவர் கூடாவாறு வேறுபடுத்தலும்; பேணிக்கொளலுள், புதிதாகத் தமக்கு நட்பாக வருபவரைப் போற்றிக் கொள்ளுதலும்; பிரிந்தார்ப் பொருத்தலும், உண்மையன் பில்லாதவரிடத்தில் தாமும் அன்புள்ளவர்போல் நடித்தலும் கோலின் அடங்கும். இனி இரசியமும் சீனமும் போலப் பகைவர் தாமாகப் பிரிந்து போம் போது அப் பிரிவினையை ஊக்குதலும், பிரித்தலுள் அடங்கும். இங்ஙனம் அவ்வப்பொழுதை நிலைக்கேற்றவாறும், சிலவற்றை மறைவாகவும் சில வற்றை வெளிப்படையாகவும் செ-யவேண்டியிருத்தலின், 'வல்லது' என்றார்.

## 634. *தெரிதலுந் தேர்ந்து செயலு மொருதலையாச்*
## *சொல்லலும் வல்ல தமைச்சு.*

**(இ-ரை.)** தெரிதலும் - ஒரு வினையைச் செ-யும் வகை பலவாகத் தோன்றின் அவற்றுட் சிறந்ததை அல்லது முழுவா-ப்பாக வுள்ளதை ஆரா-ந்து அறிதலும்; தேர்ந்து செயலும் - அங்ஙனம் அறிந்தபடி செ-யுங்கால் வெற்றிக் கேதுவான வழிகளைக் கையாளுதலும்; ஒருதலையாச் சொல்லலும் - சிலரைப் பிரித்தல் பேணுதல் பொருத்தல்பற்றி இன்னதே செ-யத்தக்க தென்று திட்டவட்டமாகச் சொல்லுதலும்; வல்லது அமைச்சு - வல்லவனே அமைச்சனாவான்.

ஐயுறவாகவும் கவர்படவும் சொல்லின் வெற்றியின்மையொடு கேடா கவும் முடியுமாதலின், 'ஒருதலையா' என்றார்.

## 635. *அறனறிந் தான்றமைந்த சொல்லானெஞ் ஞான்றுந்*
## *திறனறிந்தான் றேர்ச்சித் துணை.*

**(இ-ரை.)** அறன் அறிந்து ஆன்று அமைந்த சொல்லான் - அரசிய லறங்களை யறிந்து தனக்குரிய கல்விநிறைந்து அடங்கிய சொல்லையுடைய வனா-; எஞ்ஞான்றும் திறன் அறிந்தான் - எக்காலத்திற் கேற்பவும் வினை செ-யுந் திறங்களை அறிந்தவன்; தேர்ச்சித்துணை - அரசனுக்குச் சூழ்ச்சித் துணையாவான்.

இயற்கையால் தட்பவெப்பநிலை வேறுபட்ட காலங்களும், அரசனது செல்வநிலை வேறுபட்ட காலங்களும், பகையரசன் முன்னறிவிப்பின்றித் திடுமென்று வந்து தாக்குங் காலமும் உட்பட, 'எஞ்ஞான்றும்' என்றார். 'சொல்லான்' என்பதன் ஈற்றை ஒடுவுருபின் பொருளதாகிய ஆனுருபாகக் கொண்டு உரைப்பினும் பொருள் சிதையாதாம்.

## 636. *மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம்*
## *யாவுள முன்னிற் பவை.*

**(இ-ரை.)** மதி நுட்பம் நூலோடு உடையார்க்கு - இயற்கையான நுண் மதியைச் செயற்கையான நூலறிவோடு உடைய அமைச்சர்க்கு; அதிநுட்பம் முன் நிற்பவை யாஉள - சூழ்ச்சிக்கெட்டாத மிக நுண்ணிய செ-திகளாக எதிர்நிற்பவை எவை உள? எதுவுமில்லை.

மதிநுட்பம் இயற்கைப் பேறாதலின் முற்கூறப்பட்டது. நுண்மதியும் பரந்த நூலறிவு முடையார்க்குச் சூழ்ச்சியால் வெல்ல முடியாத சிக்கலான நிலைமை எதுவுமில்லை யென்பது கருத்து. 'நூல்', 'அதிநுட்பம்' என்பன ஆகுபொருளன. 'அதினுட்பம்' என்று பாடங்கொண்டு, "அதனினும் நுண் ணியவா- மாற்றாரால் எண்ணப்பட்டு எதிர்நிற்கும் வினைகள் யாவுள?" என்றுரைப்பர் மணக்குடவர்.

## 637. *செயற்கை யறிந்தக் கடைத்து முலகத்*
## *தியற்கை யறிந்து செயல்.*

**(இ-ரை.)** செயற்கை அறிந்தக் கடைத்தும் - நூலறிவால் வினைசெ-யுந் திறங்களை அறிந்தவிடத்தும்; உலகத்து இயற்கை அறிந்து செயல் - உலகியலை அறிந்து அதனொடு பொருந்தச் செ-க.

பல செ-திகளில் உலகியலும் நூலியலும் வேறுபட்டிருப்பதால், உலகியலொடு பொருந்தாதவற்றைச் செ-யற்க; செ-யின் உலகம் பழிக்கும் என்பதாம். 'கடைத்து' என்பதில் 'து' முதனிலைப் பொருளீறு (பகுதிப் பொருள் விகுதி). ''பள்ளிக் கணக்குப் புள்ளிக் குதவாது'' என்னும் பழமொழியும்,

**''உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்**
**கல்லா ரறிவிலா தார்''** **(140)**

என்னுங் குறளும் இங்குக் கவனிக்கத் தக்கன.

## 638. *அறிகொன் றறியா னெனினு முறுதி*
## *யுழையிருந்தான் கூறல் கடன்.*

**(இ-ரை.)** அறிகொன்று அறியான் எனினும் - அரசன் தன் அமைச்சர் அறிந்து கூறியவற்றை அழித்துத் தானும் அறியாதவனேயாயினும்; உறுதி கூறல் உழையிருந்தான் கடன் - அக் குற்றம் நோக்கி அவனை அவன் விருப்பம்போல் விட்டுவிடாது அவனுக்கு நன்மையானவற்றை எடுத்துச் சொல்லுதல் அமைச்சன் கடமையாம்.

அரசனது வெறுப்பைத் தேடிக்கொள்வதா யிருப்பினும், அவனுக்கு ஆக்கமானதைச் சொல்வதே அமைச்சன் கடமை என்பதாம். 'அறி' முதனிலைத் தொழிலாகுபெயர். அறிகொல்லுதலாவது, அறிவுரையைக் கொள்ளாததுடன் பழித்துங் கூறுதல். அரசனருகிலிருப்பதால் அமைச்சன் 'உழையிருந்தான்' எனப்பட்டான். அமைச்சன் உறுதி கூறாவிடின் அரசன் இறுதியடைவதற்கு அமைச்சனையே உலகம் பொறுப்பாளியாகக் கொள்ளுமாதலின், 'கூறல் கடன்' என்றார்.

''உழையிருந்தான்' எனப் பெயர் கொடுத்தார், அமாத்தியர் என்னும், வடமொழிப் பெயர்க்கும் பொருண்மை அதுவாகலின்'' என்றார் பரிமேலழகர். அமைச்சன், உழையிருந்தான் என்னும் இருபெயரும் தமிழ்ச்சொல்லேயென்பதைப் பின்னிணைப்பிற் காண்க.

## 639. *பழுதெண்ணு மந்திரியிற் பக்கத்துட் டெவ்வோ*
## *ரெழுபது கோடி யுறும்.*

**(இ-ரை.)** பழுது எண்ணும் மந்திரியின் - நன்மை செ-கிறவன் போல் அருகிலிருந்து கொண்டு தீமையை எண்ணும் அமைச்சன்

ஒருவனின்; பக்கத்துள் ஓர் எழுபது கோடி தெவ் உறும் - அரசனுக்குப் பக்கமாகவே எழுபது கோடிப் பகைவர் அமைவர்.

புறப்பகைவர் பலராயினும் அவருக்குத் தப்பமுடியும். அகப்பகை வராயின், அவருள்ளும் சூழ்ச்சித் துணையாயிருக்கும் அமைச்சனே வீழ்ச்சித் துணையாயிருப்பின், ஒருவனே யாயினும் தப்ப முடியாதாம். ஆதலால் 'பக்கத்துள் தெவ் எழுபது கோடியுறும்' என்றார். ஏழு என்பது நிறைவான எண்ணும் கோடி என்பது பேரெண்ணுமாதலால், எழுபது கோடி யென்றது உண்மையில் அதனினும் மிகப் பெரிய தொகையே. அதனால் அழிவிற்குத் தப்ப முடியாது என்னும் உண்மையைக் குறித்தார். அமைச்சன் என்றும் அரசனுக்குப் பக்கமாகவே யிருப்பவனாதலாலும், பழுதெண்ணும் மந்திரியால் வருங் கேட்டிற்குத் தப்பமுடியா தென்பதையே ஆசிரியர் வலியுறுத்த விரும்புவதாலும், 'பக்கத்துள் தெவ்' என்றே குறளிற் சொற்றொடர் நிற்றலா லும், 'பக்கத்துள்' என்னுஞ் சொல் 'தெவ்' என்பதையே தழுவுவதாம். பகைவர் மாபெருந் தொகையராயினும், சே-மையில் நிற்பவரினும் அண்மையில் நிற்பவரால் அழிவு உறுதியாதலை எண்ணிக் காண்க. இதனால், அரசன் விழிப்பாயிருந்து ஒற்றர் வாயிலாக உண்மையறிந்து, ஐயுறவிற் கிடமான அமைச்சனை உடனே விலக்கவேண்டு மென்பது கூறப்பட்டது.

'எழுபது கோடியுறும்' என்பதற்கு எழுபது கோடிமடங்கு நல்லரென் றுரைப்பது பொருந்தாது. இனி, "எழுபது கோடி தலை" என்றும், "எழுபது கூறுதலை" என்றும், பண்டை யுரையாசிரியன்மார் கொண்ட பாடமும் பொருந்து வனவாகா.

**640.** ***முறைப்படச் சூழ்ந்து முடிவிலவே செ-வர்***
***திறப்பா டிலாஅ தவர்.***

**(இ-ரை.)** திறப்பாடு இலாதவர் - வினையைச் செ-து முடிக்கும் திறமை யில்லாதவர்; முறைப்படச் சூழ்ந்தும் - செ-யவேண்டிய வினைகளை ஒழுங்குபட எண்ணிவைத்தும்; முடிவிலவே செ-வர் - செ-யுங்கால் முற்றுப் பெறாதனவாகவே விடுவர்.

திறப்பாடாவது, வந்த இடையூற்றை உடனுடன் விலக்குதலும் ஆள் வினையில் உறுதியாயிருத்தலுமாம். 'இலாஅ' இசைநிறை யளபெடை. திறப் பாடிலாதவர் பழுதெண்ணுவாரைப்போல் தண்டனைக் குரியவரல்லரேனும் விலக்கப்படவேண்டியவரே என்பது கருத்தாம்.

## அதி. 65 - சொல்வன்மை

*அதாவது, அமைச்சன் தன் சூழ்ச்சியை அரசனுக்கு எடுத்துச் சொல் வதில் வல்லவனாதல். மேற்கூறிய அமைச்சிலக்கணங்களுள் ஒன்றான 'ஒருதலையாச் சொல்லலும் வல்லது' (634) என்றதனை விரித்துக் கூறுவதால், இது அமைச்சின் பின் வைக்கப்பட்டது.*

**641. நாநல மென்னு நலனுடைமை யந்நலம்**
**யாநலத் துள்ளதூஉ மன்று.**

**(இ-ரை.)** நாநலம் என்னும் நலன் உடைமை - நாநலம் என்று அறி வுடையோரால் உயர்வாகச் சொல்லப்படும் நன்மை அமைச்சர்க்குச் செல்வம் ஆவதாம்; அந் நலம் யா நலத்து உள்ளதும் அன்று - அந் நன்மை வேறு எவ்வகை நற்பேறுகளுள்ளும் அடங்காது தனிப்பட்டதாம்.

நாவின் நலம் நாநலம். அது நாவின் நன்மையும் வன்மையுங் கலந்த தாம். நன்மை பிறருக்கு நன்மை செ-வதும் வன்மை பிறரை வயப்படுத்து வதுமாகும். இப் பேறு தனிப்பட்டதாதலின், 'யாநலத் துள்ளதூஉ மன்று' என்றார். 'உள்ளதூஉம்' இன்னிசை யளபெடை.

**642. ஆக்கமுங் கேடு மதனால் வருதலாற்**
**காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு.**

**(இ-ரை.)** ஆக்கமும் கேடும் அதனால் வருதலான் - தன் அரசனுக்கும் அவன் அரசுறுப்புகட்கும் மேம்பாடும் அழிவும் தன் சொல்லால் வருமாதலால்; சொல்லின்கண் சோர்வு காத்து ஓம்பல் - அமைச்சன் தன் சொல்லில் தவறு நேராதவாறு போற்றிக் காக்க.

"முற்படக் கிளத்தல் செ-யுளுள் உரித்தே" (தொல். கிளவி. 36)

என்பதால், சுட்டுப்பெயர். முன்வந்தது. பிறர் சொல் தவறுபோலாது அமைச் சன் சொல் தவறு நாடு முழுவதற்கும் கேடு விளைக்குமாதலால், 'காத்தோம் பல் சொல்லின்கட் சோர்வு' என்றார். "ஒரு சொல் வெல்லும், ஒரு சொல் கொல் லும்", "நாவில் பிறக்கும் நன்மையும் தீமையும்" என்பன பழமொழிகள்.

**643. கேட்டார்ப் பிணிக்குந் தகையவா-க் கேளாரும்**
**வேட்ப மொழிவதாஞ் சொல்.**

**(இ-ரை.)** கேட்டார்ப் பிணிக்கும் தகை அவா- - நண்பராயிருந்து தாம் சொன்னதை ஏற்றுக்கொண்டவர் பின்பு தம்மைவிட்டுப் பிரியாவாறு வயப்படுத்தும் தன்மைகளை விரும்பித் தழுவி; கேளாரும் வேட்ப மொழிவது - பகைவராயிருந்து தம் சொல்லை ஏற்றுக்கொள்ளாதவரும் பின்பு அப் பகைமை நீங்கி நட்பை விரும்பும் வண்ணம் சொல்வதே; சொல்ஆம் - அமைச்சர்க்குரிய சொன்முறையாம்.

கேட்டார்ப் பிணிக்குந் தகைகள்:

**"சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்**
**நவின்றோர்க் கினிமை நன்மொழி புணர்த்தல்**
**ஓசை யுடைமை ஆழமுடைத் தாதல்**
**முறையின் வைப்பே உலகமலை யாமை**
**விழுமியது பயத்தல் விளங்குதா ரணத்த**
**தாகுதல் ---------எனும் பத்தே."** **(நன். பொதுப். 12)**

அவாவுதல் கேட்பாருள்ளத்தை இறுகப் பிணிக்க வேண்டுமென்னும் நோக்கத்தைச் சிறப்பாகக் கொள்ளுதல். கேட்டல் என்னும் வினை ஏற்றுக் கொள்ளற் பொருள் கொள்வதை, சொன்னசொற் கேளாதவன் என்னும் வழக்கு நோக்கியுணர்க. 'அவா-...... மொழிவது' என்று முடியும். 'கேட்டார்', 'கேளார்' என்பவற்றிற்கு, வினாவினார் வினாவாதார் என்று மணக்குடவரும் பரிப்பெருமாளும்; நூல் கேட்டார் கேளாதார் என்று காலிங்கரும் உரைப்பர். 'கேட்டார் என்பதனைக் கேள்வியுடையார் எனினும் அமையும்', 'சொல்லக் கேட்டார் எனினும் அமையும்' என்றும் உரைப்பர் பரிப்பெருமாளர். 'தகைய வா-' என்பதற்கு, தகுதியையுடையவா- என்றும், பண்புகளையுடையவா- என்றும், இயல்பினை யுடையவா- என்றும் உரைப்பின், 'மொழிவன' என்னும் பாடங்கொள்க. 'கேளாரும்' இறந்தது தழுவிய எச்சவும்மை. 'ஆம்' பிரித்துக் கூட்டப்பட்டது.

## 644. *திறனறிந்து சொல்லுக சொல்லை யறனும்*
## *பொருளு மதனினூஉங் கில்.*

**(இ-ரை.)** சொல்லைத் திறன் அறிந்து சொல்லுக - சொல்ல வேண்டு வதைச் சொல்லும்பொழுதும் தம் நிலைமையும் கேட்போர் நிலைமையும் செ-தியின் நிலைமையும் அறிந்து அவற்றிற் கேற்பச் சொல்லுக; அதனின் ஊங்கு அறனும் பொருளும் இல் - அங்ஙனஞ் சொல்வதினுஞ் சிறந்த அறவினையும் பொருள்வினையும் இல்லை.

அறியவேண்டிய திறங்களாவன: குடிப்பிறப்பு, இயல்பு, கல்வி, அறிவு, ஒழுக்கம், செல்வம், அகவை(வயது), மனப்பான்மை முதலியவற்றால் ஏற் படுந் தகுதிவேறுபாடுகள். அவற்றையறிந்து சொல்லுதலாவது, அவற்றால் தமக்கும் கேட்போர்க்குமுள்ள ஏற்றத் தாழ்வுகளையும் வேற்றுமைகளையும் அறிந்து அவற்றிற்குரிய மரபுப்படி சொல்லுதல். அது உலகத்தோ டொட்ட வொழுகலையும் கேட்போர்க் கினிமையும் பயத்தலால் அறவினை யாயிற்று; கேட்போர்க்கு விளங்கிய வினை முடிவதாற் பொருள்வினை யாயிற்று. அறனும் பொருளுமாகிய விளைவுகள் அவற்றை விளைக்கும் வினையின்மேல் நின்றன. 'அதனினூஉங்கு' இன்னிசை யளபெடை.

## 645. *சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொ லச்சொல்லை வெல்லுஞ்சொ லின்மை யறிந்து.*

**(இ-ரை)** சொல்லைப் பிறிது ஓர் சொல் வெல்லும் சொல் இன்மை அறிந்து - தாம் சொல்லக் கருதிய சொல்லை வெல்லக்கூடிய வேறொரு சொல்லில் லாமை யறிந்து; அச் சொல்லைச் சொல்லுக - பின்பு அச் சொல்லைச் சொல்லுக.

'பிறிதோர் சொல்' பகைவரின் மறுப்புச் சொல். சொல் என்பது தனிச் சொல்லிற்கும் கூற்றிற்கும் பொதுவாம். வெல்லுதல் உண்மையுணர்த்துவதி லும் ஏதுக்கள் கூடிய ஏரணவலிமையிலும் மிகுந்து, எதிரிகள் கூற்றைப் பொருளற்றதெனக் காட்டுதல். இதில் வந்துள்ளது சொற்பொருட் பின்வரு நிலையணி. இனி, பிறிதோர் சொல்லும் வெல்லுஞ்சொல்லும் என இரண் டாகக் கொண்டு. "ஒத்த சொல்லும் மிக்க சொல்லு முளவாகாமற் சொல்லுக" என்றுரைப்பது பொருந்தாதாம்.

## 646. *வேட்பத்தாஞ் சொல்லிப் பிறர்சொற் பயன்கோடன் மாட்சியின் மாசற்றார் கோள்.*

**(இ-ரை)** வேட்பத் தாம் சொல்லி - தாம் பிறர்க்கு ஒன்றைச் சொல்லும் போது அவர் பின்னுங் கேட்க விரும்புமாறு இனிதாகவும் தெளிவாகவும் சொல்லி; பிறர் சொல் பயன் கோடல் - பிறர் சொல்லைத் தாம் கேட்கும் போதுமட்டும், அதிற் சொல்லினிமையும் பொருள் விளக்கமும் இலக்கண வொழுங்கும் இல்லாதிருப்பினும், அதன் பொருளை உள்ளவாறு அறிந்து கொள்ளுதல்; மாட்சியின் மாசு அற்றார் கோள் - குற்றமற்ற சிறப்புடைய அமைச்சரின் இயல்பாம்.

பிறர்க்கு மேலும்மேலுங் கேட்க விருப்ப முண்டாகுமாறு எதையும் இன்பமாக எடுத்துக்கூறும் ஆற்றல், எல்லார்க்கும் இயற்கையாகவோ செயற்கையாகவோ அமையாமையானும், பிறர் சொல்வதன் பொருளை உணர்ந்துகொள்வதே தம் கருமவெற்றிக்கு வேண்டியதாதலானும், “வேட்ப ....... கோள்” என்றார்.

**647. சொலல்வல்லன் சோர்வில னஞ்சா னவனை**
**யிகல்வெல்லல் யார்க்கு மரிது.**

**(இ-ரை.)** சொலல் வல்லன் - தான் சொல்லக் கருதியவற்றைப் பிறர்க் கேற்பச் சொல்லுதல் வல்லவனா-; சோர்வு இலன் - அவை மிகப் பலவா யினும் எதையும் மறந்து விட்டுவிடாதவனா-; அஞ்சான் அவனை - அவைக்கு அஞ்சாதவனாயிருப்பவனை; இகல் வெல்லல் யார்க்கும் அரிது - தருக்கத்திலும் மாறுபாட்டிலும் வெல்லுதல் எவருக்கும் அரியதாம்.

ஏற்பச் சொல்லுதலாவது, கேட்பார்க்கு நன்மையல்லாவிடினும் மறுக்காது ஒத்துக்கொள்ளுமாறு சொல்லுதல். சோர்வுபடச் சொல்லுவதில் முறை பிறழச் சொல்லுதலும் தனக்குக் கேடாகச் சொல்லுதலும் அடங்கும். மாறு பாட்டில் வெல்லுதல், பிரித்தல் பொருத்தல் முதலிய வலக்காரங்களால் (தந் திரங்களால்) மேற்கொள்ளுதல். தருக்கம் சொல்லும், மாறுபாடு செயலும் ஆகும்.

**648. விரைந்து தொழில்கேட்கு ஞால நிரந்தினிது**
**சொல்லுதல் வல்லார்ப் பெறின்.**

**(இ-ரை.)** நிரந்து இனிது சொல்லுதல் வல்லார்ப் பெறின் - சொல்ல வேண்டிய செ-திகளை ஒழுங்கான வரிசைப்படுத்தி இனிதாகச் சொல்ல வல்லவரைப் பெற்றால்; ஞாலம் விரைந்து தொழில் கேட்கும் - உலகம் விரைந்து அவர் ஏவல்கேட்டு நடக்கும்.

தொழில்கேட்டல் என்பது இப் பொருள தாதலை,

“தொன்று மொழிந்து தொழில் கேட்ப” (மதுரைக். 72)

என்பதனால் அறிக. ‘ஞாலம்’ இடவாகுபெயர். நிரத்தல் முன்பின் முறை தவறாது அமைத்தல். ‘பெறின்’ என்பது சொல்வன்மையாளரின் அருமை யுணர்த்தி நின்றது.

“ஆர்த்தசபை நூற்றொருவர் ஆயிரத்தொன் றாம்புலவர்
வார்த்தை பதினா யிரத்தொருவர் – பூத்தமலர்த்

தண்டா மரைத்திருவே தாதாகோ டிக்கொருவர்
உண்டாயி னுண்டென் றறி"

என்பது பிற்காலத்து ஔவையார் ஒருவர் தனிப்பாடல், "சொல்லுதல் வல்லான் நூறாயிரவரு ளொருவன் என்ற வடமொழிபற்றிப் 'பெறின்' என்றார்" என்று, இங்கும் பரிமேலழகர் சிறிது நஞ்சைத் தம் உள்ளத்தினின்று வீழ்த்தி யுள்ளார்.

## 649. *பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற*
*சிலசொல்ல றேற்றா தவர்.*

**(இ-ரை.)** மாசு அற்ற சில சொல்லல் தேற்றாதவர் - தாம் கருதிய வற்றைக் குற்றமில்லாத சில சொற்களால் தெளிவாகவும் சுருக்கமாகவும் சொல்லத் தெரியாதவர்; மன்ற - தேற்றமாக (நிச்சயமாக); பல சொல்லக் காமுறுவர் - வீணாகப் பல சொற்களால் விரித்துக் கூற விரும்புவர்.

குற்றங்களாவன:

"குன்றக் கூறல் மிகைபடக் கூறல்
கூறியது கூறல் மாறுகொளக் கூறல்
வழூஉச்சொற் புணர்த்தல் மயங்க வைத்தல்
வெற்றெனத் தொடுத்தல் மற்றொன்று விரித்தல்
சென்றுதே-ந் திறுதல் நின்றுபய னின்மை." (நன். பொதுப். 12)

'மன்ற' தேற்றப்பொரு ளிடைச்சொல்.

"மன்றஎன் கிளவி தேற்றஞ் செ-யும்." (தொல். இடை. 17)

## 650. *இணரூழ்த்து நாறா மலரனையர் கற்ற*
*துணர விரித்துரையா தார்.*

**(இ-ரை.)** கற்றது உணர விரித்து உரையாதார் - தாம் கற்று வைத்த நூற்பொருளைப் பிறர் தெளிவாக அறியும் வண்ணம் விளக்கிச் சொல்லும் ஆற்றல் இல்லாதவர்; இணர் ஊழ்த்தும் நாறா மலர் அனையர் - கொத்தாக மலர்ந்திருந்தும் மணந்தராத பூவையொப்பர்.

நன்றாக விரிந்திருந்தும் மணமில்லாத பூப் பயன்படாததுபோல் விரி வாகக் கற்றிருந்தும் விளக்கிச் சொல்லும் திறமையில்லார் பிறர்க்குப் பயன்

படார் என்பதாம். இணரூழ்த்தல் என்ற உவம அடை பல்துறைக் கல்வியாகிய பொருளியல்பை யுணர்த்தும். மணமில்லா மலர்க்கு முருக்கம் (முள்முருங் கைப்) பூவை எடுத்துக் காட்டினர் பரிதியார். நாறுதல் என்னும் பொதுப் பொருள் வினைச்சொல், செ-யுள் வழக்கில் நறுநாற்றத்தையும் உலக வழக்கில் தீநாற்றத்தையும் உணர்த்தும். உம்மை எச்சம்.

**"எத்துணைய வாயினுங் கல்வி யிடமறிந்**
**து-த்துணர் வில்லெனி னில்லாகும் – உ-த்துணர்ந்துஞ்**
**சொல்வன்மை யின்றெனின் என்னாம் அஃதுண்டேல்**
**பொன்மலர் நாற்ற முடைத்து"** **(நீதிநெறி. 5)**

என்பது சொல்வன்மையின் சிறப்பை எடுத்துக் காட்டும்.

## அதி. 66 - வினைத்தூ-மை

*அதாவது, அறநூல் முறையிலும் அரசியல் முறையிலும் அமைச்சர் செயல் குற்றமில்லாததா யிருத்தல். சொல்வன்மை போன்றே செயல் நன் மையும் அமைச்சர்க்கு இருத்தல் வேண்டுமென்பதுபற்றி, இது சொல்வன் மையின் பின் வைக்கப்பட்டது.*

### 651. துணைநல மாக்கந் தரூஉம் வினைநலம்
### வேண்டிய வெல்லாந் தரும்.

**(இ-ரை.)** துணைநலம் ஆக்கம் தரும் - ஒருவனுக்குத் துணையின் நன்மை செல்வம் ஒன்றையே தரும்; வினைநலம் வேண்டிய எல்லாம் தரும் - ஆயின், வினையின் நன்மையோ செல்வம் உட்பட ஒருவனுக்கு வேண்டிய எல்லாவற்றையும் தரும்.

'வேண்டிய வெல்லாம்' என்பன, இம்மையில் அறம்பொரு ளின்பமும் மறுமையில் புகழ் விண்ணின்பம் வீட்டின்பமுமாம். பிறர் துணையினுந் தூ-மை சிறந்ததென வினைத்தூ-மையின் சிறப்புக் கூறப்பட்டது. 'தரூஉம்' இசைநிறை யளபெடை.

### 652. என்று மொருவுதல் வேண்டும் புகழொடு
### நன்றி பயவா வினை.

**(இ-ரை.)** புகழொடு நன்றி பயவா வினை - தம் அரசனுக்கும் தமக்கும் இம்மைக்கும் மறுமைக்கும் பொதுவாக உரிய அறமும் மறுமைக்குச் சிறப்

பாக வுரிய புகழும் விளைக்காத வினைகளை; என்றும் ஒருவுதல் வேண்டும் - எக்காலத்தும் அமைச்சர் செ-யாது விட்டுவிடுதல் வேண்டும்.

துன்பநிலைமையும் நெருக்கிடை நிலைமையும் உட்பட 'என்றும்' என்றார். இறப்பின் பின்னரே புகழ் சிறந்து தோன்றும் என்பதை,

**"நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்**
**வித்தகர்க் கல்லா லரிது"** **(குறள். 335)**

என்பதனால் அறிக.

## 653. ஓஒதல் வேண்டு மொளிமாழ்குஞ் செ–வினை யாஅது மென்னு மவர்.

**(இ-ரை.)** ஆதும் என்னும் அவர் - யாம் மேன்மேல் உயர்வேம் என்னும் உயர்வெண்ணங் கொண்டவர்; ஒளி மாழ்கும் செ-வினை ஓதல் வேண்டும் - தம் மதிப்புக் கெடுவதற் கேதுவான வினைகளைச் செ-யாது விட்டுவிடுதல் வேண்டும்.

மதிப்புக் கெடுவதற் கேதுவான வினைகளைச் செ-பவர் மேன்மே லுயரமுடியாது என்பது கருத்து. ஓவுதல் என்பது ஓதல் எனக் குறைந்து நின்றது. 'ஒளிமாழ்குஞ் செ-வினை' ஒளி மாழ்குவதற் கேதுவாகச் செ-யும் வினை என்க. 'ஓஒதல்', 'ஆஅதும்' என்பன இசைநிறை யளபெடைகள். ஒளியென்பது உடலோடு கூடி வாழும் நாளில் உளதாகும் நன்மதிப்பு.

## 654. இடுக்கட் படினு மிளிவந்த செ–யார் நடுக்கற்ற காட்சி யவர்.

**(இ-ரை.)** நடுக்கு அற்ற காட்சியவர் - அசைவில்லாத தெளிந்த அறிவினையுடையார்; இடுக்கண் படினும் இளிவந்த செ-யார் - தாம் துன்பத்துள் அகப்பட்டாலும் அத் துன்பந் தீர்தற்பொருட்டுத் தமக்கு இழிவு தரும் வினைகளைச் செ-யமாட்டார்.

இன்பமுந்துன்பமுங் கலந்ததே இவ்வுலக வாழ்வென்றும், வருவது வந்தே தீருமென்றும், இழிவினைகளைச் செ-வதால் இம்மையிற் பழியும் மறுமையில் துன்பமுமே உண்டாகு மென்றும், அறவழியாற் போக்க முடியாத துன்பத்தை அமைதியாக நுகர்ந்தேயாக வேண்டுமென்றும், தெள்ளத்

தெளிவாக அறிந்தவராதலின் 'நடுக்கற்ற காட்சியவர்' என்றும், 'இளிவந்த செ-யார்' என்றும் கூறினார்.

## 655. எற்றென் றிரங்குவ செ-யற்க செ-வானேன் மற்றன்ன செ-யாமை நன்று.

**(இ-ரை.)** எற்று என்று இரங்குவ செ-யற்க - ஐயோ! எத்தன்மையான தவற்றை எண்ணாது செ-துவிட்டேன் என்று பின்பு வருந்துவதற் கேதுவான வினைகளை ஒருபோதுஞ் செ-யாதிருக்க; செ-வானேல் - ஒருகால் தப்பித் தவறிச் செ-ய நேர்ந்துவிடின்; மற்று அன்ன செ-யாமை நன்று - அதன் பின்பாகிலும் அத்தகைய வினைகளைச் செ-யாதிருப்பது நல்லது.

தவறு செ-வது மாந்தன் இயற்கையே. ஆயின், ஒரு முறை தவறிய பின் திருந்திவிடல் வேண்டும். மறுமுறையும் அதே தவறு செ-வது பகுத் தறிவுள்ள மாந்தன் இயல்பிற்கு ஏற்காது. இதையே 'மற்றன்ன செ-யாமை நன்று' என்பதாற் குறித்தார்.

"துணியப்பட்ட தென்று பின் இரங்கப்படும் வினையைப் செ-யா தொழிக; வினை செ-வான் ஆயின், அவை போல்வனவும் செ-யாமையே நல்லது" என்னும் மணக்குடவர் உரை பொருந்துவதே.

பரிமேலழகர் பின்னடிக்குப் "பின்னிருந்து அவ் விரங்கல்களைச் செ-யாதொழிதல் நன்று" என்று பொருள் கூறி, "பிற்றொடருக்குச் செ-வானாயின் அவை போல்வனவுஞ் செ-யாமை நன்றெனப் பிறரெல்லாம் இயைபற வுரைத்தார்" என்று பழித்தார். 'எற்றென் றிரங்குவ' என்பதே பின்னிரங்குவதை எதிர்நோக்கலால், இரங்காமை நன்றென்பது மூலத்தொடு முரண்படுவதென அறிக. என்னது - எற்று (என் + து).

## 656. ஈன்றாள் பசிகாண்பா னாயினுஞ் செ-யற்க சான்றோர் பழிக்கும் வினை.

**(இ-ரை.)** ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் - தன்னைப் பெற்ற தாயின் பசியைக் கண்டு வருந்தும் வறியனாயினும்; சான்றோர் பழிக்கும் வினை செ-யற்க - அத் தாயின் பசியைத் தணித்தற்பொருட்டு அறிவுடையோர் பழிக்கும் வினைகளை ஒருவன் செ-யாதொழிக.

**"ஈன்றாளின் என்ன கடவுளும்,"** **(54)**

என்பது நான்மணிக்கடிகை.

'ஈன்றாள் பசிகாண்பா னாயினும்' என்பது, பசித்தவர் ஈன்றாளே யாயினும் என்று பொருள்படுவதால், உம்மை உயர்வுசிறப்பாம்.

"இறந்த மூப்பினராய இருமுது குரவருங் கற்புடை மனைவியுங் குழவியும் பசியான் வருந்து மெல்லைக்கண், தீயன பலவுஞ் செ-தாயினும் புறந்தருக வென்னும் அறநூற் பொது விதி, பொருணூல்வழி யொழுகுதலும் அரசர் தொழிற்குரியராதலும் நன்கு மதிக்கற்பாடு முடைய அமைச்சர்க் கெ-தாமைபற்றி இவ்வாறு கூறினார்" என்று பரிமேலழகரே கூறியிருத்த லால், ஆரிய அறத்தினும் தமிழ அறம் நனிதவச் சிறந்த தென்பதை அவர் வா- ஒப்புக்கொள்ளாவிடினும் உள்ளம் ஒப்புக்கொள்கின்ற தென்பதும், "அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தன செ-தலும் விலக்கியன ஒழிதலுமாம்" என்று அவர் தம் உரைமுகத்திற் கூறியிருப்பது இதனால் அடிபடுகின்ற தென்பதும் அறியப்படும்.

## 657. *பழிமலைந் தெ-திய வாக்கத்திற் சான்றோர்*
## *கழிநல் குரவே தலை.*

**(இ-ரை.)** பழிமலைந்து எ-திய ஆக்கத்தின் - அறிவிலாதார் தீவினை களைச் செ-து அவற்றாற் பழியைத் தம் தலைமேல் ஏற்றுக்கொண்டு பெற்ற செல்வத்தைவிட; சான்றோர் கழிநல்குரவே தலை - அப் பழியை மேற்கொள் ளாத அறிவுடையோரின் கடுவறுமையே சிறந்ததாம்.

சான்றோர் அறிவு அல்லது நற்குணம் நிறைந்தோர். தீயோர் செல்வம் இம்மைக்குப் பழியும் மறுமைக்குத் துன்பமும் பயத்தலால், அவ் விரண்டு மில்லாத நல்லோர் வறுமை அதனினுஞ் சிறந்தது என்றார். கொடிய வறுமை யாயினும் என்பார் 'கழிநல்குரவு' என்றார். கொடிய வறுமையாவது, நாள் முழுதும் வருந்தியுழைத்தும் வருவது ஒருவேளை யுணவிற்கும் பற்றாமை. ஏகாரம் பிரிநிலை.

## 658. *கடிந்த கடிந்தொரார் செ-தார்க் கவைதா*
## *முடிந்தாலும் பீழை தரும்.*

**(இ-ரை.)** கடிந்த கடிந்து ஒரார் செ-தார்க்கு - அறநூலார் விலக்கிய வினைகளைத் தாமும் விலக்கி விட்டுவிடாமல் பொருள் நோக்கிச் செ-த அமைச்சர்க்கு; அவைதாம் முடிந்தாலும் பீழைதரும் - அவ் வினைகள் ஒருகால் முடிந்தாலும் அவை தூயவல்லாமையால் பின்பு துன்பத்தையே விளைக்கும்.

முடிதல் வெற்றியா- முடிந்து கருதிய பொருள் தருதல். ஒருவார் என்பது ஒரார் எனக் குறைந்து நின்றது. 'முடிந்தாலும்' ஐயவும்மை. பீழை தருவன வினையும் வினையால் வந்த பொருளும்.

### 659. *அழக்கொண்ட வெல்லா மழப்போ மிழப்பினும்*
### *பிற்பயக்கு நற்பா லவை.*

**(இ-ரை.)** அழக்கொண்ட எல்லாம் அழப்போம் - ஒருவன் தீய வினை களைச் செ-து பிறரை வருத்திப் பெற்ற செல்வ மெல்லாம், இம்மையிலேயே தான் அங்ஙனம் வருந்துமாறு தன்னை விட்டு நீங்கிப்போம்; நல் பாலவை இழப்பினும் பின் பயக்கும் - தூய வினைகளால் வந்த பொருள்களோ முன்பு இழக்கப்படினும் பின்பு வந்து பயன் தரும்.

தீயவழிச் செல்வம் வருவதுபோற் போவது மட்டுமன்றி, வந்த வகை யிலேயே போமென்பதை யுணர்த்தற்கு 'அழப்போம்' என்றார். 'இழப்பினும்' ஐயவும்மை. 'பின்' என்றது இம்மைக்கும் மறுமைக்கும் பொதுவாம்.

### 660. *சலத்தாற் பொருள்செ—தே மாத்தல் பசுமட்*
### *கலத்துணீர் பெ—திரீஇ யற்று.*

**(இ-ரை.)** சலத்தான் பொருள் செ-து ஏமாத்தல் - அமைச்சன் வஞ்ச னையாற் பொருளீட்டி அதனால் அரசனுக்குப் பாதுகாப்புச் செ-தல்; பசுமண் கலத்துள் நீர் பெ-து இரீஇய அற்று - ஈரம் புலராத பச்சைமட் கலத்துள் நீரை வார்த்து அதற்குப் பாதுகாப்புச் செ-ததனோ டொக்கும்.

நீரோடு பசுமட்கலங் கெடுவதுபோல் வஞ்சனைப் பொருளோடு அரசன் கெடுவான் என்பதாம். ஆக்கஞ் செ-வதுபோல் முன்தோன்றிப் பின்பு அழிவைச் செ-வதால். 'சலத்தால்' என்றார். 'சலம்' வடசொல். ஏமமார்த்தல் என்பது 'ஏமாத்தல்' என ரகரங் கெட்டு நின்றது. ஏமம் - பாதுகாப்பு. ஆர்தல் - பொருந்துதல். ஆர்த்தல் - பொருத்துதல். 'இரீஇ' இருத்தி யென்று பொருள்படும் சொல்லிசை யளபெடை. இருத்துதல் நீண்ட காலம் இருக்கச் செ-தல்.

## அதி. 67 - வினைத்திட்பம்

*அதாவது, தூயவினை செ-வானுக்கு வேண்டிய மனத்திண்மை. அதிகார முறையும் இதனால் விளங்கும். திண் - திண்பு - திட்பு - திட்பம். திண்மை திணுக்கத்தால் (செறிவால்) ஏற்படும் உறுதி.*

## 661. *வினைத்திட்ப மென்ப தொருவன் மனத்திட்ப*
## *மற்றைய வெல்லாம் பிற.*

**(இ-ரை.)** வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம் - வினை செ-வதில் திண்மை என்பது அதைச் செ-பவனின் மனத்திண்மையே; மற்றைய எல்லாம் பிற - அஃதல்லாத பிறவெல்லாம் அதைப்போன்ற திண்மையாகா.

மற்றைப் பிறவாவன: குடி, படை, அரண், நட்பு என்பவற்றின் திண்மை கள். அவையும் வேண்டுமாயினும், செ-வானின் மனத்திண்மை யில்லா விடத்து அவை பயன்படாவாதலின் 'மற்றைய வெல்லாம் பிற' என்றார்.

## 662. *ஊறொரா லுற்றபி னொல்காமை யிவ்விரண்டி*
## *னாறென்ப ரா–ந்தவர் கோள்.*

**(இ-ரை.)** ஆ-ந்தவர் கோள் - வினைத்திட்பத்தை ஆரா-ந்தறிந்த அமைச்சருடைய கொள்கை; ஊறு ஒரால் உற்றபின் ஒல்காமை இவ் விரண் டின் ஆறு - கேடு தரக்கூடிய வினைகளைச் செ-யாமையும் வினை செ-யுங்கால் தெ-வத்தால் நேர்ந்த இடையூற்றிற்குத் தளராமையும் ஆகிய இவ் விரண்டின் வழி; என்ப - என்று கூறுவர் அரசியல் நூலார்.

வினைத்திட்பம் என்பது அதிகாரத்தால் வந்தது. அமைச்சியலை உள்ளடக்கும் நூல் அரசியல் நூல் அல்லது பொருள் நூலாகவே யிருக்க முடியும். முப்பால் நூலாகிய இத் திருக்குறள் அரசியலையும் அமைச்சிய லையும் பொருட்பாலில் தழுவினும், அரசியலை அல்லது பொருளியலை மட்டுங் கூறும் தனிநூல்போல் விரிவாக இருத்தல் இயலாததே. சாணக் கியனாரின் வடமொழிப் பொருள்நூலுக்கு மூலமாக விருந்த பண்டைத் தமிழ்ப் பொருள் நூல்களெல்லாம் "வாரணங் கொண்ட தந்தோ வழிவழிப் பெயரும் மாள" என்பதினும் ஆரியம் அழித்ததந்தோ அவற்றொடு பெயரும் மாள என்பதே உண்மையானதாம். ஒருவல் என்பது ஒரால் என நின்றது.

திருவள்ளுவர் தமிழ்மரபின்படியே தம் நூலைச் செ-திருப்பதால், 'ஆ-ந்தவர் கோள்' என்பதற்கு "முன் நீதியாரா-ந்த அமைச்சரது துணிபு" என்றும்; "தேவர்க்கும் அசுரர்க்கும் அமைச்சுப்பூண்ட வியாழ வெள்ளிகளது துணிபு தொகுத்துப்பின் நீதிநூலுடையார் கூறியவாறு கூறுகின்றமையின் ஈண்டு வினைத்தூ-மையும் உடன் கூறினார்" என்றும்; பரிமேலழகர் கூறியிருப்பது பொருந்தா தென்க. ஆ-ந்தவர் கொள்கை இவ் விரண்டின் வழி என்பதை, இவ் விரண்டும் ஆ-ந்தவர் கொள்கை என்பதாகவே கொள்க.

இனி, இக் குறட்கு "யாதானும் ஒரு வினை செ-யும் இடத்து அதற்கு இடையூறு வருவதும் வந்துற்றதுமா- இருக்கும். அவற்றுள் வருவதாகிய இடையூறு முன்கோலிக் கழியுமாறு செ-தலும், அது அன்றி ஒன்று உற்ற தாயின் அதற்கு மனம் தளராமையும் அவ் விரண்டினது நெறி என்று சொல் லுப, ஆரா-ந்து அமைந்த அமைச்சரானோர் வினையினது கோட்பாட் டினை என்றவாறு" என்னும் காளிங்கர் உரையும் பொருந்துவதேயாம்.

**663. *கடைக்கொட்கச் செ—தக்க தாண்மை யிடைக்கொட்கி னெற்றா விழுமந் தரும்.***

**(இ-ரை.)** கடைக் கொட்கச் செ-தக்கது ஆண்மை - மறைத்துச் செ-ய வேண்டிய வினைகளை முடிந்த பின்னரே வெளிப்படுமாறு கமுக்கமா-ச் செ-வதே வினைத்திட்பமாம்; இடைக் கொட்கின் எற்றா விழுமம் தரும் - அங்ஙனமன்றி அத்தகைய மருமவினைகள் இடையில் வெளிப்படுமாயின், நீக்க முடியாத் துன்பந் தருவனவாம்.

"மறைவாகச் செ-ய வேண்டியவை படையெடுப்பிற்கு வட்டங் கூட்டு தல் (ஆயத்தஞ் செ-தல்), பெரியாரைத் துணைக்கோடல். வல்லரசனொடு மணவுறவு கொள்ளுதல், பெரும் புதையலைக் கைப்பற்றுதல் முதலியன. மறைவு வெளிப்படும் வகைகள், செயலும் சொல்லும் உடையும் வடிவும் குறிப்பும் பொருளும் கருவியும் பிறவுமாம். வினைத்திட்பம் ஆண்மைக் குணமாதலின் ஆண்மையெனப்பட்டது. "ஒருவரறிந்தது உலகறிந்தது." ஆதலின், இயன்றவரை பிறருக்குத் தெரியாது வினை முடித்தல் வேண்டு மென்பதும், தெரியின் பின்பு ஒருகாலும் திருத்த முடியாவாறு பகைவர் தடுப் பால் வினை கெட்டுவிடு மென்பதும், அதனாற் பெருந்துன்பம் விளையு மென் பதும் உணர்த்தற்கு 'இடைக்கொட்கின் எற்றா விழுமந் தரும்' என்றார்.

எடுத்த வினையை இறுதிவரை செ-து முடிப்பதே ஆண்மையென்றும், இடையில் விட்டுவிடுவது பெருந்துன்பம் தரும் என்றும், மணக்குடவரும் பரிப்பெருமாளும் பரிதியாரும் காலிங்கரும் உரைத்திருப்பது சிறந்ததன்று. 'கடைக்கொட்பின்' என்பது காலிங்கர் பாடம். இவருள் முன்னிருவரும் வெளிப்படையாகவும் பின்னிருவரும் குறிப்பாகவும், கொட்குதல் என்னும் வினைக்குச் சுழலுதல் என்று பொருள் கொண்டனர்.

**664. *சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ் சொல்லிய வண்ணஞ் செயல்.***

**(இ-ரை.)** சொல்லுதல் யார்க்கும் எளிய - ஒரு வினையை இன்ன கருவி யால் இன்னவாறு செ-து முடிக்கலாம் என்று வழி சொல்லுவது எவருக்கும் எளிதாம்; சொல்லிய வண்ணம் செயல் அரிய ஆம் - ஆனால், சொன்னவாறு அதைச் செ-து முடிப்பது பெரும்பாலார்க்கு அரிதாம்.

சொல்லுதலும் செ-தலும் சொல்வார் செ-வார் பன்மைபற்றிப் பன்மையாகிப் பன்மைவினை கொண்டன. ஏற்புழிக்கோடல் என்னும் உத்தி யால், அரிது என்பது ஒருசிலர் அரும்பாடு பட்டுச் செ-து முடித்தலையும், பெரும்பாலோர் எப்பாடு பட்டும் செ-ய முடியாமையையும் உணர்த்தும் என்று கொள்ளப்பெறும். இனி, எதிர்நிலையளவை (அருத்தாபத்தி)யால், ஒரோ ஒருவர்க்கு அது எளிதாக முடியும் என்பதும் அறியப்படும்.

## 665. *வீறெ–தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்க ணூறெ–தி யுள்ளப் படும்.*

**(இ-ரை.)** வீறு எ-தி மாண்டர் வினைத்திட்பம் - சூழ்வினையால் மேம்பட்டுப் பிற விலக்கணங்களாலும் மாட்சிமைப்பட்ட அமைச்சரின் வினைத்திண்மை; வேந்தன்கண் ஊறு எ-தி உள்ளப்படும் - பயனளவில் அரசனை யடைதலால் அவனாலும் பிறராலும் மதிப்பொடு கருதப்பெறும்.

பிற விலக்கணங்கள் 64ஆம் அதிகாரத்தில் முதல் ஆறு குறள்களிலுஞ் சொல்லப்பட்டனவாம். 'வேந்தன்க ணூறெ-தல்' வினைத்திட்பத்தால் விளைந்த செல்வமும் புகழும் அரசனை யடைதல். ஊறெ-தல் உறுதல். உறுவது ஊறு. உறுதல் அடைதல்.

## 666. *எண்ணிய வெண்ணியாங் கெ–துப வெண்ணியார் திண்ணிய ராகப் பெறின்.*

**(இ-ரை.)** எண்ணியார் திண்ணியர் ஆகப் பெறின் - பொருள்களைப் பெற எண்ணியவர் அவற்றைப் பெறுவதற்கு வழியாகிய வினையில் திண்மை யுள்ளவராக இருப்பாராயின்; எண்ணிய எண்ணிய ஆங்கு எ-துப - தாம் பெற எண்ணிய பொருள்களை யெல்லாம் தாம் எண்ணியவாறே பெறுவர்.

கருதிய பொருள்களை யெல்லாம் எளிதிற் பெறுவரென்பார் 'எண்ணிய எண்ணியாங் கெ-துப' என்றார். அமைச்சரின் சூழ்வினை போன்றே செ-வினையும் திண்ணியதா யிருப்பின், அவர் கருதிய பொருள் பெறுதல் எளி தென்பதாம். மந்திரம் மன்னும் திறம். மன்னுதல் எண்ணுதல். முன்(னு)-மன்(னு).

**667. உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்னா ருடைத்து.**

**(இ-ரை.)** உருள் பெருந்தேர்க்கு அச்சு ஆணி அன்னார் உடைத்து - உருண்டோடுகின்ற பெரிய தேர்க்கு இன்றியமையாத சிறிய அச்சாணி போல, வினைத்திறம் மிக்க சிற்றுடம்பினரை இவ் வுலகம் கொண்டுள்ளது; உருவு கண்டு எள்ளாமை வேண்டும் - ஆதலால், அத்தகையோரை வடிவின் சிறுமை நோக்கித் தாழ்வாக எண்ண வேண்டா.

உருவின் சிறுமை எள்ளாமை வேண்டும் என்பதனாலும் உவமத்தா லும் பெறப்பட்டது. உருளுதல் தேர்ச்சக்கரத்தின் தொழில். சினைவினை முதல்வினையாக நின்றது. பெருந்தேர் ஏழுதட்டுகளைக் கொண்ட முழுத் தேர். அச்சு, சக்கரங் கோத்த குறுக்கு உத்தரம். அச்சாணி, சக்கரங் கழலாதவாறு அச்சின் கடைசியிற் செருகும் ஆணி, அதனாற் கடையாணி யெனவும் படும். அச்சாணி சிறிதாயிருந்தும் பெரிய கோயில் தேரையும் தாங்குவதும் அதன் இயக்கத்திற்கு இன்றியமையாததுமான சிறப்புடையது. "அச்சாணி யில்லாத தேர் முச்சாணும் ஓடாது." பெருந்தேரோட்டத்திற்கு இன்றியமையாத சிறிய அச்சாணிபோல், பெருநாட்டாட்சிக்கும் இன்றியமையாத சிற்றுருவப் பேராற்ற லமைச்சர் உளர். அவரை வடிவுபற்றி இகழாது, அவர் மதிநுட்பமும் வினைத்திட்பமும் நோக்கி ஆட்சித்துணையாக அரசன் அமர்த்திக் கொள்க என்பதாம்.

**668. கலங்காது கண்ட வினைக்கட் டுளங்காது
தூக்கங் கடிந்து செயல்.**

**(இ-ரை.)** கலங்காது கண்ட வினைக்கண் - தெளிவாக எண்ணித் துணிந்த வினை முயற்சியில்; துளங்காது தூக்கம் கடிந்து செயல் - பின்பு மன அசைவில்லாதும் காலந்தாழ்க்காதும் விரைந்து ஊக்கமாகச் செ-க.

தப்பாது பயன்படுமென்றும் வெற்றியாக முடியுமென்றும் தெளிவாக ஆரா-ந்தறிந்த வினையைக் 'கலங்காது கண்ட வினை' யென்றும், மனத் தளர்ச்சியும் உடற்சோம்பலும் வினையைக் கெடுக்குமாதலின் 'துளங்காது தூக்கங் கடிந்து செயல்' என்றும் கூறினார்.

**669. துன்ப முறவரினுஞ் செ-க துணிவாற்றி
யின்பம் பயக்கும் வினை.**

**(இ-ரை.)** துன்பம் உறவரினும் - வினைசெ-யுங்கால் தமக்குத் துன்பம் மிகுதியாக வருமாயினும்; இன்பம் பயக்கும் வினை துணிவு ஆற்றிச் செ-க - அதுபற்றித் தளராமல் முடிவில் இன்பந்தரும் வினையை மனத்திண்மையுடன் செ-க.

துன்பம் வருங்காலம் குறிக்கப்படாமையின் வினையின் முதலிடை கடையில் மட்டுமன்றி முழுமையுந் துன்பம் வரினும் பொறுக்க வேண்டு மென்பதாம். பிள்ளை பெறுபவளின் துன்பம் பிள்ளை பெற்ற பேற்றால் இன்பமாக மாறுவதுபோல், முயற்சித் துன்பமும் வெற்றிப் பேற்றால் இன்ப மாக மாறுமென்பார், 'இன்பம் பயக்கும் வினை' என்றார். 'உற' உரிச்சொல்.

## 670. எனைத்திட்ப மெ–தியக் கண்ணும் வினைத்திட்பம் வேண்டாரை வேண்டா துலகு.

**(இ-ரை.)** வினைத்திட்பம் வேண்டாரை - வினை செ-வதில் உறுதியை விரும்பாத அமைச்சரை; எனைத்திட்பம் எ-தியக் கண்ணும் - வேறு எத் தகைய உறுதியுடையவரா யிருப்பினும்; உலகு வேண்டாது - உயர்ந்தோர் விரும்பார்.

மனத்திண்மை, மதித்திண்மை, அறிவுத்திண்மை, உடல்திண்மை, வினைத்திண்மை என அகத்திண்மை பலவகைப்படும். கருவித்திண்மை, இடத்திண்மை, காலத்திண்மை, படைத்திண்மை முதலியன புறத்திண்மையாம். இவையெல்லா மிருந்தும் மெ-ம்முயற்சியாகிய வினைத்திண்மை யில்லாவிடத்துப் பயன்படாமையின், 'வினைத்திட்பம் வேண்டாரை வேண்டா துலகு' என்றார். 'உலகு' ஆகுபெயர்.

### அதி. 68 - வினைசெயல்வகை

*அதாவது, வினைத்திண்மையுடைய அமைச்சன் வினை செ-யும் வகை. அதிகார முறையும் இதனால் விளங்கும்.*

## 671. சூழ்ச்சி முடிவு துணிவெ–த லத்துணிவு தாழ்ச்சியுட் டங்குத றீது.

**(இ-ரை.)** சூழ்ச்சி முடிவு துணிவு எ-தல் - ஒன்றைப்பற்றி ஆரா-ந் தெண்ணுவதன் இறுதியாவது, இதை இன்னவாறு செ-ய வேண்டும் என்னும் தீர்மானத்தைக் கொள்ளுதலே; அத் துணிவு தாழ்ச்சியுள் தங்குதல் தீது - அத் தீர்மானத்தை உடனே நிறைவேற்றாது காலங் கடத்துவது குற்றமாகும்.

சூழ்ச்சி எதிர்ப்பும் தற்காப்பும்பற்றியதாயின், இதை எங்ஙனஞ் செ-வ தென்பதே ஆராயப்படுவதாம். தாக்குதல்பற்றியதாயின், செ-வதா விடுவதா என்பதே முதற்கண்ணும், செ-வதாயின் அதை எங்ஙனஞ் செ-வ தென்பது அதன் பின்னும், ஆராயப்படுவனவாம். ஆகவே, உடன்பாட்டுத் தீர்மானமே 'தாழ்ச்சியுள் தங்குதல் தீது' என்பது அறியப்படும். 'சூழ்ச்சி முடிவு துணிவெ-தல்' எனவே, துணிவெ-தும்வரை சூழவேண்டும் மென்பதும், துணிவில் முடியாத வாறும் துணிவு காலந்தாழ்க்குமாறும் சூழ்வது தீங்கு விளைக்கு மென்பதும் பெறப்படும். துணிந்த வினையை உடனே தொடங்காவிடின், தகுந்த காலந் தப்புதலாலும் ஊக்கங் குன்றுதலாலும் பகைவர் அறிந்தழித்தலாலும் வினை கெடுமாதலான் 'தாழ்ச்சியுள் தங்குதல் தீது' என்றார்.

## 672. தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
## தூங்காது செ–யும் வினை.

**(இ–ரை.)** தூங்கிச் செயல்பால தூங்குக - மெள்ளச் செ-ய வேண்டிய வினைகளை மெள்ளச் செ-க; தூங்காது செ-யும் வினை தூங்கற்க - விரைந்து செ-ய வேண்டிய வினைகளை விரைந்து செ-க.

மெள்ளச் செ-தல் காலந்தாழ்த்துச் செ-தலும் காலம் நீடச் செ-தலும் என இருவகை. இவற்றுள் முன்னது வினை தொடங்கலையும் பின்னது வினைசெயல் முழுவதையும் பற்றியனவாம். மெள்ளச் செ-ய வேண்டுவதை விரைந்தும் விரைந்து செ-ய வேண்டுவதை மெள்ளவும் செ-யின், அவற்றால் தீமையே விளையும் என்பது கருத்து. இதில் வந்துள்ளது சொற்பொருட் பின்வருநிலையணி.

## 673. ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே யொல்லாக்காற்
## செல்லும்வா– நோக்கிச் செயல்.

**(இ–ரை.)** ஒல்லும் வா- எல்லாம் வினை நன்றே - இயலுமிடமெல்லாம் போரால் வினைசெ-தல் நல்லதே; ஒல்லாக்கால் செல்லும்வா- நோக்கிச் செயல் - அது இயலாவிடத்து ஏனை மூன்று ஆம்புடைகளுள்ளும் ஒன்றும் பலவும் ஏற்றவற்றை எண்ணிச் செ-க.

வினையென்றது இங்குத் தண்டத்தை. எளிய பகைவரை அடக்குவதும் விரைந்து பொருள் தருவதும் போரேயாகலின், அதை நன்றென்றார். இயலுமிடம் தான் வலியனான காலம்; இயலாவிடம் தான் மெலியனான

காலம்; இயல்வது ஐயுறவுக் காலத்தும் இன்சொல், பிரிப்பு, கொடை என்னும் ஏனை மூன்று ஆம்புடைகளுள் ஒன்றும் பலவும் ஏற்ற வகையிற் கையாள்க என்றார். ஏகாரம் தேற்றம்.

**674. வினைபகை யென்றிரண்டி னெச்ச நினையுங்காற்**
**றீயெச்சம் போலத் தெறும்.**

**(இ-ரை.)** நினையுங்கால் - ஆரா-ந்து பார்க்குமிடத்து; வினை பகை என்ற இரண்டின் எச்சம் - செ-யத் தொடங்கிய வினை ஒழிக்கத் தொடங்கிய பகை ஆகிய இரண்டிலும் விட்டுவைத்த குறை; தீ எச்சம் போலத் தெறும் - அவிக்காது விட்டுவைத்த தீயின் குறைபோலப் பின் வளர்ந்து தம்மை விட்டுவைத்தவரை அழித்துவிடும்.

பல பெரும் பகைவரை அடக்கியதொடு பொந்திகை (திருப்தி) யடைந்து ஒரு சிறு பகைவனை விட்டுவைப்பது பகை யெச்சமாம். பகையொடு சேர்த் துக் கூறியதாலும், 'தீயெச்சம் போலத் தெறும்' என்றதனாலும், வினை யென்றது கேட்டை நீக்கும் வினையை என்பது அறியப்படும். வெள்ளக் காலத்தில் பெருங்குளக்கரை யுடைப்பையெல்லாம் அடைத்தவர் ஒரு சிறு கசிவை விட்டுவைப்பதும், கொடிய நோ-க்கு மருத்துவம் செ-துகொள்பவன் ஒரு சிறு பகுதியைப் புறக்கணிப்பதும், வினையின் எச்சத்திற்கு எடுத்துக்காட்டாம். இனி இக் குறை என்ன செ-யும் என்றிகழாது முடியச் செ-க என்பதாம். இது வலியனுக்குரிய வினை. இனி, வினையெச்சம் என்பது தோற்றோடிய பகைவனைத் தொடராது விட்டுவிடும் போர்வினை யெச்சம் எனலுமாம்.

**675. பொருள்கருவி காலம் வினையிடனொ டைந்து**
**மிருடீர வெண்ணிச் செயல்.**

**(இ-ரை.)** பொருள் கருவி காலம் வினை இடனொடு ஐந்தும் - போர் செ-யுமுன் பொருள், கருவி, காலம், செயல், இடம் என்னும் ஐவகையிலும்; இருள் தீர எண்ணிச் செயல் - தனக்கும் தன் பகைவர்க்குமுள்ள நிலைமை களை மயக்கமற எண்ணி, தன் வலி மிக்கிருப்பின் அதன்பின் போர் செ-க.

தன் நிலைமையைப் பகைவர் நிலையொடு ஒப்புநோக்கியே வினை துணிய வேண்டியிருத்தலின், கருவி முதலிய ஐந்தும் இருசார்க்கும் பொது வாம். 'பொருள்' தன் பொருளும் பகைவர் பொருளும் தனக்கு அழியும் பொருளும் ஆகும் பொருளுமாம். 'கருவி' தன் படையும் அதன் கருவியுங் பகைவர் படையும் அதன் கருவியுமாம். 'காலம்' தனக்கேற்ற காலமும் தன்

பகைவர்க்கு ஏற்காத காலமுமாம். ‘வினை’ தன் படைப் போர்த்திறமும் பகைவர் படைப் போர்த்திறமுமாம். ‘இடம்’ தான் வெல்லு மிடமும் தன் பகைவர் தோற்கும் இடமுமாம்.

**“என்றும் எனவும் ஒடுவுந் தோன்றி**
**ஒன்றுவழி யுடைய எண்ணினுட் பிரிந்தே”** **(இடை. 46)**

என்னும் தொல்காப்பிய நூற்பாப்படி, ‘ஒடு’ எண்ணுப்பொருளில் வந்து ஏனையிடத்தொடும் இயைந்ததாகக் கொள்ளப்பெறும். இக்கால வழக்கில் அஃதின்றியும் பொருள் நிரம்பும்.

## 676. *முடிவு மிடையூறு முற்றியாங் கெ—தும் படுபயனும் பார்த்துச் செயல்.*

**(இ-ரை.)** முடிவும் - வினை முடிதற்கு வேண்டிய முயற்சியும்; இடை யூறும் - அதற்குத் தடையாக இடையில் வரும் துன்பங்களும்; முற்றிய ஆங்கு எ-தும் படுபயனும் - தடை நீங்கி வினை வெற்றியாக முடிந்தால் தான் அடையும் பெரும்பயனும்; பார்த்துச் செயல் - ஆரா-ந்து பார்த்து வினைசெ-க.

பெரும்பயன் எனவே சிறுபயன் வினை விலக்கப்பட்டதாம். ‘படு’ என்னும் சொல் பெருமை அல்லது மிகுதிப்பொருள் தருவதைப் படுகுழி, படுதண்டம், படுபொ-, படுமோசம் என்னும் வழக்குநோக்கி யுணர்க. ‘முடிவு’ ஆகுபெயர். முற்றியாங்கு (முற்றிய ஆங்கு) - முற்றியபோது.

## 677. *செ—வினை செ—வான் செயன்முறை யவ்வினை யுள்ளறிவா னுள்ளங் கொளல்.*

**(இ-ரை.)** செ-வினை செ-வான் செயன் முறை - மேற்கூறியவாறு செ-யப்பட வேண்டிய வினையைச் செ-யுமாறு மேற்கொண்டவன் செ-ய வேண்டிய முறையாவது; அவ் வினை உள் அறிவான் உள்ளம் கொளல் - அவ் வினையை ஏற்கெனவே செ-து அதன் உள் மருமங்களை அறிந்த வனது கருத்தையறிந்து அதன்படி செ-தலாம்.

மேற் கூறியவாறென்றது பொருள் முதலிய ஐந்தையும் எண்ணுதலை யும் முடிவு முதலிய மூன்றையும் ஆரா-தலையும். ‘உள்’ ஆகுபெயர். ‘உள்ளம்’ செயன்முறைபற்றிய கருத்து. அது பிறர்க்குத் தெரியாது அவனுள்ளத்தி லிருத்தலால் உள்ளம் எனப்பட்டது. அது வினை வெற்றிக்குக்

கையாள வேண்டிய வழிவகை. அதை அறியவே, தானும் அவ்வாறு செ-து வெற்றி பெறுவன் என்பதாம். இம் முக்குறளாலும் ஒத்தோன் வினைசெ-யுந் திறங் கூறப்பட்டது.

### 678. *வினையான் வினையாக்கிக் கோட னனைகவுள்*
### *யானையால் யானையாத் தற்று.*

**(இ-ரை.)** வினையால் வினை ஆக்கிக் கோடல் - ஒரு வினையைச் செ-யும் பொழுதே அதனால் வேறுமொரு வினையை முடித்துக் கொள்ளுதல்; நனைகவுள் யானையால் யானை யாத்த அற்று - மதத்தால் நனைந்த கன்னத்தையுடைய யானையால் வேறுமொரு யானையைப் பிடித்துக் கட்டிய தொக்கும்.

உவமம் பெருவினை எளிதில் முடிவதைக் காட்டும். 'நனைகவுள்' என்பது 'வினையால்' என்பதற்கு எதுகையாகவே வந்ததனால், 'நனைகவுள் யானை' என்பது களிறு என்னும் அளவா- நின்றது. அல்லாக்கால், மதயானை பெண்யானையாலன்றி ஒருவகையிலும் அடக்கப்படாததாயும் ஒரு வினைக் கும் பயன்படாததாயும் இருக்குமாதலின் 'யானையால் யானை யாத்தற்று' என்னும் உவமை பொருந்தாதென்க. ஒரு கல்லில் இரு குருவியை வீழ்த்துவதும், ஒரு குண்டில் இரு புறாவைச் சுடுவதும் போல், ஒரு முயற்சியால் இருவினையை முடிக்கும்வகை இதனாற் சொல்லப்பட்டது. அதற்கேற்ப எண்ணிச் செ-க என்பது கருத்து.

### 679. *நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே*
### *யொட்டாரை யொட்டிக் கொளல்.*

**(இ-ரை.)** ஒட்டாரை ஒட்டிக் கொளல் - வினை தொடங்குமுன் தன் பகைவரொடு பொருந்தாதவரைத் தனக்கு நட்பாக்கிக் கொள்ளுதல்; நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே - தன் நண்பருக்கு இனியன செ-தலினும் விரைந்து செ-யப்பட வேண்டியதே.

உண்மையானவரும் பழகியவருமான நண்பர் தன்னை விட்டு நீங்கா ராதலானும், அவருக்குச் செ-ய வேண்டிய சிறப்பைச் சற்றுக் காலந்தாழ்த்துச் செ-யினும் பொறுத்திருப்பராதலானும், பகைவருடன் பொருந்தாதவரை உடனே தன்னொடு சேர்த்துக்கொள்ளாவிடின் பகைவர் அவர் விரும்பிய தைக் கொடுத்துத் தம்வயப்படுத்திக் கொள்வராதலானும், 'நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே' என்றார். இனி, இதுவரை தன்னொடு ஒட்டாரை

ஒட்டிக்கொளல் எனினுமாம். ஏகாரம் தேற்றம். இக் குறளிரண்டும் மெலியன் செயல் கூறின.

**680. உறைசிறியா ருண்ணடுங்க லஞ்சிக் குறைபெறிற்**
**கொள்வர் பெரியார்ப் பணிந்து.**

**(இ-ரை.)** உறைசிறியார் - சிறிய ஆள்நிலத்தையுடைய அமைச்சர்; உள் நடுங்கல் அஞ்சி - வலிய பகைவர் வந்து தம்மைத் தாக்கியவிடத்துத் தம் நாட்டிலுள்ள குடிகள் நடுங்குவது கண்டு அஞ்சி; குறைபெறின் - பகைவருடன் ஏதேனுமொரு வகையில் உடன்படிக்கை செ-துகொள்ள வா-க்குமாயின்; பெரியார்ப் பணிந்து கொள்வர் - அவ் வலிய பகைவர்க்குத் தாழ்ந்து அவர் கூறுங் கட்டுத்திட்டங்களை ஏற்றுக்கொள்வர்.

இது மிகுமெலியன் செயல். வேறு வழியின்மையால் பகைவருக்கு அடங்க வேண்டியதாயிற்று. 'உறை' முதனிலைத் தொழிலாகுபெயர். உறையும் இடம் உறை. அது நாடும் அரணுமாம். 'உள்' இடவாகு பெயர். கொடுங்கோல் மன்னர் நாட்டைக் கைப்பற்ற விரும்புவராதலின், குறைபெறும் அருமை நோக்கிப் 'பெறின்' என்றார். வலியவனுக்குப் பணிந்து திறை கொடாவிடின் அரசு மட்டுமன்றி உயிரையும் இழக்க நேருமாதலின், பெருங்கேட்டினும் சிற்றிழப்பு நன்றென்றார். ஆயினும், பகைவர்க்குப் பணிதல் தன்மானக் கேடாதலின், அதை எதிர்முக ஏவலாகக் கூறாது படர்க்கை வினையாக உலகியல்மேல் வைத்துக் கூறினார். 'உறைசிறியார்' என்றது,

**"உயர்திணை தொடர்ந்த பொருள்முத லாறும்**
**அதனொடு சார்த்தின் அத்திணை முடிபின"** **(நன். 377)**

என்னும் நெறியீட்டைத் தழுவியதாம்.

## அதி. 69 - தூது

*அதாவது, அரசரைப் பொருத்தலும் பிரித்தலும் பேணலும்பற்றி வேற்றரசரிடம் அரசரும் அமைச்சரும் முனிவரும் புலவரும் சென்று கூறும் செ-தி. அமைச்சர் செல்வதே பெரும்பான்மை. புலவர் சென்றதற்கு, ஔவையார் அதிகமான்பொருட்டுத் தொண்டைமானிடம் தூது சென்றதை எடுத்துக்காட்டாகக் கொள்க.*

*தூது என்னும் சொல் தூதுச் செ-தியையும் அதனைச் சொல்வாரையுங் குறிக்கும். வகுத்துரைப்பார், வழியுரைப்பார் எனத் தூதர் இரு வகையார்.*

*வேற்றரசன் வினாக்கட் கெல்லாம் விடையிறுக்கும் அறிவாற்றலும் உரிமையும் பெற்றவர் வகுத்துரைப்பார்; அவ் வாற்றலின்றிச் சொல்லி விடுத்த செ-தியைமட்டுஞ் சொல்பவர் வழியுரைப்பார்.*

*பிரித்தல் பொருத்தல் பேணல் முதலிய சூழ்ச்சிவன்மையும், அவற் றிற்கேற்ற சொல்வன்மையும் உடைய அமைச்சர்க்கும், அவர் போன்ற பிறருக்கும், தூதுரைத்தல் பொதுவினையாதலின், இது அமைச்சர்க்குரிய வினைசெயல் வகையின் பின் வைக்கப்பட்டது.*

*காதல் வாழ்க்கையில், தலைவனுந் தலைவியும் ஒருவர்க்கொருவர் தூது விடுப்பது, இன்பத்துப்பாற்கன்றிப் பொருட்பாற்குரிய தன்றென அறிக.*

## 681. அன்புடைமை யான்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்
## பண்புடைமை தூதுரைப்பான் பண்பு.

**(இ-ரை.)** அன்பு உடைமை - மக்களிடத்து அன்பாயிருத்தலும்; ஆன்ற குடிப்பிறத்தல் - ஆட்சித் தொழிற்கேனும் அமைச்சுத் தொழிற்கேனும் ஆசிரியத் தொழிற்கேனும் ஏற்ற வகுப்பிலும் குடும்பத்திலும் பிறந்திருத்த லும்; வேந்து அவாம் பண்பு உடைமை - அரசர் விரும்பத்தக்க சிறந்த தன்மைகளுடையனா யிருத்தலும்; தூது உரைப்பான் பண்பு - தூது சொல் வானுக்கு உரிய இலக்கணங்களாம்.

நாட்டிற்கு நன்மையை நாடவேண்டுமாதலின் 'அன்புடைமை' யென் றும், குலத்தொழிலறிவு கல்லாமற் பாதியமையுமாதலின் 'ஆன்ற குடிப்பிறத்தல்' என்றும், அரசருள்ளத்தைக் கவருந் தன்மைகளுடையவன் கூறும் தூதை அவர் விரும்பிக் கேட்பராதலின் 'வேந்தவாம் பண்புடைமை' என்றும் கூறினார். குடியென்றது இங்குத் தொல்வரவான அரசர் குடும்பத்தையும் சேக்கிழார் குடிபோலும் வேளாண் சரவடியையுமாம். அவாவும் என்பது அவாம் எனக் குறைந்து நின்றது. இக் குறளால் இருவகைத் தூதர்க்கும் பொது விலக்கணம் கூறப்பட்டது.

## 682. அன்பறி வாரா–ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்
## கின்றி யமையாத மூன்று.

**(இ-ரை.)** அன்பு - தம் அரசனிடத்து அன்புடைமையும்; அறிவு - தம் வினைக்கு அறிய வேண்டியவற்றை அறிந்திருத்தலும்; ஆரா-ந்த சொல் வன்மை - செவிக்கும் உள்ளத்திற்கும் இனியனவும் பொருட்கொழுமை யுள்ளனவும் தகுந்தனவுமான சொற்களை ஆரா-ந்தமைத்துக் கூறும்

நாவன்மையும்; தூது உரைப்பார்க்கு இன்றியமையாத மூன்று - தூது சொல் வார்க்கு இன்றியமையாத மூன்று திறங்களாம்.

'இன்றியமையாத மூன்று' எனவே, முன்பு அமைச்சர்க்குக் கூறப்பட்ட பிற விலக்கணங்களும் வேண்டுமென்பது பெறப்பட்டது.

### 683. நூலாரு ணூல்வல்ல னாகுதல் வேலாருள்
### வென்றி வினையுரைப்பான் பண்பு.

**(இ-ரை.)** வேலாருள் வென்றி வினையுரைப்பான் பண்பு - வேற்படை யுடைய வேற்றரசரிடஞ் சென்று தன் அரசனுக்கு வெற்றி தரும் வினையைச் சொல்வானுக்கு இலக்கணமாவது; நூலாருள் நூல்வல்லன் ஆகுதல் - அரசியல் நூலை அறிந்தவருள் தான் அந் நூலறிவிற் சிறந்தவனா யிருத்தலாம்.

கொல்லுந் திறத்தினர் என்பது தோன்ற 'வேலார்' என்றும், இருவகைத் தூதுவினையும் அடங்க 'வென்றிவினை' என்றும் கூறினார். 'வல்லனாகுதல்' அந் நூற் செ-தி யெல்லாவற்றையும் தெளிவாக அறிந்திருத்தலும், தவறாகச் சொன்னவிடத்து அதைத் திருத்தலுமாம்.

### 684. அறிவுரு வாரா—ந்த கல்வியிம் மூன்றன்
### செறிவுடையான் செல்க வினைக்கு.

**(இ-ரை.)** அறிவு - இயற்கையான அறிவும்; உரு - கண்டார் மதிக்குந் தோற்றப்பொலிவும்; ஆரா-ந்த கல்வி - ஆரா-ச்சியோடு கூடிய கல்வியும்; இம் மூன்றன் செறிவு உடையான் - ஆகிய இம் மூன்றும் நிறைந்தவன்; வினைக்குச் செல்க - வேற்றரசரிடம் தூதனாகச் செல்க.

இம் மூன்றும் நிறைந்தவன் செல்லின், தூதுவினை சிறப்பாக முடியு மென்பது கருத்து. பல நூல்களையும் அவற்றின் வேறுபட்ட வுரைகளையுங் கற்று உலகியலொடு பொருந்தத் தானும் ஆரா-ந்ததை, 'ஆரா-ந்த கல்வி' என்றார்.

### 685. தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
### நன்றி பயப்பதாந் தூது.

**(இ-ரை.)** தொகச் சொல்லி - வேற்றரசரிடம் பல செ-திகளைச் சொல்ல வேண்டியிருக்கும்போது, மூவகையாலும் ஒப்புமைவகையாலும் சுருக்க வகையாலும் தொகுத்துச் சொல்லியும்; தூவாத நீக்கி நகச்சொல்லி - வெறுப்

பான செ-திகளைச் சொல்லும்போது கடுஞ்சொற்களை நீக்கி இனிய சொற் களால் மனமகிழச் சொல்லியும்; நன்றி பயப்பது தூது ஆம் - தன் அரசனுக்கு நன்மை விளைப்பவனே நல்ல தூதனாவன்.

பல செ-திகளை ஒவ்வொன்றாக வேறுபடச் சொல்லின், அவற்றின் பன்மைபற்றியும் நெடுநேரங் கேட்குஞ் சலிப்புப்பற்றியும் அவற்றிற்கு இசையார். ஆயின், அவற்றைத் தொகுத்து ஒரே செ-தியா-ச் சொல்லின் சுருக்கம்பற்றியும் விளைவறியாதும் இசைவர் என்பதாம். வேற்றரசன் மகளைத் தன்னரசனுக்குப் பெண்கேட்பதும், வேற்று நாட்டில் தன்னாட்டு வணிகக்குழும்பு ஒன்று தங்கி வணிகஞ் செ-ய இடங்கேட்பதும் போன் றவை மூவகையில் தொகுத்துக் கூறலுக்கும்; சாலைகள் அமைத்தல், கால் வா-கள் வெட்டுதல், சுருங்கைகள் குடைதல் முதலியவற்றைப் போக்கு வரத்து வாயிலமைப்பு என்று குறிப்பது, ஒப்புமை வகையில் தொகுத்துக் கூறலுக்கும்; கோமுட்டி ஒருவன் தனக்குத் தெ-வங்கொடுத்த ஒரே ஈவைக் கேட்கும்போது, "என் கொட்பேரன் எழுநிலை மாடத்திலிருந்து பொற்கலத்திற் பாற்சோறுண்பதை நான் பார்க்க வேண்டும்" என்று சொன்னதாகக் கதை கூறுவது போன்றது. சுருக்க வகையில் தொகுத்துக் கூறலுக்கும் எடுத்துக் காட்டாம். இன்சொற்குப் பெரும்பாலார் வயப்படுதல்பற்றியே அது நால்வகை ஆம்புடைகளுள் ஒன்றாகக் கொள்ளப்பட்டது. 'ஆம்' பிரித்துக் கூட்டப்பட்டது.

### 686. *கற்றுக்கண் ணஞ்சான் செலச்சொல்லிக் காலத்தாற்*
### *றக்க தறிவதாந் தூது.*

**(இ-ரை.)** கற்று - அறநூல்களையும் அரசியல் நூல்களையுங் கற்று; கண் அஞ்சான் - பகையரசரின் சினப் பார்வைக்கு அஞ்சாது; செலச் சொல்லி - அவர் மனத்திற் பதியுமாறு செ-திகளைச் சொல்லி; காலத்தால் தக்கது அறிவது தூது ஆம் - காலத்திற் கேற்பத் தகுந்த வழிகளைக் கையாள்பவனே நல்ல தூதனாவன்.

நூற்கல்வி பயன்படாவிடத்துத் தன் மதிநுட்பத்தாலும் உலகியலறி வாலும் சமையத்திற் கேற்றவாறு தக்க வழிகளைக் கையாண்டு, வினை முடிக்க வேண்டியிருத்தலின், 'தக்கதறிவதாந் தூது' என்றார். 'ஆம்' இங்கும் பிரித்துக் கூட்டப்பட்டது.

### 687. *கடனறிந்து காலங் கருதி யிடனறிந்*
### *தெண்ணி யுரைப்பான் றலை.*

**(இ-ரை.)** கடன் அறிந்து - வேற்றரசரிடம் தான் நடந்துகொள்ள வேண்டிய முறைமையை அறிந்து; காலம் கருதி - அவரை நல்ல மனநிலையிற் காணுதற் கேற்ற சமையம் பார்த்து; இடன் அறிந்து - தான் வந்த செ-தியைச் சொல்லுதற்கேற்ற இடமும் அறிந்து; எண்ணி - தான் சொல்ல வேண்டுவவற்றை முன்னமே தன் மனத்தில் ஒழுங்காக எண்ணி வைத்து; உரைப்பான் தலை - அவ்வாறு சொல்பவன் தலையாய தூதனாவான்.

நடந்துகொள்ளும் முறைமையாவது, அவர் நிலைமையும் அவர் நாட்டு வழக்கமும் தன்னரசன் நிலைமையும் நோக்கி, அவற்றிற்கேற்பக் காணும் முறைமையும் நிற்கும் முறைமையும் சொல்லும் முறைமையுமாம். காலம் என்றது, தட்பவெப்பம் மிகாத நாளிற் பசியுங் களைப்பும் சினமும் வருத்தமும் கவலையுமின்றி மனம் மகிழ்ந்து அல்லது அமைந்து இருக்கும் சமையம். இடம் என்றது தனக்குப் பகையானவரன்றித் துணையானவர் உடனிருக்கு மிடம். எண்ணுதலுள், அரசன் வினவக்கூடிய வினாக்களும் சொல்லக் கூடிய உத்தரவுகளும், தான் மேற்கொண்டு கூறும் மறுமாற்றங்களும் அடங்கும்.

“வடநூலார் இவ் விருவகையாருடன் ஓலை கொடுத்து நிற்பாரையுங் கூட்டித் தூதரைத் தலை, இடை, கடை என்று வகுத்துக் கூறினாராகலின், அவர் மதமுந் தோன்றத் ‘தலை’ யென்றார்” என்று பரிமேலழகர் இங்கும் தம் தன்மையைச் சிறிது காட்டியுள்ளார். ‘தலை’ யென்றது சிறந்தவன் என்றே பொருள்படுவதாம். ஓலையை மட்டும் நீட்டி நிற்பவன் தூதனாகான்; ஓலையாளாகவே யிருப்பான். அத்தகைய வோலை நட்புத் திருமுகமாகவோ பேரரசன் கட்டளையாகவோதான் இருக்க முடியும். தூதன் என்பது அதிகாரத்தான் வந்தது. இவ்வாறு குறளாலும் வகுத்துக் கூறும் திறம் கூறப்பட்டது.

**688.** ***தூ-மை துணைமை துணிவுடைமை யிம்மூன்றின்***
***வா-மை வழியுரைப்பான் பண்பு.***

**(இ-ரை.)** தூ-மை - மண் பெண் பொன் என்னும் மூவகையாசையுமின்றித் தூயவனாயிருத்தலும்; துணைமை - வேற்றரசரின் அமைச்சரைத் துணையாக வுடைமையும்; துணிவுடைமை - சொல்லவேண்டிய செ-தியை அஞ்சாது சொல்லும் திடாரிக்கமும்; இம் மூன்றின் வா-மை - இம் மூன்றொடு கூடிய மெ-ம்மையும்; வழி உரைப்பான் பண்பு - தன் அரசன் சொல்லி விடுத்த செ-தியை அவன் சொன்னவாறே வேற்றரசரிடம் சென்று கூறும் தூதனுக்கு இருக்க வேண்டிய தகுதிகளாம்.

மூவகை யாசைபற்றிச் செ-தியை வேறுபடக் கூறாமைப்பொருட்டுத் தூ-மையும், வேற்றரசன் சினத்தைத் தடுப்பதற்கும் தன் வினைக்குச் சார் பாயிருத்தற்கும் துணைமையும், வெறுக்கத்தக்க செ-தியிருப்பினும் விடாமற் சொல்லுதற்பொருட்டுத் துணிவும், எல்லாராலும் நம்பப்படும் பொருட்டு மெ-ம்மையும் வேண்டுமென்றார். 'இன்' இங்கு 'ஒடு'ப்பொருளது. இனி, 'இன்'னைச் சாரியையாகக் கொண்டு ஒடுவுருபு தொக்கதெனினுமாம்.

### 689. விடுமாற்றம் வேந்தர்க் குரைப்பான் வடுமாற்றம்
### வா–சோரா வன்க ணவன்.

**(இ-ரை.)** விடுமாற்றம் வேந்தர்க்கு உரைப்பான் - தன் அரசன் சொல்லி விடுத்த செ-தியை வேற்றரசரிடம் சென்று கூறுபவன்; வடுமாற்றம் வா- சோரா வன்கணவன் - தனக்கு நேரக் கூடிய தீங்கிற்கு அஞ்சி வா-தவறியும் தாழ்வான சொற்களைச் சொல்லாத திண்ணிய நெஞ்சனாயிருத்தல் வேண்டும்.

வடு-குற்றம். தாழ்வான சொற்களைச் சொல்லுதல் தன் தகுதிக்கேற்காத குற்றமாதலின், 'வடுமாற்றம்' என்றார். வா- சோராமைக்கு ஏதுவான வன்கண் என்க.

### 690. இறுதி பயப்பினு மெஞ்சா திறைவற்
### குறுதி பயப்பதாந் தூது.

**(இ-ரை.)** இறுதி பயப்பினும் - தான் கூறுஞ்செ-தியால் தன் உயிரிழக்க நேரினும்; எஞ்சாது - அஞ்சி விட்டுவிடாது; இறைவற்கு உறுதி பயப்பது - தன் அரசன் சொல்லியவாறே வேற்றரசரிடம் செ-தியைச் சொல்லித் தன் அரசனுக்கு நன்மை விளைப்பவனே; தூது ஆம் - சரியான தூதனாவன்.

உம்மை உயர்வுசிறப்பு. 'ஆம்' பிரித்துக் கூட்டப்பட்டது. அதிகமானுக் குத் தொண்டைமானிடம் தூது சென்ற ஔவையார் வகுத்துரைப்பார் வகை யினராயினும், இறுதிபயப்பினும் உறுதி பயக்கும் தூதிற்கு, அவர் பாடிய,

"இவ்வே, பீலி யணிந்து மாலை சூட்டிக்
கண்டிரள் நோன்காழ் திருத்திநெ– யணிந்து
கடியுடை வியனக ரவ்வே யவ்வே
பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து
கொற்றுறைக் குற்றில மாதோ என்றும்
உண்டாயிற் பதங்கொடுத்

தில்லாயின் உடனுண் ணும்
இல்லோ ரொக்கல் தலைவன்
அண்ணலெங் கோமான் வைந்நுதி வேலே" (புறம். 65)

என்னும் பாட்டுச் சிறந்த எடுத்துக்காட்டாம்.

## அதி. 70 - மன்னரைச் சேர்ந்தொழுகல்

*அதாவது, அமைச்சர், குருக்கள், படைத்தலைவர், தூதர், ஒற்றர் ஆகிய ஐம்பெருங் குழுவினர் அரசனையடுத்து ஒழுகும் முறை. முந்தின அதிகார முதற்குறளில் 'வேந்தவாம் பண்புடைமை' யென்று குறிக்கப்பட்டது இதுவே யாதலின், இது தூதின்பின் வைக்கப்பட்டது.*

### 691. அகலா தணுகாது தீக்கா—வார் போல்க
### விகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்.

**(இ-ரை.)** இகல் வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார் - வலிமையுள்ள அரசரை அடுத்தொழுகும் அமைச்சர் முதலியோர்; அகலாது அணுகாது தீக்கா-வார் போல்க - அவரினின்று மிக நீங்காமலும் அவரொடு மிக நெருங்காமலும் தீயருகே குளிர்கா-வார் போல இடைப்பட்ட இடத்தில் நிற்பதும் இருப்பதும் செ-க.

"அரசன் அன்று கொல்லும்; தெ—வம் நின்று கொல்லும்"

"அருளு மேலர சாக்குமன் காயுமேல்
வெருளச் சுட்டிடும் வேந்தெனு மாதெ—வம்
அருளி மற்றவை வாழ்த்தினும் வையினும்
அருளி யாக்க லழித்தலங் காபவோ." (சீவக. 247)

"தீண்டி னார்தமைத் தீச்சுடும் மன்னர்தீ
ஈண்டு தங்கிளை யோடுமெ ரித்திடும்
வேண்டி லின்னமிர் துந்நஞ்சு மாதலான்" (சீவக. 250)

'இகல் வேந்தர்' என்றும், 'அகலா தணுகாது தீக்கா-வார் போல்க' என்றும் கூறினார். அமைச்சர் முதலியோர் மிக நெருங்கின் மதியாமைக் குற்றம் பற்றித் தண்டிப்பவரும், மிக நீங்கின் மந்திரச் சூழ்வினைக்குப் பயன்படாத நிலைமையினருமான அரசர்க்குக் குளிர்கா-வார் மிக நெருங்கின் சுடுவதும்

மிக நீங்கின் குளிர்போக்காததுமான தீயை, உவமித்தது மிகப் பொருத்தமான வினையுவமையாம்.

## 692. *மன்னர் விழைப விழையாமை மன்னரான்*
## *மன்னிய வாக்கந் தரும்.*

**(இ-ரை)** மன்னர் விழைப விழையாமை - தம்மால் அடுக்கப்பட்ட அரசர் தம் பதவிக்கேற்பச் சிறப்பாக விரும்புவனவற்றைத் தாம் விரும்பாதிருத்தல்; மன்னரான் மன்னிய ஆக்கம் தரும் - அவ் வரசர் வாயிலாகவே அமைச்சர் முதலியோரான தமக்கு நிலைபெற்ற செல்வத்தைக் கொடுக்கும்.

'மன்னர் விழைப' என்றது உண்டி, ஆடையணி, உறையுள், ஊர்தி, பெண்ணின்பம் முதலியவற்றுட் சிறந்த வகைகளையும்; கண்ணியம், புகழ் முதலியவற்றில் ஒப்புயர்வின்மையையும்; அரசனுக்கென்றே ஒதுக்கப்பெற்ற ஆடிடம், நீர்நிலை முதலியவற்றையும். அரசனுக்கு ஒப்பாதல் அஞ்சி இவற்றை விரும்பாதொழியவே, அரசனே அவ் வச்சத்திற்கு மகிழ்ந்து பலவகைச் செல்வத்தையும் நிலையாக நுகரத் தருவன் என்பதாம்.

## 693. *போற்றி னரியவை போற்றல் கடுத்தபின்*
## *றேற்றுதல் யார்க்கு மரிது.*

**(இ-ரை.)** போற்றின் அரியவை போற்றல் - அமைச்சர் தம்மைக் காக்க விரும்பின் கடும்பிழைகள் தம்மேல் வராமற் காத்துக் கொள்க; கடுத்தபின் தேற்றுதல் யார்க்கும் அரிது - அவற்றை நிகழ்ந்தனவாகக் கேள்விப்பட்ட அரசர் ஐயுற்றபின் அவரைத் தெளிவித்தல் எத்துணைச் சிறந்தவர்க்கும் அரிதாம்.

கடும்பிழைகள் பகைவராற் கீழறுக்கப்படுதல், அரசர்க்கேயுரிய உரிமை மகளிரொடு பழகுதல், அரசன் உத்தரவின்றி அவனறைக்குட் புகுதல், அரும்பொருள் கவர்தல் முதலியன. கீழறுக்கப்படுதலாவது பகைவரிடம் பொருள் பெற்றுக்கொண்டு அவருக்குத் துணையாயிருக்க உடன்படுதல். இது அறைபோதல் எனவும் படும். இத்தகைய குற்றங்கள் வராமற் காத்தலாவது, யாரேனும் இவை நிகழ்ந்ததாக அரசனிடம் சொல்லினும், அதை அவன் கடுகளவும் நம்பாதவாறு தூ-மையாக ஒழுகுதல். ஒருமுறை ஐயுற்றபின், அதை ஒருவகையால் தெளிவித்தாலும், அவர் உள்ளத்தில் அது என்றும் நிலைத்திருக்குமாதலின், 'யார்க்கு மரிது' என்றார். உம்மை உயர்வுசிறப்பு.

**694. செவிச்சொல்லுஞ் சேர்ந்த நகையு மவித்தொழுக
லான்ற பெரியா ரகத்து.**

**(இ-ரை.)** ஆன்ற பெரியாரகத்து - வலிமை நிறைந்த அரசரருகில் இருக்கும்போது; செவிச்சொல்லும் சேர்ந்த நகையும் அவித்து ஒழுகல் - அவர் காண ஒருவர் காதிற்குள் மெதுவாகச் சொல்லுதலையும் ஒருவர் முகம் நோக்கிச் சிரித்தலையும் அடியோடு விட்டுவிடுக.

'சேர்ந்த நகை' என்றதனால் பிறரொடு கூடிச் சிரித்தலும் அடங்கும். 'செவிச் சொல்லும் சேர்ந்த நகையும்' தம்மைப்பற்றியே நிகழ்ந்தனவாகக் கருதிக் கடுஞ்சினங் கொள்ளின் அன்றே அழித்துவிடும் ஆற்றலராதலின், 'ஆன்ற பெரியார்' என்றும் 'அவித்தொழுகல்' என்றும், கூறினார்.

**695. எப்பொருளு மோரார் தொடரார்மற் றப்பொருளை
விட்டக்காற் கேட்க மறை.**

**(இ-ரை.)** மறை - அரசனுக்குப் பிறரோடு ஒரு மறைபொருள்பற்றிப் பேச்சு நிகழும்போது; எப்பொருளும் ஓரார் - அதில் எந்தப் பொருளையும் செவிசா-த்து உற்றுக் கேளாமலும்; தொடரார் - அவனை அணுகி வினவா மலும் இருந்து; மற்று அப் பொருளை விட்டக்கால் கேட்க - பின் அம் மறை பொருளை அடக்கிவையாது அவனே வலியச் சொன்னால் அமைச்சர் முதலியோர் கேட்டறிக.

தம்மைப்பற்றியதாயினும் என்பார் 'எப்பொருளும்' என்றார். 'ஓரார்', 'தொடரார்' என்பன எதிர்மறை முற்றெச்சம். 'மற்று' பின்மைப் பொருளில் வந்தது; வினைமாற்றின்கண் வந்ததன்று.

**696. குறிப்பறிந்து காலங் கருதி வெறுப்பில
வேண்டுப வேட்பச் சொலல்.**

**(இ-ரை.)** குறிப்பு அறிந்து - அமைச்சர் முதலியோர் அரசனுக்குச் செ-தி சொல்லுங்கால் அவன் உள்ளக் குறிப்பையறிந்து; காலம் கருதி - சொல்லுதற் கேற்ற காலத்தையும் நோக்கி; வெறுப்பு இல வேண்டுப வேட்பச் சொலல் - அவனுக்கு வெறுப்பில்லாதவற்றையும் வேண்டியவற்றையும் அவன் கேட்க விரும்பும் வகை சொல்க.

கோப்பெருந்தேவி ஊடியிருக்கும்போது காமம்பற்றிய அவலமும், பகையரசர் இகழ்ந்து ஓலைவிடுத்தபோது வெகுளியும் பிறந்து, வேறு செ-தி

சொல்வார்மீது வெறுப்பையும் சினத்தையும் விளைக்குமாதலின், 'குறிப்பறிந்து' என்றும், வேட்டையாடவும் உரிமை மகளிரொடு விளையாட வும் கருதியபோது, போர்தவிர வேறெச்செ-தியிலும் மனம் பதியாதாகலின், 'காலங்கருதி' என்றும் கூறினார். அரண்மனைப் பொற்கொல்லன் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியனை அவன் தேவி ஊடிய காலத்துக் கண்டதும், அவ் வூடல் நீக்குதற்கேதுவான செ-தியுடைமைபற்றியே,

**"அறிகொன் றறியா னெனினு முறுதி**
**யுழையிருந்தான் கூறல் கடன்"** **(638)**

என்றமையால், இங்கு 'வெறுப்பில' என்றது வினைக்குரியன அல்லாதவற்றை யென அறிக. அரசர் தெ-வத்தன்மை யுடையவராதலின், இன்பமாகச் சுருக்கியும் விளக்கியும் சொல்லுக வென்பார் 'வேட்பச் சொலல்' என்றார்.

## 697. வேட்பன சொல்லி வினையில வெஞ்ஞான்றும் கேட்பினுஞ் சொல்லா விடல்.

**(இ-ரை.)** வேட்பன சொல்லி - பெரும்பயன் படுவனவும் அரசன் விரும்புவனவுமான செ-திகளை அவன் கேட்டிலனாயினும் சொல்லி; எஞ்ஞான்றும் வினை இல கேட்பினும் சொல்லாவிடல் - எப்போதும் வினைக் குதவாத வீண் செ-திகளை அவன் கேட்பினும் சொல்லாது விடுக.

இதனால்,

**"சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க**
**சொல்லிற் பயனிலாச் சொல்"** **(200)**

என்பது வற்புறுத்தப் பெற்றது. 'வினையில' என்பதனால் வினையுள என்பதும், 'கேட்பினும்' என்பதனால் கேளாவிடினும் என்பதும், மறுதலைச் சொற்களாக வருவிக்கப்பட்டன. வினை யென்றது பயன்பாட்டை. 'கேட்டல்' சொல்லச் சொல்லுதலும் செவிகொடுத்தலும் ஆகிய இரு செயலும்பற்றியதாம். 'கேட்பினும்' எச்சவும்மை. 'சொல்லா' ஈறு கெட்ட எதிர்மறை வினையெச்சம்.

## 698. இளைய ரினமுறைய ரென்றிகழார் நின்ற வொளியோ டொழுகப் படும்.

**(இ-ரை.)** இளையர் இனமுறையர் என்று இகழார் - இவர் எமக்கு இளை யவர் என்றும், எமக்கு இன்ன முறையினர் என்றும், மதிப்புக் குறைவாகக்

கருதாது; நின்ற ஒளியோடு ஒழுகப்படும் - அரசரிடத்து அமைந்துள்ள தெ-வத் தன்மையொடு பொருந்த ஒழுகுதல் வேண்டும்.

முன்னறி தெ-வங்களான பெற்றோர் தவிர, வேறெந்த உறவினரும் இனமுறைபற்றி எளிமையாகக் கருதாது, மற்றக் குடிகள் போன்றே அரசரைத் தெ-வமாகப் போற்றவேண்டு மென்பது, தொன்றுதொட்ட தமிழ் மரபு. ஆயின், கணவன் உயிர்வாழ்ந்திருக்கும்போது மனைவி அரசாளுதல் தமிழ்மரபன்றாதலின், மேனாட்டு முடிசூட்டு விழாவிற்போல் கணவன் மனைவிக்குமுன் மண்டியிட்டு நின்ற வொளியோ டொழுகல் தமிழகத்தில் இல்லை. ஐம்பூதங்களுள் ஒன்றான தீ, தெ-வத்தன்மையுள்ள தென்று கருதப் பட்டதனாலும், அரசன் துன்பவிருளையும் அகவிருளையும் போக்குவ னாதலாலும், அரசனின் தெ-வத்தன்மையை 'ஒளி' என்றார்.

**"உறங்கு மாயினும் மன்னவன் றன்னொளி**
**கறங்கு தெண்டிரை வையகங் காக்குமால்**
**இறங்கு கண்ணிமை யார்விழித் தேயிருந்**
**தறங்கள் வெளவ வதன்புறங் காக்கலார்"** **(சீவக. 248)**

என்று திருத்தக்கதேவருங் கூறுதல் காண்க.

அரசன் அன்று கொல்லுந் தெ-வமாதலின், அரசரைப் போற்றாதவர் அன்றே அழிக்கப்படுவர் என்பதாம். 'படும்' என்பது இங்கு 335ஆம் குறளிற்போல் 'வேண்டும்' என்னும் பொருளதாம்.

'இகழார்' எதிர்மறை முற்றெச்சம்.

### 699. *கொளப்பட்டே மென்றெண்ணிக் கொள்ளாத செ—யார்*
### *துளக்கற்ற காட்சி யவர்.*

**(இ-ரை.)** துளக்கு அற்ற காட்சியவர் - நிலைத்த உறுதியான அறிவினை யுடையார்; கொளப்பட்டேம் என்று எண்ணிக் கொள்ளாத செ-யார் - யாம் அரசனால் மதிப்பாக ஏற்றுக்கொள்ளப்பட்டேம் என்று கருதித் தம் நிலை யொடு பொருந்தாதவற்றைச் செ-யார்.

நிலைமை யுயர்ந்தபின் தம் பழைய நிலைமையை நினைத்து முன் போன்றே தாழ்மையா- ஒழுகாது. "நன்னிக்குப் பதவி வந்தால் நள்ளிரவிற் குடைபிடிப்பான்" என்பதற் கிணங்கத் தலைகால் தெரியாது நடப்பவரே

உலகத்துப் பலராதலின், என்றும் ஒருதன்மையராக விருந்து மன்னர் விழைப விழையாது அவரிடத்து நின்ற வொளியோ டொழுகுபவரைத் 'துளக்கற்ற காட்சி யவர்' என்றார். காட்சி என்றது அகக்காட்சியை.

### 700. *பழைய மெனக்கருதிப் பண்பல்ல செ–யுங்*
### *கெழுதகைமை கேடு தரும்.*

**(இ–ரை.)** பழையம் எனக் கருதிப் பண்பு அல்ல செ-யும் கெழுதகைமை - அரசனொடு இளமையிலிருந்தே யாம் பழகினேம் என்று கருதித் தமக்குத் தகாதவற்றைச் செ-யும் தவறான நட்புரிமை; கேடு தரும் - அமைச்சர் முதலியோர்க்கு அழிவைத் தரும்.

பழைமையாவது விளையாட்டுத் தோழமையும் கல்வித் தோழமையும். அரசப் பதவியேற்ற பின்பும் பழைய தோழமைபற்றிச் சமநிலை கொண்டாடிக் குற்றஞ் செ-யின், அரசர் பொறாது தண்டிப்பராதலின், 'கெழுதகைமை கேடு தரும்' என்றார். இம் முக்குறளாலும், இளமையும் நெருங்கிய தொடர்பும்பற்றி அரசர் வெறுப்பன செ-யற்க என்பது கூறப்பட்டது.

## அதி. 71 - குறிப்பறிதல்

*அதாவது, அமைச்சர் முதலியோர் அரசரது உள்ளக்குறிப்பை அவர் முகக்குறிப்பால் அறிந்துகொள்ளுதல், இது மன்னரைச் சேர்ந்தொழுகற்கு இன்றியமையாததாதலின், அதன் பின் வைக்கப்பட்டது. இதனால், அமைச்சர் முகக்குறிநூலும் (Physiognomy) கற்றிருக்க வேண்டுமென்பது குறிப்பா-ப் பெறப்படும்.*

### 701. *கூறாமை நோக்கிக் குறிப்பறிவா னெஞ்ஞான்று*
### *மாறாநீர் வையக் கணி.*

**(இ–ரை.)** குறிப்புக் கூறாமை நோக்கி அறிவான் - அரசன் கருதிய கருமத்தை அவன் கூறாமலே அவன் முகத்தை நோக்கி அறியவல்ல அமைச்சன்; எஞ்ஞான்றும் மாறாநீர் வையக்கு அணி - உலகுள்ள அளவும் ஒருபோதும் வற்றாத கடலைத் தன்னுட்கொண்ட ஞாலத்தில் வாழ்வார்க்கு ஓர் அணிகலமாம்.

குறிப்பு உள்ளத்திற் குறித்தது. நோக்குதல் நுனித்துப் பார்த்தல். முகம் என்பது முகத்திலுள்ள கண், கன்னம், மீசை, உதடு, பல், நா முதலிய வுறுப்பு

களைக் குறிக்கும். இவற்றுள் முதன்மையானது கண். உலகம் முத்தொழிற் படுதலின் 'உலகுள்ள அளவும்' என்றும்; ஞாலம் நீராற் சூழப்படாமல் அதைத் தன்னுள் ஒரு கூறாகக் கொண்டிருப்பதனாலும், நீராற் சூழப்பட்ட நிலப்பகுதி பலவாயிருப்பதனாலும், 'தன்னுட் கொண்ட ஞாலம்' என்றும்; கூறப்பட்டது. உலக முழுவதையுங் குறித்தற்கு 'மாறாநீர் வையம்' என்றார். கடலை 'மாறா நீர்' என்றது எதுகை நோக்கி. 'வையத்திற்கு' என்பதன் அத்துச் சாரியை தொக்கது. 'வையம்' என்பது மக்கள் வைகும் நிலப் பகுதிகளைமட்டும் குறிப்பின், 'நீராற் சூழப்பட்ட' என்று பரிமேலழகர் கூறியதும் பொருந்தும். 'குறிப்பு', 'வையம்' என்பன ஆகுபெயர். ஒண்மையும் நுண்மையுமுள்ள மதியினால் மன்பதை முழுவதற்கும் அழகு செ-தலின், 'வையக் கணி' என்றார்.

## 702. *ஐயப் படாஅ தகத்த துணர்வானைத்*
## *தெ—வத்தோ டொப்பக் கொளல்.*

**(இ-ரை.)** அகத்தது ஐயப்படாது உணர்வானை - ஒருவனது மனத்தின் கண் உள்ளதனை ஒருதலையாக உணர வல்லவனை; தெ-வத்தோடு ஒப்பக் கொளல் - வடிவால் மாந்தனாயினும் மதிநுட்பத்தால் தெ-வம் போன்றவ னென்று கருதி, அதற்கேற்ப மதித்துப் போற்றுக.

உணர்தல் உள்ளத்தால் நுணுகியறிதல். மாந்தன் மாந்தனே யாதலின் 'தெ-வமாக' என்னாது 'தெ-வத்தோ டொப்ப' என்றார். 'படாஅ' இசைநிறை யளபெடை.

## 703. *குறிப்பிற் குறிப்புணர் வாரை யுறுப்பினுள்*
## *யாது கொடுத்துங் கொளல்.*

**(இ-ரை.)** குறிப்பின் குறிப்பு உணர்வாரை - ஒருவரது முகக்குறிப்பி னால் அவரது உள்ளக் குறிப்பை அறியவல்ல அமைச்சரை; உறுப்பினுள் யாது கொடுத்தும் கொளல் - அரசர் தம் பத்துறுப்புகளுள் எதை அவர் வேண் டினுங் கொடுத்துத் தமக்குத் துணையாகக் கொள்க.

'குறிப்பிற் குறிப்புணர்வாரை' என்பதற்கு, "தங்குறிப்பு நிகழுமாறறிந்து அதனாற் பிறர் குறிப்பறியுந் தன்மையாரை " என்று பொருளுரைத்து, "முகக் குறிப்பினாலே உள்ளக்கருத்தை அறியுமவர்களை" என்று உரைத்த மணக் குடவ ருரையும், "அரசரது முகங்கொண்ட குறிப்பினான் அவர் யாதானும் ஒரு கருமத்தை அவர் உள்ளம் கொண்ட குறிப்பினை அறிவார் யாவர் மற்று அவர் தம்மை" என்று உரைத்த காலிங்கரையும்; பரிமேலழகர் பழித்தது

பொருந்தாது, குறிப்பு எல்லார்க்கும் ஒத்து நிகழாமையின். நாடு, ஊர், ஆறு, மலை, யானை, குதிரை, தேர், முரசு, மாலை, கொடி என்பன அரசரின் பத்துறுப்புகள் (திவா. பிங்.)

**704. குறித்தது கூறாமைக் கொள்வாரோ டேனை**
**யுறுப்போ ரனையரால் வேறு.**

**(இ-ரை.)** குறித்தது கூறாமைக் கொள்வாரோடு - ஒருவர் தம் மனத்திற் கருதியதை அவர் கூறாமலே அறியவல்லவரோடு; ஏனை உறுப்பு ஓர் அனையர் - மற்றவர் உறுப்பான் ஒருதன்மையராக ஒப்பாரேனும்; வேறு - மதித்திறனாலும் அறிவாலும் வேறுபட்டவராவர்.

எனினும் (ஏனும்) என்பது அவா-நிலையால் வந்தது. ஆறாம் அறி வில்லாத மாக்கள் நிலையினர் என்னும் கருத்தால் 'வேறு' என்றார். 'ஆல்' அசைநிலை.

**705. குறிப்பிற் குறிப்புணரா வாயி னுறுப்பினு**
**ளென்ன பயத்தவோ கண்.**

**(இ-ரை.)** குறிப்பின் குறிப்பு உணராவாயின் - பிறர் முகத்திலும் முக வுறுப்புகளிலுமுள்ள குறிப்புகளைக் கண்டும் அவற்றால் அவர் உள்ளக் குறிப்புகளைக் காணமாட்டாதனவாயின்; உறுப்பினுள் கண் என்ன பயத் தவோ - ஒவ்வொரு புலனுக்கும் ஒவ்வொன்றாகவுள்ள ஐம்புல வுறுப்பு களுள், காட்சியையே தம் புலனாக கொண்ட கண்கள் வேறென்ன பயன் படுவனவாம்?

'குறிப்பு' இரண்டனுள், முன்னது தோற்றமாகிய புறக்குறிப்பு; பின்னது கருத்தாகிய அகக்குறிப்பு. இரண்டும் தொழிலாகுபெயர். குறிப்பறிதற்கு இன்றியமையாத கருவியாதல்பற்றி, அறிவான் உணர்வு அவன் கண்ணாகிய உறுப்பின்மேல் ஏற்றப்பட்டது. என்ன பயத்தவோ என்னும் வினா, ஒரு பயனு மில்லை யென்னும் விடையை வேண்டி நின்றது. இவ் விரு குறளாலும் குறிப்பறியமாட்டாரது இழிவு கூறப்பட்டது.

**706. அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சங்**
**கடுத்தது காட்டு முகம்.**

**(இ-ரை.)** அடுத்தது காட்டும் பளிங்குபோல் - தன்னையடுத்த பொருளின் வடிவத்தையும் நிறத்தையும் தன்னுட் காட்டும் கண்ணாடி போல; நெஞ்சம் கடுத்தது முகம் காட்டும் - ஒருவர் மனத்தில் தோன்றிய கருத்தை அவர் முகமே காட்டிவிடும்.

'அடுத்தது' ஆகுபொருளது. ஒரு கருத்து ஒருவர் உள்ளத்தில் முன்னில்லாது புதிதா-த் தோன்றிய மிகையாதலின், 'கடுத்தது' எனப்பட்டது. கடுத்தல் மிகுதல். இவ் வுவமையில், தொடர்பினால் ஒன்றையொன்று காட்டுதல் பொதுத் தன்மையாம். பளிங்கு புறப்பொருளை அகத்திற் காட்டுவது; முகம் அகப் பொருளை புறத்திற் காட்டுவது.

### 707. *முகத்தின் முதுக்குறைந்த துண்டோ வுவப்பினுங்*
### *காயினுந் தான்முந் துறும்.*

**(இ-ரை.)** உவப்பினும் காயினும் தான் முந்து உறும் - ஒருவர் இன்னொருவரை விரும்பி மகிழ்ந்தாலும், வெறுத்துச் சினந்தாலும், தான் அவற்றை முன்னறிந்து அவற்றைப் பிறர்க்கு அறிவிப்பதில் வாயினும் முற்பட்டு நிற்றலால்; முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ - முகத்தைப்போல் அறிவு மிக்க வேறு வுறுப்பு ஏதேனும் உண்டோ? இல்லை.

ஒருவரின் விருப்பு வெறுப்புகளை அவர் வா-திறந்து சொல்லுமுன், அவர் முகமே முறையே மலர்ந்தும் சுருங்கியும் தெரிவித்துவிடுதலால், 'முகத்தின் முதுக்குறைந்த துண்டோ' என்றார். இங்கு முந்துறுதற் போட்டி முகத்திற்கும் வா-க்கும் இடைப்பட்டதாம். முது = முதுமையால் உண்டாகும் அறிவு . முது - முதுக்கு. ஒ. நோ: மெது - மெதுக்கு. முதுக்கு உறைதல் = அறிவு தங்குதல், அறிவடைதல். உவப்பான் கா-வான் இயல்புகள் அவர் முகத்தின் மேல் ஏற்றப்பட்டன, உணர்வான் செயல் அவன் கண்ணின்மேல் ஏற்றப் பட்டதுபோல் (705).

### 708. *முகநோக்கி நிற்க வமையு மகநோக்கி*
### *யுற்ற துணர்வார்ப் பெறின்.*

**(இ-ரை.)** இதற்கு ஈருரைகள் உள:

1. அகம்நோக்கி உற்றது உணர்வார்ப் பெறின் - புறக்குறிப்புகளைக் கருவியாகக் கொண்டு அரசனின் உள்ளத்தை நோக்கி அதிலுள்ள கருத்தை அறியவல்ல அமைச்சரை ஆட்சித் துணையாகப் பெற்றால்; முகம் நோக்கி நிற்க அமையும் - அரசன் அவ் வமைச்சரின் முகத்தை நோக்கி எதிரே

நின்றாற் போதும்; தன் வா-திறந்து ஒன்றுஞ் சொல்ல வேண்டுவதில்லை. அவர் தாமாகச் செ-தியை அறிந்துகொள்வார்.

2. அகம் நோக்கி உற்றது உணர்வார்ப் பெறின் - குறை வேண்டுவான், தன் மனத்தைக் குறிப்பால் அறிந்து தான் உற்ற குறையை யுணர்ந்து அதைத் தீர்ப்பாரைப் பெறின்; முகம் நோக்கி நிற்க அமையும் - அவர் தன் முகம் நோக்கும் எல்லையில் தானும் அவர் முகம் நோக்கி நின்றாற் போதும்.

இது பரிமேலழகருரையைத் தழுவியது. இவ் வதிகாரம் அரசரைச் சார்ந்து ஒழுகுபவர் அவர் குறிப்பறிதலைப்பற்றிய தாதலாலும், குறையுறு வான் செ-தி 'இரவு' அதிகாரத்திற்கே ஏற்றதாதலானும், இப் பொருட்கு 'உணர் வார்' என்னுஞ் சொற்கு வழிநிலை வினைப்பொருள் கொள்ள வேண்டியிருப் பதனாலும், இவ் வுரை முன்னதுபோற் சிறந்ததன்றாம்.

இம் மூன்று குறளாலும் குறிப்பறிதற்கு முகங் கருவியென்பது கூறப் பட்டது.

### 709. *பகைமையுங் கேண்மையுங் கண்ணுரைக்குங் கண்ணின்*
### *வகைமை யுணர்வார்ப் பெறின்.*

**(இ-ரை.)** கண்ணின் வகைமை உணர்வார்ப் பெறின் - அரசரின் பார்வை வேறுபாடுகளை அறியவல்ல அமைச்சரைப் பெற்றால்; பகைமையும் கேண்மையும் கண் உரைக்கும் - அவ் வரசர்க்குப் பிறரோடுள்ள பகைமை யையும் நட்பையும் அவர் கண்களே தெரிவிக்கும்.

பார்வை வேறுபாடுகள் எண்சுவையொடு சமந்தமும் (சாந்தமும்) சேர்ந்த தொண்சுவை (நவரசம்) பற்றியன; பகைமைபற்றிய சினநோக்கு கண் சிவப்பாலும், நட்புப்பற்றிய மகிழ்நோக்கு கட்பொலிவாலும் அறியப்படும். 'கண்' இரண்டுட் பின்னது ஆகுபெயர்.

### 710. *நுண்ணிய மென்பா ரளக்குங்கோல் காணுங்காற்*
### *கண்ணல்ல தில்லை பிற.*

**(இ-ரை.)** நுண்ணியம் என்பார் அளக்கும் கோல் - யாம் நுண்ணறி வுடையேம் என்று தம்மைக் கருதும் அமைச்சர் அரசரின் கருத்தை அளக் குங் கோலாவது; காணுங்கால் கண் அல்லது பிற இல்லை - ஆராயுமிடத்து அவ் வரசர் கண்ணன்றி வேறில்லை.

நோக்கு, வடிவு, சொல், செயல், கூட்டுறவு, பொருள், பிறர் கூற்று முதலி யனவாக, ஒருவர் மற்றொருவர் கருத்தை அளந்தறியும் வழிகள் பலவாயி னும், அவற்றுள் நோக்கு வேறுபாட்டைக் கொள்ளும் கண்ணே, அகக் கண்ணாகிய மனத்தொடு நெருங்கிய தொடர்புடையதா-, அடுத்தது காட்டும் பளிங்குபோல் உள்ளக் கருத்தை உடன் காட்டுவதாயும் எளிதில் மறைக்கக் கூடாததாயும், நோக்கல்லாத பிறவெல்லாம் மனத்தொடு தொடர் பற்றனவாயும் எளிதில் மறைக்கக் கூடியனவாயும் இருத்தலால், கண்ணைப் பிரித்துக் கூறினார். நோக்கு, குறிப்புள் ஒரு கூறா- அடங்கும். குறிப்பு உடல் முழுவதையுந் தழுவுமேனும், முகக் குறிப்புச் சிறந்ததும் அதன் ஒரு கூறான கட்குறிப்புத் தலைசிறந்தததுமாகும். வடிவில் ஆடையணியும் அடங்கும். அறிவின் நுண்மை அறிவையுடையார்மேல் ஏற்றப்பட்டது. ‘கண்’ ஆகுபெயர்.

“இனி, அலைக்குங்கோ லென்று பாடமோதி, நுண்ணியமென்றிருக்கும் அமைச்சரை அரசரலைக்குங் கோலாவது கண்ணென வுரைத்து, தன் வெகுளி நோக்கால் அவர் வெகுடற் குறிப்பறிகவென்பது கருத்தாக்குவாரு முளர்” என்று பரிமேலழகர் கூறியிருப்பதால், ‘அலைக்குங்கோல்’ என்றும் பாடவேறுபா டிருந்தமை அறியப்படும். இவ் வேறுபாடு மணக்குடவ பரிப் பெருமாள் பரிதி காலிங்கர் உரைகளிற் காணப்படாமையால், அவரல்லாத பிறரதாகும். இவ் விருகுறளாலும் குறிப்பறிதற்கு முகத்திற் சிறந்த வுறுப்புக் கண்ணென்பது கூறப்பட்டது.

## அதி. 72 - அவையறிதல்

*அதாவது, அமைச்சரும் தூதரும் அரசனோடிருக்கும் அவையின் இயல்பை அறிதல். தம் அரசனோடுள்ள அவையை ஏற்கெனவே அறிந் திருப்பராதலால், இது சிறப்பாக வேற்றரசரின் அவையியல்பை அறிதலைப் பற்றியதாம்.*

*அவையினர் ஒற்றரல்லாத ஐம்பெருங் குழுவினரும் புலவரும் நண் பருமாவர். நல்லவை அல்லது நிறையவை யென்றும், புல்லவை அல்லது குறையவையென்றும், அவை இருதிறப்படும். அவற்றுள் முன்னது பேரறிஞர் கூட்டமும் பின்னது சிற்றறிஞர் கூட்டமுமாகும். நல்லவைக்கு வல்லவை, நுண்ணவை என்றும் பெயர். இனி, சொல்வாரொடு ஒப்புநோக்கி உயர்வு, ஒப்பு, தாழ்வு எனவும் அவை முத்திறப்படும்.*

*வேற்றரசனிடத்தில் ஒன்றைச் சொல்வோர்க்கு அவன் குறிப்பறி தலேயன்றி அவன் அவையின் இயல்பை அறிதலும் வேண்டுதலின், இது குறிப்பறிதலின் பின் வைக்கப்பட்டது.*

**711. அவையறிந் தாரா–ந்து சொல்லுக சொல்லின்**
**றொகையறிந்த தூ–மை யவர்.**

**(இ–ரை.)** சொல்லின் தொகை அறிந்த தூ-மையவர் - சொல்லின் தொகு தியை அறிந்த தூய நடையினர்; அவை அறிந்து ஆரா-ந்து சொல்லுக - தாம் ஒன்றை அரசனிடம் சொல்லும்போது, அவனோடிருந்த அவையின் திறத்தை அறிந்து அதற்கேற்ப ஆரா-ந்து சொல்லுக.

சொல்லின் தொகை யென்றது அமைச்சர்க்கும் தூதர்க்கும் தெரிந் திருக்கவேண்டிய சொற்றொகுதியை (vocabulary). தூ-மையென்றது, பிறமொழிச் சொல்லும் கொச்சைச் சொல்லும் வழூஉச் சொல்லும் இடக்கர்ச் (vul-gar) சொல்லும் அவையல் (unparliamentary) கிளவியும் திசைச் (provincial) சொல்லுங் கலவாது, இயன்றவரை எல்லார்க்கும் விளங்குமாறு பேசும் தூய இலக்கண நடையை. அவையறிந்து சொல்லுதலாவது, அதன் திறத்திற்கேற்ப நடையை உயர்த்தியும் தாழ்த்தியும் இடைநிகர்த்ததாகவும் பேசுதல். ஆரா-ந்து சொல்லுதலாவது, இரட்டுறலும் கவர்படலும் இடத் திற்கேற்காச் சொல்லும் குறிப்புச் சொல்லும் நீக்கி, வெளிப்படையாகவும் விளக்கமாகவும் கோவைபடச் சொல்லுதல். ஓரிடத்து நற்செயல் மற்றோ ரிடத்தில் இடக்கர்ச் சொல்லாக விலக்கப்படுதலால், இடத்திற்கேற்பவும் சொற்களை ஆளவேண்டிய நிலைமையுளதாம்.

செஞ்சொல், ஆகுபொருட் சொல் (இலக்கணைச் சொல்), குறிப்புச் சொல் என்பன சொல்லின் வகையேயன்றித் தொகையாகா.

திருவள்ளுவர் வேத்தியலொடு பொதுவியலையுஞ் சேர்த்தே கூறுவ தால், பிற அவைகளிற் சொற்பொழிவாற்றும் அறிஞர்க்கும் இதுவே நெறி யாகக் கொள்க.

**712. இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லி**
**னடைதெரிந்த நன்மை யவர்.**

**(இ–ரை.)** சொல்லின் நடைதெரிந்த நன்மையவர் - சொற்களின் வழக் காற்றை யறிந்த நல்லறிஞர்; இடைதெரிந்து - அவையிற் பேசுஞ் சமையத்தை நோக்கி; நன்கு உணர்ந்து சொல்லுக - அவையினரின் மனநிலையைத் தெளிவாக அறிந்து அதற்கேற்ப ஒரு பொருளைப்பற்றிச் சொல்க.

சொல்லின் நடையாவது; உலக வழக்கு, செ-யுள் வழக்கு என்னும் இருவகை இடவழக்கிலும், இயல்பு வழக்கு, தகுதி வழக்கு என்னும் இருவகை

ஆட்சி வழக்கிலும், செஞ்சொல் ஆகுபொருட்சொல் குறிப்புச் சொல் என்னும் மூவகைச் சொல்லும், முறையே, செம்பொருளும் ஆகுபொருளும் குறிப்புப் பொருளும் உணர்த்தும் முறை. இடைதெரிதலாவது ஊண் வேளையும் உறக்க வேளையும் நீண்டநேரம் கேட்டுச் சலித்த வேளையும் வேறோர் இடத்திற்குச் செல்லும் வேளையும் அறிதலாம், நன்கு உணர்ந்து சொல்லுதலாவது அவையினர்க்கு விருப்பமான பொருளை இனிதாகவும் சுருக்கமாகவும் விளக்கமாகவுஞ் சொல்லுதல்.

***713. அவையறியார் சொல்லன்மேற் கொள்பவர் சொல்லின்***
***வகையறியார் வல்லதூஉ மில்.***

**(இ-ரை.)** அவை அறியார் சொல்லல் மேற்கொள்பவர் - தாம் பேசும் அவையின் திறத்தை யறியாது அதன் முன் ஒன்று சொல்லுதலை ஏற்றுக் கொண்டவர்; சொல்லின் வகை அறியார் - சொல்லுதலின் கூறுபாட்டை அறியாதவராவர்; வல்லதும் இல் - அதோடு, அவர் கற்றுத் தேர்ந்த கலையும் அவர் கல்லாததாகக் கருதப்படும்.

கற்றோரவையில் உயர்ந்த நடையில் உயர்ந்த பொருள்பற்றியும், கல்லாரவையில் எளிய நடையில் எளிய பொருள்பற்றியும், பேசினாலன்றிச் சொற்பொழிவாற் பயனின்மையின், 'சொல்லின் வகையறியார்' என்றும்; அவைக்கு ஏற்காதவாறு பேசுவாரைப்பற்றி "இதையறியாதவர் வேறு எதையும் அறியார்" என்னும் கருத்துண்டாதலின், "வல்லதூஉம் இல்" என்றும் கூறி னார். 'சொல்லின் வகையாவது,

**"உரைக்கப் படும்பொருள் உள்ளத் தமைத்து**
**விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து**
**கொள்வோன் கொள்வகை யறிந்தவ னுளங்கொளச்"** **(நன்.பொதுப்.36)**

சொல்லுதல். 'வல்லதூஉம்' இன்னிசை யளபெடை.

***714. ஒளியார்முன் னொள்ளிய ராதல் வெளியார்முன்***
***வான்சுதை வண்ணங் கொளல்.***

**(இ-ரை.)** ஒளியார் முன் ஒள்ளியர் ஆதல் - அறிவால் விளங்குவார் முன் தாமும் அறிவுச்சுடராக விளங்குக; வெளியார் முன் வான்சுதை வண் ணம் கொளல் - அறிவில்லாத வெள்ளைகள் முன் வெள்ளையான சுண்ணச் சாந்தின் நிறத்தைக் கொள்க.

'ஒளியார்' என்றது சொற்பொழியும் அறிஞரின் மிக்காரையும் ஒத்தாரையும். 'ஒளியார்' ஒள்ளியார் என்பதன் தொகுத்தல். இனி, அகவொளியாகிய அறிவுடையார் எனினுமாம். ஒள்ளியராதல் மதிநுட்பமும் நூற்கல்வியும் உலகியலறிவும் சொல்வன்மையுந் தோன்ற விளக்கியுரைத்தல். 'வெளியார்' வெள்ளியார் என்பதன் தொகுத்தல். அறிவில்லாதவரை வெளியார் என்றது, வயிரமில்லாத மரத்தை வெள்ளை யென்றும் வெளிறென்றும் சொல்லும் வழக்குப்பற்றி. அறிஞருக்கு அறிவு விளங்கித் தோன்றுவதுபோல் அறிவிலிகட்கு அறியாமையே விளங்கித் தோன்றுமாதலின், 'வான்சுதை வண்ணங் கொளல்' என்றார். அறியாமையின் இழிவுபற்றிக் கருத்துப்பொருள் வெண்மையைக் காட்சிப்பொருள் வெண்மையோ டிணைத்துக் கூறினார். அறிவிலிகட்கு அறிவிலியாகுக என்பது, சிறுபிள்ளைகட்குச் சிறுபிள்ளையாகுக என்பது போன்றதாம்.

### 715. *நன்றென்ற வற்றுள்ளு நன்றே முதுவருண்*
### *முந்து கிளவாச் செறிவு.*

**(இ-ரை.)** முதுவருள் முந்து கிளவாச் செறிவு - அறிவால் தம்மினும் மிக்கோ ரவையின்கண் அவரினும் முற்பட்டு ஒன்றைச் சொல்லாதிருக்கும் அடக்கம்; நன்று என்றவற்றுள்ளும் நன்றே - அவையிற் பேசுவார்க்கு நல்லதென்று சொல்லப்பட்ட குணங்க ளெல்லாவற்றுள்ளும் நல்லதே.

முதுவரின் அறிவுமிகையும் தம் அறிவுக் குறைவும், முந்துகிளத்தலால் நேரும் அடக்கமின்மையும் வழுப்படலுமாகிய இருமடிக் குற்றமும், முந்து கிளவாமையா லுண்டாகும் அடக்கமும் வழுப்படாமையும் ஆகிய இருமடி நன்மையும், எண்ணியடங்கும் அடக்கம் அறிவோடு கூடியதாதலின், அதை 'நன்றென்ற வற்றுள்ளும் நன்றே' என்றார். முன்கிளத்தலை விலக்கியமையாலும், உடன் கிளத்தல் அவையோர்க்குப் பயன்படாமையுஞ் சேர்ந்து மும்மடிக் குற்றந் தங்குமாதலாலும், பின் கிளத்தலே, அதுவும் அவையோர்க்குப் பயன்படினே, நன்றாகும் என்பதாம். ஏகாரம் தேற்றம்.

### 716. *ஆற்றி னிலைதளர்ந் தற்றே வியன்புல*
### *மேற்றுணர்வார் முன்ன ரிழுக்கு.*

**(இ-ரை.)** வியன் புலம் ஏற்று உணர்வார் முன்னர் இழுக்கு - பரந்த நூற்பொருள்களை உள்ளத்திற் கொண்டு அவற்றின் உண்மையை உணரும் உயர்ந்த அறிஞரவையில் வல்லானொருவன் வழுப்படல்; ஆற்றின் நிலை

தளர்ந்த அற்றே - வீடுபேற்றின் பொருட்டுத் துறவுநெறிக்கண் நெடிது ஒழுகினவன் அந் நெறியினின்றும் தவறி வீழ்ந்ததை யொக்கும்.

ஆற்றின் நிலை தளர்தலாவது, அருள்மேற்கொண்டு கொலை தவிர்ந்து கடுந்தவஞ்செ-து ஐம்புலனு மடக்கியவன் கூடாவொழுக்கத்துட்படுதல். அத்துணைக் கேடானதே நல்லவையில் வல்லான் வழுப்படல். "ஆனைக்கும் அடிசறுக்கும்" என்பது, நாப்பிசகைக் காக்குமே யன்றி அறிவுப் பிசகைக் காவாது. கூடாவொழுக்கத்தான் பயனிழந்து இகழப்படுவது போன்றே, வழுப்பட்ட வல்லானும் பதவியிழந்து இகழப்படுவான் என்பதாம். ஏகாரம் தேற்றம்.

## 717. *கற்றறிந்தார் கல்வி விளக்குங் கசடறச்*
## *சொற்றெரிதல் வல்லா ரகத்து.*

**(இ-ரை.)** கசடு அறச் சொல் தெரிதல் வல்லாரகத்து - வழுவின்றிச் சொற் பொழிவுகளை ஆராய வல்ல அறிஞரவைக்கண் உரை நிகழ்த்தின்; கற்று அறிந்தார் கல்வி விளங்கும் - பல நூல்களையுங் கற்று அவற்றின் பொருளை அறிந்தவரின் கல்வி விளங்கித் தோன்றும்.

சொல் என்றது சொற்பொழிவை. உரை நிகழ்த்தின் என்பது அவா-நிலையால் வந்தது.

"புலமிக் கவரைப் புலமை தெரிதல்
புலமிக் கவர்க்கே புலனாம் – நலமிக்க
பூம்புன லூர பொதுமக்கட் காகாதே
பாம்பறியும் பாம்பின கால்." (பழ. 7)

## 718. *உணர்வ துடையார்முற் சொல்லல் வளர்வதன்*
## *பாத்தியு ணீர்சொரிந் தற்று.*

**(இ-ரை.)** உணர்வது உடையார்முன் சொல்லல் - பிறர் உணர்த்த வேண்டாது தாமே பொருள்களை யுணரவல்ல அறிவுடையா ரவைக்கண் கற்றார் ஒன்றைச் சொல்லுதல்; வளர்வதன் பாத்தியுள் நீர் சொரிந்த அற்று - தானாக வளரும் பயிர் நின்ற பாத்திக்குள் நீரை வார்த்தாற் போலும்.

தானே வளரும் அறிவு மிக விரைந்து வளரும் என்பதாம். இவ்விரு குறளாலும், ஒத்தாரவைக்கண் கற்றோர் தமக்குரிய இலக்கிய நடையிற் பேசுக என்பது கூறப்பட்டது.

### 719. *புல்லவையுட் பொச்சாந்துஞ் சொல்லற்க நல்லவையு ணன்கு செலச்சொல்லு வார்.*

**(இ-ரை.)** நல் அவையுள் நன்கு செலச் சொல்லுவார் - நல்ல அறிஞ ரவைக்கண் நல்ல பொருள்களை அவர் மனங்கொள்ளச் சொல்ல வல்லார்; புல் அவையுள் பொச்சாந்தும் சொல்லற்க - அறிஞரில்லாச் சிறியோரவைக் கண் அவற்றை மறந்துஞ் சொல்லாதிருக்க.

சொல்லின், பன்றிக்குமுன் முத்தைப் போடுதலென்று நல்லவையும், பொருள் விளங்காமையிற் புல்லவையும் பழித்தலால், இருசாரார்க்கும் ஆகாமை கருதிப் 'பொச்சாந்துஞ் சொல்லற்க' என்றார்.

### 720. *அங்கணத்து ளுக்க வமிழ்தற்றாற் றங்கணத்த ரல்லார்முற் கோட்டி கொளல்.*

**(இ-ரை.)** தம் கணத்தார் அல்லார்முன் கோட்டி கொளல் - அறிஞ ராவார் அறிவால் தம் இனத்தவரல்லாதா ரவைக்கண் நிகழ்த்தும் அரும்பொருட் சொற்பொழிவு; அங்கணத்துள் உக்க அமிழ்து அற்று - சா-கடைக்குள் ஊற்றிய பாலைப்போலும்.

இனி, தம் கணத்தர் அல்லார்முன் கோட்டிகொளல் - அறிஞராவார் அறிவால் தம் இனத்தவ ரல்லாதா ரவைக்கண் அரும்பொருட் சொற்பொழிவு நிகழ்த்தற்க; அங்கணத்துள் உக்க அமிழ்து அற்று - நிகழ்த்துவது சா-கடைக்குள் ஊற்றிய பாலைப்போலும், என்றுமாம். இப் பொருள்கோட் குக் 'கொளல்' 'அல்'லீற்று எதிர்மறை வியங்கோள். நிகழ்த்துவது என்பது அவா-நிலையால் வந்தது. நிகழ்த்துவது என்றது நிகழ்த்தும் சொற்பொழிவை. இது பரிமேலழகர் கொண்ட பொருள்கோளைத் தழுவியது.

இவ் விருவகைப் பொருள்கோளுள்ளும் முன்னதே இயற்கையான தாம். 'ஆல்' அசைநிலை.

"பிறரெல்லாங் 'கொள' லென்பதனைத் தொழிற்பெயராக்கி யுரைத்தார்; அவர் அத் தொழில் 'அமிழ்' தென்னும் பொருளுவமையோடு இயையாமை நோக்கிற்றிலர்" என்றார் பரிமேலழகர். உவமத்தையும் பொருளையும் இணைக்குங்கால், பெயரொடு பெயரும் வினையொடு வினையும் இயைய வேண்டுமென்பது சரியே. ஆயின், சொன்முறை செ-யுளின் யாப்பிற்கும் தொடைக்கும் ஏற்றவாறு ஆற்றொழுக்கினின்றும் சிறுபான்மை வேறுபட் டிருக்குமாதலால், உரையாசிரியர் அதை உரைநடை முறைப்படி மாற்றிக்

கொள்ளல் வேண்டும். ஆதலால், 'உக்க அமிழ்தற்று' என்பதை அமிழ்து உக்கதற்று என்று மாற்றிக்கொள்வதே தக்கதாம். இனி, அங்ஙனமன்றி, 'கோட்டி கொளல்' என்பதற்குக் கோட்டி கொள்ளும் சொல் அல்லது சொற்பொழிவு என்று பொருள்கொள்ளினும் பொருந்துவதாம். குறளின் போக்கையும் ஓசையையும் நோக்குமிடத்து,

**"குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே**
**யுடம்பொ டுயிரிடை நட்பு,"** **(338)**

**"குன்றேறி யானைப்போர் கண்டற்றாற் றன்கைத்தொன்**
**றுண்டாகச் செ–வான் வினை"** **(758)**

என்பவற்றிற்போல, உவமம் முன்னும் பொருள் பின்னுமாக ஒரே சொல் லியமா- (வாக்கியமா-) அமைந்திருப்பது விளங்கித் தோன்றுதல் காண்க. பரிமேலழகர் கருத்தே ஆசிரியருக்கு இருந்திருக்குமாயின்,

**அங்கணத்து ளுக்க வமிழ்ததனாற் றங்கணத்து**
**ரல்லார்முற் கோட்டி கொளல்**

என்றோ,

**தங்கணத்த ரல்லார்முன் சொல்லல் சொலினஃதாம்**
**அங்கணத்து ளுக்க வமிழ்து**

என்றோ, தெளிவாக யாத்திருப்பர். மேலும், இக் குறளை இரு சொல்லியமாகக் கொள்வது, 'சொல்லின் அது' அல்லது 'கொள்ளின் அது' என்னும் இரு சொற் களை அவாவி நிற்றலும், அவையின்றேல் உவமம் பொருளின்றித் தனித்து நிற்றலும், காண்க.

இனி, அங்கணத்தை வடமொழிப் பொருட்படி, முற்றம் என்றார் பரிமேலழகர். அது தென்சொல்லென்பதும் அதன் முதற்பொருள் சா-கடை (சாலகம்) என்பதும், அவர் அறிந்திலர். சா-கடை (சாக்கடை) வாட்டஞ் சாட்டமாக இருந்தால்தான் அழுக்குநீர் அதன் வழியாக விரைந்தோடும். அல்லாக்கால், உள்முற்றத்தின் கோடியிலும் வீட்டோரத்திலும் தேங்கி நிற்கும். அங்கணம் என்னும் சொல்லும் சா-தல் என்னும் வேர்ப்பொருளதே.

வணங்கு - வாங்கு - வங்கு - அங்கு. இந் நாற்சொல்லும் வளைதற் பொருளவாம். அங்கு + அணம்(தொழிற்பெயரீறு) = அங்கணம் (சா-கடை)

**"ஊரங் கணநீ ருரவுநீர் சேர்ந்தக்கால்**
**பேரும் பிறிதாகித் தீர்த்தமாம் – ஒரும்**
**குலமாட்சி யில்லாருங் குன்றுபோல் நிற்பர்**
**நலமாட்சி நல்லாரைச் சார்ந்து"** **(நாலடி. 175)**

என்னும் நாலடிச் செ-யுளில் அங்கணம் என்னுஞ் சொல் சா-கடை (சலதாரை) யென்றே பொருள்படுதல் காண்க.

வளமனைகளிலும் மாளிகைகளிலும் உள்முற்றம் கற்பாவியும் சாந்து பூசியும் துப்புரவாயிருக்குமாதலால், அதிற் கொட்டிய பாலை நாயும் இரப் போனும் நக்கியும் உறிஞ்சியுங் குடிக்க முடியும். ஆயின், சா-கடையில் ஊற்றிய பால் ஒருவனுக்கும் ஒன்றிற்கும் உதவாது.

உள்முற்றத்தின் கோடியிலேயே சா-கடை தொடங்குமாதலால் வடவர் அங்கணம் என்னுஞ் சொற்கு முற்றம் என்னும் வழிப்பொருள் கொண்டனர்.

இனி, அமிழ்தம் என்பது இக் குறளில் இவ் வுலகத்திலுள்ள பாலைக் குறிக்குமேயன்றித் தேவருலகத்திலுள்ளதாகக் கருதப்படும் எவ்வுணவையுங் குறிக்காது. பாலும் சாவா மருந்தே. இவ் விரு குறளாலும் தாழ்ந்தோரவைக் கண் உயர்ந்த பொருள்களைச் சொல்லற்க என்பது கூறப்பட்டது.

## அதி. 73 - அவையஞ்சாமை

*அதாவது, அவையின் திறத்தையறிந்து அதற்கேற்ப ஒன்றைச் சொல்லுங்கால், அதற்கு (அவ் வவைக்கு) அஞ்சாமை. அஞ்சினாற் சொற் பொழிவாற்றல் இயலாதாதலின், அதை விலக்குதற்கு இது அவை யறிதலின் பின் வைக்கப்பட்டது.*

**721. வகையறிந்து வல்லவை வா–சோரார் சொல்லின்**
**றொகையறிந்த தூ–மை யவர்.**

**(இ–ரை.)** சொல்லின் தொகை அறிந்த தூ-மையவர் - சொல்லின் தொகுதியை யறிந்த தூய மொழிநடையார்; வகை அறிந்து வல் அவை வா-சோரார் - கற்றோர் கூடிய வல்லவை, அல்லவை என்னும் இருவகை அவை களை அறிந்து, வல்லவைக்கண் ஒன்றைச் சொல்லுங்கால் அச்சத்தினால் மனந்தடுமாறியும் வா- தவறியும் வழுப்படச் சொல்லார்.

வல்லவர் கூட்டமாதலால் வல்லவை எனப்பட்டது. அவையைக் குறிக் குஞ்சொல் இக் குறளில் வேறின்மையால், 'வல்லவை' என்பதற்குத் தாங் கற்றுவல்ல நூற்பொருள்களை என்று உரைப்பது பொருந்தாது. அச்சத் தினாலென்பது அதிகாரத்தால் வந்தது. 'சொல்லின் றொகை', 'தூ-மை' என்பவற்றிற்கு 711 ஆம் குறளில் உரைத்தவா றுரைக்க.

**722.** ***கற்றாருட் கற்றா ரெனப்படுவர் கற்றார்முற்***
***கற்ற செலச்சொல்லு வார்.***

**(இ-ரை.)** கற்ற கற்றார்முன் செலச் சொல்லுவார் - தாம் கற்றவற்றைக் கற்றாரவைக்கண் அவர் உளங் கொள்ளும்வகை சொல்லவல்லவர்; கற்றாருள் கற்றார் எனப்படுவர் - கற்றா ரெல்லாருள்ளும் நன்கு கற்றவ ரென்று கற்றாரால் உயர்த்துச் சொல்லப்படுவர்.

**"புலமிக் கவரைப் புலமை தெரிதல்**
**புலமிக் கவர்க்கே புலனாகும் – நலமிக்க**
**பூம்புன லூர! பொதுமக்கட் காகாதே**
**பாம்பறியும் பாம்பின கால்."** **(பழ. 7)**

கற்றார் என்னும் சொல் பன்முறை வந்தது சொற்பொருட் பின்வருநிலை யணியாம்.

**723.** ***பகையகத்துச் சாவா ரெளிய ரரிய***
***ரவையகத் தஞ்சா தவர்.***

**(இ-ரை.)** பகையகத்துச் சாவார் எளியர் - போர்க்களத்துள் அஞ்சாது புகுந்து பகைவரொடு பொருது மறத்தொடு சாகவல்லவர் உலகத்துப் பலர்; அவையகத்து அஞ்சாதவர் அரியர் - ஆயின், ஓர் அவையிடத்துப் புகுந்து அஞ்சாது நின்று உரை நிகழ்த்த வல்லவர் சிலரே.

இது பகையஞ்சார்க்கும் அவையஞ்சார்க்குமுள்ள தொகைவேற்றுமை கூறிற்று. அமர்க்கள மறத்தினும் அவைக்கள மறமே சிறந்ததென்பது கருத்து. ஒப்புமை கூறும் உவமையிற் போன்றே ஒவ்வாமை கூறும் வேற்றுமையிலும் உள்ள இரு கூறுகளுள், ஒன்றன் அடை இன்னொன்றைச் சாருமாதலின், அஞ்சாமை 'சாவார்' என்பதனொடு கூட்டப்பட்டது. பொருட்கேற்பப் பொரு தல் சொல்லுதல் என்னும் இரு சாரார் வினைகளும் வருவித்துரைக்கப் பட்டன. எளிமையும் அருமையும் பெரும்பான்மை சிறுபான்மையொடு

தாழ்வுயர்வும் உணர்த்தி நின்றன. இம் முக்குறளாலும் அவையஞ்சாரது சிறப்புக் கூறப்பட்டது.

## 724. *கற்றார்முற் கற்ற செலச்சொல்லித் தாங்கற்ற*
## *மிக்காருண் மிக்க கொளல்.*

**(இ-ரை.)** கற்ற கற்றார்முன் செலச்சொல்லி - தாம் கற்றவற்றை அவையல்லாத வேறு நூல்களை அல்லது தம்மினுங் குறைவாகக் கற்றோரவைக்கண், அவர் மனத்திற் பதியுமாறு எடுத்துச் சொல்லி; தாம் கற்ற மிக்க மிக்காருள் கொளல் - தாம் கற்றவற்றினும் மிகுந்தவற்றைத் தம்மினும் மிகுதியாகக் கற்றவரிடத்து அறிந்து கொள்க.

'மிக்காருள் மிக்க கொளல்' என்பதனால், 'கற்றார் முன்' என்பதற்குத் தம்மினுங் குறைவாகக் கற்றோரவைக்கண் என்று பொருள் கூறப்பட்டது. 'மிக்க' என்றது, ஒரு துறைப்பட்ட உயர்ந்த பொருள்களையும் பிறதுறைப்பட்ட வேறு பொருள்களையுமாம். பல்துறைக் கல்வியுடையார் ஒரே அவையினராயும் வெவ்வேறு அவையினராயு மிருக்கலாம். வெவ்வேறு துறைக் கல்வி கற்றவர் ஒருவருக்கொருவர் இருதலைப் பரிமாற்றஞ் செ-துகொள்ளலாமென்பது, இக் குறட்கருத்து.

## 725. *ஆற்றி னளவறிந்து கற்க வவையஞ்சா*
## *மாற்றங் கொடுத்தற் பொருட்டு.*

**(இ-ரை.)** அவை அஞ்சா மாற்றம் கொடுத்தல்பொருட்டு - வேற்றரசர் அவையிடத்து அவர் வினாவியதற்கு விடையும் சொன்னதற்கு மறுமொழியும் அஞ்சாது சொல்லுதற் பொருட்டு; ஆற்றின் அளவு அறிந்து கற்க - முறைப்படி அளவை நூலைத் தெளியக் கற்க.

அமைச்சர்க்குத் தம் அரசரின் அவையிடத்துப் பொதுவாகவும் இயல்பாகவும் அச்சமிராதாகையாலும், பெரும்பாலும் தம் சூழ்வினைகளை அரசரோடேயே நிகழ்த்துவராதலாலும், இங்கு வேற்றரசர் அவையெனக் கூறப்பட்டது. முறைப்படி கற்றலாவது இலக்கண நூல் கற்ற பின்னரே அளவை நூலைக் கற்றல். அளவென்றது நான்குமுதற் பத்து வகையாகச் சொல்லப்பெறும் அளவை வகைகளை. அவை முன்னரே கூறப்பட்டன.

காட்சியுங் கருத்துமாகிய இருவகைப் பொருள்களின் இயல்பையும் அளந்தறிதற்குக் கருவியாகவுள்ள நெறிமுறைகளை, அளவையென்றது

தொழிலாகுபெயர். அளவைநூல் தருக்கநூலென்றும் ஏரணநூலென்றும் பெயர்பெறும். அது சிறப்பு(வைசேடிகம்), முறை(நியாயம்) என இருதிறப் படும். இவையிரண்டும், முறையே கணாத முனிவராலும் அக்கபாத ரென்னும் கோதம முனிவராலும் இயற்றப்பட்ட ஆரிய முதனூல்களாக இன்று சொல்லப்படினும், இவற்றுள் முன்னது தமிழர் கண்டதென்றும், அது ஏரணம் என்றே பெயர் பெறுமென்றும், பின்னரே அதன் வழிப்பட்ட ஆரிய நூலென் றும் அறிதல் வேண்டும். சிறப்பென்னும் வைசேடிகத்திற்குத் தமிழ் ஏரணமே முதனூலென்பதை, அகத்தியத் தருக்க நூற்பாக்களை நோக்கிக் காண்க. அறிந்து கற்றலாவது, நேர்நெறிப்பட்ட தருக்க உறழ்களோடு (வாதங்களோடு), கோணைநெறிப்பட்ட விசியுழி(செற்பம்), ஒட்டாரம் (விதண்டை), திரிப்பு(சலம்) முதலிய உறழ்களையும் ஆ-ந்தறிதல். இவ் விருகுறளாலும் அவை யஞ்சாதார் செ-யவேண்டிய செயல் கூறப்பட்டது.

### 726. வாளொடென் வன்கண்ண ரல்லார்க்கு நூலொடெ
### னுண்ணவை யஞ்சு பவர்க்கு.

**(இ-ரை.)** வன்கண்ணர் அல்லார்க்கு வாளொடு என் - மறமுடையா ரல்லாதார்க்கு வாளோடு என்ன தொடர்புண்டு? நுண் அவை அஞ்சுபவர்க்கு நூலொடு என் - அதுபோல, நுண்ணறிஞரவைக்கு அஞ்சுவார்க்கு நூலோடு என்ன தொடர்புண்டு?

"எடுத்த மொழியினஞ் செப்பலு முரித்தே" **(சொல்.கிளவி. 61)**

என்று தொல்காப்பியமும்,

"ஒருமொழி மொழிதன் னினங்கொளற் குரித்தே" **(பொது. 7)**

என்று நன்னூலும் கூறியவாறு, வாள் என்பது வில் வேல் முதலிய பிற படைக்கலங்களையுந் தழுவும். 'என்' என்னும் வினா ஈரிடத்தும் எதிர்மறை விடையை அவாவி நின்றது. நுண்ணிய அறிஞர் கூட்டம் நுண்ணவை. இதில் வந்துள்ளது எடுத்துக்காட்டுவமை அணி.

"அவையஞ்சி மெ-விதிர்ப்பார் கல்வியுங் கல்லார்
அவையஞ்சா வாகுலச் சொல்லும் – நவையஞ்சி
ஈத்துண்ணார் செல்வமும் நல்கூர்ந்தா ரின்னலமும்
பூத்தலிற் பூவாமை நன்று" **(6)**

என்பது நீதிநெறி விளக்கம்.

## 727. பகையகத்துப் பேடிகை யொள்வா ளவையகத் தஞ்சு மவன்கற்ற நூல்.

**(இ-ரை.)** அவையகத்து அஞ்சும் அவன் கற்ற நூல் - அவைக்கு முன் நின்று அதற்கு அஞ்சி நடுங்குபவன் கற்ற நூல்; பகையகத்துப் பேடிகை ஒள்வாள் - போர்க்களத்தில் நின்று போருக்கஞ்சும் கோழையன் பிடித்த கூர்வாளை யொக்கும்.

இயற்கைப் பேடியரும் செயற்கைப் பேடியரும் எனப் பேடியர் இரு வகையர். செயற்கைப் பேடியர் உவளகக் காவற்கும் பேடிமைக்கும் பேடி யராக்கப்பட்ட ஆடவராதலின், அவருள் மறவருமுளர் ஆதலால், பேடி என்பதற்குக் கோழையன் என்று பொருள் கூறப்பட்டது. அமர்க்கோழை வாளும் அவைக்கோழை நூலும் பயன்படாவென்பது கருத்து.

## 728. பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையு ணன்கு செலச்சொல்லா தார்.

**(இ-ரை.)** நல் அவையுள் நன்கு செலச் சொல்லாதார் - தாம் கற்ற நல்ல பொருள்களை நல்லறிஞர் இருந்த அவைக்கண் தாம் கொண்ட அச்சத்தினால் அவர்க்கு விளங்குமாறு எடுத்துச் சொல்லும் ஆற்றலில்லாதார்; பல்லவை கற்றும் பயம் இலரே - பல நூல்களைக் கற்றிருந்தாலும் உலகிற்குப் பயன்படாதவரே யாவர்.

கற்றோர் கல்வியைக் கற்றோரே அறிவராதலின், கற்றோர்முன் சொல் லாத கல்வி தமக்கேயன்றிப் பிறர்க்குப் பயன்படா தென்பதாம். உம்மை உயர்வுசிறப்பு. ஏகாரம் தேற்றம்.

## 729. கல்லா தவரிற் கடையென்ப கற்றறிந்து நல்லார ரவையஞ்சு வார்.

**(இ-ரை.)** கற்று அறிந்தும் நல்லார் அவை அஞ்சுவர் - நூல்களைக் கற்று அவற்றின் பயனை அறிந்திருந்தும், நல்ல அறிஞரவைக்கு அஞ்சி அங்கு அவற்றை எடுத்துக் கூறமாட்டாதார்; கல்லாதவரின் கடை என்ப - கல்லாத வரினும் கடைப்பட்டவர் என்பர் அறிஞர்.

கற்றோர் தம் கல்வியைப் பிறர்க்கு எடுத்துச் சொல்வதனாற் பொருள் வகையாலும் புகழ்வகையாலும் தாமும் பயன்பெறுவராதலின், அதைச் சொல்லாமையால் தாமும் பயன்பெறாது பிறரையும் பயன்பெறுவிக்காது தம்

கல்வி முயற்சியை வீணாக்குவதால், கல்லாதவரினுங் கடைப்பட்டவ ரென்று உலகம் பழிக்கும் என்றார். 'நல்லார்' என்பது நன்மை செ–வார் என்பதைக் குறிப்பா– உணர்த்தி நின்றது.

**730. உளரெனினு மில்லாரொ டொப்பர் களனஞ்சிக்**
**கற்ற செலச்சொல்லா தார்.**

**(இ–ரை.)** கற்ற களன் அஞ்சிச் செலச் சொல்லாதார் - தாம் கற்றவற்றை அவைக்கஞ்சி அதற்கேற்பச் சொல்லமாட்டாதார்; உளர் எனினும் இல்லா ரொடு ஒப்பர் - உடலோடு கூடியுள்ளாரெனினும் உயர்ந்தோர் கருத்தில் இறந்தாரோ டொப்பர்.

களம் என்பது அவையையும் அவையிருந்த இடத்தையுங் குறிக்கும். ஆதலால், "ஈண்டுக் களனென்றது ஆண்டிருந்தாரை" என்னும் பரிமேலழகர் கூற்று வேண்டுவதில்லை. இவ் வைங்குறளாலும் அவையஞ்சுவாரது இழிவு கூறப்பட்டது.

*உறுப்பியலில் அமைச்சுப் பகுதி முற்றிற்று.*

## அதி. 74 - நாடு

*அதாவது, அரசனும் அமைச்சருள்ளிட்ட குடிகளும் இருந்து வாழ் வதற்கு இன்றியமையாத ஆள்நிலத்தைப்பற்றிக் கூறுவது.*

**731. தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச்**
**செல்வருஞ் சேர்வது நாடு.**

**(இ–ரை.)** தள்ளா விளையுளும் - குறையாத விளைபொருளும்; தக்கா ரும் - தகுதியுள்ள பெரியோரும்; தாழ்வு இலாச் செல்வரும் - கேடில்லாத செல்வமுடையோரும்; சேர்வது நாடு - முன்கூறப்பட்ட செங்கோலரச னோடும் சிறந்த அமைச்சனோடும் பொருந்தியிருப்பதே நல்ல நாடாவது.

தள்ளா விளையுள் என்பது தாழ்ந்த வகையினதாகத் தள்ளப்படாத விளையுள் என்றுமாம். விளையுள் என்பது உழவரையும் ஒருமருங்கு குறிக்குமேனும், இயற்கையுஞ் செயற்கையுமாகிய இருவகை விளையுள் இருப்பதனாலும், 'சேர்வது' என்பது கூடி அல்லது பொருந்தியிருப்பது என்றே பொருள்படுதலாலும்,

"பலவயி னானும் எண்ணுத்திணை விரவுப்பெயர்" (தொல். கிளவி. 51)

வழுவன்மையானும், "மற்றை யுயர்திணைப் பொருள்களோடுஞ் சேர்தற் றொழிலோடும் இயையாமையின், விளையுளென்பது உழவர் மேனின்றது" என்று பரிமேலழகர் கூறுவது பொருந்தாது. தக்காராவார் புலவரும் அடியாரும் முனிவரும். தாழ்விலாச் செல்வரென்றது காலினுங்கலத்தினும் பொருளீட்டும் இருவகை வணிகரை. செல்வத்திற்குத் தாழ்வின்மை வழங்கத் தொலையாமையும் வருவா- குன்றாமையும் பல்துறைப் பட்டிருத்தலும். செங்கோலரசனோடும் சிறந்த அமைச்சனோடும் என்பது பாலால் வந்தது. ஆகவே, அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் என்னும் நால்வகுப்பாராலும் விளையும் அறிவு காவல் செல்வம் உணவு ஆகிய நால்வகைப் பொருளும் சிறந்தது நன்னாடு என்பதாம்.

## 732. பெரும்பொருளாற் பெட்டக்க தாகி யருங்கேட்டா லாற்ற விளைவது நாடு.

**(இ-ரை.)** பெரும்பொருளால் பெள்தக்கது ஆகி - பல்வகைப் பொருள் வளமிகுதியாற் பிற நாட்டாராலும் விரும்பப்படுவதா-; அருங்கேட்டால் - கேடில்லாமையோடுகூடி; ஆற்ற விளைவது நாடு - நானிலச் செல்வமும் மிகுதியாக விளைவதே வறுமை யில்லாத நாடாவது.

பெருமை பொருளின் அளவையும் வகைகளையும் தழுவிநின்றது. கேடாவன மிகுமழை, மழையின்மை, எலி, விட்டில், கிளி, பகையரசண்மை என ஆறென்றும்; விட்டில், கிளி, யானை, காட்டுப்பன்றி, தொட்டியர், கள்வர், பெரும்புயல் என ஏழென்றும்; விட்டில், கிளி, யானை, தன்னரசு (Autocracy), வேற்றரசு, மழையின்மை, கடுமழை, கடுங்காற்று என எட்டென்றும் மூவகையிற் சொல்லப்படும்.

"மிக்கபெய லோடுபெய லின்மையெலி விட்டில்கிளி
யக்கணர சண்மையோ டாறு."

"விட்டில் கிளியே நால்வா யேனம்
தொட்டியர் கள்வர் சோனைப் பெரும்புயல்
நட்டம் நாட்டேழ் குற்ற மாகும்." (பிங்.3 :7)

"விட்டில் கிளிநால்வா– தன்னரசு வேற்றரசு
நட்டம் கடும்புனல்கா லெட்டு."

கேடருமை யென்பது 'அருங்கேடு' எனச் செ-யுளில் முறைமாறி நின்றது. கேடுகளுள் இயற்கையா- வருவன செங்கோலாலும் இறைவழிபாட்டாலும், யானையால் வருவது வேட்டையாலும், அரசரால் வருவது குடிகளின் எதிர்ப்பாலும் போராலும் நீக்கப்படும். நானிலச் செல்வமாவன: நாடுபடு செல்வமும் காடுபடு செல்வமும் மலைபடு செல்வமும் அலை (கடல்)படு செல்வமுமாம்.

## 733. *பொறையொருங்கு மேல்வருங்காற் றாங்கி யிறைவற்*
*கிறையொருங்கு நேர்வது நாடு.*

**(இ-ரை.)** பொறை ஒருங்கு மேல் வருங்கால் தாங்கி - பிற நாடுகள் தாங்கிய மக்களும் கால்நடையுமாகிய பொறை யெல்லாம் தன்னிடத்து வந்து தங்கினும் அவற்றைத் தாங்கி; இறைவற்கு இறை ஒருங்கு நேர்வது நாடு - அதனால், தன் அரசனுக்குச் செலுத்த வேண்டிய புரவுவரி சிறிதுங் குறையாது முன்போன்றே முழுதும் விரும்பிச் செலுத்துவதே (பண்பாட்டிற் கேற்ற) நல்ல நாடாவது.

பிறநாட்டு மக்கள் கால்நடையுடன் வந்து குடிபுகுவதற்குக் கரணியம் பஞ்சம், கொடுங்கோல், பகையரசு புகுதல், வெள்ளம் முதலியவற்றுள் ஒன் றாம். 'தாங்குதல்' சொந்த நாடுபோல் உணவளித்துக் காத்தல். அது நிலவிரி வாலும் விளைவுப் பெருக்கத்தாலும் மக்கள் பண்பாட்டாலும் ஆட்சிச் செம் மையாலும் நேர்வதாம். குடிகள் வருவா- குன்றாமையால் வரிகொடுப்பதுங் குன்றாதாயிற்று. நாட்டார் செயல் நாட்டின்மேல் ஏற்றிக் கூறப்பட்டது.

## 734. *உறுபசியு மோவாப் பிணியுஞ் செறுபகையுஞ்*
*சேரா தியல்வது நாடு.*

**(இ-ரை.)** உறுபசியும் - கடும்பசியும்; ஓவாப் பிணியும் - தீரா நோயும்; செறு பகையும் - அழிக்கும் பகையும்; சேராது இயல்வது நாடு - இல்லாது இனிது நடப்பதே (வாழ்க்கைக் கேற்ற) நல்ல நாடாம்.

'உறுபசி' உழவரின்மையாலும் நீர்வளம் நிலவள மின்மையாலும் நேர்வது. 'ஓவாப்பிணி' நிலக்கேட்டாலும் நச்சுக்காற்றாலும் தட்பவெப்ப மிகையாலும் நுகர்ச்சிப் பொருள் தீமையாலும் நேர்வது. செறுபகை அரச னாற்றலும் நல்லமைச்சும் படைவலியும் அரண்வலியும் துணைவலியும் இன்மையால் நேர்வது. இக் குறைகளும் கேடுகளும் இன்றேல் அவற்றால் விளையும் தீங்குகளும் இல்லை என்பதாம்.

## 735. பல்குழுவும் பாழ்செ–யு முட்பகையும் வேந்தலைக்குங் கொல்குறும்பு மில்லது நாடு.

**(இ–ரை.)** பல்குழுவும் - நாட்டின் ஒற்றுமையைக் குலைக்கும் பல்வேறு மாறுபாட்டுக் கூட்டங்களும்; பாழ்செ-யும் உட்பகையும் - அரசன் குடும்பத் துள்ளும் குடிகளுள்ளுமிருந்து நாட்டைப் பகைவர்க்குக் காட்டிக்கொடுத்துக் கேடுசெ-யும் அகப்பகைவரும்; வேந்து அலைக்கும் கொல்குறும்பும் - நாட்டிற்குள்ளிருந்து சமையம் வா-க்கும் போதெல்லாம் போராலுங் கொள்ளையாலும் அரசனையும் குடிகளையுந் துன்புறுத்தும் அடங்காச் சிற்றரண் தலைவரும்; இல்லது நாடு - இல்லாததே (அமைதிக்கேற்ற) நல்ல நாடாவது.

பல்குழுக்களாவன: அரச அரியணை யேறற்குரிய பழவிறல் தாயம் பற்றிய பல்வேறு பிரிவினைக் கூட்டங்களும் குலவியலும் மதவியலும் பற்றிய பல்வேறு பகை வகுப்புகளுமாம். உட்பகையாவார் தந்நலம்பற்றித் தாமாக நாட்டைக் காட்டிக்கொடுப்பாரும் பகைவராற் கீழறுக்கப் படுவாருமாம். குறும்பர் காட்டரணும் மலையரணுங்கொண்ட சிற்றரசர் போன்ற கொள்ளைத்தலைவர். குறும்பு - சிற்றரண்.

"குறும்படைந்த வரண்கடந்து" (புறம். 79)

'உட்பகை', 'குறும்பு' என்பன ஆகுபெயர்.

ஆறலைப்பார், கள்வர், குறளை கூறுவார் முதலிய மாந்தர், குடிகளைச் சேர்ந்த குற்றவாளிகளேயன்றி உட்பகைவ ராகார். மேலும், அவர் மாக்களே யன்றி மக்களுமாகார். பன்றி இறைச்சியும், புலி தோலும், கரடி கம்பளியும் உதவுவதாலும்; அவையும் அவை போன்ற காட்டுவிலங்குகளும், விலங் கினச்சாலைக்கும் (zoo) மறவட்டக் (circus) காட்சிக்கும் விலங்குநூற் (Zoology) கல்விக்கும் பயன்படுவதாலும் அவற்றுள் யானை பல்வேறு வகையில் மாந்தனுக்குப் பணி செ-வதாலும்; காட்டுவிலங்குகள் மிக்க விடத்து அவற்றை வேட்டையாடிக் கொல்ல முடியுமாதலாலும்; அவற்றை யெல்லாம் உட்பகையென்று கொள்வது பொருந்தாதென்றும், அவற்றினுங் கொடியவை சுரமண்டலம், நண்டுத்தெறுக்கால், நச்சுப்பாம்பு, கடந்தை (கதண்டு), வெறிநா- முதலிய பிறவென்றும், அறிந்துகொள்க.

## 736. கேடறியாக் கெட்ட விடத்தும் வளங்குன்றா நாடென்ப நாட்டிற் றலை.

**(இ-ரை.)** கேடு அறியா - புயல், வெள்ளம், நிலநடுக்கம், எரிமலை முதலிய இயற்கையாலும், பகைவரும் கொள்ளைக்காரருமாகிய மாந்தராலும், கெடுதலறியாததா-; கெட்டவிடத்தும் வளம் குன்றா நாடு - என்றேனும் ஒருகால் அரிதிற் கெட்டதாயினும் வளங் குறையாத நாடே; நாட்டில் தலை என்ப - எல்லா நாடுகள்ளுள்ளும் தலையாயதென்று கூறுவர் அறிஞர்.

நாடு கேடறியாமை கடவுள் வழிபாட்டாலும் அறவொழுக்கத்தாலும் அரசனாற்றலாலும் செங்கோலாட்சியாலும் ஆவதாம். வளம் நால்வகை நிலத்தும் இயற்கையாகவும் செயற்கையாகவும் விளையும் உணவும் பிறவுமாகிய பொருள் மிகுதி. குன்றாமையாவது நீர்வள நிலவள முண்மையால் முன் போன்றே விளைதல். நாட்டில் விளைவன நெல், வாழை, கரும்பு, மஞ்சள், இஞ்சி, வெற்றிலை, பாக்கு முதலியன; காட்டில் விளைவன எள், பயறு, தேன், அரக்கு, சந்தனம், புனுகு, காசறை(கஸ்தூரி) முதலியன: மலையில் விளைவன ஏலம், மிளகு, அகில், மருப்பு(தந்தம்), மரம், பொன், மணி முதலியன; கடலில் விளைவன உப்பு, மீன், இறா, சங்கு, முத்து, பவழம், ஓர்க்கோலை முதலியன. 'அறியா', 'குன்றா' என்பன ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

## 737. இருபுனலும் வா-ந்த மலையும் வருபுனலும்
## வல்லரணு நாட்டிற் குறுப்பு.

**(இ-ரை.)** இருபுனலும் - மேல்நீர் கீழ்நீர் எனப்பட்ட இருவகை நீர் வளமும்; வா-ந்த மலையும் - பலவகையிலும் பயன்படுவதற்கேற்றதா-வா-ந்த மலையும்; வருபுனலும் - அதனின்று வரும் ஆறும்; அரணும் - இயற்கையுஞ் செயற்கையுமாகிய இருவகை வலிய அரணும்; நாட்டிற்கு உறுப்பு - சிறந்த நாட்டிற்குரிய உறுப்புகளாம்.

நிலத்தின் மேலுள்ள ஆற்று நீரும் குளத்து (ஏரி) நீரும் மேல்நீர்; நிலத்தின் கீழுள்ள கிணற்று நீரும் துரவு நீரும் கீழ்நீர். துரவு பெருங் கிணறு. நாட் டிற்கு எல்லையாகவும் அரணாகவும் வளநிலையமாகவும் உதவும் மலையை 'வா-ந்த மலை' என்றார்.

"அளக்க லாகா அளவும் பொருளும்
துளக்க லாகா நிலையுந் தோற்றமும்
வறப்பினும் வளந்தரும் வண்மையும் மலைக்கே." (நன். பொதுப். 28)

காடும் மலையும் ஆறும் கடலும் இயற்கையரணாம்; கோட்டையும் அகழியும் செயற்கையரணாம்.

**738. *பிணியின்மை செல்வம் விளைவின்ப மேம
மணியென்ப நாட்டிற்கிவ் வைந்து.***

**(இ-ரை.)** பிணியின்மை செல்வம் விளைவு இன்பம் ஏமம் இவ் வைந்து - நோயின்மை, செல்வம், விளையுள், இன்பமுண்மை, பாதுகாப்பு ஆகிய இவ் வைந்தும்; நாட்டிற்கு அணி என்ப - ஒரு நாட்டிற்கு அழகு என்று சொல்வர் அறிஞர்.

'பிணியின்மை' நிலநலம், நீர்நலம், உணவுநலம், தட்பவெப்பச் சமநிலை முதலியவற்றால் வருவது. 'செல்வம்' நிலமும் வீடும், தட்டுமுட்டுகளும், பொன்னும் வெள்ளியும் மணியும், ஊர்தியும் கால்நடையும், பன்னாட்டு விளைபொருளும் செ-பொருளுமாகிய பொருட்செல்வமும் கல்விச் செல்வமுமாம். 'விளைவு' மேற்கூறிய நானில விளையுள். 'இன்பம்' நாடக நடிப்பு, அழகிய இயற்கைக் காட்சி, திருவிழா, இசையரங்கு, சொற்பொழிவு, நால்வகை அறுசுவையுண்டி, நன்காற்று, இனிய இல்லற வாழ்வு, தட்பவெப்பச் சமநிலை; நில விளையாட்டு, நீர் விளையாட்டு, வேலைவா-ப்பு, வரிப் பளுவின்மை, செங்கோலாட்சி முதலியவற்றால் நேர்வது. 'ஏமம்' செங்கோ லாட்சி, படை வலிமை, அரண் சிறப்பு, பகையின்மை ஆகியவற்றால் ஏற்படு வது. இத்தகைய நாடு மண்ணுலகில் விண்ணுலகம் போன்ற தென்பது கருத்து.

**739. *நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு.***

**(இ-ரை.)** நாடு என்ப நாடா வளத்தன - நாடென்று சிறப்பித்துச் சொல் லப்படுவன பிற நாட்டுப் பொருள்களின் தேவையின்றித் தமக்கு வேண்டிய பொருள்வளமெல்லாம் தம்மகத்தே கொண்டன; நாட வளம் தரு நாடு அல்ல - இங்ஙனமன்றிப் பிறநாட்டுப் பொருள்களை நாடிப்பெற்று அதனால் வளம்பெறும் நாடுகள் நாடுகளாகா.

இனி, 'நாட வளந்தரு நாடு' என்பதற்கு, பிற நாட்டுப் பொருள்களை நாடுமாறு குன்றிய வளந்தரு நாடுகள் என்றுரைப்பினுமாம். எல்லா வகை யிலும் தன்னிறைவானதே தலைசிறந்த நாடென்பது கருத்து.

இக் குறட்குத் "தங்கண் வாழ்வார் தேடி வருந்தாமல் அவர்பாற் றானே வந்தடையுஞ் செல்வத்தையுடையவற்றை நூலோர் நாடென்று சொல்லுவர்; ஆதலாற் றேடி வருந்தச் செல்வமடைவிக்கும் நாடுகள் நாடாகா" என்று உரைத்து, "நாடுதல் இருவழியும் வருத்தத்தின்மேனின்றது" என்று சிறப்

புரையுங் கூறினார் பரிமேலழகர். தேடி வருந்தாமல் தானே வந்தடையுஞ் செல்வமுள்ள நாடு இவ் வுலகில் எங்குமின்மையாலும், இயற்கை விளை பொருளையும் விளையுமிடஞ் சென்று தொகுக்கவேண்டி யிருப்பதனாலும், மெ-வருத்தமில்லா வாழ்வு சோம்பலையும் நோயையும் விளைக்குமாத லாலும், அது உரையன்மை யறிக. "பாடில்லாற் பயனில்லை" என்னும் பழமொழியையும்,

**"வேளாண்மை செ–து விருந்தோம்பி வெஞ்சமத்து**
**வாளாண்மை யாலும் வலியரா–த் – தாளாண்மை**
**தாழ்க்கு மடிகோ ளிலரா– வருந்தாதார்**
**வாழ்க்கை திருந்துத லின்று"** **(பழ. 151)**

என்னும் பழமொழிச் செ-யுளையும் நோக்குக.

**740. ஆங்கமை வெ–தியக் கண்ணும் பயமின்றே**
**வேந்தமை வில்லாத நாடு.**

**(இ–ரை.)** வேந்து அமைவு இல்லாத நாடு - அரசனோடு பொருந்துத லில்லாத நாடு; ஆங்கு அமைவு எ-தியக்கண்ணும் பயம் இன்றே - மேற் கூறியவாறு எல்லா நலங்களும் அமைந்திருந்ததாயினும் அவற்றாற் பயனில்லாததே யாகும்.

'வேந்தமைவு' என்பது குடிகள் அரசனொடு பொருந்துதலும் அரசன் குடிகளொடு பொருந்துதலுமாகிய இருதலை யன்பையுங் குறிக்கும். இனி, 'வேந்தமை வில்லாத' என்பதற்கு நல்லரசன் வா-த்தலில்லாத என்றுரைப் பினுமாம். தந்தைக்கும் மக்கட்கும் நேர்த்தமில்லாத குடும்பம் கெடுவது போல, அரசனுக்கும் குடிகட்கும் நேர்த்தமில்லாத நாடு கெடும் என்பது கருத்து. இவ் விரு குறள்களாலும் நாட்டின் குற்றங் கூறப்பட்டது. உம்மை உயர்வுசிறப்பு. ஏகாரம் தேற்றம்.

*உறுப்பியலில் நாட்டுப்பகுதி முற்றிற்று.*

## அதி. 75 - அரண்

*அதாவது, பகைவராற் கைப்பற்றப்படாவாறும் கொள்ளையடிக்கப் படாவாறும் அழிக்கப்படாவாறும், நாட்டிற்கும் தலைவருக்கும் அரசனுக்கும் பாதுகாப்பளிக்கும் இயற்கையும் செயற்கையுமாகிய இருவகையமைப்பு. இது நாட்டின் சிறந்த வுறுப்புகளுள் ஒன்றாதலாலும், 'வல்லரணும் நாட்டிற் குறுப்பு'*

*என்ற முந்தின அதிகாரத்தில் தோற்றுவா- செ-யப்பட்டதினாலும், நாட்டின் பின் வைக்கப்பட்டது.*

**741. ஆற்று பவர்க்கு மரண்பொரு ளஞ்சித்தற்**
**போற்று பவர்க்கும் பொருள்.**

**(இ-ரை.)** அரண் - இருவகைப்பட்ட பாதுகாப்பமைப்பு; ஆற்று பவர்க்கும் பொருள் - மூவகை யாற்றலு முடையரா-ப் பிறர் நாட்டின்மேற் படையெடுத்துச் சென்று போர் செ-வார்க்கும் சிறந்த செல்வம்; அஞ்சித் தற்போற்றுபவர்க்கும் பொருள் - அவ் வாற்றலின்றித் தம் பகைவர்க்கஞ்சித் தற்காப்புச் செ-வார்க்கும் சிறந்த செல்வம்.

மூவகையாற்றல் அறிவு, ஆண்மை, கருவி என்பன. அவற்றுட் கருவி படை, படைக்கலம், பொருள் என முத்திறப்படுவது. ஆற்றலுள்ளவர் பிறர் மேற் சென்றவிடத்து, அவர் கருவூலத்தையும் மகளிரையும் காத்தற்கு அரண்வேண்டியிருத்தலானும்; ஆற்றலில்லாதவர் வேட்டைநாயால் துரத்தப் பட்ட முயல் குழிக்குட் புகுந்து தப்புவதுபோல், தம் பகைவர்க்குத் தப்பிப் பதுங்குவதற்கு அரண் இன்றியமையாததாதலாலும்; தாக்குவார்க்கும் தற்காப் பார்க்கும் ஒப்ப 'அரண் பொருள்' என்றார். வலியார்க்கும் அரண் வேண்டி யிருத்தலை யுணர்த்த அவரை முற்கூறினார். ஆயினும், பத்தினித்தெ-வத் திற்குப் படிமைக்கல் எடுக்கவும் கனகவிசயரின் செருக்கடக்கவும், வடநாடு சென்ற சேரன் செங்குட்டுவன் முப்பத்திரு மாதம் நீங்கியிருந்தும், தென் னாட்டிற் குழப்பமில்லா திருந்தமை, அவனது அனைத்திந்தியத் தலைமை யையே உணர்த்தும். உம்மையிரண்டுள் முன்னது உயர்வுசிறப்பு; பின்னது இறந்தது தழுவிய எச்சம்.

**742. *மணிநீரு மண்ணு மலையு மணிநிழற்***
***காடு முடைய தரண்.***

**(இ-ரை.)** மணிநீரும் - (மதிலை யடுத்த) நீலமணிபோலும் நிறத்தை யுடைய அகழிநீரும்; மண்ணும் - அதனையடுத்த வெறுநிலமும்; அணிநிழல் காடும் - அதனையடுத்த குளிர்ந்த நிழலுள்ள அழகிய காடும்; மலையும் - அதனையடுத்த பல நீள்மலையும் உடையது; அரண் - தனக்கு முன்னாக முறையே உடையதே சிறந்த மதிலரணாவது.

மதிலரண், நீரரண், காட்டரண், மலையரண் என அரண் நால்வகையாகச் சொல்லப்படினும், இங்கு ஆசிரியர் சிறப்பாக அரணென்று எடுத்துக்

கொண்டது மதிலரணையே. இதை, 'உடையது அரண்' என்று மணிநீர் முதலிய நான்கையும் அரணுறுப்பாகச் சொல்லியிப்பதனாலும், அடுத்த குறளாலும் அறிக.

அகழிநீர் ஆழமாகவும் என்றும் வற்றாததாகவும் இருந்து கடல்நீரின் நிறத்தைக் கொண்டிருக்குமாதலால் 'மணிநீர்' என்றார். மணி என்பது தொண்வகை ஒளிக்கற்கட்கும் பொதுப்பெயராயினும் சிறப்பாக நீலமணி யைக் குறிப்பதை மணிமிடற்றோன்(சிவன்), மணிவண்ணன்(திருமால்) முதலிய பெயர்களால் அறிக.

அகழியையடுத்து வெள்ளிடை நிலம் இருப்பது பகைவர் வந்ததை அறிதற் பொருட்டும், அவர்மீது மதில்மிசை மறவர் அம்பெ-தற் பொருட் டும். அதையடுத்த 'அணிநிழற்காடு' பகைவர் தனித்தனியாக வன்றிப் படை யாகத் திரண்டு வருவதைத் தடுத்தற்பொருட்டும், பகைவரின் வரவு பார்க்கும் காவல் மறவர் துன்பமின்றிக் காத்தற்பொருட்டும். இக் காடே மிளை யென்றும் காவற்காடென்றும் பெயர் பெறுவது. முல்லைக்கு அப்பாற்பட்டதே. குறிஞ்சி, செ-யுளிற் கூழை மோனை நோக்கி 'மலை' முன்னின்றது. மலை நெ-தலல்லாத் திசையில் நீண்டகன் றுயர்ந்திருப்பன. இவை மேலிருந்து காவல் செ-யவும், கணவா-களின் வழிவரும் பகைவரைத் தடுக்கவும் கொல்லவும் உதவுவன. வெறுநிலத்தை மருநில மென்றார் பரிமேலழகர். மரு என்பது மணல்வெளியையும் பாலை நிலத்தையுங் குறிக்கும் வடசொல் லாதலின், இவ் விடத்திற்குப் பொருந்தாது.

### 743. *உயர்வகலந் திண்மை யருமையிந் நான்கி*
### *னமைவர ணென்றுரைக்கு நூல்.*

**(இ-ரை.)** உயர்வு அகலம் திண்மை அருமை - உயர்ச்சியும் அகலமும் திணுக்கமும் அருமையும்; இந் நான்கின் அமைவு - ஆகிய இந் நான்கு திறமும் அமைந்திருப்பதே; அரண் என்று நூல் உரைக்கும் - சிறந்த மதிலரண் என்று அரசியல்பற்றிய பொருள்நூல் கூறும்.

பாம்புரியோடு கூடிய கோட்டைமதில் அகழியை அடுத்த தென்பதை,

**"கார்முற்றி யிணரூழ்த்த கமழ்தோட்ட மலர்வே-ந்து**
**சீர்முற்றிப் புலவர்வா-ச் சிறப்பெ-தி யிருநிலந்**
**தார்முற்றி யதுபோலத் தகைபூத்த வையைதன்**
**னீர்முற்றி மதில்பொரூஉம் பகையல்லா னேராதார்**
**போர்முற்றொன் றறியாத புரிசைசூழ் புனலூரன்"** **(கலித். 67)**

என்பதனாலும்,

"அன்னமு மகன்றிலு மணிந்து தாமரைப்
பன்மலர்க் கிடங்குசூழ் பசும்பொற் பாம்புரிக்
கன்னிமூ தெயில்கட லுடுத்த காரிகை
பொன்னணிந் திருந்தெனப் பொலிந்து தோன்றுமே" (சீவக. 1250)

என்பதனாலும் அறிக. இதனால் "மதிற்புறத்து மருநிலம் பகைவர் அரண் பற்றாமைப் பொருட்டு" என்னும் பரிமேலழகர் கூற்றுப் பொருந்தாமை காண்க. பாம்புரி மதிலைச் சுற்றியமைந்த படிக்கட்டு.

'உயர்வு' அமைந்தது மரவேணியும் நூலேணியுங்கொண்டு ஏறமுடியாத மதில். இது உவளகம் (உவணகம்) எனப்படும். உவள் = உவண் (உயர்ச்சி).

"வன்சிறை யுவளகம் ஆரையும் வரையார்" (திவா. 5) 'அகலம்' அமைந்தது உழிஞையார் துளைக்க முடியாத அடியகலமும் நொச்சியார் நின்று அம்பெ-யக்கூடிய தலையகலமு முள்ள மதில். இது எயில் (எ-இல்) எனப் படும். 'திண்மை' அமைந்தது செம்பையுருக்கிச் சாந்தாக வார்த்துக் கருங் கல்லாற் கட்டிய மதில்.

இது இஞ்சி எனப்படும். இஞ்சுதல் இறுகுதல்.

"செம்புபுனைந் தியற்றிய சேணெடும் புரிசை" (புறம். 205)

"செம்பிட்டுச் செ–த விஞ்சித் திருநகர்ச் செல்வம் தேறி"

(கம்பரா. கும்ப. 160)

'அருமை' அமைந்தது பல்வகைப் பொறிகள் கொண்டதா-ப் பகைவர் அணுகமுடியாத மதில். இது சோ எனப்படும்.

"சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த" (சிலப். 17:35)

மதிற்பொறிகளாவன:

"......... ................வளைவிற் பொறியும்
கருவிர லூகமும் கல்லுமிழ் கவணும்
பரிவுறு வெந்நெயும் பாகடு குழிசியும்
கா–பொன் னுலையும் கல்லிடு கூடையும்
தூண்டிலும் தொடக்கும் ஆண்டலை யடுப்பும்
கவையும் கழுவும் புதையும் புழையும்
ஐயவித் துலாமும் கைபெய ரூசியும்
சென்றெறி சிரலும் பன்றியும் பணையும்

**எழுவுஞ் சீப்பும் முழுவிறற் கணையமும்**
**கோலும் குந்தமும் வேலும் பிறவும்."** **(சிலப். 15 : 207–16)**

இவற்றுள் 'பிற' என்றவை நூற்றுவரைக் கொல்லி, தள்ளிவெட்டி, களிற்றுப் பொறி, விழுங்கும் பாம்பு, கழுகுபொறி, புலிப்பொறி, குடப்பாம்பு, சகடப் பொறி, தகர்ப்பொறி, 'அரிநூற் பொறி முதலியன (மேற்படி உரை). 'அமைவு' ஆகுபெயர். நூலோர் செயல் நூலின்மேல் ஏற்றிக் கூறப்பட்டது.

**744.** ***சிறுகாப்பிற் பேரிடத்த தாகி யுறுபகை***
***யூக்க மழிப்ப தரண்.***

**(இ–ரை.)** சிறு காப்பின் பெரு இடத்தது ஆகி - காவல் செ-ய வேண் டிய இடம் சிறிதா-, வாழ்தற்கேற்ற உள்ளிடம் அகன்றதா-; உறுபகை ஊக்கம் அழிப்பது - தன்னை வந்து முற்றுகையிட்ட பகைவரின் மனவெழுச்சியைக் கெடுப்பதே; அரண் - சிறந்த கோட்டை யரணாவது.

நாற்புறத்து வாயில்கள் தவிர, மற்ற இடமெல்லாம் தகர்க்க முடியாத திண்ணிய மதிலாகவும் அணுகமுடியாத பொறிகளேற்றப்பட்டதாகவும் இருத்தலின், 'சிறு காப்பின்' என்றும்; அரசனும் படையும் நகர மக்களும் ஏந்தாக (வசதியாக) வாழ்தற்கேற்ப அகன்றிருத்தல்பற்றிப் 'பேரிடத்த தாகி' என்றும், தம் ஆற்றலும் ஊக்கமும் நோக்கி, இன்றே யழித்துவிடுவோம் என் னும் பூட்கை மறத்துடன் வந்த பகைவர், மதிலைக் கண்டவுடன் ஊக்கமழி தலின் 'ஊக்கம் அழிப்பது' என்றும் கூறினார். பேரிடத்தைக் கோட்டை யுள்ளிடம் என்று கொள்ளாது நாடுமுழுதுமென்று கொண்டு, "வாயிலும் வழியுமொழிந்த விடங்கள் மலை, காடு, நீர்நிலை யென்றிவற்றுள் ஏற்பன வுடைத்தாதல்பற்றிச் 'சிறுகாப்பின்' என்று கூறியதாக வுரைத்தார் பரிமேலழகர். முதலிரு குறள்கள் தவிரப் பிறவெல்லாம் மதிலரணைப்பற்றியே சிறப்பாகக் கூறுவதைக் கூர்ந்து நோக்கிக் காண்க. அகழி மதிலைச் சேர்ந்திருப்பதனால், அது மதிலொடு சேர்த்தே கருதப்பெறும்.

**745.** ***கொளற்கரிதா–க் கொண்டகூழ்த் தாகி யகத்தார்***
***நிலைக்கெளிதா நீர தரண்.***

**(இ–ரை.)** கொளற்கு அரிதா- - உழிஞையாரால் கைப்பற்றுவதற்கு அரிதா-; கொண்ட கூழ்த்து ஆகி - உள்ளிருப்பார்க்கு வேண்டிய பலவகை நுகர்ச்சிப் பொருள்களையும் உடையதா-; அகத்தார் நிலைக்கு எளிது

ஆம் நீரது - நொச்சி மறவரின் போர்நிலைக்கு எளிதான நிலைமை யுடையதே; அரண் - சிறந்த கோட்டையரணாவது.

உழிஞையாராவார் உழிஞை மாலைசூடி நகரை முற்றுகையிடும் பகைவரான புறத்தார். நொச்சியாராவார் நொச்சிமாலை சூடி முற்றுகையிடப் பட்ட நகரைக் காக்கும் மறவரான அகத்தார். கொளற்கருமை, மரமடர்ந்த காவற்காட்டாலும் ஆழ்ந்து முதலைகள் பல கொண்ட அகழியாலும் அணுகு தற்கரிய மதிற்பொறிகளாலும் நேர்வதாம். கூழ் என்றது உணவும் நுகர்ச்சிப் பொருளும் செல்வமுமாகிய பல்வேறு பயன்பாட்டுப் பொருள்களை. நிலைக்கெளிய நீர்மையாவது, நொச்சியார் விடுத்த படைக்கலங்கள் உழிஞையாரை எளிதா-த் தாக்குமாறும் உழிஞையார் விடுத்தவை நொச்சி யாரைத் தாக்காவாறும், மதிலுயர்வும் மறைவிடங்களும் பதணப் பரப்பு முடைமை. பதணம் மதிலின் மேற்றளம் அல்லது மதிலுண்மேடை.

## 746. *எல்லாப் பொருளு முடைத்தா யிடத்துதவு*
## *நல்லா ளுடைய தரண்.*

**(இ-ரை.)** எல்லாப் பொருளும் உடைத்தா- - அரசனும் படைமறவரும் குடிகளுமாகிய அகத்தாரெல்லார்க்கும் வேண்டிய பொருள்களை யெல்லாம் உள்ளே கொண்டதா-; இடத்து உதவும் நல் ஆள் உடையது - நொச்சிமறவர் புண்பட்டும் மடிந்தும் விழவிழ உடனுடன் அவர் நின்ற இடத்திற்கு வந்து பொருதுதவும் நன்மறவரை யுடையதே; அரண் - சிறந்த கோட்டையரணாவது.

அரசப்பத்தியும் நாட்டுப்பற்றும் மறமும் மானமும் ஊக்கமும் ஒருங்கேயுடைய மறவரை 'நல்லாள்' என்றார். எல்லாப் பொருளு முடைமையால் நெடுநாள் முற்றுகையைத் தாங்குதலும், இடத்துதவும் நல்லாளுடைமையால் தோல்வியுறாது வெற்றிபெறுதலும், கூடுமென்பது கருத்து.

## 747. *முற்றியு முற்றா தெறிந்து மறைப்படுத்தும்*
## *பற்றற் கரிய தரண்.*

**(இ-ரை.)** முற்றியும் - வெளிப்போக்கிற்கும் உட்புகவிற்கும் இடமில்லா வாறு நெருங்கி மதிலைச் சூழ்ந்தும்; முற்றாது எறிந்தும் - அங்ஙனம் சூழாது மதிலின் இளந்த இடம்நோக்கி ஒன்றுதிரண்டு முனைந்து பொருதும்; அறைப்படுத்தும் - அமைச்சரையும் படைத்தலைவரையும்

அவர்க்கு வேண்டியவரை விடுத்துப் பெரும் பொருள் கொடுத்து வயப் படுத்திக் கோட்டை வாயிலைத் திறக்கச் செ-தும்; பற்றற்கு அரியது - உழிஞை யாராற் கைப்பற்ற முடியாததே; அரண் - சிறந்த கோட்டை யரணாவது.

இம் மூன்று போர் வலக்காரங்களுள்ளும், முதலது மதிற்சிறப்பாலும், இரண்டாவது நல்லாளாலும், மூன்றாவது அதிகாரிகளின் நேர்மையாலும், வாயாவாம். அறைப்படுத்தலெனினும் அறைபோக்குதலெனினும் கீழறுத்த லெனினும் ஒன்றே. கையூட்டாற் காட்டிக் கொடுக்கச் செ-தல் என்பது இவற்றின் பொருள்.

## 748. *முற்றாற்றி முற்றி யவரையும் பற்றாற்றிப்*
## *பற்றியார் வெல்வ தரண்.*

**(இ-ரை.)** முற்று ஆற்றி முற்றியவரையும் - படைப்பெருமையால் வளை தல் வல்லவரா- வந்து வளைந்த உழிஞையாரையும்; பற்றியார் பற்று ஆற்றி வெல்வது - மதிலரணைப் பற்றிநின்ற நொச்சியார் சிறுபடையினராயினும் தாம் பற்றிய விடத்தைவிட்டு அகலாது நின்று பொருது வெல்வதற்கு இடமானதே; அரண் - சிறந்த கோட்டையரணாம்.

முற்றியவரையும் என்னும் சிறப்பும்மையால் படைப்பெருமை பெறப் பட்டது. அதனால், அதற்கு மறுதலையாகச் சிறிய படையினராயினும் என்பது வருவித்துரைக்கப்பட்டது. ஒரு மாநகர் முழுவதையும் வளைதற்கு மாபெரும் படை வேண்டும். பற்றாற்றுதல் பற்றியவிடத்தில் நின்று பொருதல்; இடவேற்றுமைத்தொகை. 'பற்று' ஆகுபெயர். அரண் சிறப்பால் சிறுபடையும் பெரும்படையை வெல்லும் என்பது கருத்து.

**"நிலனும் பொருளுங் காலமுங் கருவியும்**
**வினைமுதற் கிளவியும் வினையு முளப்பட**
**வவ்வறு பொருட்குமோ ரன்ன வுரிமைய**
**செ-யுஞ் செ-த வென்னுஞ் சொல்லே"** **(சொல். 37)**

என்னும் தொல்காப்பிய நெறிமொழிப்படியும் உலக வழக்குப்படியும், பெயரெச்சம் இடத்தையும் தழுவுமாதலால், "வெல்வதென உடையார் தொழில் அரண்மேனின்றது" என்று கொள்ளத் தேவையில்லை. வெல்லும் அது - வெல்லுமது - வெல்லுவது - வெல்வது. இவ் வெழுகுறளாலும் நல்லரணின் இலக்கணங் கூறப்பட்டது.

**749. *முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து***
***வீறெ—தி மாண்ட தரண்.***

**(இ-ரை.)** முனைமுகத்து மாற்றலர் சாய - போர்த்தொடக்கத்திலேயே பகைவர் புண்பட்டு விழுமாறு; வினைமுகத்து வீறு எ-தி - நொச்சியாரின் வினைவேறுபாடுகளாற் சிறப்புப் பெற்று; மாண்டது அரண் - பல்வேறு உறுப்புகளாலும் மாட்சிமைப்பட்டதே சிறந்த கோட்டையரணாவது.

பகைவர் அகழியை அடுத்தவுடனே பட்டுவிழுமாறு, மதில்மேலிருந்து கல்லும் அம்பும் விட்டேறும் சோனைமாரியா-ச் சொரிதலால், 'முனைமுகத்து மாற்றலர் சாய' என்றார். தொடக்கத்திலேயே பெருந்தொகையினர் சா-தலால், பின்னும் தாக்குப்பிடித்து நிற்றலும் பொருதலும் கூடாது பின் வாங்கியோடுவர் என்பதாம். வினைவேறுபாடுகளாவன: அகழியைக் கடக்கு முன் எ-தலும் எறிதலும் வீசுதலும்; மதிலைப் பற்றியபின், கடித்தலும் உமிழ் தலும் இறைத்தலும் எறிதலும் கோத்து வலித்தலும் கட்டுதலும் பூட்டு முறுக்கு தலும், கொத்துதலும் நெட்டித் தள்ளுதலும் குத்துதலும் பொதுக்குதலும் கிழித்தலும் அடித்தலுமாகிய பொறிவினைகளும்; குத்துதலும் வெட்டுதலும் பிளத்தலுமாகிய படைவினைகளுமாம். அரண் மாண்பிற் கேற்ற பிறவுறுப்பு கள்: மதில்மேலுள்ள பதணம், ஏப்புழை, சூட்டு, ஞாயில் (ஏவறை), கொத்தளம் (காவற்கோபுரம்) முதலியனவும், பகைவர்க்குத் தெரியாது நகர்க்கு வெளியே சென்றுவர நிலத்தின் கீழமைத்த சுருங்கை முதலியனவுமாம்.

**750. *எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி***
***யில்லார்க ணில்ல தரண்.***

**(இ-ரை.)** அரண் - கோட்டையரணமைப்பு; எனை மாட்சித்து ஆகியக் கண்ணும்; மேற்சொல்லப்பட்ட வுறுப்புக ளெல்லாவற்றோடுங்கூடி எத்துணை மாட்சிமைப்பட்டதா யிருப்பினும்; வினை மாட்சி இல்லார்கண் இல்லது - போர்வினைச் சிறப்பில்லாதவரிடத்துப் பயன்படாததாம்.

வினைமாட்சியாவது வெற்றிக்கேதுவான பல்வேறு வினைத்திறமை. வினைமாட்சியின்மை கூறவே, குறைவினையோடு வினையின்மையும் மிகைவினையும் தகாவினையும் கடியப்பட்டனவாம். இருந்தும் பயன் படாமை அல்லது பயன்படுத்தப்படாமை இல்லாமையோ டொக்குமாதலின்,

'இல்ல தரண்' என்றார். உம்மை உயர்வுசிறப்பு. இவ் விரு குறளாலும் வினை மாட்சியின்றி அரண்மாட்சி பயன்படாமை கூறப்பட்டது. 'இல்லை யரண்' என்பது மணக்குடவர் கொண்ட பாடம்.

*உறுப்பியலில் அரண்பகுதி முற்றிற்று.*

## அதி. 76 - பொருள்செயல்வகை

*அதாவது, அரசன் அமைச்சரோடு கூடித் தன் நாட்டை அரணாற் காத்து, தனக்கும் தன் ஆட்சிக்கும் இன்றியமையாத பொருளைத் தன் குடி களிடத்தும் பகைவரிடத்தும் நண்பரிடத்தும் தேடும் வழிகள். இவற்றுள், அரசன் பாதுகாப்பின்கீழ்க் குடிகள் பல்வேறு தொழில் செ-து பொருளீட்டு தலும் அடங்கும்.*

**751. பொருளல் லவரைப் பொருளாகச் செ—யும்**
**பொருளல்ல தில்லை பொருள்.**

**(இ-ரை.)** பொருள் அல்லவரை - பிறரால் ஒரு பொருளாக மதிக்கப் படாதவரையும்; பொருளாகச் செ-யும் பொருள் அல்லது - மதிக்கப்படச் செ-யும் செல்வத்தையல்லாமல்; பொருள் இல்லை - சிறந்த பொருளொன்று இவ் வுலகத்தில் இல்லை.

மதிக்கப்படாதவர் கல்லாதார், இழிதொழிலார், உறுப்பறையர், ஒழுக்க மில்லார், நோயாளியர், இளஞ்சிறார் முதலியோர். மதிக்கப்படுவாராகச் செ-தலாவது கற்றோரும் அரசனுட்பட்ட அதிகாரிகளும் அவருதவியை நாடச்செ-தல். இழிவுசிறப்பும்மை தொக்கது. இதில் வந்துள்ள அணி சொற் பொருட் பின்வருநிலை. பொருட்பின் வருநிலை வரையறைப்பட்டது.

**752. இல்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்வரை**
**யெல்லாருஞ் செ—வர் சிறப்பு.**

**(இ-ரை.)** இல்லாரை எல்லாரும் எள்ளுவர் - மற்றெல்லா நலமுடைய ராயினும் செல்வமில்லாதவரைத் தாயுட்பட எல்லாரும் தாழ்வாகக் கருதுவர்; செல்வரை எல்லாரும் சிறப்புச் செ-வர் - வேறொரு நலமும் இல்லாத வராயினும் செல்வமுடையாரை அரசனுட்பட எல்லாரும் மதித்துப் போற்றுவர்.

எள்ளுதலாவது பார்த்தலும் உரையாடுதலுஞ் செ-யாமை. சிறப்புச் செ-தலாவது அரசன் பட்டமளித்தலும், அரசனும் பெற்றோருந் தவிரப்

பிறரெல்லாம் கை கூப்புதலும் மதிப்பான இருக்கை யளித்தலும், எல்லாரும் அவர் வேண்டுகோளை நிறைவேற்றலுமாம். எள்ளுதல் என்னும் உளவினை, இகழ்தலாகிய வா-வினையையும் புறக்கணித்தலாகிய மெ-வினையையுந் தழுவும். செல்வத்தின் சிறப்பை வலியுறுத்தும்பொருட்டு இருவகையாலுங் கூறினார்.

**"கல்லானே யானாலுங் கைப்பொருளொன் றுண்டாயின்**
**எல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வர் – இல்லானை**
**இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தா–வேண்டாள்**
**செல்லா தவன்வாயிற் சொல்."** **(நல்வழி, 34)**

## 753. *பொருளென்னும் பொ–யா விளக்க மிருளறுக்கு மெண்ணிய தேயத்துச் சென்று.*

**(இ–ரை.)** பொருள் என்னும் பொ-யா விளக்கம் - செல்வம் என்று எல்லாராலுஞ் சிறப்பித்துச் சொல்லப்பெறும் நந்தா விளக்கு; எண்ணிய தேயத்துச் சென்று இருள் அறுக்கும் - தன்னை உடையவர்க்கு அவர் கருதிய தேயத்துச் சென்று பகையென்னும் இருளைப் போக்கும்.

எக்காலத்தும் பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லையாதலாலும் எல்லாரையும் விளங்கச் செ-தலாலும், 'பொ-யா விளக்கம்' என்றும்; ஏனை விளக்கொடு வேற்றுமை தோன்ற 'எண்ணிய தேயத்துச் சென்று' என்றும், பகையை விரைந்தழித்தல்பற்றி 'இருளறுக்கும்' என்றும் கூறினார். பகையென்னும் இருள் என்னாமையால் இது ஒருமருங் குருவகம். இம் மூன்று குறளாலும் செல்வத்தின் சிறப்புக் கூறப்பட்டது.

## 754. *அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து தீதின்றி வந்த பொருள்.*

**(இ–ரை.)** திறன் அறிந்து தீது இன்றி வந்த பொருள் - முறையறிந்து ஈட்டப்பட்டு ஒருவருக்குந் தீங்கு செ-யாது நேர்மையாக வந்த செல்வம்; அறன் ஈனும் இன்பமும் ஈனும் - அதை யீட்டியவனுக்கு அறத்தையும் விளைவிக்கும், இன்பத்தையும் விளைவிக்கும்.

ஈட்டுந் திறமாவது அவரவர் தத்தம் தொழில்துறையில் அறிவாலும் உழைப்பாலும் நேர்மையாக ஈட்டுதல். அரசன் பொருளீட்டுந் திறம் உழவரிடம் ஆறிலொரு பங்கு விளைபொருளும் பிற தொழிலாளரிடம் குறிப்

பிட்ட வரிப்பணமும் வாங்குதலும், பொருள் வருவா-களை மேன்மேலும் பெருக்குதலுமாம். இரப்போர்க்கீதலும் துறவியர்ப் பேணலும் விருந்தோம் பலும் கடவுட் பூசையும் நிகழ்தற் குதவுதலின், ‘அறனீனும்’ என்றும், வாழ்நாள் முழுதும் ஐம்புலவின்பமும் நுகர்தற்கேதுவாதலின் ‘இன்பமு மீனும்’ என்றும் கூறினார். இன்று (இல்லாது) என்பது இன்றி எனத் திரிந்தது.

பண்டைத் தமிழகத்தில் குடிகளால் அரசனுக்குச் செலுத்தப்பட்ட செலுத்தங்களெல்லாம் பொதுவாக இறையென்றும், புரவு என்றும், கடமை யென்றும் வரியென்றும் பெயர் பெற்றிருந்தன. ஒவ்வொரு வரியும், பயன் படுத்தும் பொருள் அல்லது கருவிபற்றியும், தொழிற்குலம்பற்றியும், நிகழ்ச்சி பற்றியும், வெவ்வேறு சிறப்புப் பெயரும் பெற்றிருந்தது. புரவு என்பது பிற்காலத்திற் புரவு வரி என்னப்பட்டது.

உழவர் செலுத்திய நிலவரி பகுதி (ஆறிலொரு பகுதி) என்றும் காணிக் கடன் என்றும் பெயர் பெற்றிருந்தது. தங்கட்கு வேண்டிய அளவே நெல் விளைவித்தவரும் புன்செ-ப் பயிர் விளைவித்தவரும் பொன்னாகவும் காசாகவும் செலுத்திய வரியுங் காணிக்கடன். பிற வரிகள் குசக்காணம், தறிக்கடமை, தட்டாரப் பாட்டம், இடைப்பூட்சி, செக்கிறை, வண்ணாரப் பாறை, தரகு பாட்டம், ஓடக்கூலி, நல்லா, நல்லெருது முதலியன. கலியாணக் காணம் என்பது மணமக்கள் செலுத்திய வரி. அது இக்காலத்துப் பதிவுமணக் கட்டணம் போல்வது. கள்ளிறக்குவார் செலுத்திய வரி மேனிப்பொன் என்னப்பட்டது. ஈழநாட்டினின்று ஈழவர் வந்த பின்னரே அது ஈழம் பூட்சி எனப் பெயர் மாறிற்று. தென்னையும் பனையும் தொன்றுதொட்டுத் தமிழகத்திலிருந்து வருகின்றன. ஏழ்தெங்க நாடும் ஏழ்குறும்பனைநாடும் பழம் பாண்டிநாடான குமரிநாட்டுப் பகுதிகள். நாடுகாவல் (பாடிகாவல்), நீராணி (நீர்க்கூலி) முதலிய சில வரிகள் ஊரவையாரால் வாங்கப்பட்டனவாகும்.

## 755. *அருளொடு மன்பொடும் வாராப் பொருளாக்கம்*
## *புல்லார் புரள விடல்.*

**(இ-ரை.)** அருளொடும் அன்பொடும் வாராப் பொருள் ஆக்கம் - குடிகளிடத்துத் தாம் கொள்ளும் அருளோடும் தம்மிடத்து அவர் கொள்ளும் அன்போடும் பொருந்தி வராத செல்வத்தின் தேட்டத்தை; புல்லார் புரள விடல் - அரசர் மனத்தாலும் பொருந்தாமல் தானே நீங்க விடுக.

‘அருளொடும் அன்பொடும் வாராப் பொருள்’ குடிகளை வருத்தி அளவிறந்து கவர்வது.

“குடிகொன் றிறைகொள்ளுங் கோமகற்குக் கற்றா
மடிகொன்று பால்கொளலு மாண்பே.” (நீதிநெறி. 29)

குடிகளை வருத்தி அளவிறந்து கவர்வதால், குடிகள் கெடுவதோடு அரசனும் பயனடையான்.

“அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடுபெரிது நந்தும்
மெல்லியன் கிழவ னாகி வைகலும்
வரிசை யறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப வெடுக்கும் பிண்டம் நச்சின்
யானை புக்க புலம்போலத்
தானு முண்ணான் உலகமுங் கெடுமே.” (புறம். 184)

இனி, அமைச்சன் தன் அரசனுக்குத் தீயவழியிற் பொருள் தேடினாலும், பசுமட்கலமும் நீரும்போல அவ் வரசனும் பொருளும் ஒருங்கு கெடுவதாக ஆசிரியர் கூறினமையின், அரசன் தானே தீயவழியிற் பொருள் தேடின் அழிவது திண்ணம் என்பது சொல்லாமலே பெறப்படும். அதனால் ‘புல்லார்’ என்றதனோடமையாது ‘புரள விடல்’ என்றுங் கூறினார்.

‘அருளொடும் அன்பொடும்’ என்று பொதுப்படச் சொல்லியிருப்பதால், அரசனுங் குடிகளும் போன்றே பண்ணையாரும் பண்ணையாள்களும், தொழிற்சாலைத் தலைவரும் தொழிலாளிகளும், முறையே அருளொடும் அன்பொடும் நடந்துகொள்ள வேண்டுமென்பதும் பெறப்படும். தொழில் தலைவர் அருள் கூலிகொடுத்தலிலும் தொழிலாளர் அன்பு பணிசெ-தலிலும், வெளிப்படும். இங்ஙனமே பிற துறைகளிலும். ‘புல்லார்’ எதிர்மறை முற்றெச்சம்.

## 756. உறுபொருளு முல்கு பொருளுந்தன் னொன்னார்த்
## தெறுபொருளும் வேந்தன் பொருள்.

**(இ-ரை.)** உறுபொருளும் - உடையோரின்மையாலும் எதிர்பாராதவாறும் தானாக வந்து சேர்ந்த பொருளும்; உல்கு பொருளும் - நிலவாணிகத்தில் வண்டிகளிலும் நீர்வாணிகத்தில் மரக்கலங்களிலும் வரும் பண்டங்கட்கு வாங்கும் ஆயமும்; தன் ஒன்னார்த் தெறுபொருளும் - தன் பகைவரைப் போரில் வென்றபின் அவரிடம் தண்டமாகவும் திறையாகவும் வாங்கும் பொருளும்; வேந்தன் பொருள் - அரசிறையல்லாத பிறவழிகளில் அரசன் பெறும் பொருள்களாம்.

உடையோரின்மையால் வருவன பழம்புதையலும் உரிமையோரில்லாச் சொத்துமாம். எதிர்பாராது வருவன குடிகள் காணிக்கையும் நண்பர் நன்கொடையுமாம். குன்றக் குறவர் செங்குட்டுவனுக்குமுன் படைத்தவை போன்றவை காணிக்கை. அவந்தி வேந்தன் கரிகால் வளவனுக்கு உவந்தளித்த தோரணவாயில் போன்றது நன்கொடை. தோற்றோடும் பகைவர் போர்க் களத்தில் விட்டுவிட்டுப்போன பொருள்களும் தெறுபொருளுள் அடங்கும். இம் முக்குறளாலும் அரசன் பொருளீட்டும் வழிகள் கூறப்பட்டன.

### 757. அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னுஞ்
### செல்வச் செவிலியா லுண்டு.

**(இ-ரை.)** அன்பு ஈன் அருள் என்னும் குழவி - அன்பு என்னும் நற்றா யினாற் பெறப்பட்ட அருள் என்னும் பிள்ளை; பொருள் என்னும் செல்வச் செவிலியால் உண்டு - பொருள் என்று உயர்த்துச் சொல்லப்படும் செல் வத்தையுடைய வளர்ப்புத் தாயாலேயே பிழைக்கும்.

உயர்திணை மேலுள்ள அன்பு முதிர்ந்தவிடத்தே அஃறிணைமீது அருள் பிறத்தல்போல் தொடர்புள்ள வலியார் மேலும் ஒத்தார் மேலுமுள்ள அன்பு முதிர்ந்த பின்பே தொடர்பில்லாத எளியார்மீது அருள் பிறத்தலால், அதை 'அன்பீன் குழவி' என்றும் அது எளியார்க்குப் பயன்படுவது பொரு ளுள்ள விடத்தேயாதலால் பொருளை அதற்குச் 'செவிலி' என்றும், அது நற்றாயிடம் பொருள் பெற்று வளர்க்கும் உலகியற் செவிலி போலாது தானே எல்லாப் பொருளும் உதவி வளர்த்தலால் 'செல்வச் செவிலி' என்றும் கூறி னார். வளரும் என்னாது 'உண்டு' என்றே கூறினமையால், பாலூட்டப் பெறாத குழவி பிழைக்காதது போலப் பொருளொடு கூடாத அருளும் இருந்தும் இல்லாதது போல்வதால் இறக்கும் என்பதாம். அன்பை நற்றாயென்று உருவகியாமையால் இது ஒருமருங் குருவகம்.

### 758. குன்றேறி யானைப்போர் கண்டற்றாற் றன்கைத்தொன்
### றுண்டாகச் செ—வான் வினை.

**(இ-ரை.)** தன் கைத்து உண்டாக ஒன்று செ-வான் வினை - தன் கையிற் பொருளை வைத்துக்கொண்டு ஒரு வினையை மேற்கொண்டவன் அதைச் செ-தல்; குன்று ஏறி யானைப்போர் கண்ட அற்று - ஒருவன் மலைமே லேறி யிருந்து அடிவாரத்தில் நடக்கும் யானைப்போரைக் கண்டாற் போலும்.

செ-வான் என்னும் வினையால், 'ஒன்று' என்பது அதன் செயப்படு பொருளான வினை யென்பது பெறப்பட்டது. மலைமே லேறியிருந்தான் சிறிதும் அச்சமும் வருத்தமுமின்றிக் கீழ் நடக்கும் யானைப்போரைக் கண்டு களித்தாற்போல, நிரம்பச் செல்வ முள்ளவனும் சிறிதும் அச்சமும் வருத்தமுமின்றித் தக்காரைக் கொண்டு ஒரு பெருவினையைச் செ-து முடித்து மகிழ்வான் என்பதாம்.

பொதுமக்கள் சேவற்போரும் தகர்ப்போரும் கண்டு களித்தது போன்றே, பண்டையரசரும் யானைப்போர் கண்டு களித்தமை,

**"கஞ்சுகம் வா–த்த கவளந்தன் கைக்கொண்ட**
**குஞ்சரம் வென்ற கொலைவேழம் – துஞ்சா**
**துழலையும் பா–ந்திறுத் தோடாது தான்றன்**
**நிழலையுந் தான்சுளிக்கும் நின்று"** **(பு. வெ. 250)**

என்னும் புறப்பொருள் வெண்பாமாலைச் செ-யுளால் அறியப்படும்.

## 759. செ–க பொருளைச் செறுநர் செருக்கறுக்கு மெஃகதனிற் கூரிய தில்.

**(இ–ரை.)** பொருளைச் செ-க - வெற்றிபெறும் வினையை மேற்கொள்ள விரும்பும் அரசர் செல்வத்தை நிரம்ப ஈட்டுக; செறுநர் செருக்கு அறுக்கும் எஃகு அதனின் கூரியது இல் - அவர் தம் பகைவரின் வீறாப்பை அறுத்தொழிக்கும் படைக்கலம் அதனைப்போற் கூரியது வேறொன்றுமில்லை.

பொருள் பெருகவே படையும் நட்பும் பெருகும். அதுகண்டு பகைவர் தாமே அடங்குவர். அல்லது பெரும்படை கொண்டு போரால் அடக்கப்படுவர் என்பது கருத்து.' எஃகு' உருக்கு. அது இங்கு உருக்கினாற் செ-யப்பட்ட படைக்கலத்தைக் குறித்ததனால் ஆகுபெயர். பொருள் வலிய பகையையும் அழிக்க வல்லதாதலால், அதனை வலிய பொருளையும் அறுக்கும் அரமாக அல்லது ஈர்வாளாக உருவகித்தார். பொருளைப்போற் பகையழிக்க வல்லது வேறொன்று மின்மையின், 'அதனிற் கூரியது இல்' என்றார். இது செருக்கை மரமாக அல்லது இரும்பாக உருவகியாமையால் ஒருமருங் குருவகம்.

## 760. ஒண்பொருள் காழ்ப்ப வியற்றியார்க் கெண்பொருளேனை யிரண்டு மொருங்கு.

**(இ-ரை.)** ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு - நல்வழியில் வரும் செல்வத்தை நிரம்ப ஈட்டியவர்க்கு; ஏனை இரண்டும் ஒருங்கு எண் பொருள் - அதனொடு சேர்த்தெண்ணப் பெறும் மற்ற இரு பொருள்களாகிய அறமும் இன்பமும் ஒருசேர எளிதா-க் கிட்டும்.

ஒண்மை நன்மை அல்லது ஒழுங்கு. காழ்ப்பு முதிர்வு. அது இங்கு மிகுதியைக் குறித்தது. அறம்பொரு ளின்பம் மூன்றும் முப்பொருள் அல்லது முப்பால் எனப்படுவதால், அறவின்பங்களை 'ஏனை யிரண்டும்' என்றார். அறமும் இன்பமும் பொருளின் பயனாதலாலும், நல்வழியில் வந்த பெரும் பொருள் அவற்றைத் தப்பாது பயக்குமாதலாலும், அதுவும் எளிதா- ஒருங்கு நிகழுமாதலாலும், 'ஒண்பொருள்' என்றும், 'எண்பொருள் ஏனை யிரண்டு மொருங்கு' என்றும், கூறினார். இந் நான்கு குறளாலும் பொருளின் பயன் கூறப்பட்டது.

**"வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்**
**நடுவண தெ-த விருதலையு மெ-தும்**
**நடுவண தெ-தாதா னெ-தும் உலைப்பெ-**
**தடுவது போலுந் துயர்."** **(நாலடி. 114)**

*உறுப்பியலில் பொருட்பகுதி முற்றிற்று.*

## அதி. 77 - படைமாட்சி

*அதாவது, அரசன் நல்வழியில் ஈட்டிய பொருளைக்கொண்டு அமைப்பதும், அவனாட்சிக்கும் பகைவரினின்று நாட்டைக் காத்தற்கும் இன்றியமையாததுமான, படையின் சிறப்பு.*

**761. உறுப்பமைந் தூறஞ்சா வெல்படை வேந்தன்**
**வெறுக்கையு ளெல்லாந் தலை.**

**(இ-ரை.)** உறுப்பு அமைந்து ஊறு அஞ்சா வெல்படை - தேர், யானை, குதிரை, காலாள் ஆகிய நால்வகை யுறுப்புகளும் பொருந்திப் போரின்கண் புண்படுவதற்கும் சாதற்கும் அஞ்சாது பொருது பகைவரை வெல்லத்தக்க படை; வேந்தன் வெறுக்கையுள் எல்லாம் தலை - அரசனின் செல்வங்க ளெல்லாவற்றுள்ளுந் தலையாயதாம்.

இங்குப் படை யென்றது கரிபரி தேர்கால் என்னும் நான்கின் தொகுதியை. அது பஞிலம் எனப்படும். "சூரனுக்குச் சேர்ந்த மரணஞ் சிறுதுரும்பு"

ஆதலாலும், ஊறஞ்சியவிடத்து வெல்லுதல் கூடாமையாலும், ‘ஊறஞ்சா’ என்றும்; பகைவரை வெல்லுதற்கு மட்டுமன்றி ஆட்சி செ-தற்கும், நட்பு நீங்கலாக ஏனை யரசுறுப்புகளையெல்லாம் காத்தற்கும், இன்றியமையாத தாகலின் ‘வெறுக்கையு ளெல்லாந் தலை’ என்றும் கூறினார். வகுப்பு, கை, அணி என்பன காலாட்படைப் பிரிவுகளின் பெயர்.

இனி, ‘உறுப்பமைந்து’ என்று பொதுப்படச் சொன்னதினால், ‘படை’ என்றது மேற்கூறிய நால்வகை நிலப்படையையே யன்றிக் கலப்படையாகிய நீர்ப்படையையும் தழுவும். மூவேந்தர்க்கும் கடன்மேற் செல்லும் நாவா-ப் படையும் தொன்றுதொட்டு இருந்துவந்தது. தலைக்கழகக் காலத்திற் கடற்படை செலுத்திச் சாலித் (Java) தீவைக் கைப்பற்றி, ‘அடியில் தன்னள வரசர்க் குணர்த்திய’ வடிம்பலம்பநின்ற பாண்டியன் வேறு; ‘வான்பகை’ யில்லாத ‘முந்நீர் விழவி னெடியோன்’ ஆன பாண்டியனும் வேறு.

கடைக் கழகக் காலத்துக் கரிகால்வளவனை,

“நளியிரு முந்நீர் நாவா யோட்டி
வளிதொழி லாண்ட வுரவோன் மருக” **(புறம். 66)**

என்று வெண்ணிக்குயத்தியார் பாடியிருப்பதால் வளிதொழி லாண்ட சோழன் இடைக்கழகக் காலத்தவனா யிருந்திருக்கலாம்.

“வாத ராசனை வலிந்துபணி கொண்ட வவனும்” **(இராச. 16)**

என்று கலிங்கத்துப்பரணி குறித்தது அவனையே.

“வலம்படு முரசிற் சேர லாதன்
முந்நீ ரோட்டிக் கடம்பறுத்து” **(அகம். 127)**

“உடைதிரைப் பரப்பிற் படுகட லோட்டிய
வெல்புகழ்க் குட்டுவன்” **(பதிற். 46)**

என்பன, கடைக்கழகக் காலத்தில் (கி.பி. 2ஆம் நூற்.) இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனும் அவன் மகன் செங்குட்டுவனும் கலப்படை கொண் டிருந்தமையைக் காட்டும்.

கி.பி 10ஆம் நூற்றாண்டினனான முதலாம் அரசவரசன் (இராசராசன்) மெ-க்கீர்த்தி, “காந்தளூர்ச் சாலை கலமறுத் தருளி” என்று கூறுவதால், சோழ னுக்கும் சேரனுக்கும் கலப்படை யிருந்தமையை ஒருங்கே தெரிவிக்கும்.

## 762. உலைவிடத் தூறஞ்சா வன்கண் டொலைவிடத்துத் தொல்படைக் கல்லா லரிது.

**(இ-ரை.)** தொலைவிடத்து உலைவிடத்து ஊறு அஞ்சா வன்கண் - நீண்ட நேரம் பொருது களைத்தவிடத்தும், தோல்வி நேர்ந்தால் மேல் நேரக்கூடியவற்றிற் கெல்லாம் அஞ்சாது நின்று பொரும் கடுமறம்; தொல் படைக்கு அல்லால் அரிது - அரசர்க்கு வழிவழியாகத் தொடர்ந்து வரும் நிலைப்படைக்கு அல்லாமல் வேறுவகைப் படைக்கு உண்டாகாது.

நிலைப்படை கூலிப்படை யென்றும், நாட்டுப்படை காட்டுப்படை யென்றும், துணைப்படை பகைப்படை யென்றும் படைகள் மூவேறு வகையில் இவ்விரண்டாக வகுக்கப்படும். கூலிப்படை போர்ச் சமையத்திற்கு மட்டும் கூலிக்கு அமர்த்திக்கொள்வது. நாட்டுப்படை செங்குந்தர் கைக்கிளையர் படை போல்வது. காட்டுப் படை கள்ளர் மறவர்படை போல்வது. நிலைப் படை என்றும் நாட்டுப் படையாகவே யிருக்கும். அது மூலப்படை யெனவும் படும். மூலம் என்னும் தென்சொல்லின் திரிபே மௌலம் என்னும் வட சொல்லும். துணைப்படை என்பது தனித்தவிடத்து நட்பரசர் படையையும் போர்க்களத்தில் பகைப்படையல்லாத தன் படைத் தொகுதியையுங் குறிக்கும். வழிமுறைப் பண்பு வரவர வளர்ந்தும் இயற்கையாக அமைந்தும் இருக்குமாதலாலும், வாழ்நாள் முழுவதும் உணவளித்துக் காத்த அரசனுக்கு நன்றியறிவாகச் செஞ்சோற்றுக் கடன் கழித்தல் மறவரியல்பாதலாலும், 'தொல்படைக் கல்லா லரிது' என்றார்.

**"சிறந்த திதுவென்னச் செஞ்சோறு வா–ப்ப**
**மறந்தரு வாளம ரென்னும் – பிறங்கழலுள்**
**ஆருயி ரென்னும் அவிவேட்டார் ஆங்கஃதால்**
**வீரியரெ– தற்பால வீடு."** **(பு. வெ. 8 : 30)**

"வெல்பொறியும் நாடும் விழுப்பொருளும் தண்ணடையும் - கொல் களிறும் மாவும்" கொடுத்துத் தொல்படையைப் போற்றுக என்பது குறிப்பு.

இழிவுசிறப்பும்மை தொக்கது.

## 763. ஒலித்தக்கா லென்னா முவரி யெலிப்பகை நாக முயிர்ப்பக் கெடும்.

**(இ-ரை.)** எலிப்பகை உவரி ஒலித்தக்கால் என் ஆம் - எலியாகிய பகை பெருந்திரளாகக் கூடிக் கடல்போல் ஆரவாரித்தாலும் பாம்பிற்கு என்ன

தீங்கு நேரும்; நாகம் உயிர்ப்பக் கெடும் - அப் பாம்பு மூச்சுவிட்ட அளவிலேயே அப் பகை ஒருங்கே அழிந்துபோம்.

மறங்குன்றிய பகைவர் பலர் திரண்டு முழக்கஞ் செ-தாலும் மறமிஞ்சியவன் அஞ்சான். அவன் கிளர்ந்தெழுந்த துணையானே அவர் கெட்டொழிவர் என்பதுபட நின்றமையின், இது பிறிதுமொழிதலணியாம். தொல்படையுள்ளும் பெருமறவன் சிறந்தவன் என்பது கருத்து. உவரி யொலித்தக்கால் உவமைத் தொகை. உவரி யொலித்தல் என்னும் வினை யுவமத்தால் திரட்சி பெறப்பட்டது. பெருமறவனுக்குப் பெருஞ்சிறப்புச் செ-க என்பது குறிப்பு.

**764.** ***அழிவின் றறைபோகா தாகி வழிவந்த***
***வன்க ணதுவே படை.***

**(இ-ரை.)** அழிவு இன்று - போரின்கண் தோல்வியடைதலின்றி; அறை போகா தாகி - பகைவரால் எங்ஙனமுங் கீழறுக்கப்படாததா-; வழிவந்த வன்கணதுவே - தொன்றுதொட்டுத் தலைமுறை தலைமுறையாக வளர்ந்து வந்த வன்மறத்தை யுடையதே; படை - சிறந்த படையாவது.

மறவலிமையால் அழிவின்மையும் அரசன்மீதன்பும் நாட்டுப் பற்றும் தன்மானமும், உயர்ந்த வொழுக்கமுடைமையால் அறைபோகாமையும் விளைந்தன.

“கெடுக சிந்தை கடிதிவள் துணிவே
மூதின் மகளி ராதல் தகுமே
மேனா ளுற்ற செருவிற்கிவ டன்னை
யானை யெறிந்து களத்தொழிந் தனனே
நெருந லுற்ற செருவிற்கிவள் கொழுநன்
பெருநிரை விலங்கி யாண்டுப்பட் டனனே
இன்றும், செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித் துடீஇப்
பாறுமயிர்க் குடுமி யெண்ணெ– நீவி
யொருமக னல்ல தில்லோள்
செருமுக நோக்கிச் செல்கென விடுமே” **(புறம். 279)**

என்னும் புறப்பாட்டும்,

"கன்னின்றா னெந்தை கணவன் களப்பட்டான்
முன்னின்று மொ–யவிந்தா ரென்னையர் – பின்னின்று
கைபோ–க் கணையுதைப்பக் காவலன் மேலோடி
யெ–போற் கிடந்தானென் னேறு" (பு.வெ. 8 : 22)

என்னும் புறப்பொருள் வெண்பாமாலைச் செ-யுளும், வழிவந்த வன்கண் மைத் திறத்தை விளக்கும். அது என்னும் சுட்டுப்பெயர் ஈறான பின்பும் தனித்து நின்றதுபோல் வகரவுடம்படுமெ- பெற்றது.

## 765. கூற்றுடன்று மேல்வரினுங் கூடி யெதிர்நிற்கு மாற்ற லதுவே படை.

**(இ-ரை.)** கூற்று உடன்று மேல் வரினும் - இறப்புத் தெ-வமாகிய கூற்று வனே சினந்து வந்து தாக்கினும்; கூடி எதிர் நிற்கும் ஆற்றலதுவே - கலை யாது எதிர்த்து நின்று பொரும் வலிமையுடையதே; படை – சிறந்த படையாவது.

"எப்போ தாயினுங் கூற்றுவன் வருவான்
அப்போ தந்தக் கூற்றுவன் தன்னைப்
போற்றவும் போகான் பொருளொடும் போகான்
சாற்றவும் போகான் தமரொடும் போகான்
நல்லா ரென்னான் நல்குர வறியான்
தீயா ரென்னான் செல்வரென் றுன்னான்
தரியா னொருகணந் தறுக ணாளன்" (கபி. அக. 35 – 41)

ஆதலின், உம்மை உயர்வுசிறப்பு, சாவின் ஆட்படுத்தமே (personification) கூற்றுவனாயினும், அத்தகைய சிறுதேவன் உண்டென்பதும், அவன் கட வுட்கு அடுத்தபடியாக மறம் நிறைந்தவன் என்பதும், பல பழ மதங்களின் பொதுக் கருத்தாம். ஆற்றல் உடல்வலியும் உளவலியும்.

## 766. மறமான மாண்ட வழிச்செலவு தேற்ற மெனநான்கே யேமம் படைக்கு.

**(இ-ரை.)** மறம் மானம் மாண்ட வழிச்செலவு தேற்றம் என நான்கே - தறுகண்மை, தன்மானம், பண்டை வயவர் (வீரர்) ஒழுகிய நல்வழியில் ஒழுகுதல், அரசனால் நம்பப்படுதல் ஆகிய நான்கே; படைக்கு ஏமம் - படைக்கு அரணான பண்புகளாம்.

தறுகண்மையாவது சாவிற்கும் கொடிய நோவிற்கும் சிறிதும் அஞ்சாமை. மறம் முதலிய நான்கினாலும், முறையே பகைவரைத் தப்பாது வெல்லுதலும், தமக்கும் தம் அரசனுக்குந் தாழ்வு வராமற் காத்தலும், தோற்றோடுவார்மீது படைக்கலந் தொடுதலும் பெண்டிர் கற்பழித்தலும் அரசனது ஏவலின்றிக் கொள்ளையடித்தலும் செ-யாமையும், அறை போகாமையும் பெறப்பட்டன. அரண்போற் பாதுகாப்புச் செ-யும் பண்பு களை அரணென்றார்.

## 767. *தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த*
## *போர்தாங்குந் தன்மை யறிந்து.*

**(இ-ரை.)** தலைவந்த போர் தாங்கும் தன்மை அறிந்து - பகைவரால் வகுக்கப்பட்டுத் தன்மேல் வந்த படையின் போரை விலக்கும் வகையறிந்து, அதற்கேற்பத் தன்னை வகுத்துக்கொண்டு; தார் தாங்கிச் செல்வது - பகைவர் தூசிப்படையைத் தன்மேல் வராமல் தடுத்துத் தான் அதன்மேற் சென்று தாக்குவதே; தானை - சிறந்த படையாவது.

படைவகுப்பு இடத்திற்கேற்பத் தண்டம், மண்டலம், சக்கரம், சகடம் (தேர்), தாமரை முதலிய பல்வேறு வடிவில் அமைக்கப் பெறுவதாகும். படையுறுப்புகள் நெற்றி, தார் (தூசி), கை, பேரணி, கூழை என ஐந்தாம்.

"தூசியுங் கூழையு நெற்றியுங் கையும்
அணியு மென்ப தப்படைக் குறுப்பே." **(403)**

"கூழை யென்பது பேரணி யாகும்." **(404)**

"தாரே முன்செல் கொடிப்படை யாகும்" **(405)**

என்பன பிங்கலம். நெற்றியென்பது தாரின் முற்பகுதியும், கை என்பது படை வகுப்பின் இருபக்கமும், கூழையென்பது பேரணியின் பிற்பகுதியும், போலும்!

"படை வகுப்பாவது வியூகம், அஃது எழுவகை யுறுப்பிற்றா-, வகையா னான்கா-, விரியான் முப்பதாம். உறுப்பேழாவன உரமுதற் கோடியீறாயின. வகை நான்காவன தண்டம், மண்டலம், அசங்கதம், போக மென விவை. விரிமுப்பதாவன தண்டவிரி பதினேழும், மண்டலவிரி இரண் டும், அசங்கதவிரி யாறும், போகவிரி ஐந்துமென விவை. இவற்றின் பெயர் களும் இலக்கணமும் ஈண்டுரைப்பிற் பெருகும். அவையெல்லாம் வடநூல் களுட் கண்டு கொள்க" என்று பரிமேலழகர், பண்டைத் தமிழ் மறநூல்கள்

இறந்துபட்ட பின், அவற்றின் விரிவுந் திரிபுமான வடநூன் முறையைத் தென்னாட்டிற் குரியதாகக் கூறியிருப்பது பெருந்தவறாம்.

### 768. *அடற்றகையு மாற்றலு மில்லெனினுந் தானை*
### *படைத்தகையாற் பாடு பெறும்.*

**(இ-ரை.)** தானை - படை; அடல்தகையும் ஆற்றலும் இல் எனினும் - பகைவர்மேற் சென்று கொல்லும் மறத்திறமும் அவர் தன்னை வந்து தாக்கினால் தாங்கும் வலிமையும் தனக்கில்லாவிடினும்; படைத்தகையால் பாடு பெறும் - தன் தோற்றப்பொலிவாலும் வடிவு வகுப்புச் சிறப்பாலும் பெருமை பெறும்.

'இல்லெனினும்' என்னும் இழிவுசிறப்பும்மை அவற்றின் இன்றியமையாமையைக் காட்டிற்று. தோற்றப் பொலிவாவது, சுவடிக்கப்பட்ட தேர்களும் படாம்போர்த்த யானைகளும் அணிபூட்டிய குதிரைகளும், குடை கொடி பதாகை முதலிய கண்கவர் எடுபிடிகளும், பல்லியமும் காளவகைகளும் செ-யும் ஓசை முழக்கமும், கூடிய ஆரவாரம். படைவகுப்பு, மேற்கூறப் பட்டது; 'பாடு' பார்த்தவுடன் பகைவர் அஞ்சும் பெருமை. தென்னாலி இராமனின் 'எட்சண் டெருமை கட்டும் கயிறு ' (திலகா ட மகிஷபந்தனம்) கண்டோடிய வடநாட்டுப் புலவன்போல், வெளியாரவாரத்தைக் கண்டு வெருளும் படையும் உலகத்திலிருப்பதால், படைத்தகையாலும் பகைவரை மருட்டலாம் என்றார். பதாகை - பெருங்கொடி.

### 769. *சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையு*
### *மில்லாயின் வெல்லும் படை.*

**(இ-ரை.)** சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையும் இல்லாயின் - வரவரச் சிறுத்தலும் மனத்தை விட்டு நீங்காத வெறுப்பும் ஏழைமையும் தனக்கில்லாவிடின்; படை வெல்லும் - படை பகைவரை வெல்லும்.

சிறுத்தல் படை மறவர் விலகுவதால் நேர்வது. இச் சிறுமையும் வறுமையும் அரசன் பொருள் கொடாமையால் வருவன. 'செல்லாத் துனி' பெண்டிரை அரசன் கைப்பற்றுவதாலும் பிற இழிசெயல்கள் செ-வதாலும் ஏற்படுவது. இம் மூன்றும் உள்ளவிடத்து அரசன்மீது அன்புகொண்டு ஊக்கமா-ப் பொராராதலால், 'இல்லாயின் வெல்லும்' என்றார்.

### 770. *நிலைமக்கள் சால வுடைத்தெனினுந் தானை*
### *தலைமக்க ளில்வழி யில்.*

**(இ-ரை.)** நிலைமக்கள் சால உடைத்து எனினும் - போரிற் பின்வாங் காது நிலைத்து நிற்கும் மறவரை மிகுதியாகக் கொண்டிருப்பினும்; தலை மக்கள் இல்வழித் தானை இல் - தனக்குத் தலைவராகிய வயவர்(வீரர்) இல்லா விடத்துப் படை நிற்காது.

படையைப் பயிற்றவும் போருக்கு நடத்திச் செல்லவும் போர்க்களத்தில் ஏவிப் போர் செ-விக்கவும், தலைவர் இன்றியமையாமையால், 'தலைமக்க ளில்வழி யில்' என்றார். இதனால், படைத்தலைவரின் தனிச்சிறப்புக் கூறப் பட்டது. தலைவனில்லாப் படை தலையில்லா வுடம்பு போன்ற தென்பது கருத்து.

## அதி. 78 - படைச்செருக்கு

*அதாவது, படையின் மறமிகுதி. அதிகார முறையையும் இதனால் விளங்கும்.*

**771. என்னைமுன் னில்லன்மின் றெவ்விர் பலரென்னை**
**முன்னின்று கன்னின் றவர்.**

**(இ-ரை.)** தெவ்விர் - பகைவீர்; என் ஐ முன் நின்று கல் நின்றவர் பலர் - இதற்கு முன்பு என் தலைவனது வலிமையறியாது அவனுக்கு எதிர்நின்று போரேற்று அவன் வேலாற் கொல்லப்பட்டுப் பின்பு நடுகல்லில் நின்ற மறவர் பலராவர்; என் ஐ முன் நில்லன்மின் - ஆதலால், நீவிரும் அவ்வாறு நடுகல்லில் நில்லாது உம் உடலோடு நிற்க விரும்பின், என் தலைவனெதிரே போரேற்று நிற்றலைத் தவிர்க.

இது ஒரு மறவன் தன் தலைவன்மேல் வைத்த அன்புப் பெருக்கால், தன் மறத்தையும் தான் சேர்ந்த படையின் மறத்தையும் அவன்மேலேற்றிக் கூறியவாறு. படையின் வெற்றி படைத்தலைவன் வெற்றியாகக் கூறப்படுவது மரபாதலால், இங்ஙனங் கூறினான் என்க. போரில் இறந்த மறவனுக்குக் கல்நட்டு, அதில் அவன் பெயரும் பெருமையும் பொறிப்பது பண்டை மரபு. அச் செ-தி பொருளிலக்கணத்தில் வெட்சி என்னும் புறத்திணையின் பிற்பகுதியாகிய கரந்தையைச் சேர்ந்த துறையாகும் (தொல், பொருள். புறத். 5).

அரசனும் தலைமைப் படைத்தலைவனாகப் போருக்குச் செல்வது பண்டை வழக்கமாதலால், இங்கு 'ஐ' என்றது அங்ஙனஞ் சென்ற அரசனை யுங் குறிக்கும்.

ஒரு மறவன் தன் திறத்தை மிகுத்துக் கூறுவது நெடுமொழி யெனப் படும். இதை வெட்சித்திணைக் கரந்தைப் பகுதித் துறையாகத் 'தலைத்தாள் நெடுமொழி தன்னொடு புணர்த்தல்' என்பர் தொல்காப்பியர் (தொல். பொருள். புறத், 5). ஐயனாரிதனார் இதை 'நெடுமொழி கூறல்' என்று கரந்தைப் படலத் துள்ளும், 'நெடுமொழி வஞ்சி' என்று வஞ்சிப் படலத்துள்ளும் அமைப்பார். இவற்றுள் முன்னது தன் அரசனை நோக்கியது; பின்னது தன் பகைவரை நோக்கியது. 'மாராயம் பெற்ற நெடுமொழி' என்னும் தொல்காப்பிய வஞ்சித் துறை சிறிது வேறுபட்டது.

இக் குறள், ஒரு மறவன் தன் தலைவனை உயர்த்துக் கூறும் கூற்றா யிருப்பதால், நெடுமொழியாகாது அதன் வகையே யாகும். 104ஆம் புறப் பாட்டுப்போல் அரச வாகையாயின் படைச் செருக்காகாது.

### 772. *கான முயலெ-த வம்பினில் யானை*
### *பிழைத்தவே லேந்த லினிது.*

**(இ-ரை.)** கான முயல் எ-த அம்பினில் - காட்டிலோடும் முயலின் மேல் தப்பாது எ-த அம்பை ஏந்துவதிலும்; யானை பிழைத்த வேல் ஏந்தல் இனிது - திறந்தவெளியில் நின்ற யானைமே லெறிந்து தப்பிய வேலைப் பிடித்திருத்தல் பெருமை தருவதாம்.

இது, பகைவருள் ஒரு காலாட்படை மறவனைக் கொல்வதினும், ஓர் அரசனை அல்லது படைத்தலைவனை வெல்ல முயலும் முயற்சி சிறந்த தென்று கருதும் மறவன் கூற்று. மரஞ்செடிகொடி யடர்ந்த 'கானம்' என்றத னால் திறந்தவெளி யென்பதும், 'பிழைத்த' என்றதனால் தப்பாது என்பதும், சிறு விலங்கிற்கேற்ப 'எ-த' என்றதனால் பெருவிலங்கிற்கேற்ப எறிதல் என்பதும், மறுதலைச் சொற்களாக வருவிக்கப்பட்டன.

### 773. *பேராண்மை யென்ப தறுகணொன் றுற்றக்கா*
### *லூராண்மை மற்றத னெஃகு.*

**(இ-ரை.)** தறுகண் பேராண்மை என்ப - அஞ்சாதும் இரக்கமின்றியும் பகைவரொடு பொரும் கடுமறத்தைச் சிறந்த ஆண்டன்மை என்று சொல்வர்; ஒன்று உற்றக்கால் ஊராண்மை அதன் எஃகு ( என்ப) - ஆயினும், அப் பகைவர்க்கு ஒரு தாழ்வு வந்தவிடத்து இரங்கி அதை நீங்குதற்பொருட்டு அவர்க்கு உதவி செ-தலை, அவ் வாண்டன்மைக்குக் கூர்மையென்று சொல்வர் மறநூலார்.

இராவணன் முதல்நாட் போரில் தன் படையும் படைக்கலமுந் தேரு மிழந்து தன்னந்தனியனா- நின்றபோது, இராமன் இரங்கி "இன்றுபோ- நாளைப் படையொடுவா" என்று கூறி விடுத்ததாகவுள்ள கம்பவிராமாயணச் செ-தி, ஊராண்மைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாம்.

"ஆளை யாவுனக் கமைந்தன மாருத மறைந்த
பூளை யாயின கண்டனை, யின்றுபோ-ப் போர்க்கு
நாளை வாவென நல்கி நாகிளங் கமுகின்
வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்." (கம்பரா. யுத்த. 1218)

இங்ஙனங் போர்க்களத்தில் தனித்து நின்ற பகைவர்க் குதவுதலும், புறங்கொடுத்தார் மீதும் அடைக்கலம் வேண்டினார் மீதும் படைக்கலம் தொடாமையுமான ஊராண்மையைத் 'தழிஞ்சி' என்னும் வஞ்சித் துறையாகப் புறப்பொருள் வெண்பாமாலை (3:20) கூறும். இரு கூற்றும் ஒரே சாராருடை யதாகையால், 'என்ப' என்பது பின்னும் இயைந்தது. எஃகு ஆகுபெயர்.

## 774. கைவேல் களிற்றொடு போக்கி வருபவன் மெ—வேல் பறியா நகும்.

**(இ-ரை.)** கைவேல் களிற்றொடு போக்கி வருபவன் - தன் கையிலிருந்த வேலைத் தன்மேல் வந்த போர்யானையைக் கொல்லுமாறு எறிந்துவிட்டு, அடுத்து வந்த வேறொரு போர்யானையைக் கொல்ல வேல் தேடித் திரும்பி வருகின்ற யானைகொல்லி மறவன்; மெ-வேல் பறியா நகும் - தன் மார்பில் தைத்திருந்த வேலைக் கண்டு பறித்து மகிழ்ச்சியடைவான்.

'களிற்றொடு போக்கி' என்றதனால் யானைகளைக் கொல்வதையே குறிக்கோளாகக் கொண்ட மறவன் என்பது பெறப்படும். களிற்றொடு போக்குதலாவது களிற்றின் உயிரைப் போக்குமாறு வேலைப் போக்குதல். 'மெ-வேல் பறியா நகும்' என்றதனால், தன் மார்பில் பகைவர் வேல் தைத் ததையும் மறமிகுதியால் உணரவில்லையென்பதும், மேன்மேலும் போர் விருப்பினன் என்பதும் அறியப்படும். இங்ஙனம் மெ-வேல் பறித்தெறிதலை 'நூழிலாட்டு' என்னும் தும்பைத் துறையென்பர் ஐயனாரிதனார் (பு.வெ. 7:16).

## 775. விழித்தகண் வேல்கொண் டெறிய வழித்திமைப்பி னோட்டன்றோ வன்க ணவர்க்கு.

**(இ-ரை.)** விழித்த கண் - பகைவரைச் சினந்து நோக்கி விரிவாகத் திறந்த கண்; வேல்கொண்டு எறிய அழித்து இமைப்பின் - அவர் ஒளிவீசும் வேலைப் பளிச்சென் றெறிய, அதற்குக் கூசி முன்னை நிலைக்கு மாறாக இமை கொட்டின்; வன்கணவர்க்கு ஓட்டு அன்றோ - அதுவும் உண்மை மறவர்க்குப் புறங்கொடுத்த லாகுமன்றோ!

'அழித்து' என்பது 'அழித்தழுதாள்' (குறள். (1317) என்பதிற்போல நின் றது. 'ஓட்டு' தோற்றோடல். இங்கு ஓட்டென்றது ஓட்டாகக் கருதப்படுதலை. சிறந்த மறவர் தம் கண்ணுரத்தினால் முறுத்த நோக்கும் மறுத்து நோக்கார் என்பதாம்.

### 776. விழுப்புண் படாதநா ளெல்லாம் வழுக்கினுள் வைக்குந்தன் னாளை யெடுத்து.

**(இ-ரை.)** தன் நாளை எடுத்து - கடந்துபோன தன் வாழ்நாள்களை யெல்லாம் எடுத்தெண்ணி; விழுப்புண் படாத நாள் எல்லாம் வழுக்கினுள் வைக்கும் - அவற்றுள், போரிற் சிறந்த புண்படாத நாள்களையெல்லாம் வீணாகக் கழிந்த நாள்களோடு சேர்ப்பான் தூய பொருநன்.

விழுப்புண் மார்பிலும் முகத்திலும் பட்ட பெரும் புண். முதுகிற்பட்டது பழிப்புண். பொருநாளாயினும் விழுப்புண் பெறாநாள் வெறுநாளாகக் கருதுவான் என்பதாம். பொருநன் போர்மறவன். விழுப்புண் பெறாநாள் வீணாளாகவே, பெற்றநாள் மாணாள் என்பதாம்.

### 777. சுழலு மிசைவேண்டி வேண்டா வுயிரார் கழல்யாப்புக் காரிகை நீர்த்து.

**(இ-ரை.)** சுழலும் இசை வேண்டி - விண்ணகத்திற்குத் தம்முடன் வராது மண்ணகத்தையே சூழ்ந்து நிற்கும் புகழை விரும்பி; வேண்டா உயிரார் - இங்கு, உடலோடு கூடி உயிர்வாழ விரும்பாத மறவர்; கழல் யாப்புக் காரிகை நீர்த்து - தம் காலில் மறக்கழலைக் கட்டிக்கொள்ளுதல் ஒரு தனியழகு பெறுந் தன்மையதாம்.

'சுழலும்' எனவே, அதற்குரிய செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. சூழ்தல் பார் முழுதும் பரவுதல். உருண்டையானதென்று பொருள்படும் உலகம் என்னும் பெயருக்கேற்பச் 'சுழலும்' என்றார். பிற அணிகள் பெண் டிர்க்குப்போல் ஆடவர்க்கு அழகு செ-யாமையின், ஆடவர்க்குச் சிறப்பாக

வுரிய மறக்கழலணியைக் 'காரிகை நீர்த்து' என்றார். 'உயிர்' ஆகுபெயர். உயிர்வேண்டார் என்பதை 'வேண்டா வுயிரார்' என்றது செ-யுள் நடை. மறக்கழலை வெண்டையம் என்பது உலக வழக்கு.

## 778. *உறினுயி ரஞ்சா மறவ ரிறைவன்*
## *செறினுஞ்சீர் குன்ற லிலர்.*

**(இ-ரை.)** உறின் உயிர் அஞ்சா மறவர் - போர்வரின் இறப்பிற்கஞ்சாது மகிழ்ந்து போர்க்களத்திற்குச் செல்லும் மறவர்; இறைவன் செறினும் சீர் குன்றல் இலர் - தம் அரசன் அதுவேண்டாவென்று தடுப்பினும் தம் மறந் தளர்தல் இல்லை.

நாள்தொறும் வருந்தியுழைக்கும் உழைப்பாளிகள் வேலை செ-யாது சோம்பியிருத்தலை வெறுத்தல் போல, போருக்கேற்ற மறமும் உடல்திறமும் பயிற்சியும் பெற்ற மறவர் போரின்றியிருத்தலை வெறுத்தல் இயல்பே. இதை,

"போரெனிற் புகலும் புனைகழன் மறவர்
காடிடைக் கிடந்த நாடுநனி சேய
செல்வே மல்லே மென்னார்" **(புறம். 31)**

"உட்பகை யொருதிறம் பட்டெனப் புட்பகைக்
கேவா னாகலிற் சாவேம் யாமென
நீங்கா மறவர் வீங்குதோள் புடைப்ப" **(புறம். 68)**

"மண்டமர் நசையொடு கண்படை பெறாஅது" **(முல்லைப். 67)**

என்பவற்றால் அறிக.

## 779. *இழைத்த திகவாமைச் சாவாரை யாரே*
## *பிழைத்த தொறுக்கிற் பவர்.*

**(இ-ரை.)** இழைத்தது இகவாமைச் சாவாரை - தாம் கூறின வஞ்சினம் தப்பாதவாறு, தம் குறிக்கோள் நிறைவேறாதவழிச் சாகவல்ல மறவரை; பிழைத்தது ஒறுக்கிற்பவர் யாரே - அவர் தோல்வியைச் சொல்லி இகழ்தற் குரியார் இவ் வுலகத்தில் யார்தான்!

'இழைத்தல்' வஞ்சினங் கூறுதல். அது இன்னது செ-யேனாயின் இன்னேனாகுக எனச் சூளுறுதல். இன்னேனாகுக என்பது என் பகைவருக்கு அடிமை யாவேனாக என்பதும், என் மீசையைக் களைந்து பெண்மைத்

தோற்றத்தை மேற்கொள்வேனாக என்பதும், என் உடைமை முழுவதையும் ஒருங்கே இழப்பேனாக என்பதும், துறவு பூண்டு காட்டில் வதிவேனாக என்பதும், என் உயிரை விட்டுவிடுவேனாக என்பதுமாகப் பலத்திறப்படுவ தாம். அவற்றுள் இறுதியதே இக் குறளிற் குறிக்கப்பட்டதென அறிக. ஒரு மறவன் தன் குறிக்கோளை நிறைவேற்றாது தோல்வியுறினும், தன் வஞ் சினத்தை நிறைவேற்றிவிடின் அது அவன் தோல்வியை வெற்றியாக மாற்றி விடுமாதலால், அவனை எவருங் குறைகூறுதற்கு இடமில்லை யென்பதாம். சொல்லி யென்பது அவா-நிலையால் வந்தது.

**780. *புரந்தார்கண் ணீர்மல்கச் சாகிற்பிற் சாக்கா***
***டிரந்துகோட் டக்க துடைத்து.***

**(இ-ரை.)** புரந்தார் கண் நீர் மல்கச் சாகிற்பின் - படைமறவர் நீண்ட காலமாகத் தமக்கும் தம் குடும்பத்திற்கும் வாழ்வளித்துக் காத்த அரசரின் கண் களில் நீர் பெருகுமாறு, போர்க்களத்திற் சாகப்பெறின்; சாக்காடு இரந்துகோள் தக்கது உடைத்து - அச் சாவு இரந்தாயினும் பெற்றுக்கொள்ளும் தகுதியுடையதாம்.

பொதுவகையான சாவாயின், உறவினரே அழுவர்; விண்ணகப் பேறுங் கிட்டாது. செஞ்சோற்றுக் கடன் கழிக்கும் போர்மறவர் சாவாயின், அரசன் கண்ணீர் வடிப்பதும், நாட்டிற்காக உயிர் துறந்தாரென்று நாட்டார் புகழ்வதும், விண்ணுலகத்தில் தேவரா-த் தோன்றி யின்புறுவதும், நடுகல் தோன்றி நினைவுச் சின்னமாக விளங்குவதும், அரத்தக் காணிக்கை என்னும் இறையிலிக் கொடை யேற்படுவதும், சிறந்த பெருமையும் பயனுமாதலின், இரந்தாயினுங் கொள்ளத்தக்க தென்றார். 'நீர்மல்க' என்பதில், இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்தின்மேல் நின்றது. இனி, 'நீர்மல்கு' என்னும் கூட்டுச்சொல் ஒருசொற்றன்மைப்பட்ட தெனினுமாம். 'சாகிற்பின்' என்பது அதன் அருமை நோக்கி நின்றது. இரத்தலின் இழிவான தொன்றுமில்லை யெனினும், அதுவும் இச் சாவின் பெருமை நோக்கித் தக்கதென்பதாம். இந் நான்கு குறளாலும் படைமறவர் உயிரோம்பாமை கூறப்பட்டது.

***உறுப்பியலில் படைப்பகுதி முற்றிற்று.***

## அதி. 79 - நட்பு

*அதாவது, படைபோல அரசனுக்கு வினையிடத்துதவும் நட்பரசர் துணையும் குடிகட்குத் துன்பக்காலத்தில் உதவும் நண்பர் உறவும்.*

*ஆசிரியர் இதை நட்பும் பகையும் என்றும், அவைபோன்ற குணங் களும் செயல்களும் நிலைமைகளும் என்றும் இரண்டாக வகுத்துக்கொண்டு, வெளிப்படையாகவுள்ள முன்னதை ஐயதிகாரங்களாலும் குறிப்பாகவுள்ள பின்னதைப் பன்னீரதிகாரங்களாலுங் கூறுகின்றார்.*

*வெளிப்படையான முற்பகுதியில் முதலதிகாரமான நட்பு என்பது இவ் வதிகாரம்.*

***781.** **செயற்கரிய யாவுள நட்பி னதுபோல்***
***வினைக்கரிய யாவுள காப்பு.***

**(இ-ரை.)** நட்பின் செயற்கு அரிய யா உள - நட்பைப்போல அமைத் துக்கொள்வதற்கு அரிய உறவுகள் வேறு எவை உள்ளன? அதுபோல் வினைக்கு அரிய காப்பு யா உள - அதை அமைத்துக் கொண்டால், எடுத் துக்கொண்ட வினைமுயற்சிக்குப் பகைவரால் கேடுவராமற் காத்தற்கு அதைப்போல் அருமையான காவல்கள் வேறு எவை உள்ளன?

நாகரிக நிலையிலேனும் அநாகரிக நிலையிலேனும் ஒருவன் பிற ருறவின்றி வாழ்தல் அரிது. அவ் வுறவு இயற்கை, செயற்கை என இருதிறப் படும். இயற்கையுறவு அரத்தக் கலப்பாலான இனவுறவு; செயற்கையுறவு மணவுறவு, தொழிலுறவு, தத்துறவு, உதவிப்பேற்றுறவு, பழக்கவுறவு, நட்புறவு எனப் பலவகைப்படும். அவற்றுள், நட்புறவென்பது உண்மையானதாகவும் வலிமையுள்ளதாகவும் வா-த்துவிடின், இனவுறவினுஞ் சிறந்ததாகும். அத்தகைய வுறவைத் தேடிக் கண்டுபிடிப்பதும் பெறுவதும் பேணிக் கொள்வதும் அரிதாதலால், 'செயற்கரிய யாவுள நட்பின்' என்றார். உண்மை யான நண்பர் துன்பக்காலத்தில் உயிரையும் உதவிக் காப்பராதலின், அது போல் 'வினைக்கரிய யாவுள காப்பு' என்றார்.

"A father is a treasure, a brother comfort, but a friend is both" என்னும் ஆங்கிலப் பழமொழி இங்குக் கவனிக்கத் தக்கது. இருவகை யுறவும் தனிப்பட்ட மாந்தர்க்குப் போன்றே, அரசுகட்கும் இன்றியமையாதனவாம். இயற்கையுறவு 'சுற்றந்தழால்' (53) என்னும் அதிகாரத்திற் கூறப்பட்டது. செயற்கையுறவாகிய நட்பு இவ் வதிகாரத்திற் கூறப்படுகின்றது.

காலத்திற்கேற்பக் கட்சிமாறும் துணைவலி தொழில்பற்றிய கூட்டுறவே யன்றி நட்பன்மையானும், அத் துணைவலியும் 'வலியறிதல்' (48) என்னும் அதிகாரத்தின் முதற்குறளில் பெயரளவிலேயே குறிக்கப்பட்டிருத்தலானும்,

உண்மை நட்பு உதவி பெறாதும் தோன்றுமாதலானும், "அவற்றுள், இயற்கை பிறப்புமுறையா னாயதூஉம் தேயமுறையா னாயதூஉமென இருவகைப் படும். அவற்றுள் முன்னையது சுற்றமாகலின் அது சுற்றந்தழாலி னடங்கிற்று; ஏனையது பகையிடையிட்ட தேயத்ததாகலின், அது துணைவலியென வலியறிதலு ளடங்கிற்று. இனி, ஈண்டுச் சொல்லப்படுவது முன்செ-த வுதவிபற்றி வருஞ் செயற்கையாகலின், அதன் சிறப்பு இதனாற் கூறப்பட்டது" என்று பரிமேலழகர் உரைத்திருப்பது பொருந்தாமை காண்க. 'அரிய' இரண்டனுள், முன்னது எளிதா- இயலாமையையும், பின்னது பெருஞ் சிறப்பையும், உணர்த்தின.

## 782. *நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்*
## *பின்னீர பேதையார் நட்பு.*

**(இ-ரை.)** நீரவர் கேண்மை பிறை நிறை நீர - அறிவுடைய மேலோர் நட்புகள் வளர்பிறைத் தன்மையுடையனவா- மேன்மேலும் வளர்ந்து வரு வனவாம்; பேதையார் நட்பு மதிப் பின் நீர - அறிவில்லாக் கீழோர் நட்புகள் தே-பிறைத் தன்மையுடையனவா- வரவரத் தே-ந்து வருவனவாம்.

நீர்மையுடையார் நீரவர். நீர்மை சிறந்த தன்மை, "நீர்மை யுடையார் சொலின்" (குறள். 195) என்பதிற்போல. நட்பைக் 'கேண்மை' யென்றதினால், அது இனவுறவுபோற் சிறந்ததென்பது பெறப்படும். மேலோர் நட்பு வரவர வளர்தற்கும் கீழோர் நட்பு வரவரத் தளர்தற்கும், அவரிடத்திற் பண்பாடு உண்மையும் இன்மையுமே கரணியம். 'நட்பு' ஈரிடத்தும் பால்பகா வஃறிணைப் பெயர். நட்டார் பன்மையால் நட்பும் பலவாயின.

## 783. *நவிறொறு நூனயம் போலும் பயிறொறும்*
## *பண்புடை யாளர் தொடர்பு.*

**(இ-ரை.)** பண்பு உடையாளர் தொடர்பு - பண்பட்ட மேலோர் தம்முட் செ-யும் நட்பு; பயில்தொறும் - பழகப்பழக; நூல் நவில்தொறும் நயம் போலும் - சிறந்த நூல் கற்கக் கற்கக் கற்றார்க்கு இன்பந்தருவதுபோல் இன்பஞ் செ-வதாம்.

நயத்தல் விரும்புதல் அல்லது மகிழ்தல். நயக்கப்படுவது நயமெனப் பட்டது. மேன்மேல் வளரும் நட்பின் தன்மை இங்குக் கூறப்பட்டது.

## 784. *நகுதற் பொருட்டன்று நட்டன் மிகுதிக்கண்*
## *மேற்சென் றிடித்தற் பொருட்டு.*

**(இ-ரை.)** நட்டல் நகுதல் பொருட்டு அன்று - ஒருவரோ டொருவர் நட்புச்செ-வது தாம் கூடிப்பேசிச் சிரித்து மகிழ்வதற்கன்று; மிகுதிக்கண் மேற்சென்று இடித்தற்பொருட்டு - இருவருள் ஒருவர் தம் அறிவுக் குறைவால் ஏதேனும் வரம்பிறந்த செயல் செ-வராயின், அவரை அறிவுநிறைந்த இன்னொருவர் முற்பட்டுக் கடிந்து திருத்தற்பொருட்டே.

ஒழுக்க வரம்பிற்கு மிஞ்சியதை 'மிகுதி' யென்றும், அதனாற் கெடுமுன் அல்லது தண்டனையடையுமுன் திருந்தவேண்டுதலின் 'மேற்சென்று' என்றும், இன்சொற்கு வயப்படாமையின் 'இடித்தற்பொருட்டு' என்றும் கூறினார். இதனால் நட்பின் நோக்கங் கூறப்பட்டது.

**785.** ***புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதா***
***னட்பாங் கிழமை தரும்.***

**(இ-ரை.)** புணர்ச்சி பழகுதல் வேண்டா - ஒருவரோடொருவர் நட்புச் செ-தற்கு ஓரிடத்திற் கூடுதலும் பலகாற் கண்டும் பேசியும் உறவாடுதலும் வேண்டுவதில்லை; உணர்ச்சிதான் நட்பு ஆம் கிழமை தரும் - இருவர்க்கும் ஒத்த வுணர்ச்சியே நண்பராதற்குரிய உரிமையைத் தரும்.

புணர்ச்சி யென்பது "ஒருதேயத்தா ராதல்" மட்டுமன்று. "இன்றே போல்கநும் புணர்ச்சி" (புறம். 58: 28) என்பதற்கு, "இன்றுபோல்க நுமது கூட்டம்" என்றே இன்றுள்ள பழையவுரை பொருள் கூறுதல் காண்க. ஓரடை யுமின்றி உணர்ச்சி என்று மட்டுங் கூறினமையால், நெட்டிடைப்பட்டு ஒரு வரை யொருவர் காணாதிருந்தும், ஒருவரா லொருவர்க்கு ஒரு பயனுமில் லாதிருந்தும், கோப்பெருஞ் சோழனும் பிசிராந்தையாரும் போல உள்ளம் ஒன்றுகலந்த வடிவில் உடனுயிர் துறக்கும் உயரிய உண்மை நண்பராதல் கூடுமென்பது அறியப்படும். நட்பிற்கு ஏதுவான புணர்ச்சி, பழகுதல், உணர்ச்சி யொத்தல் ஆகிய மூன்றனுள், இறுதியதே தலைசிறந்த தென்பதாம்.

"கேட்டன் மாத்திரை யல்ல தியாவதுங்
காண்ட லில்லா தியாண்டுபல கழிய
வழுவின்று பழகிய கிழமைய ராகினும்
அரிதே தோன்ற லதற்பட வொழுகலென்
றையங் கொள்ளன்மின் ஆரறி வாளீர்
இகழ்வில னினிய னியாத்த நண்பினன்
புகழ்கெட வரூஉம் பொ-வேண் டலனே
தன்பெயர் கிளக்குங் காலை யென்பெயர்

பேதைச் சோழ னென்னுஞ் சிறந்த
காதற் கிழமையு முடைய னதன்றலை
யின்னதோர் காலை நில்லலன்
இன்னே வருகுவ னொழிக்கவற் கிடமே" (புறம். 216)

என்ற கோப்பெருஞ்சோழன் பாட்டும்,

"நினைக்குங் காலை மருட்கை யுடைத்தே
யெனைப்பெருஞ் சிறப்பினோ டீங்கிது துணிதல்
அதினினு மருட்கை யுடைத்தே பிறனாட்டுத்
தோற்றஞ் சான்ற சான்றோன் போற்றி
யிசைமர பாக நட்புக் கந்தாக
இனையதோர் காலை யீங்கு வருதல்
வருவ னென்ற கோனது பெருமையும்
அதுபழு தின்றி வந்தவ னறிவும்
வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந் தன்றே" (புறம். 217)

என்ற பொத்தியார் பாட்டும் மாந்தன் வரலாற்றில் ஈடிணையற்றதும், தமிழ்ப் பண்பாட்டின் தலைமையைக் காட்டுவதுமான, ஓர் அரும்பெரு நிகழ்ச்சி பற்றியனவாம்.

## 786. *முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்*
## *தகநக நட்பது நட்பு.*

**(இ-ரை.)** முகம் நக நட்பது நட்பு அன்று - கண்டவிடத்து அகமன்றி முகம் மலர நட்பது நட்பாகாது; நெஞ்சத்து அகம் நக நட்பது நட்பு - அன்பால் உள்ளமும் மலருமாறு நட்பதே உண்மையான நட்பாவது.

இறந்தது தழுவிய எச்சவும்மை தொக்கது. அகமும் முகமும் ஒருங்கே மலர்வதே நட்பென்றவாறு.

## 787. *அழிவி னவைநீக்கி யாறு—த் தழிவின்க*
## *ணல்ல லுழப்பதா நட்பு.*

**(இ-ரை.)** அழிவினவை நீக்கி - நண்பன் கேடுதரும் தீயவழிகளில் ஒழுகுங்கால் அவற்றினின்று விலக்கி; ஆறு உ-த்து - நல்வழிகளில் ஒழு காக்கால் அவற்றிற் செலுத்தி; அழிவின்கண் அல்லது உழப்பது - தெ-

வத்தாற் கேடு வந்தவிடத்து அதை நீக்க முடியாமையின், அத் துன்பத்தைத் தானும் உடன் நுகர்ந்து வருந்துவதே; நட்பு - ஒருவனுக்கு நட்பாவது.

ஆறு என்னும் பொதுப்பெயர் நெறி, வழி என்பனபோல நல்லாற்றைக் குறித்தது. 'ஆறு-த்து' என்றதனால், 'அழிவினவை நீக்கி' என்பதில் 'அழி வினவை' தீயநெறிகளைக் குறித்தமை அறியப்படும்.

"இனி, நவையென்று பாடமோதி, அதற்குப் போரழிவினுஞ் செல்வ வழிவினும் வந்த துன்பங்களென்றும், 'அழிவின்க' ணென்பதற்கு யாக்கை யழிவின்கணென்றும் உரைப்பாருமுளர்' என்று பரிமேலழகர் கூறியுள்ளது நன்மறுப்பாகும்.

### 788. உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
### யிடுக்கண் களைவதா நட்பு.

**(இ-ரை.)** உடுக்கை இழந்தவன் கைபோல - அவையிடை ஆடை யவிழ்ந்தவனுக்கு அப்பொழுதே கை சென்று திருத்தி அம் மானக்கேட்டை நீக்குவதுபோல; ஆங்கே இடுக்கண் களைவது நட்பு ஆம் - நண்பனுக்குத் துன்பம் வந்தவிடத்து அப்பொழுதே சென்றுதவி அதை நீக்குவதே ஒரு வனுக்கு உண்மையான நட்பாகும்.

'ஆங்கே' என்பது உடுக்கை திருத்தற்கும் இடுக்கண் களைதற்கும் பொதுவாக இடையில் நின்றது. விரைந்து நீக்குவதென்பது இவ் வுவமையின் பொதுத்தன்மை. மானங் காத்தற்கண் ஒருவன் கை தன் மனத்தினும் முற்படுமென்னும் பரிமேலழகர் கூற்று, உளநூற்கு ஒத்ததன்று. 'உடுக்கை' தொழிலாகுபெயர்.

### 789. நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனிற் கொட்பின்றி
### யொல்லும்வா யூன்று நிலை.

**(இ-ரை.)** நட்பிற்கு வீற்று இருக்கை யாது எனின் - நட்பிற்குச் சிறந்த நிலை எதுவென்றால்; கொட்பு இன்றி ஒல்லும்வா- ஊன்றும் நிலை - ஒருபோதும் வேறுபடாது இயன்ற வழியெல்லாம் தன் நண்பனுக்குதவி அவன் எவ்வகையிலுந் தளராதவாறு தாங்கும் உறுதியாம்.

அரியணையில் அரசிருக்கையாகிய வீற்றிருக்கை மக்கட்குள் சிறந்த நிலையைக் காட்டுதலால், நட்பின் சிறந்த நிலை இங்கு வீற்றிருக்கை யெனப்

பட்டது. 'நிலை' என்பது "நீக்கமும் நிலையும்" (திருவாச. 3 : 9) என்பதிற்போல உறுதியென்னும் பொருள்கொண்டது.

**790. இனைய ரிவரெமக் கின்னம்யா மென்று**
**புனையினும் புல்லென்னு நட்பு.**

**(இ-ரை.)** இவர் எமக்கு இனையர் - இவர் எமக்கு இத்துணை யன்பினர்; யாம் இன்னம் - யாம் இவர்க்கு இத்தன்மையேம்; என்று புனையினும் - என்று சொல்லி ஒருவரையொருவர் பாராட்டினும்; நட்புப் புல்லென்னும் - நட்புத் தன் பொலிவிழக்கும்.

இருவர் வேற்றுமையின்றிக் கலந்து நட்டபின், ஒருவரை யொருவர் பாராட்டும்போது யாம் இவர் என்று வேறுபடச் சுட்டிக் கூறினும், அது வேற்றுமை காட்டுதலால், நட்புத் தன் அழகிழக்கும் என்றார். இவ் வுயர்ந்த நிலை கோப்பெருஞ்சோழ பிசிராந்தையார் நட்பிற்கே ஏற்குமென்பது,

"தன்பெயர் கிளக்குங் காலை யென்பெயர்
பேதைச் சோழ னென்னும்"

"பிசிரோ னென்பவென் னுயிரோம் புநனே"

என்னும் கோப்பெருஞ்சோழன் கூற்றுகளால் அறியப்படும்.

இனி, "நேசனைக் காணாவிடத்தில் நெஞ்சார வேதுதித்தல்" என்று ஔவையார் கூறியதற்கேற்ப, இரு நண்பர் உடனிருந்து ஒருவரையொருவர் பிறரிடம் புகழ்ந்து கூறினும், அவர் நட்பின் சிறப்புக் குன்றும் எனினுமாம். உயரிய நட்பிற்கு ஒருவரை யொருவர் உடனிருந்து புனைந்துரைத்தல் ஒவ்வாதென்பது கருத்து. இவர்க்கு என்பது வருவிக்கப்பட்டது.

## அதி. 80 - நட்பாராதல்

*அதாவது, நட்பிற்குத் தகுந்தவரை ஆரா-ந்தறிதல். மணவுறவு போன்று நட்புறவும் வாழ்நாள் முழுதும் நீடிப்பதாகையாலும், மெ-ந்நட்பால் ஆக்கமும் தீநட்பால் அழிவும் நேர்வதாலும், மலர்ந்த முகத்தையும் இனிய சொல்லையுமே சான்றாகக் கொண்டு எவரையும் நம்பிவிடாமல், எல்லா வகையாலும் ஆரா-ந்து பார்த்து உண்மையான அன்பரையே நண்பராகக் கொள்ளவேண்டுமென்று கூறியவாறாம். அதிகார முறைமையும் இதனால் விளங்கும்.*

**791. நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு.**

**(இ-ரை.)** நட்பு ஆள்பவர்க்கு நட்டபின் வீடு இல்லை - நட்பை நிலை யாகக் கைக்கொள்ள விரும்பியவர்க்கும் வேண்டியவர்க்கும், ஒருவரோடு நட்புச்செ-தபின் அவரைவிட்டு விலகுதல் இயலாது; நாடாது நட்டலின் கேடு இல்லை - ஆதலால், ஆராயாது நட்புச்செ-தல் போலக் கேடுதருவது வேறொன்றும் இல்லை.

சிலர் ஒருவரோடு நட்புக்கொண்டபின், அவரை விட்டுவிலக விரும் பாமல் அல்லது துணிவில்லாமல் இருக்கலாம். சிலர் தொழிற் கூட்டுப்பற்றி ஒருவரோடு நட்புக்கொண்டு, ஒருகாலும் விலக முடியாவாறு வாழ்நாள் ஒப்பந்தஞ் செ-திருக்கலாம்; அல்லது கயவரோடு தொடர்புகொண்டு அவர் பிடிக்குள் அகப்பட்டு விலக முடியாதவராயிருக்கலாம். இவ் விருசாராரையும் நோக்கியே 'நட்ட பின் வீடில்லை' என்றார். இம்மைக்குரிய பொருளின்ப விழப்பு மட்டுமன்றி, மறுமைக்குரிய அறவிழப்பும் நேருமாதலால், 'நட்டலிற் கேடில்லை' என்றார். 'நாடுதல்' குணங்களையுஞ் செயல்களையும் நேரடியாகவும் பிறர் வாயிலாகவும் ஆரா-தல். 'கேடு' ஆகுபொருளி.

**792. ஆ-ந்தா-ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாந் துயரந் தரும்.**

**(இ-ரை.)** ஆ-ந்து ஆ-ந்து கொள்ளாதான் கேண்மை - ஒருவனுடைய குணங்களையும் செயல்களையும் நல்லனவாவென்று பலமுறையும் பல வகையாலும் ஆரா-ந்து பாராது அவரொடு செ-துகொள்ளும் நட்பு; கடைமுறை - இறுதியில்; தான் சாம் துயரம் தரும் - நான் சாதற்கேதுவான துன்பத்தை யுண்டாக்கும்.

தீயவனோடு நட்புக்கொள்ளின், அவன் பட்ட கடனெல்லாம் தன் தலைமேற் சுமத்தலானும், அவன் செ-த குற்றங்கட்குரிய தண்டனைகளைத் தானும் அடைதலானும், அவன் பகையெல்லாந் தன்னையுந் தாக்குதலானும், இறுதியிற் சாதல் அல்லது சாதற்கேற்ற நோதல்தான் விளையும் என்பதாம். 'ஆ-ந்தா-ந்து' என்னும் அடுக்குப் பன்மை அல்லது தொடர்ச்சிபற்றியது.

**793. குணனுங் குடிமையுங் குற்றமுங் குன்றா
வினனு மறிந்தியாக்க நட்பு.**

**(இ-ரை.)** குணனும் குடிமையும் குற்றமுங் குன்றா இனனும் அறிந்து - ஒருவனுடைய குணத்தையும் குடிப்பிறப்பையும் குற்றத்தையும் குறைவற்ற சுற்றத்தையும் ஆரா-ந்தறிந்து; நட்பு யாக்க - நல்லதென்று காணின் அவ னொடு நட்புச் செ-க.

குணம் என்றது நற்குணத்தை. குடியென்றது சேக்கிழார் குடிபோலும் குடும்பப் பிறப்பை. குற்றம் என்றது தீக்குணத்தை.

> ''குணநாடிக் குற்றமும் நாடி யவற்றுள்
> மிகைநாடி மிக்க கொளல்'' (குறள். 504)

என்றமையால், குற்றம் பொறுக்கத்தக்க சிற்றளவாயின் பொருட்படுத்தக் கூடாதென்பது கருத்து.

சுற்றத் தொடர்புகொண்டவன் நட்புத் தொடர்பிற்கும் ஏற்றவனா யிருப்பனாதலின், இனமுடைமையும் வேண்டப்பட்டது. ''ஒருமரமுந் தோப்பன்று, ஒருமகவும் மகவன்று'' என்னும் நெறிமுறைபற்றிக் 'குன்றா வினனும்' என்றார். இதனால் ஆராயும்வகை கூறப்பட்டது.

**794. குடிப்பிறந்து தன்கட் பழிநாணு வானைக்**
**கொடுத்துங் கொளல்வேண்டு நட்பு.**

**(இ-ரை.)** குடிப்பிறந்து தன்கண் பழிநாணுவானை - உயர்குடியிற் பிறந்து தன்னைப்பற்றி உலகங்கூறும் பழிக்கு அஞ்சுபவனை; கொடுத்தும் நட்புக் கொளல் வேண்டும் - அவன் விரும்பிய பொருளைக் கொடுத்தா யினும் நண்பனாகக் கொள்ளுதல் வேண்டும்.

பல தலைமுறையாகப் பண்பட்டுவந்த குடியிற் பிறந்தவன், அக் குடிப் பண்பாட்டைக் காப்பவனாகவும் தன் குற்றத்தால் அக் குடிக்கு நேரும் பழிக்கு அஞ்சுபவனாகவும் இருப்பனாதலால், 'கொடுத்துங் கொளல் வேண்டும் நட்பு' என்றார். நட்புத் தகுதிக்குக் குடிப்பிறப்புச் சிறந்ததென்பது இதனாற் கூறப்பட்டது.

**795. அழச்சொல்லி யல்ல திடித்து வழக்கறிய**
**வல்லார்நட் பா-ந்து கொளல்.**

**(இ-ரை.)** அல்லது இடித்து அழச்சொல்லி - நன்மையல்லாதது செ-த விடத்துக் கண்டித்து மனம் வருந்துமாறு அறிவுரை கூறி; வழக்கு அறிய

வல்லார் - உலக நடையறிந்து அதன்படி நடப்பிக்கும் திறமையுடையவரை; ஆ-ந்து - ஆரா-ந்து கண்டு; நட்புக்கொளல் - அவரொடு நட்புக் கொள்க.

'அல்லது' நல்லதல்லாத தீவினை. இச் சொல் இப் பொருட்டாதலை "அல்லது கெடுப்பவ னருள்கொண்ட முகம்போல" (கலித். 148) என்பதனால் அறிக. நீண்டகாலமாக வழங்கிவருவது வழக்கு. அது இங்கு உயர்ந்தோர் ஒழுக்க வழக்கைக் குறித்தது. உலகநடையறிதல் அரிதாகலின் 'அறிய வல்லார்' என்றார். "அழஅழச் சொல்லுவார் தமர், சிரிக்கச் சிரிக்கச் சொல்லுவார் பிறர்" என்னும் பழமொழி இங்குக் கவனிக்கத்தக்கது.

## 796. கேட்டினு முண்டோ ருறுதி கிளைஞரை
## நீட்டி யளப்பதோர் கோல்.

**(இ-ரை.)** கேட்டினும் ஓர் உறுதி உண்டு - தீமையாக எல்லாராலுங் கருதப் படும் கேட்டிலும் ஒரு நன்மை யுண்டாம்; கிளைஞரை நீட்டி அளப்பது ஓர் கோல் - அது என்னவெனின், அக் கேடே தன் நண்பரெல்லாரின் அன்பையும் நன்றாக அளந்தறிய வுதவும் ஓர் அளவுகோல் என்பதாம்.

ஆக்கக் காலத்தில் எல்லா நண்பரும் ஒரு சரியான அன்பராகத் தோன்றுவதால், அவரன்பை அளந்தறிவகை ஒன்றுமின்மையாலும்; கேட்டுக் காலத்திலேயே மெ-யன்பர் ஒட்டியும் பொ-யன்பர் விலகியும் நிற்பதால், நண்பரின் அன்பளவை அளந்தறியும் நிலைமை ஏற்படுவதாலும்; 'கேட்டினு முண்டோ ருறுதி' யென்றும், அதைத் தவிர வேறு அளவுகோலின்மையால் 'ஓர்கோல்' என்றும் கூறினார்.

"காலாடு போழ்திற் கழிகிளைஞர் வானத்து
மேலாடு மீனிற் பலராவர் – ஏலா
இடரொருவ ருற்றக்கால் ஈர்ங்குன்ற நாட
தொடர்புடையே மென்பார் சிலர்" **(நாலடி. 113)**

"தண்டுகொண் டோட்டினும் போகாமல் நம்மைத் தரிசிக்கவே
பண்டுவந் தோரின்று தாம்பூலம் வைத்துப் பரிந்தழைத்தும்
திண்டுமிண் டுஞ்சொல்லி வாரா திருந்தனர் செ–கையெல்லாம்
கண்டுகொண் டோமினித் தொண்டுகொண் டோம்நம் கடவுளுக்கே"

**(வேதநாயகம்பிள்ளை தனிப்பாடல்)**

என்பவை இங்குக் கவனிக்கத் தக்கன. உம்மை இழிவுசிறப்பு. 'இளைஞர்' ஆகுபொருளி. நண்பரன்பை நிலமாக வுருவகியாமையால் இது ஒருமருங்

குருவகம். இம் மூன்று குறளாலும் நட்கப்படத்தக்கார் யார் யாரென்பது கூறப்பட்டது.

### 797. ஊதிய மென்ப தொருவற்குப் பேதையார்
### கேண்மை யொரீஇ விடல்.

**(இ-ரை.)** ஒருவற்கு ஊதியம் என்பது - ஒருவனுக்கு வரவுப் பேறு என்று சொல்லப்படுவது; பேதையார் கேண்மை ஒரீஇ விடல் - அறிவிலாதாரோடு தெரியாமற் செ-துகொண்ட நட்பை விட்டுவிட்டு, அவரிடத்தினின்று நீங்கிக் கொள்ளுதலாம்.

அறிவிலாதார் தொடர்பு தீங்கே விளைத்தலால் 'ஒரீஇ' என்றும்; அவர் தொடர்பை விட்டவிடத்தும் அருகிலிருந்தால், மூங்கிலைச் சார்ந்த சந்தன மரமும் வேதல்போலப் பின்னுந் தீங்குவருதலால் 'விடல்' என்றும்; அவரை விட்டு நீங்கியபின் தீங்கொழிதலோடு இருமை யின்பத்திற்கும் வழியேற் படுதலால் அதனைப் 'பேறு' என்றும்; கூறினார். 'ஒரீஇ' சொல்லிசை யளபெடை.

### 798. உள்ளற்க வுள்ளஞ் சிறுகுவ கொள்ளற்க
### வல்லற்க ணாற்றறுப்பார் நட்பு.

**(இ-ரை.)** உள்ளம் சிறுகுவ உள்ளற்க - தம் ஊக்கங் குறைதற்குக் கரணியமான வினைகளைச் செ-யக் கருதா திருக்க; அல்லற்கண் ஆற்று அறுப்பார் நட்புக் கொள்ளற்க - துன்பக் காலத்திற் கைவிடுவார் நட்பைக் கொள்ளாதிருக்க.

ஊக்கந் தளர்தற்குக் கரணியமாவன, தம் ஆற்றலுக்கு மிஞ்சிய வினை களை மேற்கொள்ளுதலும் பயனில செ-தலுமாம். அவற்றை அறவே விடவேண்டுமென்பார் 'உள்ளற்க' என்றார். 'ஆற்று' ஆற்றல்; முதனிலைத் தொழிலாகுபெயர். ஆற்றல் வலிமை. ஆற்றறுத்தல் - வலியறுத்தல், அஃதாவது கைவிடுதல். துன்பக் காலத்திற் கைவிடுவார் தொடர்புகொள்வதும் ஊக்கங் குறைக்கும் செயலாதலால், இங்கு உவமைக் கருத்துக் கொள்ளத் தேவை யில்லை.

### 799. கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை யடுங்காலை
### யுள்ளினு முள்ளஞ் சுடும்.

**(இ-ரை.)** கெடும் காலைக் கைவிடுவார் கேண்மை - ஒருவனுக்குக் கேடு நேர்ந்த காலத்து அவனை விட்டு நீங்குவார் முன்பு அவனோடு செ- த

பொ-ந்நட்பு; அடும் காலை உள்ளினும் உள்ளம் சுடும் - அவன் தன்னைக் கூற்றுவன் கொல்லுங் காலத்து நினைப்பினும் அவன் உள்ளத்தைத் தீப்போற் சுடும்.

கைவிட்டார் என்னாது 'கைவிடுவார்' என்றே பொதுப்படவும் பன்மை யிலும் கூறியிருத்தலால், அடுங்காலை யுள்ளுதலைக் கைவிடப்பட்டவன் செயலாகக் கொள்ளாது பிறனொருவன் செயலாகக் கொண்டார் பரிமேலழகர். இது "ஒருவ னினைப்பினும்" என்னும் அவர் உரையாலும், "நினைத்த துணையானே இயைபில்லாத பிறனுக்குங் கூற்றினுங் கொடிதாமெனக் கைவீடெண்ணிச் செ-த நட்பின் கொடுமை கூறியவாறு" என்னும் அவர் சிறப்புரையாலும் அறியப்படும். சொல்லமைதிக்குப் பொருத்தமானதும், கைவிடுவார் கொடுமை மிகுதியை எடுத்துக் காட்டுவதுமான இவ் வுரை, போற்றத்தக்கதே. ஆயினும், 'கைவிடுவார் கேண்மை' என்பது கைவிடுதலை வழக்கமாகக்கொண்ட பலரின் நட்பைக் குறிக்குமாயின் அடுங்காலை யுள்ளு தலைக் கைவிடப்பட்டவன் செயலாகக் கொள்ளுதற்கும் ஏற்குமாம். இம் மூன்று குறளாலும் நட்கப்படத் தகாத இருவகையார் யார் என்பது கூறப்பட்டது.

**800. *மருவுக மாசற்றார் கேண்மையொன் றீத்து***
***மொருவுக வொப்பிலார் நட்பு.***

**(இ-ரை.)** மாசு அற்றார் கேண்மை மருவுக - மேற்கூறிய குற்றமொன் றும் இல்லாதவருடைய நட்பையே பயிலுக; ஒப்பு இலார் நட்பு ஒன்று ஈத்தும் ஒருவுக - அறியாமை கரணியமாக உள்ளத்தால் பொருந்தாதவரொடு செ- து கொண்ட நட்பை அவர் விரும்பிய தொன்றைக் கொடுத்தாயினும் விட்டுவிடுக.

மாசற்றார் கேண்மை இருமையின்பமும் பயத்தலால் 'மருவுக' என்றும், மாசுற்றார் கேண்மை இருமைத் துன்பமும் விளைத்தலால் 'ஒருவுக' என்றும், கூறினார். சிற்றிழப்பாற் பேரிழப்பைத் தடுப்பது அறிவுடைமையே யாதலால், 'ஒன்றீத்து மொருவுக' என்றார். இதனால் கொள்ளுவதும் தள்ளுவதுமான இருவகை நட்புங் கூறப்பட்டன.

## அதி. 81 - பழைமை

*அதாவது, பழைமையான நட்பின் சிறப்புரிமை. அது நட்டாரின் பழைமைபற்றி அவர் செ-யும் தவறுகளைப் பொறுத்துக்கொள்ளுதல். இடம் நோக்கிக் குறிப்பாற்றல் கொண்டு தலைப்புக் குறுகி நின்றது. குற்றமே யில்லா*

*முற்றுந் தூயார் உலகிலொருவரும் இல்லாமையானும், பொறையுடைமையும் ஒருவர் கடைப்பிடிக்க வேண்டிய அறமாதலானும், நீண்ட காலமாகப் பழகிய நண்பர் அப் பழக்கம்பற்றி ஏதேனும் பொறுக்கக்கூடிய தவறு செ-யின் அதை மகிழ்ச்சியுடன் பொறுத்துக்கொள்வதும் நண்பர் கடமையென்பதை அறிவித்தற்கு, இது நட்பாரா-தலின் பின் வைக்கப்பட்டது.*

### *801. பழைமை யெனப்படுவ தியாதெனின் யாதுங்*
### *கிழமையைக் கீழ்ந்திடா நட்பு.*

**(இ-ரை.)** பழைமை எனப்படுவது யாது எனின் - பழைமையென்று சொல்லப்படுவது என்னது என்று வினவின்; கிழமையை யாதும் கீழ்ந்திடா நட்பு - அது பழைமையான நண்பர் தாம் விரும்பியவாறு செ-தற்குரிய உரிமையைச் சிறிதும் கெடுக்காத பொறைநட்பாம்.

உரிமையால் விரும்பியவாறு செ-வன: கீழ்வினைஞரா யிருந்து கருமஞ் செ-யுங்காற் கேளாது செ-தல், கேடாகச் செ-யினும் மனம் வருந்தாமை, தமக்கு வேண்டியவற்றைத் தாமே யெடுத்துக் கொள்ளுதல், பணிவும் அச்சமுமின்மை, வீட்டிற்குள் வந்து தாராளமாகப் பழகுதல் முதலியன. இத்தகைய வரம்பு கடந்த நடத்தையைப் பொறுத்துக்கொள்வதே பழைமை என்றவாறு. "ஒருவர் பொறையிருவர் நட்பு" (நாலடி. 223) என்றதும் இதுபற்றியே. 'பழைமை' ஆகுபெயர்.

### *802. நட்பிற் குறுப்புக் கெழுதகைமை மற்றதற்*
### *குப்பாதல் சான்றோர் கடன்.*

**(இ-ரை.)** நட்பிற்கு உறுப்புக் கெழுதகைமை - நட்பிற்கு உறுப்பாவது விரும்பியன செ-தற்குரிய உரிமை; அதற்கு உப்பு ஆதல் சான்றோர் கடன் - அதனால் அவ் வுரிமைக்குச் சுவையூட்டுவதுபோல் துணையாதல் அறிவுடையோர் கடமையாம்.

உரிமை, கிழமை, கெழுதகைமை என்பன ஒருபொருட் சொற்கள். 'நட்பிற் குறுப்பு' என்றமையால், கெழுதகைமையில்லா நட்பு உறுப்பறை போல நிறைவில்லாத தென்பதாம். இவ் வுண்மையை அறியாதார் கெழு தகைமைக்கு உடம்படாவிடினும், அறிந்தார் உடம்பட வேண்டுமென்றற்குச் 'சான்றோர் கடன்' என்றார். 'மற்று' அசைநிலை.

**803. பழகிய நட்பெவன் செ—யுங் கெழுதகைமை
செ—தாங் கமையாக் கடை**

**(இ-ரை.)** கெழுதகைமை செ-த ஆங்கு அமையாக்கடை - நெடுங் கால நண்பர் தம் நட்புரிமையாற் செ-தவற்றிற்குத் தாமே அவற்றைச் செ-தாற் போல உடம்படாவிடின்; பழகிய நட்பு எவன் செ-யும் - பழைமையாக அவருடன் வந்த நட்பு என்ன பயன்படுவதாம்?

செ-தாற்போல வுடம்படுதலாவது தம்மையும் அவரையும் வேறுபடக் கருதாமை.

**804. விழைதகையான் வேண்டி யிருப்பர் கெழுதகையாற்
கேளாது நட்டார் செயின்.**

**(இ-ரை.)** நட்டார் கெழுதகையால் கேளாது செயின் - பழைமையான நண்பர் தம்மைக் கேட்டுச் செ-ய வேண்டிய ஒரு வினையைத் தம் உரிமையாற் கேளாது செ-தாராயின்; விழைதகையான் வேண்டியிருப்பர் - அறிவுடையார் அதன் விரும்பப்படுந் தன்மைபற்றி அவரைத் தமக்கு வேண்டியவராகக் கொள்வார்.

தம் ஏவலாற் செ-யப்படுவதான ஒரு கருமத்தைத் தம் ஏவலின்றியே செவ்வையா-ச் செ-து முடித்தாராயின், செ-தவரை "ஏவா மக்கள் மூவா மருந்து" என்று அறிவுடையார் பாராட்டுவதல்லது வேறுவகை யாகக் கருதி வெறுக்கார் என்பதாம். செ-தற்குரிய செயப்படுபொருளும் வேண்டி யிருத்தற்குரிய வினைமுதலும் வருவிக்கப்பட்டன.

**805. பேதைமை யொன்றோ பெருங்கிழமை யென்றுணர்க
நோதக்க நட்டார் செயின்.**

**(இ-ரை.)** நட்டார் நோதக்க செயின் - பழைமையான நண்பர் தாம் வருந்தத் தக்கவற்றைச் செ-தாராயின்; பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்று உணர்க - அதற்குக் கரணியம் அவரது அறியாமை மட்டுமன்றி அவர் கொண்ட பேருரிமையு மாகும் என்று அறிந்து பொறுத்துக்கொள்க.

நுண்ணிய நூல்பல கற்றார்க்கும் பேதைப்படுக்கும் இழவூழால் இடை யிடை பேதைமை தோன்றுதலின், அதனாற் செ-யப்படும் தீச்செயலை அவர் விரும்பிச் செ-யும் பகைவினையாகக் கொள்ளற்க என்பதாம். 'ஒன்றோ' என்பது ஒன்றுதானோ என்னும் பொருளதாம்; ஆதலாற் பரிமேலழகர் கரு

தியவாறு எண்ணிடைச் சொல்லன்று. 'செயின்' என்பது இயல்பாற் செ-யாமையை உணர்த்திற்று. இது வருகின்றவற்றிற்கும் ஒக்கும். 'நோதக்க' என்றதனால் நட்டார் தீச்செயற்கு அவரது இழவூழன்றித் தமது இழவூழும் கரணியமாகும் என்று கருதுக என்பது குறிப்பாற் பெறப்படுவதாம். பேதைமை யொன்றே போதிய கரணியமாயிருக்கவும், அதனொடு பெருங்கிழமையுங் கூடிக்கொண்டதனால், நட்டார் தீச்செயல்பற்றி அவரை எள்ளளவும் வெறுக் கற்க என்பது கருத்து.

"செறுத்தோ றுடைப்பினுஞ் செம்புனலோ டூடார்
மறுத்துஞ் சிறைசெ-வர் நீர்நசை வாழ்நர்
வெறுப்ப வெறுப்பச் செயினும் பொறுப்பரே
தாம்வேண்டிக் கொண்டார் தொடர்பு. (நாலடி. 222)

## 806. எல்லைக்க ணின்றார் துறவார் தொலைவிடத்துந்
## தொல்லைக்க ணின்றார் தொடர்பு.

**(இ-ரை.)** எல்லைக்கண் நின்றார் - நட்புவரம்பு கடவாது அதன் எல்லைக்குள் நிலைத்து நின்றவர்; தொல்லைக்கண் நின்றார் தொடர்பு - பழைமையாகத் தம்மோடு பழகிவந்து துன்பில் திரியாது நின்றவரின் நட்பை; தொலைவிடத்தும் துறவார் - அவரால் தமக்குக் கேடுவந்தவிடத்தும் விடார்.

'தொல்லை' ஆகுபொருளி. 'தொலைவு' பொருட்கேடும் போர்த் தோல்வியும்.

## 807. அழிவந்த செ-யினு மன்பறா ரன்பின்
## வழிவந்த கேண்மை யவர்.

**(இ-ரை.)** அன்பின் வழிவந்த கேண்மையவர் - அன்போடு கூடிப் பழைமையாக வந்த நட்பையுடையார்; அழிவந்த செ-யினும் அன்பு அறார் - தம் நண்பர் தமக்கு அழிவு தருவனவற்றைச் செ-தாராயினும் அவர்பால் அன்பு நீங்கார்.

'அழி' முதனிலைத் தொழிற்பெயர். 'அழிவா' கூட்டுவினை முதனிலை. உம்மை இழிவுசிறப்பு.

"இன்னா செயினும் விடுதற் கரியாரைத்
துன்னார் துறத்தல் தகுவதோ – துன்னருஞ்சீர்

விண்குத்து நீள்வரை வெற்ப களைபவோ
கண்குத்திற் றென்றுதங் கை.” ( நாலடி.226)

*808. கேளிழுக்கங் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு*
*நாளிழுக்க நட்டார் செயின்.*

**(இ-ரை.)** கேள் இழுக்கம் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு - பழைமையான நண்பர் செ-த தவற்றைத் தாமாகவன்றிப் பிறர் சொன்னாலும் பொருட்படுத்தாத நட்புரிமை யறியவல்லார்க்கு; நட்டார் இழுக்கம் செயின் நாள் - அந் நண்பர் தவறுசெ-யின் அந் நாள் நன்னாளாம்.

‘கேள்’ வகுப்பொருமை. தவறுகள் இவ் வதிகார முதற் குறளுரையிற் கூறப்பட்டன. கேட்டல் கேட்டு அதற்குத் தக்கன செ-தல். ‘கெழுதகைமை வல்லார்’ ஒருசொற்றன்மைப்பட்ட கூட்டுப்பெயர். தவறு செ-யும் நாள் நட்புரிமையை வெளிப்படுத்துதலின், அறிவுடையன்பர் கண்ணோட்டம்பற்றி அதை மகிழ்ச்சி மனப்பான்மையோடு நோக்குவர் என்பதாம்.

*809. கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை*
*விடாஅர் விழையு முலகு.*

**(இ-ரை.)** கெடா வழிவந்த கேண்மையார் கேண்மை - உரிமை கெடாது பழைமையாக வந்த நட்பையுடையாரின் உறவை; விடார் - அவர் செ-த தவறுபற்றி விடாதவரை; உலகு விழையும் - உலகம் விரும்பும்.

கேண்மையை விடுதற்கு இருக்கக்கூடிய கரணியம் வருவித் துரைக் கப்பட்டது. உலகம் விரும்புதலாவது புகழ்ந்து போற்றுதலும் அவரோடு நட்புக் கொள்ளுதலும். ‘கெடா’ ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம். ‘கெடாஅ’, ‘விடாஅர்’ இசைநிறை யளபெடைகள். ‘கெடாஅர்’ என்பது மணக் குடவ காலிங்க பரிப்பெருமாளர் கொண்ட பாடம். ‘நட்பிற் கெடாரா-’ என்பது மணக்குடவர் உரை. காலிங்கர் ‘விடாஅர்’ என்பதையும் இங்ஙனமே முற்றெச்சமாக்கி ‘ஒருகால் ஒழியாதே’ என்று பொருளுரைப்பர்.

‘உலகு’ ஆகுபெயர்.

*810. விழையார் விழையப் படுப பழையார்கட்*
*பண்பிற் றலைப்பிரியா தார்.*

**(இ-ரை.)** பழையார்கண் பண்பின் தலைப்பிரியாதார் - பழைமையான நண்பர் தவறு செ-தாராயினும் அவரிடத்துத் தம் நட்புத் தன்மையினின்றும் மாறுபடாதவர்; விழையார் விழையப்படுப - பகைவராலும் விரும்பப்படுவர்.

பண்பாவது நட்பிற் பிழைபொறுத்தல். மூன்றாம் வேற்றுமையுருபும் எச்சவும்மையும் தொக்கன.

## அதி. 82 - தீ நட்பு

*அதாவது, பொறுக்கப்படாத குற்றமுள்ளதாயும் எப்போதும் தீமையே செ-வதாயுமுள்ள தீயோர் நட்பு. நட்பாரா-தலில் 'பேதையார் கேண்மை' என்றும், 'அல்லற்க ணாற்றறுப்பார் நட்பு' என்றும், 'கெடுங்காலைக் கைவிடு வார் கேண்மை' என்றும், 'ஒப்பிலார் நட்பு' என்றும், பொதுப்படவும் சுருக்க மாகவுஞ் சொல்லிய தீநட்பைச் சிறப்பாகவும் விரிவாகவும் விளக்கமாகவுங் கூறவேண்டியிருத்தலின், இது பொறுக்கப்படும் குற்றமுள்ள பழைமையின் பின் வைக்கப்பட்டது.*

### *811.* பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
### பெருகலிற் குன்ற லினிது.

**(இ-ரை.)** பருகுவார் போலினும் - காதல் மிகுதியால் விழுங்கிவிடு வார்போல் தோன்றினும்; பண்பு இலார் கேண்மை - நற்குணமில்லார் நட்பு; பெருகலின் குன்றல் இனிது - வளர்தலினுந் தே-ந்துபோதல் நல்லது.

குன்றல் - வரவரச் சுருங்கி இறுதியிற் சிறிதும் இல்லாமற் போதல். தீயார் நட்பு வளர்தலும் தே-தலும், தீமை வளர்தலுந் தே-தலும் போன்றே யென்பது கருத்து. உம்மை உயர்வுசிறப்பு.

பருகுவார் போலுதல் என்னும் திருக்குறள் வழக்காறு, பிற்காலத்துப் புலவரால் வழிவழி ஆளப்பட்டு வந்துள்ளது.

"பருகு வன்ன காத லுள்ளமொடு" **(அகம். 369)**

"பருகு வன்ன வேட்கை" **(புறம்.207)**

"பருகு வன்ன வருகா நோக்கமொடு" **(பொருந. 77)**

"பருகு வன்ன நோக்மொடு" **(பெருங். 37: 80)**

"பருகிய நோக்கெனும்" **(கம்பரா. 1. 11 : 37)**

"பருகுவ னன்ன வார்வத்த னாகி **(நன். பொதுப். 40)**

''பருகுவான் போல நோக்கும்'' **(பாக. 4 : 3 : 35)**

''பருகுவான் போல நோக்கி'' **(கூர்ம. திருக்கல். 61)**

### *812. உறினட் டறினொரூஉ மொப்பிலார் கேண்மை பெறினு மிழப்பினு மென்.*

**(இ-ரை.)** உறின் நட்டு அறின் ஒருவும் - தமக்கொரு பயனுள்ளவிடத்து நட்புச்செ-து அஃதில்லாதவிடத்து நீங்கிவிடும்; ஒப்புஇலார் கேண்மை - உள்ளத்தாற் பொருந்தாதவரது நட்பை; பெறினும் இழப்பினும் என் - பெற் றாலும் பெற்றபின் இழந்தாலும் இரண்டிற்கும் என்ன வேறுபாடுண்டு? ஒன்றுமில்லை.

தந்நலமே கருதுபவர் உள்ளத்தாற் பொருந்தாராதலின் ஒப்பிலார் என்றும், அவர் நட்பு இருப்பின் ஆக்கமும், இல்லாவிடின் கேடும் இன்மை யால் 'பெறினும் இழப்பினு மென்' என்றும், கூறினார். ஒத்தல் உள்ளம் ஒன்றுதல். 'ஒரூஉம்' இன்னிசை யளபெடை.

### *813. உறுவது சீர்தூக்கு நட்பும் பெறுவது கொள்வாருங் கள்வரு நேர்.*

**(இ-ரை.)** உறுவது சீர்தூக்கும் நட்பும் - நட்கப்படுவாரின் நலத்தையும் அருமையையும் நோக்காது அவரால் தமக்கு வரும் பயனைமட்டும் அளந்து பார்க்கும் தந்நல நண்பரும்; பெறுவது கொள்வாரும் - கொடுப்பவரை உள்ளத்திற் கொள்ளாது அவர் கொடுக்கும் பொருளைமட்டும் மகிழ்ந்து ஏற்றுக்கொள்ளும் விலைமகளிரும்; கள்வரும் - பிறர் கேட்டையும் அவர் படுந் துன்பத்தையும் நோக்காது தமக்குக் கிடைக்கும் பொருளைமட்டும் நோக்கிக் களவு செ-வாரும்; நேர் - தம்முள் ஒத்தவராவர்.

தந்நலமே கருதிப் பிறர்பொருளை வஞ்சித்துப் பெறுதலில் மூவரும் ஒத்தலின் 'நேர்' என்றார். 'நட்பு' ஆகுபொருளி.

### *814. அமரகத் தாற்றறுக்குங் கல்லாமா வன்னார் தமரிற் றனிமை தலை.*

**(இ-ரை.)** அமர் அகத்து ஆற்று அறுக்கும் கல்லா மா அன்னார் - போர்வரு முன்பெல்லாம் தன்னை எந்நிலைமையிலும் தாங்குவது போன் றிருந்து, அது வந்தபின் போர்க்களத்தில் தன்னைக் கீழே தள்ளிவிட்டு

ஓடிப்போகும் பயிற்சியில்லாக் குதிரையை ஒத்தவரின்; தமரின் தனிமை தலை - நட்போடியிருத்தலினுந் தனித்திருத்தல் சிறந்ததாம்.

தீய நண்பர் துன்பம் வருமுன் பெல்லாம் நிலையான துணையாவார் போன்றிருந்துவிட்டு, அது வந்தபின் நீங்கிவிடுவரென்பது, உவமத்தாற் பெறப்பட்டது. ஆற்றறுத்தல் என்பதற்கு 768 ஆம் குறளுரையில் உரைத்தது போல் உரைக்க. கல்லாமை போர்ப்பயிற்சி யில்லாமை.

**"ஐந்து கதியும் பதினெட்டுச் சாரியையுங்**
**கந்து மறமுங் கறங்குளைமா"** **(பு.வெ. 355)**

என்பதனால் குதிரையின் போர்ப்பயிற்சி அறியப்படும். மல்லம், மயில், குரங்கு, வல்லியம் (புலி), அம்பு எனச் செலவு (கதி) ஐவகை. சாரியை மண்டலம் என்னும் சுற்றுவரவு. 'கந்து' (வ.) தாண்டு. மறம் - போர்முரண். தமர் - தமர்மை: ஆகுபொருளி. 'தனிமை' ஏமாற்ற மின்மைக்கும் அழிவின்மைக்கும் ஏதுவாகலின் அதைத் 'தலை' என்றார்.

## *815. செ—தேமஞ் சாராச் சிறியவர் புன்கேண்மை*
## *யெ—தலி னெ—தாமை நன்று.*

**(இ-ரை.)** செ-து ஏமம் சாராச் சிறியவர் புன்கேண்மை - பாதுகாப்புத் தருமென்று கருதிச் செ-துவைத்தாலும் பாதுகாப்பாகாத கீழோரது தீநட்பு; எ-தலின் எ-தாமை நன்று - பெற்றிருப்பினும் பெற்றிராமையே நல்லது.

'எ-தலி னெ-தாமை நன்று' என்பதைத் 'தமரிற் றனிமை தலை' என்பதுபோற் கொள்க. 'சாரா' என்னும் ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் 'புன்கேண்மை' என்னும் பெயரைத் தழுவிற்று. 'சிறியவர்' இடைப் பிறிது வரல். சிறப்பும்மை தொக்கது.

## *816. பேதை பெருங்கெழீஇ நட்பி னறிவுடையா*
## *ரேதின்மை கோடி யுறும்.*

**(இ-ரை.)** பேதை பெருங் கெழீஇ நட்பின் - அறிவிலானது மிக நெருங் கிய நட்பினும்; அறிவுடையார் ஏதின்மை கோடி உறும் - அறிவுடையாரின் பகைமை கோடி மடங்கு நல்லதாம்.

பேதை நட்புப் பல்வகைத் தீங்கை விளைத்தலானும், அறிவுடையார் பகை ஒரு தீங்கும் விளைக்காமையானும், 'கோடியுறும்' என்றார். பன்மை

உயர்வுபற்றி வந்தது. ஏதின்மை இங்கு ஏதும் அன்பின்மை. கெழி நட்பு. "ஒருவன் கெழியின்மை கேட்டா லறிக" என்பது நான்மணிக்கடிகை (63). கெழீஇ. என்பது கெழி என்பதன் அளபெடை வடிவம். பகைவனைக் கெழீஇ யிலி என்பது இலக்கிய வழக்கு (தொல். சொல். 57, இளம். உரை). 'பெருங் கெழீஇ நட்பு' என்பது பேருழுவலன்பு என்பது போன்ற பல்சொற்றொடர். "பெருங்கழி நட்பென்று பாடமோதுவாரு முளர்" என்றார் பரிமேலழகர். அது பெருங்கெழி நட்பு என்று மிருந்திருக்கலாம். "கெழீஇய வென்பதனிறுதி நிலை விகாரத்தாற் றொக்கது" என்று கொள்ளத் தேவையில்லை.

## *817. நகைவகைய ராகிய நட்பிற் பகைவராற்*
## *பத்தடுத்த கோடி யுறும்.*

**(இ-ரை.)** நகை வகையர் ஆகிய நட்பின் - தாம் அறிவடையும் வகை யினராகாது சிரித்து மகிழும் வகையினராதற்கு ஏதுவாகிய நட்பால் வரும் இன்பத்தினும்; பகைவரால் பத்து அடுத்த கோடி உறும் - பகைவரால் வருந் துன்பம் பத்துக்கோடி மடங்கு நல்லதாம்.

நகைவகைய ராக்குவார் பிறருக்கு அறிவூட்டாது அவரைச் சிரித்து மகிழவைப்பதையே தொழிலாகக் கொண்டு பொருள்பெறும் குறும்பர், காமுகர், நகைவேழம்பர் (கோமாளிக் கூத்தர்) முதலியோர். அவர் நட்பு மிகத் தீயது என்பது கருத்து. 'பத்தடுத்த கோடி யுறும்' என்பது வலியுறுத்தல் பற்றிவந்த உயர்வுநவிற்சி. ஆகிய நட்பு ஆதற்கேதுவான நட்பு. 'நட்பு' ஆகுபொருளி. 'வருந்துன்பம்' என்பது அவா-நிலையால் வந்தது.

## *818. ஒல்லுங் கரும முடற்று பவர்கேண்மை*
## *சொல்லாடார் சோர விடல்.*

**(இ-ரை.)** ஒல்லும் கருமம் உடற்றுபவர் கேண்மை - ஆகும் செயலை யும் ஆகாததாக்கிக் கெடுப்பவரின் நட்பை; சொல்லாடார் சோர விடல் - அவருக்குச் சொல்லாமலே மெல்ல மெல்லத் தளரவிடுக.

இனி, 'ஒல்லும் கருமம் உடற்றுபவர்' என்பதற்கு, தம்மால் இயலுங் கருமத்தையும் இயலாததாகக் காட்டி நடிப்பவர் என்று உரைப்பினுமாம். சோரவிடலைத் தெரிவிப்பின் ஏதேனுஞ் சூழ்ச்சி செ-து அதைத் தடுப்ப ராதலின், 'சொல்லாடார்' என்றும், நீண்ட காலத்தின்பின் தாமே அறிந்து கொள்ளுமாறு மெல்ல மெல்லத் தளரவிடுக என்பார். 'சோர விடல்' என்றும், கூறினார். 'சொல்லாடார்' எதிர்மறை முற்றெச்சம். எச்சவும்மை தொக்கது.

***819. கனவினு மின்னாது மன்னோ வினைவேறு***
***சொல்வேறு பட்டார் தொடர்பு.***

**(இ-ரை.)** சொல்வேறு வினைவேறு பட்டார் தொடர்பு - சொல்லொன் றுஞ் செயலொன்றுமா யிருப்பவரின் நட்பு; கனவினும் இன்னாது - நனவில் மட்டுமன்றிக் கனவில் நினைப்பினும் துன்பந் தருவதாம்.

சொல்வேறு வினைவேறு படுதலாவது சொல்லளவில் நண்பராகவும் செயலளவிற் பகைவராகவு மிருத்தல். மதியொடும் மனச்சான்றொடும் கூடாத தூக்கநிலையிலும் துன்பந்தருமென்று, அதன் கொடுமை கூறியவாறு. எச்சவும்மை தொக்கது. 'மன்', 'ஓ' அசைநிலைகள்.

***820. எனைத்துங் குறுகுத லோம்பன் மனைக்கெழீஇ***
***மன்றிற் பழிப்பார் தொடர்பு.***

**(இ-ரை.)** மனைக் கெழீஇ மன்றில் பழிப்பார் தொடர்பு - இல்லத்தில் தனியே யிருக்கும்போது அன்பர்போல் நட்பாடி, அம்பலத்திற் பலரோடு கூடியிருக்கும்போது பகைவர்போற் பழிகூறுவார் நட்பு; எனைத்தும் குறுகுதல் ஓம்பல் - எள்ளளவுந் தம்மை அணுகாதபடி காத்துக்கொள்க.

தனித்திருக்கும்போது பழிப்பினும் பிறரோடு கூடியிருக்கும்போது புகழ்வதே நல்ல நண்பர் செயலாம். அதற்கு மாறாக விருப்பதொடு கண்முன் துணிந்து முரண்படுவதால், அவர் பகைவரொடு கூடி அழிவுண்டாக்காதவாறு முழு விழிப்புடன் முற்காப்பாக விருக்க வேண்டுமென்பார் 'எனைத்துங் குறுகுதல் ஓம்பல்' என்றார். 'கெழீஇ' இன்னிசை யளபெடை.

## அதி. 83 - கூடா நட்பு

*அதாவது, உண்மையிற் பகைவராயிருந்து தமக்கேற்ற காலம் வரும் வரை நண்பர்போல் நடிக்கும் பொ-ந்நட்பு. இது புறத்திற் கூடியிருந்தும் அகத்திற் கூடாதிருத்தலால் கூடாநட் பெனப்பட்டது. இது தீநட்பின் மற்றொரு வகையாதலால் அதன்பின் வைக்கப்பட்டது.*

***821. சீரிடங் காணி னெறிதற்குப் பட்டடை***
***நேரா நிரந்தவர் நட்பு.***

**(இ-ரை.)** நேரா நிரந்தவர் நட்பு - அகத்திற் கலவாது புறத்திற் கலந் தொழுகுவாரின் நட்பு; சீர் இடம் காணின் எறிதற்குப் பட்டடை - சிறந்த சமையம் வா-ப்பின் தாக்குவதற்குப் பட்டடைபோல் உதவுவதாம்.

தக்க சமையம் வரும்வரை உதவி செ-யும் நண்பர்போல் இருந்து விட்டு அது வந்தவுடன் தாக்குவாரின் நட்பு, அடிப்பதற்கு முன்பெல்லாம் ஒரு கனிய(உலோக)ப் பொருளைத் தாங்குவது போலிருந்து பின்பு அதை ஓங்கியுறைத் தடித்தற்கு உதவும் பட்டடை போன்றிருத்தலால் அதைப் பட்டடை யென்றே சார்த்திக் கூறினார். தீர்விடமென்று பாடமோதி முடியு மிடமென்று மணக்குடவர் உரைப்பது சரியன்று. பட்டுதல் அடித்தல். பட்டு தற்கு அடை பட்டடை.

### *822. இனம்போன் றினமல்லார் கேண்மை மகளிர்*
### *மனம்போல வேறு படும்.*

**(இ-ரை.)** இனம் போன்று இனம் அல்லார் கேண்மை - இனத்தார் போன் றிருந்து உண்மையில் இனத்தார்க்குரிய அன்பில்லாத கரந்த பகைவர் நட்பு; மகளிர் மனம்போல வேறுபடும் - விலைமகளிர் மனம்போல வேறுபடும்.

நட்பு வேறுபடுதலாவது கரந்த பகை வெளிப்படையாதல். மகளிர் என்னும் பொதுச்சொல் இடத்திற்கேற்ப விலைமகளிரைக் குறித்தது. விலை மகளிர் காதல்போலக் கரந்த பகைவர் நட்பு வேறுபடுமென்பதாம். முன்னவர் பன்முறையும் பின்னவர் ஒரு முறையும் வேறுபடுவதே வேற்றுமை.

### *823. பலநல்ல கற்றக் கடைத்து மனநல்ல*
### *ராகுதன் மாணார்க் கரிது.*

**(இ-ரை.)** பல நல்ல கற்றக் கடைத்தும் - பல நல்ல நூல்களைக் கற்ற போதிலும்; மாணார்க்கு - சிறவாத பகைவர்க்கு; மனம் நல்லவர் ஆகுதல் அரிது - மனத்திருந்தி உண்மை நண்பராகும் தன்மையில்லை.

நல்ல நூல்கள் அறிவைப் பெருக்கி மனக்கோட்டந் தீர்க்கும் இலங்கு நூல்கள்.

**"உரத்தின் வளம்பெருக்கி யுள்ளிய தீமைப்**
**புரத்தின் வளமுருக்கிப் பொல்லா – மரத்தின்**
**கனக்கோட்டந் தீர்க்குநூ லஃதேபோல் மாந்தர்**
**மனக்கோட்டந் தீர்க்குநூல் மாண்பு."** **(நன். பொதுப். 25)**

கற்றபின்பும் என்று பொருள்படுதலால் எச்சவும்மை. 'மனநல்லர்' எனச் சினைவினை முதல்வினைமேல் நின்றது. நல்லராகுதல் பகைமை நீங்குதல்.

இனநலமும் கல்விநலமும் மிகப் பெற்றவிடத்தும் தீய பிறவிக்குணம் நீங் காதவர் உலகிலிருத்தலால், 'மனநல்ல ராகுதல் மாணார்க் கரிது' என்றார்.

**824.** ***முகத்தி னினிய நகாஅ வகத்தின்னா***
***வஞ்சரை யஞ்சப் படும்.***

**(இ-ரை.)** முகத்தின் இனிய நகாஅ அகத்து இன்னா வஞ்சரை - காணும் போதெல்லாம் முகத்தில் இனிதாகச் சிரித்து உள்ளத்தில் எப்போதும் தீய வராகிய வஞ்சகருக்கு; அஞ்சப்படும் - அஞ்சி விலகிக் கொள்ளல் வேண்டும்.

சிரிப்பின் மகிழ்ச்சிபற்றி இனிய என்றும், அகத்திற் பகையிருக்கவும் புறத்தில் நட்புக்காட்டலின் 'வஞ்சர்' என்றும், பகையைக் குறிப்பாற் காட்டக் கூடிய முகமும் அதை அறிய முடியாவாறு மலர்ச்சி கொள்ளுதலின், 'அஞ்சப் படும்' என்றும் கூறினார். நகும் நேரங்களின் பன்மைபற்றி 'இனிய' என்று பன்மையிற் குறித்தார்.

**825.** ***மனத்தி னமையா தவரை யெனைத்தொன்றுஞ்***
***சொல்லினாற் றேறற்பாற் றன்று.***

**(இ-ரை.)** மனத்தின் அமையாதவரை - உள்ளத்தால் தம்மோடு பொருந் தாதவரை; எனைத்து ஒன்றும் - எத்தகைய வினையிலும்; சொல்லினால் தேறற்பாற்று அன்று - அவர் சொல்லைக்கொண்டு அவரை நம்பத்தக்க முறைமைத்தன்று, அரசியல் நூல்.

எனைத்தொன்றும் என்பதற்கு, எத்துணைச் சிற்றளவும் என்று உரைப் பினும் அமையும். அன்மைச் சொல் அரசியல் நூல் என்பதை அவாவி நின்றது. பகைமையை மறைத்துச் சொல்லும் வஞ்சனைச் சொல்லை மெ-யென்று கொண்டு, அவரை எவ்வினைக்கும் நம்புவது அரசியல் நூல் முறைமையன் றென்பதாம்.

**826.** ***நட்டார்போ னல்லவை சொல்லினு மொட்டார்சொ***
***லொல்லை யுணரப் படும்.***

**(இ-ரை.)** நட்டார்போல் நல்லவை சொல்லினும் - உண்மை நண்பர் போல் நன்மை பயக்கக் கூடியவற்றைச் சொன்னாரேனும்; ஒட்டார் சொல் ஒல்லை உணரப்படும் - பகைவர் சொற்கள் நன்மை பயவாமை விரைந்து அறியப்படும்.

எதிர்மறையும்மை ஒத்துக்கொள்வுப் பொருளது (concession). கூடா நட்பினர் சொல்லளவில் நல்லவற்றையே சொல்வராதலின், எதிர்மறைப் பொருள் விளைவையே தழுவும். ஒல்லை யுணரப்படுதலாவது நல்லவை தீயவையாக விரைந்து வெளிப்படல்.

***827. சொல்வணக்க மொன்னார்கட் கொள்ளற்க வில்வணக்கந்***
***தீங்கு குறித்தமை யான்.***

**(இ-ரை.)** வில் வணக்கம் தீங்கு குறித்தமையான் - வில்லின் வளைவாகிய வணக்கம் அதை ஏற்றவர்க்குத் தீமை செ-தலைக் குறித்தலால்; ஒன்னார்கண் சொல்வணக்கம் கொள்ளற்க - பகைவரிடத்துத் தோன்றும் பொ-யான பணிவுவணக்கம் தீமையன்றி நன்மை செ-தலைக் குறித்த தென்று கருதற்க.

உள்ளத்தொடு பொருந்தாமற் சொல்லொடுமட்டும் கூடிய வணக்கமாதலால், பொ- வணக்கத்தைச் ‘சொல்வணக்கம்’ என்றும், வில் அறிவில்லாப் பொருளும் பிறன்வினை கொண்டதுமாயினும், வளைதலுந் தீங்கு செ-தலுமாகிய வினையொப்புமையால் அதன் குறிப்பை யேதுவாக்கியும், கூறினார். வில்லியின் தீய குறிப்பு வில்வளைவின்மேல் நிற்றல்போல், பகைவரின் தீய குறிப்பும் அவர் உடல் வளைவின்மேல் நிற்றலால், அஞ்சிக் காத்துக்கொள்க என்பதாம்.

***828. தொழுதகை யுள்ளும் படையொடுங்கு மொன்னா***
***ரழுதகண் ணீரு மனைத்து.***

**(இ-ரை.)** ஒன்னார் தொழுத கையுள்ளும் படை ஒடுங்கும் - பகைவரின் குறிப்புணர வல்லார்க்கு அவர் குறிப்பிட்ட கைக்குள்ளும் கொல் படைக்கலம் மறைந்திருக்கும்; அழுத கண்ணீரும் அனைத்து - அவர் அழுது வடித்த கண்ணீர்க்குள்ளும் அங்ஙனமே மறைந்திருக்கும்.

கொல்லுதற்குப் பின்பு எடுக்க விருக்கும் படைக்கலம் முன்பு கை குவிப்பாலும் கண்ணீர் வடிப்பாலும் மறைக்கப்படுவதால் அவற்றிற்குள் ‘படையொடுங்கும்’ என்றார். தம் இளக்கங்காட்டி அழுதாலும் தொழுதாலும், அவர் செயலானன்றிக் குறிப்பாலேயே அவரியல்பை யறிந்து காத்துக் கொள்க வென்பதாம்.

***829. மிகச்செ—து தம்மெள்ளு வாரை நகச்செ—து***
***நட்பினுட் சாப்புல்லற் பாற்று.***

**(இ-ரை.)** மிகச்செ-து தம் எள்ளுவாரை - பகைமை தோன்றாவாறு புறத்தில் அளவிறந்து நட்புச்செ-து அகத்தில் தம்மை இழிவாயெண்ணும் பகைவரை; நட்பினுள் நகச்செ-து - தாமும் புறத்தே நட்பாடி அவர் மகிழும் வண்ணம் செ-து; சாப்புல்லல் பாற்று - அகத்தே அந் நட்புச் சாகும் வண்ணம் பொருந்தும் பான்மையுடையது அரசியல் முறை.

**"மிகுதியான் மிக்கவை செ–தாரைத் தாந்தம்**
**தகுதியான் வென்று விடல்"** **(குறள். 158)**

என்றும்,

**"இன்னாசெ– தாரை யொறுத்த லவர்நாண**
**நன்னயஞ் செ–து விடல்"** **(குறள். 314)**

என்றும், முற்கூறிய ஆசிரியரே இங்கு உள்ளொன்று புறம்பொன்றாகப் பேசி நடிப்பவரைப் பிறரும் பின்பற்ற வேண்டுமென்று கூறிய தென்னை யெனின், முற்கூறியது பொதுவியலைச் சார்ந்த இல்லறத்திலுந் துறவறத்திலும் தனிப்பட்டவர் வாழ்க்கைக் குரியதென்றும், இங்குக் கூறியது நாடு முழுவதையும் தழுவிய வேத்தியற்குரிய தென்றும், வேத்தியலிலும் பொது விய லறத்தைக் கடைப்பிடிப்பின் உலகம் நடைபெறாதென்றும், இங்ஙனம் ஆவியியன்மையையும் (spiritualism) பொருளியன்மையையும் (materialism) இணைத்து நடைமுறைக்கேற்ற வாழ்க்கைச் சட்டவியல் வகுத்தவர் திருவள்ளுவரே யென்றும், அறிந்துகொள்க. சாவ என்பதன் ஈறுகெட்டது மரூஉப் புணர்ச்சித் திரிபு.

**"சாவ வென்னுஞ் செயவென் னெச்சத்து**
**இறுதி வகரங் கெடுதலு முரித்தே"** **(எழுத்து. உயிர். 7)**

என்பது தொல்காப்பியம்.

**"கோட்டின்வா–ச் சாக்குத்தி"** **(கலித். 105)**

'பாற்று' என்னும் குறிப்புவினைமுற்று அரசியன் முறை என்னும் வினைமுதலை அவாவி நின்றது.

**830. *பகைநட்பாங் காலம் வருங்கான் முகநட்***
***டகநட் பொரீஇ விடல்.***

**(இ-ரை.)** பகை நட்பு ஆம் காலம் வருங்கால் - தம் பகைவர் தமக்கு நண்பரா யொழுகுங் காலம் வரின்; முகம் நட்டு அகம் நட்பு ஒரீஇ விடல் - தாமும் அவர்போல் முகத்தால் நட்புச் செ–து அகத்தில் அதைவிட்டு நீங்கிப் பின்பு வேண்டாதபோது புறநட்பையும் விட்டுவிடுக.

பகை நட்பாங் காலமாவது பகைவரை வெளிப்படையாக நீக்க முடியாத காலம். இதனால், வேண்டும்போது பகைவரோடும் புறத்தளவில் தொடர்பு கொள்க என்பது கூறப்பட்டது. 'ஒரீஇ' சொல்லிசை யளபெடை.

## அதி. 84 - பேதைமை

*இனி, நட்பும் அதன் மறுதலையாகிய பகையும் அவை போன்ற குணங்களும் செயல்களும் நிலைமைகளும்பற்றிப் பன்னீரதிகாரங்களாற் கூறத் தொடங்கி, முதற்கண் தற்பகையாகிய பேதைமையைப்பற்றிக் கூறு கின்றார். பேதைமை பேதையின் தன்மை. பேதை நல்லதை விட்டுத் தீயதைத் தெரிந்துகொள்பவனும் அறிவித்தாலும் அறியாதவனுமாகிய அறிவிலி.*

"பூத்தாலுங் காயா மரமுள மூத்தாலும்
நன்கறியார் தாமும் நனியுளர் பாத்தி
விதைத்தாலும் நாறாத வித்துள பேதைக்
குரைத்தாலுந் தோன்றா துணர்வு." (பழ. 93)

**831. பேதைமை யென்பதொன் றியாதெனி னேதங்கொண்**
**டூதியம் போக விடல்.**

**(இ-ரை.)** பேதைமை என்பது ஒன்று யாது எனின் - பேதைமை என்று சொல்லப்படும் ஒரு குற்றம் என்னது என்று வினவின்; ஏதம் கொண்டு ஊதியம் போகவிடல் - தனக்குக் கேடு தருவனவற்றைக் கைக்கொண்டு ஆக்கந் தருவனவற்றை விட்டுவிடல்.

கேடு தருவன வறுமை, நோ–, அறங்கடை (பாவம்), பழி, அறியாமை, பகை முதலியன. ஆக்கந் தருவன செல்வம், உடல்நலம், அறம், புகழ், அறிவு, நட்பு முதலியன. ஆகவே, பேதைமையென்பது தானே இருமை யின்பமும் புறக்கணித்தல் என்பதாம்.

**832. பேதைமையு ளெல்லாம் பேதைமை காதன்மை**
**கையல்ல தன்கட் செயல்.**

**(இ-ரை.)** பேதைமையுள் எல்லாம் பேதைமை - பேதைமைக் குற்றங்க ளெல்லாவற்றுள்ளும் கொடியதாவது; கை அல்லதன்கண் காதன்மை செயல் - ஒருவன் தனக்குத் தகாத ஒழுக்கத்திற் பெருவிருப்பங் கொள்ளுதல்.

கையல்லது செ-தல், இருமைக்கும் ஆகாதென்று அறநூலாற் கடியப்பட்டனவும், தன் நிலைமைக்கு ஏற்காதனவுமான தீய செயல்களைச் செ-தொழுகுதல். 'கை' ஒழுக்கம்; ஆகுபெயர்.

### 833. நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும் பேணாமை பேதை தொழில்.

**(இ-ரை.)** நாணாமை - வெட்கப்பட வேண்டிய செயல்கட்கு வெட்கப் படாமையும்; நாடாமை - ஆ-ந்து பார்க்க வேண்டியவற்றை ஆ-ந்து பாராமையும்; நாரின்மை - எவரிடத்தும் அன்பின்மையும்; யாது ஒன்றும் பேணாமை - பேணிக் காக்க வேண்டிய எதையும் காவாமையும்; பேதை தொழில் - பேதை செயல்களாம்.

வெட்கப்பட வேண்டியவை பழி கரிசுகள் (பாவங்கள்). ஆராய வேண்டியவை நல்லனவும் தீயனவும் வேண்டுவனவும் வேண்டாதனவும். பேணவேண்டியவை குடிப்பிறப்பு, தன்மானம், ஒழுக்கம், கல்வி, நல்நட்பு முதலியன. இயற்கைக் குணம் அல்லது வழக்கச் செயல் என்பதுபற்றித் 'தொழில்' என்றார். 'பேதை' இருபாற் பொது.

### 834. ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப் பேதையிற் பேதையா ரில்.

**(இ-ரை.)** ஓதியுணர்ந்தும் - அடங்கியொழுகுதற் கேதுவான அறநூல் களைக் கற்று அவற்றின் பொருளையும் பயனையும் தெளிவாக அறிந்தும்; பிறர்க்கு உரைத்தும் - அவற்றைப் பிறர்க்கு விளங்க எடுத்துச் சொல்லியும்; தான் அடங்காப் பேதையின் - தான் அவற்றின்படி அடங்கி யொழுகாத பேதைபோல; பேதையார் இல் - பேதையார் உலகத்தில் இல்லை.

பேதையார் இயல்பாக நல்லதையறியும் ஆற்றலில்லாதார். அறிவு நூல்களைக் கற்று அவற்றால் நல்லதை யுணர்ந்ததொடு, அதைப் பிறர்க்கு எடுத்துரைத்தும் தான் அதைக் கடைப்பிடிக்காதவன் இருமடிப் பேதை யாதலின், அறியாப் பேதையினும் அறிந்த பேதை கடைப்பட்டவன் என்பதை யுணர்த்தற்குப் 'பேதையிற் பேதையா ரில்' என்றார்.

**835. ஒருமைச் செயலாற்றும் பேதை யெழுமையுந்
தான்புக் கழுந்து மளறு.**

**(இ-ரை.)** பேதை - பேதையானவன்; எழுமையும் தான் புக்கு அழுந்தும் அளறு - எழுபிறப்பளவும் தான் அழுந்திக்கிடந்து வருந்தும் நரகத்துன் பத்தை; ஒருமைச் செயல் ஆற்றும் - இவ் வொருபிறப்புள்ளேயே தேடிக் கொள்ள வல்லவனாம்.

"வரும் பிறவிகளிலெல்லாந் தான் புக்கழுந்தும் நிரயத்தினை" என்றும், "முடிவில் காலமெல்லாம் தான் நிரயத் துன்பமுழத்தற் கேதுவாங் கொடு வினைகளை" என்றும், பரிமேலழகர் கூறியிருப்பது மிக வரையிறந்திருப் பதனாலும், எழுவகைப் பிறப்பிலும் அழுந்தும் நரகென்பது உத்திக்குப் பொருந்தாமையானும், இங்கு 'எழுமைச்' சொற்குத் தொகைப்பொருளே யன்றி வகைப்பொருள் கொள்ளப்படவில்லை. 'எழுமை' நிறைவு குறித்த மரபெண் களுள் ஒன்று. அது இங்கு நீண்ட காலத்தை யுணர்த்திற்று. 'அளறு' என்னும் பெயருக்கேற்ப 'அழுந்தும்' என்றார். ஆற்றுதல் செ-யமாட்டுதல். பேதை தனக்கு நெடுங்காலக் கேட்டைத் தானே தேடிக் கொள்ளுவான் என்பதாம்.

**836. பொ—படு மொன்றோ புனைபூணுங் கையறியாப்
பேதை வினைமேற் கொளின்.**

**(இ-ரை.)** கை அறியாப் பேதை வினை மேற்கொளின் - செ-யும் வகை யறியாத பேதை ஒரு கருமத்தை யேற்றுச் செ-யின்; பொ-படும் ஒன்றோ - அதிற் புரைவிழுதல் மட்டுமோ; புனைபூணும் - அவன் குற்றப்பட்டு விலங்கு பூணுதலும் நிகழும்.

'புரைவிழுதல்' துளைபடுதல்போல் உள்ளழிதல். புனை முதனிலைத் தொழிலாகுபெயர். பேதை வினைசெ-யின் வினையுங் கெட்டுத் தானும் கெடுவான் என்பதாம். பொள் - பொ-.

**837. ஏதிலா ராரத் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வ முற்றக் கடை.**

**(இ-ரை.)** பேதை பெருஞ்செல்வம் உற்றக்கடை - பேதையானவன் ஊழ்வயத்தாற் பெருஞ்செல்வம் பெற்றவிடத்து; ஏதிலார் ஆரத் தமர் பசிப்பர் - தன்னோடு ஒருதொடர்பு மில்லாத அயலார் நிரம்ப வுண்ணத் தன் குடும் பத்தாரும் நெருங்கிய உறவினரும் உண்ணுதற்கின்றிப் பசியோடிருப்பர்.

எல்லா நுகர்ச்சியும் பெறுதற் கேற்றதென்பது தோன்றப் 'பெருஞ் செல்வம்' என்றும், அது சொந்தத் தேட்டன்றித் தெ-வத்தால் வந்ததென்பது தோன்ற 'உற்றக்கடை' என்றும், எல்லாவகையிலும் இன்பம் நுகர்தல் தோன்ற 'ஆர' என்றும், உறவினர் உணவுமின்றி வருந்துதல் தோன்றப் 'பசிப்பர்' என்றும் கூறினார். "ஊரெங்கும் பேர், வீடு பட்டினி", "தமக்கை கிண்ணிப் பிச்சையெடுக்கத் தம்பி கும்பகோணத்திற் கோதானம் பண்ணுகின்றான்" என்னும் பழமொழிகள் இங்குக் கருதத்தக்கன. இக் குறளால், பேதை பெற்ற செல்வம் தமர்க்கன்றிப் பிறர்க்கே பயன்படுமென்பது கூறப்பட்டது.

### 838. மைய லொருவன் களித்தற்றாற் பேதைதன்
### கையொன் றுடைமை பெறின்.

**(இ-ரை.)** பேதை தன்கை ஒன்று உடைமை பெறின் - பேதையானவன் தன் கையில் ஒரு சிறந்த பொருளை உடைமையாகப் பெற்றிருந்தால்; மையல் ஒருவன் களித்த அற்று - அது ஏற்கெனவே பித்துக்கொள்ளியான ஒருவன் அதன்மேலுங் கள்ளுண்டு மயங்கினாற்போலும்.

'பெறின்' எனவே, அது சொந்தத் தேட்டன்றித் தெ-வத்தினால் வந்தமை பெறப்பட்டது. பேதைமையும் செல்வமயக்கும் ஒருங்கேயுடை யவன் பித்தமும் கள்வெறியும் ஒருங்கே கொண்டவன்போல், தலைகால் தெரியாமல் தடுமாறிக் கெடுவன் என்பதாம். இக் குறளால் பேதை பெற்ற செல்வம் அவன் பேதைமையையே மிகுக்கு மென்பது கூறப்பட்டது. 'ஆல்' அசைநிலை.

### 839. பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கட்
### பீழை தருவதொன் றில்.

**(இ-ரை.)** பேதையார் கேண்மை பெரிது இனிது - பேதையானவரின் நட்பு மிக இனியதாம்; பிரிவின்கண் தருவது பீழை ஒன்று இல் - எங்ஙன மெனின், அவரை விட்டுப் பிரியும்போது ஒரு துன்பமுந் தருவதில்லை.

"பேயோ டாயினும் பிரித லரிதே."

"பரீஇ யுயிர்செகுக்கும் பாம்பொடு மின்னா
மரீஇப் பின்னைப் பிரிவு" (நாலடி. 220)

ஆதலால், பழகினவரை விட்டுப் பிரிதலென்பது பொதுவாகத் துன்பந் தரு வதே, ஆயின், பேதையார் நட்பு வரவரத் தே-ந்து வருதலாலும் யாதொரு நன்மையுஞ் செ-யாமையாலும், அவரைவிட்டுப் பிரிதல் எள்ளளவுந் துன்பந்

தராததாம். இதனால். அறிவுடையோர் நட்பாயின அவர் பிரிவின்கண் பெரிதுந் துன்பந் தருமென்பது, எதிர்நிலை யளவையாற் பெறப்படும். பேதையாரைப் புகழ்வதுபோற் பழித்தலால், இது வஞ்சப்புகழ்ச்சி யென்னும் அணியாம்.

## 840. *கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றாற் சான்றோர்*
## *குழாஅத்துப் பேதை புகல்.*

**(இ-ரை.)** பேதை சான்றோர் குழாத்துப் புகல் - பேதையானவன் அறிவொழுக்கங்களால் நிறைந்த பெரியோர் அவையின்கண் புகுதல்; கழாக்கால் பள்ளியுள் வைத்த அற்று - கழுவித் துப்புரவு செ-யாத காலைத் தெ-வ நிலையமான கோவிற்குள் வைத்தாற் போலும்.

இக் குறளிலுள்ள உவமக் கூற்றில் 'பள்ளி' என்பது பலபொரு ளொரு சொல். பிறரெல்லாம் படுக்கை அல்லது படுக்கையறையென்றே பொருள் கொண்டனர். பரிமேலழகர் அமளியென்னுஞ் சொல்லையாண்டார். மணக்குடவ பரிப்பெருமாளர் பள்ளியென்னும் மூலச் சொல்லையே ஆண்டனர். "தூய வல்ல மிதித்த காலை இன்பந்தரும் அமளிக்கண்ணே வைத்தாற் போலும்" என்னும் பரிமேலழகர் உவமவுரை பொருத்தமாகத் தோன்றுவதே. ஆயின், முழுப் பொருத்தமாகத் தோன்றவில்லை. 'இன்பந்தரும் அமளி' என்பது சான்றோரவையின் இன்பத்தன்மையையும் துப்புரவுத் தன்மையையும் குறிக்குமேயன்றி, அதன் சிறப்பியல்பான தெ-வத்தன்மையை எடுத்துக்காட்டாது.

**"அங்கண் விசும்பின் அகனிலாப் பாரிக்கும்**
**திங்களுஞ் சான்றோரு மொப்பர்மன் – திங்கள்**
**மறுவாற்றுஞ் சான்றோரஃ தாற்றார் தெருமந்து**
**தே–வ ரொருமா சுறின்"** **(நாலடி. 152)**

என்பதனால் சான்றோரின் தெ-வத்தன்மை உணரப்படும். 'கழாக்கால்' என்பது, அழுக்குந் தூசியும் நீராற் போக்கப்படாத காலையும். வெளிச் சென்று கழுவாத காலையும், நரகலை மிதித்துக் கழுவாத காலையுங் குறிக்கும். அத்தகைய துப்புரவற்ற காலைப் படுக்கையறையில் வைத்தாலும், சமையலறை, ஊணறை, சரக்கறை, இருக்கையறை, அலுவலறை முதலிய பிறவிடங்களில் வைத்தாலும், ஏறத்தாழ ஒன்றே. ஆதலால், இங்குப் பள்ளியென்பது, அருகிலுள்ள திருக்குளத்திற் குளித்தோ குளியாதோ காலை நீரால் துப்புர

வாக்கியல்லது புகக்கூடாத, தேவகமாகிய கோவிலைக் குறித்ததாகக் கொள்வதே சிறப்புடையதாம். 'உள்' என்னும் இடவேற்றுமை யுருபு கோவிற் கன்றி அமளிக் கேற்காமையையும் நோக்குக. வீட்டிலும் வேறிடத்திலும் குளித்து வருவார்க்கும் வரும்வழியிற் காலிற் படிந்த மாசைப் போக்கு வதற்கே, கோயில்தொறும் திருக்குளமும் அருகிலுள்ளது. இதனால், 'கோயில் குளம்' என்பது ஓர் இணைச்சொல்லாகவும் வழங்கி வருகின்றது. எப்பொரு ளதாயினும், பள்ளி யென்பது தூய தமிழ்ச்சொல் லென்பதைப் பின்னிணைப்பிற் கண்டு தெளிக.

கழாக்கால் என்பது வெளிச் சென்று கழுவாத காலைக் குறிப்பின் இடக் கரடக்கல். 'கழாஅ', 'குழாஅத்து' இசைநிறை யளபெடைகள். 'ஆல்' அசைநிலை.

## அதி. 85 அரு - புல்லறிவாண்மை

*அதாவது, சிற்றறிவுடையரா யிருந்து அதை ஆளுந்தன்மை. ஆளுதல் பயன்படுத்துதல். பேதைமைபோல இதுவும் ஒரு தற்பகைக் குணமாதலின், பேதைமையின் பின் வைக்கப்பட்டது.*

***841. அறிவின்மை யின்மையு ளின்மை பிறிதின்மை***
***யின்மையா வையா துலகு.***

**(இ-ரை.)** இன்மையுள் இன்மை அறிவு இன்மை - ஒருவனுக்கு வறு மைக ளெல்லாவற்றுள்ளும் மிகக் கொடியது அறிவில்லாமை; பிறிது இன்மை உலகு இன்மையா வையாது - மற்றச் செல்வமின்மையை உயர்ந்தோர் வறுமையாகக் கருதார்.

அறிவு என்னும் பொதுப்பெயர் இங்கு வழக்குப்பற்றி நல்லறிவைக் குறித்தது. அறிவில்லார் செல்வம் பெற்றவிடத்தும் அதனாற் பெறக்கூடிய இம்மை மறுமைப் பேறுகளைப் பெறாமையின், அதை 'இன்மையு ளின்மை' என்றும், அறிவாளர் வறியவரா யிருந்தவிடத்தும் இருமைப் பேறுகளையும் பெறுதலால் அதை 'இன்மையா வையாது' என்றும் கூறினார். 'இன்மைச் சொல் பின்னும் பின்னும் வந்தது சொற்பொருட் பின்வருநிலையணி. 'ஆக' என் னும் வினையெச்ச வீறு கடைக்குறைந்து நின்றது. 'உலகு' ஆகுபெயர்.

***842. அறிவிலா னெஞ்சுவந் தீதல் பிறிதியாது***
***மில்லை பெறுவான் றவம்.***

**(இ-ரை.)** அறிவு இலான் நெஞ்சு உவந்து ஈதல் - புல்லறிவாளன் ஒருவனுக்கு ஒரு பொருளை மனமகிழ்ந்து கொடுத்தல் நேரின்; பெறுவான் தவம் பிறிது யாதும் இல்லை - அதற்குக் கரணியம் பெறுகின்றவன் செ-த முன்னை நல்வினையே யன்றி வேறொன்று மன்று.

புல்லறிவாளரும் ஏதேனுமொரு சமையம் பிறர்க்கு நெஞ்சாரக் கொடுத்துதவுகின்றனரேயெனின், அவ் வுதவி பெறுகின்றவர் அவ் வுதவியைத் தம் முன்னை நல்வினைப் பயனாகக் கண்டெடுத்த பொருள்போற் பெறுகின்றனரேயன்றி, அப் புல்லறிவாளர் இயல்பான ஈகைத்தன்மையாலாவது இம்மைப் புகழும் மறுமை நல்வாழ்வும் நோக்கிய அறவினையாகவாவது அவ் வுதவியைச் செ-கின்றாரல்லர் எனக் கரணியங் காட்டியவாறு. நேரின், அதற்குக் கரணியம் என்னுஞ் சொற்கள் அவா-நிலையான் வந்தன.

## *843. அறிவிலார் தாந்தம்மைப் பீழிக்கும் பீழை*
## *செறுவார்க்குஞ் செ—த லரிது.*

**(இ-ரை.)** அறிவு இலார் தாம் தம்மைப் பீழிக்கும் பீழை - புல்லறிவாளர் தாமே தம்மைத் துன்புறுத்திக் கொள்ளும் துன்பம்; செறுவார்க்கும் செ-தல் அரிது - அதைச் செ-தற்குரிய பகைவராலுஞ் செ-தற் கியலாதாம்.

இயலாமை அளவும் வகையும் கடுமையும்பற்றியதாகும். பகைவர் தம்மாலியன்ற தீங்கைமட்டும் காலமும் இடமும் அறிந்து நால்வகை வலியும் ஒப்புநோக்கித் தீர எண்ணிச் செ-வர். புல்லறிவாளரோ வறுமை, நோ-, கரிசு (பாவம்), பழி முதலிய பலவகைத் துன்பங்களையும் எச்சமையத்தும் தாமே தேடிக் கொள்ளுதலின் செறுவார்க்குஞ் செ-தலரிது என்றார். உம்மை இழிவுசிறப்பு.

## *844. வெண்மை யெனப்படுவ தியாதெனி னொண்மை*
## *யுடையம்யா மென்னுஞ் செருக்கு.*

**(இ-ரை.)** வெண்மை எனப்படுவது யாது எனின் - புல்லறிவுடைமையென்று சொல்லப்படுவது, என்னது என்று வினவின்; யாம் ஒண்மை உடை யம் என்னுஞ் செருக்கு - அது யாம் விளங்கிய அறிவுடையேம் என்று தாமே தம்மை உயர்வாக மதிக்கும் மடம்பட்ட ஆணவம்.

'வெண்மை' என்பது இங்கு விளையா மரம் போன்ற முதிரா அறிவு; பண்பாகு பெயர். ஒப்புமைபற்றிக் காட்சிப்பொருளின் தன்மையாகச் சார்த்திக் கூறப்பட்டது. ஒண்மை ஒளியுடைமை; அதாவது விளங்கிய அல்லது

தெளிந்த அறிவுடைமை. புறக்கண்ணிற்குப் பொருளை விளக்கும் ஒளிபோல் அகக்கண்ணிற்குப் பொருளை விளக்கும் அறிவு, புறவொளிக்கு இனமான அகவொளியாகக் கொள்ளப்பட்டது. செருக்கு உண்மையொடு கூடியதும் கூடாததும் என இருவகைப்படும். ஒரு நல்லறிவாளன் தன்னை உயர்வாக மதிப்பது உண்மையொடு கூடியது; ஒரு புல்லறிவாளன் அங்ஙனம் தன்னை மதிப்பது உண்மையொடு கூடாதது. இரண்டுங் குற்றமே. ஆயின், பின்னது இருமடிக் குற்றமாம்.

மேலையாரியர், சிறப்பாக அமெரிக்கர், யாம் அறிவியலைக் கண்டு வளர்த்தேமென்றும், திங்களை யடைந்தேமென்றும், எல்லாத் துறையும் வல்லேமென்றும், தருக்கியும் செருக்கியும் வரலாற்று மொழிநூலைப் புறக் கணித்து, ஆரிய அடிப்படையில் வண்ணனை மொழிநூலை வளர்த்து வருவதும் வெண்மையின்பாற் பட்டதே.

**845. கல்லாத மேற்கொண் டொழுகல் கசடற**
**வல்லதூஉ மையந் தரும்.**

**(இ-ரை.)** கல்லாத மேற்கொண்டு ஒழுகல் - புல்லறிவாளர் தாம் கல்லாத நூல்களையுங் கற்றதாகக் காட்டிக்கொண்டு ஒழுகுதல்; கசடு அற வல்லதும் ஐயம் தரும் - அவர் பிழையின்றிக் கற்றுத் தேர்ந்த நூலறிவுபற்றியும் பிறர்க்கு ஐயுறவை யுண்டுபண்ணும்.

'கசடு' ஐயந்திரிபு குறைவுகள். குறைவாவது, பாம்பைப் பாம்பென் றறிந் தும் உயிருள்ளதா செத்ததா என்றும், நச்சுப்பாம்பா நற்பாம்பா என்றும், பிற வாறும் நிறைவுற அறியாமை. 'ஐயம்' இவர் தேர்ச்சி பெற்றதாகச் சொல்லப் பெறும் துறையறிவும் இத்தகையதுதானோ எனக் கருதுதல். 'வல்லதூஉம்' இன்னிசை யளபெடை. உம்மை இறந்தது தழுவிய எச்சம்.

**846. அற்ற மறைத்தலோ புல்லறிவு தம்வயிற்**
**குற்ற மறையா வழி.**

**(இ-ரை.)** தம் வயின் குற்றம் மறையாவழி - புல்லறிவாளர் தம்மிடத் துள்ள குற்றங்களை நீக்காவிடத்து; அற்றம் மறைத்தலோ புல் அறிவு - தம் மரும வுறுப்புகளைமட்டும் ஆடையால் மறைத்துக் கொள்ளுதல் சிற்றறிவாம்.

'அற்றம்' ஆடையற்ற நிலை. மறைத்தல் இரண்டனுள் முன்னது கண்ணிற்குத் தோன்றாதவாறு செ-தல்; பின்னது இல்லாதவாறு செ-தல்.

அற்றம் மறைத்தலினும் குற்றம் மறைத்தலே உயர்திணை மாந்தனுக்கு இன்றியமையாத தென்பது கருத்து.

## 847. அருமறை சோரு மறிவிலான் செ–யும்
## பெருமிறை தானே தனக்கு.

**(இ–ரை.)** அருமறை சோரும் அறிவு இலான் - பிறரிடம் சொல்லக் கூடாத உயிர்நாடியான மருமச் செ-திகளைத் தன் வா- காவாது வெளி விட்டுவிடும் புல்லறிவாளன்; தானே தனக்குப் பெரும் இறை செ-யும் - தானே தனக்குப் பெருங்கேட்டை வருவித்துக் கொள்வான்.

இக் குறட்கு, 'பெறுதற்கரிய உபதேசப் பொருளைப் பெற்றாலும் உட் கொள்ளாது போக்கும் புல்லறிவாளன், அவ் வுறுதி யறியாமையாற் றானே தனக்கு மிக்க வருத்தத்தைச் செ-துகொள்ளும் என்று தொடருரையும், "இனி 'அருமறை சோரு' மென்பதற்குப் பிறரெல்லாம் உள்ளத்தடக்கப்படும் எண் ணத்தை வா- சோர்ந்து பிறர்க்குரைக்கு மென்றுரைத்தார்; அது பேணாமை யென்னும் பேதைமையாவதன்றிப் புல்லறிவாண்மை யன்மை யறிக" என்று சிறப்புரையும் வரைந்தார் பரிமேலழகர். சமயகுரவன் செவியறிவுறுத்தும் மந்திரப் பொருளைப் பண்பட்ட மாணவன் பெறுதல் அறத்துப்பாலில் துறவற வியலில் 'மெ-யுணர்தல்' என்னும் அதிகாரத்திற்கு ஏற்குமேயன்றி, பொரு ளீட்டுதலேபற்றிய பொருட்பாலில் எவ்வதிகாரத்திற்கும் ஏற்காது. சமயத் துறையும் மெ-ப்பொருளியலும் பற்றிய வுரையே சாலச் சிறந்ததென்பது பரிமேலழகர் கடைப்பிடித்த நெறிமுறையாகத் தெரிகின்றது. 833ஆம் குறளுரையில், "பேணவேண்டுமவை குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்க முதலாயின" என்று அவரே உரைத்தார். அவை வெளிப்படையாகப் பேணவேண்டிய பண்பாட்டுக் கூறுகளே யன்றி, மறைவாக மனத்துள் வைத்துக் காக்கும் மருமச் செ-திகளல்ல. ஒருகால் மறை என்பதை மறைநூற் பொருளென்று பரிமேலழகர் கொண்டார் போலும்.

"அறைபறை யன்னர் கயவர்தாங் கேட்ட
மறைபிறர்க் கு–த்துரைக்க லான்" (குறள். 1076)

என்பதிற் குறித்தது பிறரைப்பற்றிய மறையென்றும், வேறுபாடறிக.

வெளிப்படின் பதவியும் செல்வமும் உயிரும் இழத்தற்குக் கரணிய மாகும் மறைவுச் செ-திகளையே 'அருமறை' என்றார். அவை சிமிசோன் தன் மதவலிக்குக் கரணியமான பிறவிச்சடை நிலைமையைத் தெலீலாள்

என்னும் பொதுமகளிடம் வெளிப்படுத்தியது போல்வன. 'அருமறை சோரும்' என இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்தின்மேல் நின்றது. இனி, ஒருசொற் றன்மைப்பட்ட கூட்டுச்சொல் எனினுமாம். அருமறை சோர்தல் அறிந்து சோர்வதும் அறியாது சோர்வதும் என இருவகைப்படும். சிமிசோன் அறிந்து சோர்ந்தான்.

### 848. ஏவவுஞ் செ–கலான் றான்றேறா னவ்வுயிர்
### போஒ மளவுமோர் நோ–.

**(இ–ரை.)** ஏவவுஞ் செ-கலான் - புல்லறிவாளன் தனக்கு நன்மையான வற்றை அறிவுடையார் செ-யச் சொல்லினுஞ் செ-வதில்லை; தான் தேறான் - தானாகவும் தனக்கு நன்மையானவற்றை அறிந்துகொள்வதில்லை; அவ் வுயிர் போம் அளவும் ஓர் நோ- - அத்தகையவன் உயிர் உடம்பினின்று நீங்குமளவும் அவனைத் தாங்கும் உறவினர்க்கெல்லாம் ஒப்பற்ற கொடிய நோயாம்.

தன்மதியும் சொன்மதியும் இல்லாதவன் அஃறிணைத் தன்மைப்பட்டு நிற்றலின் 'அவ்வுயிர்' என்றும், அவனால் வருந் தொல்லை வாழ்நாள் முழுதுந் தொடர்தலின் 'போஒ மளவும்' என்றும், நோ-போல் துன்பந்தருதலின் 'நோ-' என்றும் கூறினார். உம்மை எச்சம். 'போஒம்' இசைநிறை யளபெடை.

### 849. காணாதாற் காட்டுவான் றான்காணான் காணாதான்
### கண்டானாந் தான்கண்ட வாறு.

**(இ–ரை.)** காணாதாற் காட்டுவான் தான் காணான் - தன்னைப் பேரறி வாளனாகக் கருதுவதால் பிறர் வாயிலாக ஒன்றறியுந் தன்மையில்லாத புல்லறிவாளனுக்கு அறிவு புகட்டப் புகுந்தவன், அவனாற் பழிக்கப்பட்டுத் தான் அறியாதவன் என்னும் நிலைமையே அடைவன்; காணாதான் தான் கண்டவாறு கண்டான் ஆம் - அவ் வறியுந்தன்மை இல்லாதவனோ, தான் அறிந்தவகையே சரியென்று நம்புவதால், இறுதியில் தான் முன்பு அறிந்த வாறே அறிந்தவனாக முடியும்.

புல்லறிவாளனுக்கு நல்லறிவு கொளுத்தும் வகை இல்லையென்றவாறு. இதில் வந்துள்ளது சொற்பொருட் பின்வருநிலையணி.

### 850. உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்
### தலகையா வைக்கப் படும்.

**(இ-ரை.)** உலகத்தார் உண்டு என்பது இல் என்பான் - உயர்ந்தோ ரெல்லாரும் உண்டென்று சொல்லும் பொருளை இல்லையென்று மறுக்கும் புல்லறிவாளன்; வையத்து அலகையா வைக்கப்படும் - மண்ணுலகத்தில் மாந்தன் வடிவில் வாழும் பேயாகக் கருதப்படுவான்.

உயர்ந்தோர் உண்டென்ப கடவுள், மறுபிறப்பு, இருவினைப் பயன், வீடு, தீயுழி (நரகம்) முதலியன.

**"ஒன்றறி கிளவி தறட வூர்ந்த**
**குன்றிய லுகரத் திறுதி யாகும்"** **(சொல். கிளவி. 8)**

என்னும் தொல்காப்பிய நூற்பாப்படி உண்டு என்பது ஒன்றன்பாற் சொல்லாத லால், 'உண்டென்பது' வகுப்பொருமை. "வேறில்லை யுண்டைம் பால்மூ விடத்தன" என்னும் 13 ஆம் நூற்றாட்டை நன்னூல் நூற்பா (336) பிற்காலத்ததாம். தேவிகம் (சாத்துவிகம்), மாந்திகம் (இராசதம்), பேயிகம் (தாமதம்) என்னும் மூவகை மாந்தத் தன்மையுள் முதலிரண்டும் இல்லாதவனை 'அலகை' என்றார்.

## அதி. 86 - இகல்

*அதாவது, இருவர் ஒரு பொருள்பற்றி அல்லது அன்பின்மை கரணியமாகத் தம்முட் பொருது அல்லது போராடித் தோற்றற்கும் அழிதற்கும் ஏதுவான மாறுபாடு. பேதைமையும் புல்லறிவாண்மையும் ஆகிய தற்பகைக் குணங்களின் பின் மற்பகைக் குணத்தைக் கூறுகின்றாராதலின், இது புல்லறிவாண்மையின்பின் வைக்கப்பட்டது. மன் - மற்ற. மற்பகை பிறரைப் பகைத்தல். "தன்னுயிர்போல் மன்னுயிரையும் நினைக்க வேண்டும்" என்னும் பழமொழியை நோக்குக.*

*மக்களெல்லாரும் ஒற்றுமையா- அன்புற்றும் இன்புற்றும் வாழ வேண்டுமென்பது ஆசிரியர் நோக்கமாதலின், அதற்குத் தடையாயுள்ள பகைமைக் குணத்தை இங்குக் கண்டிக்கின்றார். இங்கு இகல் தடையா யிருத்தலின், இது இப் பொருட்பாலில் விலக்கப்பட்டது.*

***851.*** **இகலென்ப வெல்லா வுயிர்க்கும் பகலென்னும்**
**பண்பின்மை பாரிக்கும் நோ-.**

**(இ-ரை.)** இகல் - மாறுபாடு; எல்லா உயிர்க்கும் பகல் என்னும் பண்பு இன்மை பாரிக்கும் நோ- - இயங்குதிணைப்பட்ட எல்லா வுயிர்கட்கும்

இனத்தொடு கூடி வாழாமைக்கு ஏதுவான, பிரிவினை யென்னும் தீய குணத்தை வளர்க்கும் மனநோ–; என்ப - என்று கூறுவர் அறநூலார்.

சேக்கையும் உணவும் இணைவிழைச்சும்பற்றி அஃறிணையுயி ரினங்கட்குள்ளும் இகல் விளைதலின், 'எல்லா வுயிர்க்கும்' என்றும், ஒன்று பட்டிருக்க வேண்டிய இனத்தைப் பல்வேறு பிரிவாகப் பகுத்தலால் 'பகல்' என்றும் கூறினார். சேக்கை தங்குமிடம். இகலென்னுந் தீக்குணமுடைய மாந்தர் உயர்திணையாகாது அஃறிணைப்பாற்படுவர் என்பது தோன்றப் 'பண்பின்மை பாரிக்கு நோ–' என்றார்.

### 852. *பகல்கருதிப் பற்றா செயினு மிகல்கருதி*
### *யின்னாசெ– யாமை தலை.*

**(இ–ரை.)** பகல் கருதிப் பற்றா செயினும் - ஒருவன் தன்னொடு கூடி வாழாமை கருதி வெறுப்பன செ–தானாயினும்; இகல் கருதி இன்னா செ– யாமை தலை -அவனொடு மாறுபாடு கொண்டு அவனுக்குத் தீயவற்றைச் செ–யாதிருத்தல் சிறந்ததாம்.

தீயன செ–யச் செ–யப் பகைமை மேன்மேல் வளர்தலாலும், அதனால் மனநோவும் உடல்நலக் கேடும் வாழ்நாட் குறைவும் மக்கள் அமைதிக் குலைவும் ஏற்படுதலாலும், அவற்றைச் செ–யாவிடின் அன்பும் அமைதியும் நிலவி இன்பும் பண்பாடும் வளர்ந்து வாழ்நாள் பெருகுதலாலும், 'இன்னா' செ–யாமை தலை' என்றார். 'பற்றா', 'இன்னா' எதிர்மறை வினையாலணையும் பெயர்கள். உம்மை இழிவு சிறப்பு.

### 853. *இகலென்னு மெவ்வநோ– நீக்கிற் றவலில்லாத்*
### *தாவில் விளக்கந் தரும்.*

**(இ–ரை.)** இகல் என்னும் எவ்வ நோ– நீக்கின் - மாறுபாடு என்று சொல் லப்படும் துன்பந்தரு நோயை ஒருவன் தன் மனத்தினின்று நீக்குவானாயின்; தவல் இல்லாத் தா இல் விளக்கம் தரும் - அது அவனுக்கு அழியாத குற்ற மற்ற புகழைத் தரும்.

உலகுள்ள அளவும் நிலைத்து நிற்றலால் 'தவலில்லா' என்றும், எல்லா ராலும் புகழப்படுவதாலும் பெயரை விளங்கச் செ–வதாலும் 'தாவில் விளக்கம்' என்றும் கூறினார்.

**854. *இன்பத்து ளின்பம் பயக்கு மிகலென்னுந்***
***துன்பத்துட் டுன்பங் கெடின்.***

**(இ-ரை.)** இகல் என்னும் துன்பத்துள் துன்பம் கெடின் - மாறுபாடு என்று சொல்லப்படும் தலையாய துன்பம் ஒருவனுக்கு இல்லையாயின்; இன்பத்துள் இன்பம் பயக்கும் - அவ் வில்லாமை அவனுக்குத் தலையாய இன்பத்தை விளைக்கும்.

'துன்பத்துள் துன்பம்' எல்லார்க்கும் பொல்லாதவனா- எங்கும் எப்போதும் துன்புறுதல். 'இன்பத்துள் இன்பம்' எல்லார்க்கும் நல்லவனா- எங்கும் எப்போதும் இன்புறுதல்.

**855. *இகலெதிர் சா—ந்தொழுக வல்லாரை யாரே***
***மிகலூக்குந் தன்மை யவர்.***

**(இ-ரை.)** இகல் எதிர் சா-ந்து ஒழுக வல்லாரை - தன் உள்ளத்தில் தோன்றும் மாறுபாட்டை ஏற்றுக்கொள்ளாது அதன் எதிரே வெள்ளத்து நாணல்போற் சா-ந்தொழுக வல்லாரை; மிகல் ஊக்கும் தன்மையவர் யாரே - வெல்ல முனையுந் தன்மையுடையார் யார்தான்?

இகலெதிர் சா-ந்தொழுகுதல் பொதுவாக எல்லார்க்கும், சிறப்பாக அரசர்க்கு அரிதாகலின் 'வல்லாரை' என்றும், எல்லார்க்கும் நண்பராகின் வெல்லக் கருதுவார் இராராதலின் 'யாரே மிகலூக்குந் தன்மையவர்' என்றும் கூறினார். இம் மூன்று குறளாலும் இகலில்லார்க்கு வரும் நன்மை கூறப் பட்டது. ஏகாரம் பிரிநிலை. மாந்தன் உள்ளத்தில் இயல்பானே தீக்கூறும் அதை எதிர்க்கும் நற்கூறும் இருத்தலின், இகலும் எதிர்சா-தலும் இயல்வனவாம்.

**856. *இகலின் மிகலினி தென்பவன் வாழ்க்கை***
***தவலுங் கெடலு நணித்து.***

**(இ-ரை.)** இகலில் மிகல் இனிது என்பவன் வாழ்க்கை - பிறரொடு மாறுபடுவதில் மிகுதல் தனக்கு நல்லதென்று அதனை மேற்கொள்வானது உயிர்வாழ்க்கை; தவலும் கெடலும் நணித்து - நிலைதாழ்தலும் அதன்பின் முடிதலும் மிக நெருங்கியனவாம்.

மிகுதல் மேன்மேல் முனைதல். இனிதாதல் வெற்றிதருதல். 'தவல்' பொருட்கேடும் 'கெடல்' உயிர்க்கேடுமாம். 'நணித்து' என்பதனைத் 'தவலும்

நணித்து', 'கெடலும் நணித்து' எனத் தனித்தனி இரண்டற்கும் பயனிலை யாக்குக. தவ்வல் - தவல் = தாழ்தல்.

**857. மிகன்மேவன் மெ—ப்பொருள் காணா ரிகன்மேவ**
**லின்னா வறிவி னவர்.**

**(இ—ரை.)** இகல் மேவல் இன்னா அறிவினவர் - மாறுபாட்டை விரும்பு கின்ற தீய அறிவினையுடையார்; மிகல் மேவல் மெ-ப்பொருள் காணார் - வெற்றியோடு பொருந்தும் அரசியலுண்மைகளை அறியமாட்டார்.

'மெ-ப்பொருள்' தப்பாது வா-க்கும் நெறிமுறைகள். 'இன்னா அறிவு' தமக்கும் தம்மைச் சார்ந்தவர்க்கும் தீங்கு விளைக்கும் அறிவு. இகலால் அகக் கண் மங்குதலால் 'காணார்' என்றார். இவ் விரு குறளாலும் இகலினார்க்கு வருந் தீங்கு கூறப்பட்டது.

**858. இகலிற் கெதிர்சா—த லாக்க மதனை**
**மிகலூக்கி னூக்குமாங் கேடு.**

**(இ—ரை.)** இகலிற்கு எதிர்சா-தல் ஆக்கம் - தன் உள்ளத்திலெழும் மாறுபாட்டை ஏற்காது விடுதல் ஒருவனுக்கு ஆக்கந் தருவதாம்; அதனை மிகல் ஊக்கின் கேடு ஊக்குமாம் - அங்ஙனமன்றி அதில் மேற்படுவதில் முனையின், கேடும் அவனிடத்து வருவதில் முனையும்.

எதிர்சா-தல் முன்விலகுதல். ஆக்கந்தருவதை ஆக்கமென்று கரணி யத்தைக் கருமியமாகச் சார்த்திக் கூறினார். 'மிகலூக்கல்' ஒருசொற் றன்மைப் பட்ட செயப்படுபொருள் குன்றாவினை.

**859. இகல்காணா னாக்கம் வருங்கா லதனை**
**மிகல்காணுங் கேடு தரற்கு.**

**(இ—ரை.)** ஆக்கம் வருங்கால் இகல் காணான் - ஒருவன் தனக்கு ஆக்கம் வருங்காலத்தில் மாறுபாடு கொள்ளுதற்குக் கரணியம் ஏற்படினும் அதைக் கொள்ளக் கருதான்; கேடு தரற்கு அதனை மிகல் காணும் - தனக்குக் கேட்டை வருவித்தற்குக் கரணியமின்றியும் அம் மாறுபாட்டில் மேற்படுதலைக் கருதுவான்.

ஆக்கம் ஊழால் வருவது தோன்ற 'வருங்கால்' என்றும், கேடும் அத னால் தானே வருவித்தல் தோன்றத் 'தரற்கு' என்றும், கூறினார். 'மிகல் காணும்'

என்பதும் 'மிகலூக்கின்' என்பதுபோல ஒருசொற் றன்மைப்பட்ட செயப்படு பொருள் குன்றாவினையாம்.

**860. இகலானா மின்னாத வெல்லா நகலானா**
**நன்னய மென்னுஞ் செருக்கு.**

**(இ-ரை.)** இகலான் இன்னாத எல்லாம் ஆம் - ஒருவனுக்கு மாறு பாடொன்றினாலேயே தீயனவெல்லாம் உண்டாகும்; நகலான் நல்நயம் என்னும் செருக்கு ஆம் - அதற்கு மறுதலையான நட்பினால் நல்ல நேர்பாடு (நீதி) என்னும் செல்வம் உண்டாகும்.

'இன்னாத' வறுமை, உறுப்பறை, பழி, பளகம் (பாவம்) முதலியன. 'நகல்', 'செருக்கு' என்பன அவற்றிற்குக் கரணியமான நட்பையுஞ் செல்வத்தையுங் குறித்தன. நேர்பாடு இங்கு ஒரு செல்வமாகக் கொள்ளப்பெற்றது. இனி, 'நன்னய மென்னும் செருக்கு' என்பது பெருநன்மையாகிய செல்வம் எனினு மாம். இதில் வந்துள்ளது வேற்றுமையணி.

## அதி. 87 - பகைமாட்சி

*அதாவது அறிவின்மை, சூழ்ந்து செ-யாமை, சுற்றந்தழூவாமை, துணை யின்மை முதலிய குற்றங்குறைகளாற் பகையைச் சிறப்பித்தல், அதாவது மிகுதிப்படுத்தல். சிறப்பென்பது இங்கு மிகுதி. முன்பு பொதுவகையால் விலக்கப்பட்ட இகலை இங்குச் சிறப்புவகையால் மேற்கொள்ளுமாறு ஏவுகின்றாராதலின், இது அதன்பின் வைக்கப்பட்டது.*

**861. வலியார்க்கு மாறேற்ற லோம்புக வோம்பா**
**மெலியார்மேன் மேக பகை.**

**(இ-ரை.)** வலியார்க்கு மாறு ஏற்றல் ஓம்புக - தம்மினும் வலியார்க்குப் பகையெதிர்த்தலைத் தவிர்க; மெலியார்மேல் பகை ஓம்பா மேக - மற்ற மெலியார்க்குப் பகையாதலைத் தவிராது விரும்புக.

துணைவலி யுடைமையால் மெலியார் வலியாராதலும் அஃதின்மை யால் வலியார் மெலியாராதலும் உண்மையால், மெலியார் என்னுமிடத்துத் துணைவலியின்மையுங் கொள்ளப்படும்.

இது பொருட்பாலாதலாலும் "வினையே ஆடவர்க் குயிரே" (குறுந். 135) என்பதாலும், வணிகர் பொருளீட்டும் வினைபோன்றே அரசர் பிற நாடு

களைக் கைப்பற்றச் செ-யும் போர்வினையும் அவர் கடமையாகப் பண்டைக் காலத்தில் கருதப்பட்டதினாலும், "மெலியார்மேல் மேக பகை" என்றார். மேலும், இங்ஙனம் வலியப் போர்க்குச் செல்லுதலோடு,

**"எஞ்சா மண்நசை வேந்தனை வேந்தன்**
**அஞ்சுதகத் தலைச்சென் றடல்குறித் தன்றே,"** **(தொல். 1008)**

**"மைந்துபொரு ளாக வந்த வேந்தனைச்**
**சென்றுதலை யழிக்குஞ் சிறப்பிற் றென்ப"** **(தொல். 1016)**

என்ற முறைப்படி வந்த போரை விடாமையும் அவர் கடமையாயிற்று.

## 862. அன்பில னான்ற துணையிலன் றான்றுவ்வா
## னென்பரியு மேதிலான் றுப்பு.

**(இ-ரை.)** அன்பு இலன் - தன் சுற்றத்தின்மேல் அன்பில்லாதவனாகவும்; ஆன்ற துணை இலன் - சிறந்த துணையில்லாதவனாகவும், தான் துவ்வான் - அவற்றோடு தானும் வலிமையில்லாதவனாகவும் உள்ள ஒருவன்; ஏதிலான் துப்பு என் பரியும் - தன்மேல் வந்த பகைவன் வலிமையை எங்ஙனந் தொலைப்பான்?

இம் மூன்று நிலைமையும் ஒருங்கே யுடையவன் எளிதா- வெல்லப் படுவான் என்பதாம். ஆனுதல் நிறைதல் அல்லது போதியதாதல். துத்தல் வலியுறுதல். 'துப்பு' தொழிற்பெயரடிப் பண்புப் பெயர்.

## 863. அஞ்சு மறியா னமைவில னீகலான்
## றஞ்ச மெளியன் பகைக்கு.

**(இ-ரை.)** அஞ்சும் - போருக்கு அஞ்சுபவனாகவும்; அறியான் - அறிய வேண்டியவற்றை அறியாதவனாகவும்; ஈகலான் - ஈகைத்தன்மை யில்லாத வனாகவும் இருப்பவன்; பகைக்குத் தஞ்சம் எளியன் - தன் பகைவர்க்கு மிக எளியனாவன்.

இந் நான்கு நிலைமைகளுள் ஒன்றிருப்பினும் தோல்விக் கேதுவா யிருக்க, நாலும் ஒன்றுசேரின் தோல்வியுறுதல் முழுவுறுதியும் மிக எளிதா- நேர்வதுமாதலின், 'தஞ்ச மெளியன்' என்றார். 'தஞ்சம்' எளிமைப் பொரு ளிடைச்சொல்.

**"தஞ்சக் கிளவி யெண்மைப் பொருட்டே"** **(தொல். 751)**

தஞ்சமெளியன் மீமிசைச்சொல். எளியனாதல் எளிதா- வெல்லப்படுதல்.

## *864. நீங்கான் வெகுளி நிறையில னெஞ்ஞான்றும் யாங்கணும் யார்க்கு மெளிது.*

**(இ-ரை.)** வெகுளி நீங்கான் - சினத்தை விடாதவனாகவும் நிறை இலன் - அடக்கமில்லாதவனாகவு மிருப்பவன்மேற் செல்லுதல்; எஞ்ஞான்றும் யாங்கணும் யார்க்கும் எளிது - எக்காலத்தும் எவர்க்கும் எளிதாம்.

'நிறை' மறை பிறரறியாவாறு மனத்தில் நிறுத்துதல். "நிறையெனப் படுவது மறைபிற ரறியாமை" (கலித். 133). சினத்தன்மையனாகவும் மறை வெளிப்படுத்துபவனாகவும் மிருத்தலால், அவன்மேற் சென்று பொருது வெல்லுதற்குக் காலமும் இடமும் வலியுமறிந்து செல்லுதல் வேண்டா தாயிற்று. "இனி, இனிதென்று பாடமோதி அவன் பகைமை இனிதென் றுரைப்பாரு முளர்" என்று பரிமேலழகர் ஒரு பாடவேறுபாடு காட்டுவார்.

## *865. வழிநோக்கான் வா-ப்பன செ-யான் பழிநோக்கான் பண்பிலன் பற்றார்க் கினிது.*

**(இ-ரை.)** வழிநோக்கான் - வினைகளைச் செ-யும் வழிகளை ஆ-ந் தறியாதவனாகவும்; வா-ப்பன செ-யான் - தப்பாது வா-க்கும் வினைகளை மேற்கொள்ளாதவனாகவும்; பழிநோக்கான் - தீயன செ-யின் தனக்கு வரும் பழியைக் கருதாதவனாகவும் ; பண்பு இலன் - பிறிரியல்பையறிந்து அதற் கேற்ப நடக்கும் நற்குண மில்லாதவனாகவும் இருப்பவனது பகை; பற்றார்க்கு இனிது - அவன் பகைவர்க்கு இனிதாகும்.

"பண்பெனப் படுவது பாடறிந் தொழுகல்" (கலித். 133). வெல்வது எளிதாகவும் வெற்றியால் வரும் பொருள் பெரிதாகவும் இருத்தலால் 'பற்றார்க் கினிது' என்றார்.

## *866. காணாச் சினத்தான் கழிபெருங் காமத்தான் பேணாமை பேணப் படும்.*

**(இ-ரை.)** காணாச் சினத்தான் - செ-திகளின் உண்மையையும் பிறர் அருமை பெருமைகளையும் பாராமைக் கேதுவான கடுஞ்சினத்தனாகவும்;

கழிபெருங் காமத்தான் - கரை கடந்த பெண்ணாசையனாகவும் இருப்பவனது; பேணாமை பேணப்படும் - பகைமை விரும்பிக் கொள்ளப்படும்.

காணாச் சினத்தாற் கண்ணன்ன கேளிரையும் மாபெரு வலியரையும் பகைத்துக் கொள்ளுதலாலும், கழிபெருங் காமத்தாற் பெண்ணின் வாயிலாக எளிதா-க் கொல்லப்படுதலாலும், இவ்விரு குணங்களையு முடையான் தானே தன் அழிவைத் தேடிக்கொள்ளுதல்பற்றிப் 'பேணாமை பேணப்படும்' என்றார். 'காணா' ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

**867. கொடுத்துங் கொளல்வேண்டு மன்ற வடுத்திருந்து**
**மாணாத செ—வான் பகை.**

**(இ-ரை.)** அடுத்து இருந்து மாணாத செ-வான் பகை - போரைத் தொடங்கி அண்மையிலிருந்துகொண்டு தனக்குத் தானே மாறானவற்றைச் செ-வான் பகையை; கொடுத்தும் மன்ற கொளல் வேண்டும் - அவன் விரும்பிய பொருளை விலையாகக் கொடுத்தாயினும் உறுதியாகப் பெறல் வேண்டும்.

அடுத்திருந்து தனக்குக் கேட்டை வருவித்துக் கொள்பவனது நாட்டைக் கைப்பற்றுதலோ, அவனிடமிருந்து பெரும்பொருள் பெறுதலோ, கூடுமாதலின், 'கொடுத்துங் கொளல் வேண்டும் மன்ற' என்றார். அப் பகை அத்துணைப் பயன்படுவ தென்பது கருத்து. 'மன்ற' தேற்றப்பொரு ளிடைச் சொல். "மன்றவென் கிளவி தேற்றஞ் செ-யும். " (தொல். இடை. 17). உம்மை எச்சம். மாணாத செ-தலாவன மெலியனாயிருந்து பொருதலும் தோற்றலும் வலியனாயிருந்து பொராதிருத்தலும் பொருள்களை விட்டுவிட்டுப் பின் வாங்கிப்போதலும். இவ் வாறு குறளாலும் பகைமாட்சி வகைகளும் அவற்றின் விளைவும் கூறப்பட்டன.

**868. குணனிலனா—க் குற்றம் பலவாயின் மாற்றார்க்**
**கினனிலனா மேமாப் புடைத்து.**

(இ-ரை.) குணன் இலனா-க் குற்றம் பல ஆயின் இனன் இலன் ஆம் - ஒருவன் குணமொன்று மில்லாதவனா- அவனிடத்துள்ள குற்றங்கள் மட்டும் பலவாயிருப்பின் அவன் துணையில்லாதவனாவான்; மாற்றார்க்கு ஏமாப்பு உடைத்து - அந் நிலைமை அவன் பகைவர்க்கு அரணாதலை யுடைத்து.

இனி, 'ஆம்' என்பதனை முற்றாக்காது எச்சமாக்கி, இனனிலனாம் ஏமாப்பு என்று இயைப்பினும் ஏற்கும். 'குணம்' இறைமாட்சியுட் சொல்லப்

பட்டன. குற்றம் இவ் வதிகாரத்துள்ளும் பிறவற்றுள்ளுஞ் சொல்லப்பட்டன. குணம் என்னும் பொதுப்பெயர் ஆட்சியும் வழக்கும்பற்றி நற்குணத்தைக் குறித்தது. துணை சுற்றமும் நட்பும் படையுங் குடியும். ஒருவனது எளிமையும் துணையின்மையும் அவன் பகைவனுக்கு வலிமையாதலின் 'ஏமாப் புடைத்து' என்றார். 'ஆ-' என்னும் வினையெச்சம் தொக்குநின்ற 'உள்ள' என்னும் குறிப்புப் பெயரெச்சங்கொண்டு முடிந்தது.

### 869. *செறுவார்க்குச் சேணிகவா வின்ப மறிவிலா வஞ்சும் பகைவர்ப் பெறின்.*

**(இ-ரை.)** அறிவு இலா அஞ்சும் பகைவர்ப் பெறின் - அரசியல் அறிவில்லாத அஞ்சும் பகைவரைப் பெற்றால்; செறுவார்க்கு இன்பம் சேண் இகவா - அவரை வெறுத்துப் பொருவார்க்கு வெற்றியின்பங்கள் தொலைவில் நீங்கி நில்லா.

ஆம்புடை யறிதலும் அறிந்தாற் செ-து முடிக்கும் மனத்திண்மையுங் ஒருங்கேயில்லாத பகைவரைப் பெறுதல் அரிதாதலின் 'பெறின்' என்றும். அவரைத் செறுவார்க்கு வெற்றி நெருங்கி நிற்றலின் 'சேணிகவா' என்றும் கூறினார். பரிமேலழகர் சேணின்பம் எனக் கூட்டி 'உயர்ந்த இன்பங்கள்' எனப் பொருளுரைப்பர். அதுவும் பொருந்துவதே. ஆயின், ஆசிரியர் கருத் ததுவாயின் செறுவார்க்கும் சேணின்பம் நீங்கா என்று யாத்திருக்கலாம். 'அறிவிலா அஞ்சும்' பெயரெச்ச வடுக்கு. 'இன்பம்' பால்பகா வஃறிணைப் பெயர். வெற்றி பொருட்பேறு, வலிமிகை, பாடாண் புகழ் முதலியன பல்வேறு இன்பங்களாம்.

### 870. *கல்லான் வெகுளுஞ் சிறுபொரு ளெஞ்ஞான்று மொல்லானை யொல்லா தொளி.*

**(இ-ரை.)** கல்லான் வெகுளும் சிறு பொருள் ஒல்லானை - அரசியல் நூல் அறியாதவனைப் பகைத்தலால் வரும் எளியவழிப் பொருளொடு பொருந் தாதவனை; எஞ்ஞான்றும் ஒளி ஒல்லாது - ஒருபோதும் புகழ் பொருந்தாது.

'சிறுபொருள்' சிறுமுயற்சியால் வரும் பொருள். சிறு முயற்சியே செ-ய மாட்டாதவன் ஒருகாலும் பெருமுயற்சி மேற்கொள்ளானாகலின் 'எஞ்ஞான் றும்.... ஒல்லா தொளி' என்றார். ஒளி என்பது வாழ்நாட் காலத்து இசை.

## அதி. 88 - பகைத்திறந் தெரிதல்

*அதாவது, பகைபற்றிய பல்வேறு கூறுகளையும் ஆரா-ந்தறிதல். அவை பகையின் இயல்பும், பகைக்கப்படத் தக்கவர் யாரென்பதும், பகைக்கும் நிலைமையும் பகையையும் நட்பாக்குந் திறனும், பகைவரிடத்து நடந்து கொள்ளும் முறையும் பகை களைய வேண்டிய பருவமும் பிறவுமாம். பகைபற்றி இகலிலும் பகைமாட்சியிலுங் கூறப்படாத பல்வேறு செ-திகளைக் கூறுதலின், இது அவற்றின் பின் வைக்கப்பட்டது.*

**871. பகையென்னும் பண்பி லதனை யொருவ
னகையேயும் வேண்டற்பாற் றன்று.**

**(இ-ரை.)** பகை என்னும் பண்பு இலதனை - பகையென்று சொல்லப் படும் தீயகுணத்தை; ஒருவன் நகையேயும் வேண்டற்பாற்று அன்று - ஒருவன் விளையாட்டிற்கேனும் விரும்பத்தக்கதாக அரசியல் நூலாற் கொள்ளப் படுவதன்று. இது,

"இகலென்ப வெல்லா வுயிர்க்கும் பகலென்னும்
பண்பின்மை பாரிக்கும் நோ-" (851)

என்று இதனைக் கண்டித்தது போன்று பகையைப் பொதுப்படக் கண்டித்த தாகும். அன்பு என்னும் பண்பாட்டுக் குணத்திற்கு மறுதலையாகலின் 'பண் பிலதனை' என்றும், விளையாட்டே வினையாகவும் முடியுமாதலின் 'நகை யேயும்' என்றும், வேண்டாமை தொல்லாசிரியர் துணிபென்பார் நூலின்மேல் வைத்தும் கூறினார். 'இலதனை' என்னும் இரண்டாம் வேற்றுமை அரசியல் நூல் என்னும் பெயரை அவாவி நின்றது. இராமன் பையற் பருவத்தில் விளை யாட்டாக மந்தரை கூன்மீது மண்ணுண்டை யடித்தது, பின்பு காளைப் பருவத்தில் நாடுவிட்டுக் காடு செல்லக் கரணியமாயிற்று என்னுங் கதை, "விளையாட்டா யிருந்தது வினையா- முடிந்தது" என்னும் பழமொழிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாம். ஏகாரம் பிரிநிலை. உம்மை இழிவுசிறப்பு.

**872. வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை.**

**(இ-ரை.)** வில் ஏர் உழவர் பகை கொளினும் - வில்லை ஏராகக் கொண்ட உழவராகிய பொருநரொடு பகை கொண்டாலும்; சொல் ஏர் உழவர் பகை கொள்ளற்க - சொல்லை ஏராகக் கொண்ட உழவராகிய அறிஞரொடு பகைகொள்ளாதிருக்க.

பொருநர் - போர்மறவர். சொல்லேருழவர் - புலவரும் அரசியலறி ஞரான அமைச்சரும். பொருநர் உடல்வலிமையாற் செ-யுங் கேடு ஒரு சிலரையே தாக்கும். ஆயின், அறிஞர் சூழ்ச்சிவலியாற் செ-யுங் கேடு பல பெருநாடுகளையுந் தாக்கிவிடும். உம்மை எதிர்மறை. "தாயைப் பழித்தாலுந் தண்ணீரைப் பழிக்கக் கூடாது" என்பது போன்றது இக் குறள். ஆதலால், இருசாராரையும் பகைத்துக் கொள்ளற்க என்பதே கருத்தாம். உழவே முதன் முதல் தோன்றிய மாந்தன் கைத்தொழிலாதலால், ஏனைத் தொழிலாளரையும் உழவராகவும் அவர் தொழிற்கருவியை ஏராகவும் உருவகித்தார். தோண்டு தற்பொருள் கொண்ட தொள் என்னும் வினையடிப் பிறந்து பயிர்த்தொழிலை முதலிற் குறித்த தொழில் என்னும் சொல், இன்று தொழிற் பொதுப்பெயராக வழங்கி வருவது கவனிக்கத்தக்கது.

"The pen is mightier than the sword" என்னும் ஆங்கிலப் பழமொழி இக் குறட் கருத்ததே. காளமேகம் திருமலைராயன் பட்டினத்தில் மண்மாரி பெ-வித்தது, நிறைமொழி மாந்தர் மறைமொழி போன்றதாம். ஆயின், அமைச்சர் தம் சூழ்ச்சியால் விளைவிக்கும் கேடு, வில்லேருழவரான மறவர் வாயிலாக நிகழ்த்துவதே என வேறுபாடறிக. ஆகவே, அத்தகைய அமைச் சரைத் துணைக்கொண்ட அரசர், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியனும் கரிகால் வளவனும் சேரன் செங்குட்டுவனும் போன்றாராயின் இருமடி வலியராதலால், அவரொடு பகை எக்கரணியத்தை யிட்டுங் கொள்ளத் தக்கதன் றென்பது சொல்லாமலே பெறப்படும்.

### *873. ஏமுற் றவரினு மேழை தமியனா-ப்*
### *பல்லார் பகைகொள் பவன்.*

**(இ-ரை.)** தமியனா-ப் பல்லார் பகை கொள்பவன் - தான் துணை யின்றித் தனியனா யிருந்துகொண்டே பலரொடு பகைகொள்பவன்; ஏமுற்ற வரினும் ஏழை - பித்தம் பிடித்தவரினும் பேதையனாவன்.

தனிமை நட்பின்மை, அறிவின் திரிவால் இருவரும் ஒப்பாராயினும், பித்தன் பொதுவாக ஒருவரையும் பகையாமையானும் அதனால் அவனுக்குப் பிறராற் கேடின்மையானும், துணையோடு கூடிய வழியும் பகைவரை வெல்லுதல் உறுதியில்லாதிருக்க, அஃதில்லாதவன் ஒரே சமையத்திற் பலரொடு பொரின் தான் உடனே அழிதல் முழுவுறுதியென்பதை அறியாமையானும், பலர்பகை கொண்ட தனியனை 'ஏமுற் றவரினும் ஏழை' என்றார். இவ் விரு குறளாலும் பகைகொள்ளுதல் சிறப்பு வகையால் விலக்கப்பட்டது.

### 874. *பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்*
### *றகைமைக்கட் டங்கிற் றுலகு.*

**(இ-ரை.)** பகை நட்பாக் கொண்டு ஒழுகும் பண்பு உடையாளன் தகைமைக்கண் - இயலுமாயின் பகையையும் நட்பாக மாற்றிக்கொண்டு அமைதி யுடன் ஒழுகும் பண்பாடுள்ள அரசனது பெருமையின்கீழ்; உலகு தங்கிற்று - இவ் வுலகம் அடங்கி நிற்கும்.

பொருட்கேற்ப 'இயலுமாயின்' என்பது வருவிக்கப்பட்டது. 'வேண்டிய வழி' என்னுஞ் சொல்லை வருவித்தார் பரிமேலழகர். அது,

> **"பகைநட்பாங் காலம் வருங்கால் முகநட்**
> **டகநட் பொரீஇ விடல்"** **(குறள். 830)**

என்பதிற் கூறியவாறு கூடாநட்பொடு கூடிவாழும் வலக்கார நிலைமைக்கு ஏற்குமேயன்றி, பகையை நிலையான உண்மை நட்பாக மாற்றியொழுகும் பண்பாட்டு நிலைமைக்கு ஏற்காதென அறிக. பெருமை என்றது பொருள், படை, பண்பாடு முதலியவற்றால் ஏற்பட்ட தலைமை. பகையும் நட்பாக மாறியபின் உலக முழுதும் வயப்பட்டிருக்குமாதலின் 'தகைமைக்கட் டங்கிற் றுலகு' என்றார். தேற்றமும் நிலைபேறும்பற்றித் 'தங்கிற்று' என இறந்த காலத்தாற் கூறினார்.

### 875. *தன்றுணை யின்றாற் பகையிரண்டாற் றானொருவ*
### *னின்றுணையாக் கொள்கவற்றி னொன்று.*

**(இ-ரை.)** தன் துணை இன்று - தனக்குதவுந் துணையொன்று மில்லாமலும்; பகை இரண்டு - தன்னைக் கெடுக்கக் கூடிய பகை இரண்டுடையனாகவும்; தான் ஒருவன் - தான் தனியனாகவும் இருப்பவன்; அவற்றின் ஒன்று இன்துணையாக் கொள்க - அப் பகை யிரண்டனுள் தனக்கிசைந்த தொன்றை அப்பொழுதைக்கேனும் நிலையாகவேனும் நல்ல துணையாக அமைத்துக் கொள்க.

தனக்கிசைந்து தன்னொடு சேரக்கூடியதும் இன்னொரு பகையை வெல்லுதற் கேற்றதுமாகும். உண்மையான துணையாகச் செ-து கொள்க வென்பார் 'இன்றுணையா' என்றார். 'ஆல்' இரண்டும் அசைநிலை. 'ஆக' என்னும் வினையெச்ச வீறு 'ஆ' எனக் கடைக்குறைந்து நின்றது. 'கொள்க வற்றின்' என்பதில் அகரந்தொக்கது. இவ் விரு குறளாலும் நட்பாக்கக் கூடிய பகை கூறப்பட்டது.

***876. தேறினுந் தேறா விடினு மழிவின்கட்
டேறான் பகாஅன் விடல்.***

**(இ-ரை.)** அழிவின்கண் - இருபகைவருள் ஒருவனால் தோல்வி நேர்ந்தவிடத்து; தேறினும் தேறாவிடினும் - இன்னொரு பகைவனைத் தெளிந் தானாயினும்; தெளிந்திலனாயினும், தேறான் பகான் விடல் - அவனொடு சேராமலும் அவனைவிட்டு நீங்காமலும் இடைநிலையில் நின்றுகொள்க.

முன் தெளிந்தானாயினும் அப்பொழுது கூடாதிருக்க என்றது உட னின்று கெடுக்காதிருத்தற் பொருட்டு. தெளிந்திலனாயினும் அப்பொழுது நீங்காதிருக்க என்றது, வெளிப்படைப் பகையால் மேலுந் தனக்குக் கேடு வராதிருத்தற்பொருட்டு. 'தேறான்', 'பகான்' எதிர்மறை முற்றெச்சங்கள். 'பகாஅன்' இசைநிறை யளபெடை. இக் குறளால் பகையை நொதுமலாக்கல் கூறப்பட்டது.

***877. நோவற்க நொந்த தறியார்க்கு மேவற்க
மென்மை பகைவ ரகத்து.***

**(இ-ரை.)** நொந்தது அறியார்க்கு நோவற்க - தான் துன்புற்றதை அறி யாத நண்பர்க்குத் தன் துன்பத்தைச் சொல்லற்க; பகைவரகத்து மென்மை மேவற்க - வலியின்மை பார்த்திருக்கும் பகைவரிடம் தன் வலியின்மையை மேலிட்டுக் கொள்ளற்க.

நோதல்வினை இங்கு நோதலைச் சொல்லுதலைக் குறித்தது. சொல் லும்போதும் உள்ளத்தில் நோதல் தோன்றுதலின். அரசியல் வாழ்க்கையில் நட்புப் பெரும்பாலும் நிலையில்லாததும் உண்மையற்றது மாதலின், பகை வரிடம் வெளிப்படுத்தக் கூடாததைச் சொல்லும்போதே, நண்பரிடம் சொல்லக்கூடாததையும் உடன் கூறினார்.

***878. வகையறிந்து தற்செ—து தற்காப்ப மாயும்
பகைவர்கட் பட்ட செருக்கு.***

**(இ-ரை.)** வகை அறிந்து தற்செ-து தற்காப்ப - வினை செ-யும் வகை யறிந்து அதற்கேற்பத் தன்னை வலிமைப்படுத்தித் தற்காப்புஞ் செ- து கொள்ளின்; பகைவர்கண் பட்ட செருக்கு மாயும் - பகைவரிடத்துள்ள இறுமாப்புத் தானே நீங்கிவிடும்.

வினைசெ-யும் வகைகள் நால்வகை ஆம்புடைகளும், பிரித்தல் பொருத்தல் பேணல் முதலிய வலக்காரங்களும், காலவிட வலிகளறிந்து சூழ்தலும், தும்பை யுழிஞை முதலிய போர்புரிதலும் முதலாயின. வலிமைப் படுத்தலாவது, பொருள்படை துணைகளைப் பெருக்குதல். தற்காத்தலாவது பல்வகையரணும் அமைத்துக்கொள்ளுதல். இறுமாப்புத் தம்மை யெவரும் வெல்ல முடியாதென்றும் தாம் பிறரை எளிதா- வெல்ல முடியுமென்றும் மகிழ்ந்திருத்தல். இக் குறளாற் போர் செ-யாமலே பகைவரை விலக்கும் வகை கூறப்பட்டது.

### *879. இளைதாக முண்மரங் கொல்க களையுநர்*
### *கைகொல்லுங் காழ்த்த விடத்து.*

**(இ-ரை.)** முள்மரம் இளைதாகக் கொல்க - களையவேண்டிய முள்மரத்தைக் கையினால் எளிதாகப் பிடுங்கியெறியும் கன்றுப் பருவத்தே களையாவிடினும், இளமரமாயிருக்கும் போதேனும் வெட்டி விடுக; காழ்த்த விடத்துக் களையுநர் கைகொல்லும் - அங்ஙனமன்றி அது முதிர்ந்தபின் களை யின், அது தன்னைப் பலர்கூடி வெட்டினும் அவர் கைகளைப் பொறுத்தற் கரிய அளவு வருத்தும்.

களைய வேண்டிய பகையை அது மெலிதாயிருக்குந் தொடக்க நிலை யிலேயே களைந்துவிடுக. அங்ஙனமன்றி அது வலுத்தபின் அதைப் பலர் கூடித் தாக்கினும் அது தாக்குவாரைத் தாக்கும் என்னும் பொருள் தோன்ற நிற்பதால், இது பிறிதுமொழிதல் என்னும் அணியாம். இதனாற் பகையைக் களையும் பருவம் கூறப்பட்டது.

### *880. உயிர்ப்ப வுளரல்லர் மன்ற செயிர்ப்பவர்*
### *செம்மல் சிதைக்கலா தார்.*

**(இ-ரை.)** செயிர்ப்பவர் செம்மல் சிதைக்கலாதார் - தம்மைப் பகைப் பவரின் செருக்கை அடக்கும் நிலைமை யிருந்தும் இகழ்ச்சியால் அதைச் செ-யாது விட்டுவிட்டவர்; மன்ற உயிர்ப்ப உளர் அல்லர் - பின்பு, உறுதியாக மூச்சுவிடும் அளவிற்கும் உயிர் வாழ்பவராகார்.

முன்பு மெலியராயிருந்த பகைவர் பின்பு வலியராகித் தம்மை வேரொடு களைதல் திண்ணமாதலின், 'உயிர்ப்ப வுளரல்லர் மன்ற' என்றார். "எலிப்பகை நாக முயிர்ப்பக் கெடும்" என்பதுபோல், அவர் உயிர்த்த அளவிலேயே இறந்துவிடுவர் என்று உரைப்பினும் அமையும். 'மன்ற' என்

னுஞ் சொற்கு முன்பு உரைத்தது போல் உரைக்க. இக் குறளால் பகையை முளையிற் களையாவழி நேருங் கேடு கூறப்பட்டது. முந்தின குறளும் இதுவும் பகை முதிர்ச்சியேபற்றிக் கூறினும், அது ‘கைகொல்லும்’ முதிர்ச் சியும் இது மெ-கொல்லும் முதிர்ச்சியும்பற்றியன என வேறுபாடறிக.

## அதி. 89 - உட்பகை

*அதாவது, அகத்தாரே தன்னலம் நோக்கியும் கலாம்பற்றியும் தம் இனத் தாரைப் புறத்தாரான பகைவர்க்குக் காட்டிக் கொடுத்தல். இதுவும் ஒரு பகைத்திறமாதலின், பகைத்திறந் தெரிதலின் பின் வைக்கப்பட்டது.*

***881.*** ***நிழனீரு மின்னாத வின்னா தமர்நீரு***
***மின்னாவா மின்னா செயின்.***

**(இ-ரை.)** நிழல் நீரும் இன்னாத இன்னா - மக்கள் இன்பமாக நுகரும் நிழலும் நீரும் பின்பு நோ- செ-வனவாயின் தீயனவேயாம்; தமர் நீரும் இன்னா செயின் இன்னா ஆம் - அதுபோலத் தமக்குத் துணையாயிருக்க வேண்டிய தம்மைச் சேர்ந்தவர் இயல்புகளும் நன்மை செ-வனபோல் தோன்றித் தீமை செ-யின் தீயனவேயாம்.

தீய நிழலால் வரும் நோ- தலைவலி, கா-ச்சல் முதலாயின. தீய நீரால் வரும் நோ- யானைக்கால், பெருவயிறு (மகோதரம்) முதலாயின. தமர் என்பார் தம் குடும்பத்தாரும், தம் உறவினரும் தம் வகுப்பாரும், தம் கூட்டத் தாரும் தம் ஊராரும் தம் நாட்டாரும் தம் மொழியாரும் எனப் பல திறத்தார். முன் தோற்றத்தாலன்றிப் பின்விளைவாலேயே, பொருள்களும் மக்களும் முறையே நல்லனவுந் தீயனவும் நல்லவருந் தீயவருமாதல் அறியப்படும் என்பதாம். இக் குறளால் உட்பகையின் இயல்பு கூறப்பட்டது.

***882.*** **வாள்போல் பகைவரை யஞ்சற்க வஞ்சுக**
**கேள்போல் பகைவர் தொடர்பு.**

**(இ-ரை.)** வாள்போல் பகைவரை அஞ்சற்க - கொல்லும் வாள்போல வெளிப்படையாகப் பகைக்கும் பகைவர்க்கு அவ்வளவு அஞ்ச வேண்டுவ தில்லை; கேள்போல் பகைவர் தொடர்பு அஞ்சுக - ஆனால், உறவினர் போலிருந்து மறைவாகப் பகைக்கும் உட்பகைவரின் போலியுறவிற்கு மிகுதியாக அஞ்சுக.

'வாள்போல் பகைவரை யஞ்சற்க' என்றது, உட்பகைவர்க்கு அஞ்ச வேண்டிய அளவு வெளிப்பகைவர்க்கு அஞ்சவேண்டா வென்னுங் கருத் தினதேயன்றி அஞ்சவே வேண்டாவென்னுங் கருத்தினத்தன்று, வெளிப்பகை முன்னறிந்து தடுக்கவும் தற்காக்கவும் ஏதுவாயிருத்தலானும், உட்பகை அங்ஙனம் முன்னறியவும் தப்பிக்கொள்ளவும் இடமின்றி அழிவைத் தருதல் உறுதியாதலானும், முன்னதற்கு 'அஞ்சற்க' என்றும், பின்னதற்கு 'அஞ்சுக' என்றும் கூறினார். வெளிப்பகையினும் உட்பகை மிகக் கொடிது என்பது கருத்து. 'பகைவர்' இரண்டனுள் முன்னது ஆகுபொருளது. இக் குறளால் உட்பகையினின்று விலகுதல் கூறப்பட்டது.

### 883. உட்பகை அஞ்சித்தற் காக்க வுலைவிடத்து
### மட்பகையின் மாணத் தெறும்.

**(இ-ரை.)** உட்பகை அஞ்சித் தற்காக்க - உட்பகைவர்க்கு அஞ்சித் தன்னைக் காத்துக்கொள்க; உலைவிடத்து மட்பகையின் மாணத் தெறும் - ஏனெனில், அங்ஙனங் காவாவிடின், தனக்குத் தளர்ச்சி வந்தவிடத்து, அவர் பகை குயவன் மட்கலத்தை யறுக்குங் கருவி அதனை யறுப்பதினும் மிகுதியான அளவு தன்னைக் கெடுத்துவிடும்.

'காத்தல்' அவரொடும் சேர்ந்தாரொடும் எவ்வகைத் தொடர்புமின்றி யிருத்தல். மண்ணைப் பகுக்குங் கருவி 'மட்பகை'. அறியப்படாது உள் ளிருந்தே கெடுத்தலால் கேட்டினின் தப்ப முடியா தென்பதாம்.

'மட்பகையின் மாணத் தெறும்' என்பதற்கு, "கரைபடக்கட்டிய மண் உறுதிக்கு ஒரு தளர்ச்சி வந்த இடத்து மற்று அதனை முழுவதும் முரித்து எறியும் வெள்ளம்போல், இதுவும் தன் குடி முழுதும் குலைத்து எறிந்துவிடும் என்றவாறு.... மண்பகை என்பது நீர் வெள்ளம் என்றது" என்பது காலிங்கர் உரை.

### 884. மனமாணா வுட்பகை தோன்றி னினமாணா
### வேதம் பலவுந் தரும்.

**(இ-ரை.)** மனம் மாணா உட்பகை தோன்றின் - புறத்தில் திருந்தியது போல் தோன்றி அகத்தில் திருந்தாத உட்பகை ஒருவனுக்கு உண்டாகுமாயின்; இனம் மாணா ஏதம் பலவும் தரும் - அது அவனுக்குச் சுற்றம் துணையா காமைக் கேதுவாகிய பல குற்றத்தையும் உண்டுபண்ணும்.

'இன மாணா ஏதம்' சுற்றத்தாரை உள்ளாக நின்று வேறுபடுத்தலும் அவர் வேறுபடுதலும் அதனால் அவர் துணை இல்லாமற் போதலுமாம்.

**885. உறன்முறையா னுட்பகை தோன்றி னிறன்முறையா**
**னேதம் பலவுந் தரும்.**

**(இ-ரை.)** உறல் முறையான் உட்பகை தோன்றின் - புறம்பாக உறவு முறையொடு கூடிய உட்பகை ஒருவனுக்கு, சிறப்பாக அரசனுக்கு, உண்டாகு மாயின்; இறல் முறையான் ஏதம் பலவும் தரும் - அது அவனுக்கு இறக்குந் தன்மையான பல குற்றத்தையும் உண்டுபண்ணும்.

உட்பகையுற்றவன் அரசனாயின், புறப்பகைக்குத் துணையா- நின்று காட்டிக் கொடுத்தலும் தானே கொல்லுதலும் அமைச்சு முதலிய உறுப்பு களைக் கெடுத்தலும், உட்பகையால் வரும் ஏதங்களாம்.

**886. ஒன்றாமை யொன்றியார் கட்படி னெஞ்ஞான்றும்**
**பொன்றாமை யொன்ற லரிது.**

**(இ-ரை.)** ஒன்றியார்கண் ஒன்றாமை படின் - தனக்கு உள்ளானவரிடத் திலேயே பகைமை தோன்றுமாயின்; பொன்றாமை ஒன்றல் எஞ்ஞான்றும் அரிது - ஒருவனுக்கு இறவாமை கூடுதல் எக்காலத்திலும் அரிதாம்.

அரசனாயின் பொருள் படை நாடு நட்பு முதலியவற்றாலும், பிறனா யின் பொருள் சுற்றம் ஏவல் முதலியவற்றாலும், பெரியவனான காலத்தும் என்பார் 'எஞ்ஞான்றும்' என்றார். 'ஒன்றாமை யொன்றியார்' உள்முரண் (oxymoron). இந் நான்கு குறளாலும் உட்பகையால் தனிப்பட்டவனுக்கும் ஒரு குடும்பத் தலைவனுக்கும் அரசனுக்கும் வருந் தீங்கு கூறப்பட்டது.

**887. செப்பின் புணர்ச்சிபோற் கூடினுங் கூடாதே**
**யுட்பகை யுற்ற குடி.**

**(இ-ரை.)** உட்பகை உற்ற குடி - உட்பகை யுண்டான குடியார்; செப்பின் புணர்ச்சிபோல் கூடினும் - செப்பும் அதன் மூடியும் பொருந்தினாற்போல வேற்றுமை தெரியாது புறத்திற் கூடினாராயினும்; கூடாதே - அகத்தில் தம்முட் கூடாதவரே யாவர்.

"உட்பகையால் மனம் வேறுபட்டமையிற் புறப்பகை பெற்றுழி வீற்று வீற்றாவ ரென்பதாம். குடி கூடாதென்பதனை நாடு வந்த தென்பதுபோலக் கொள்க. உட்பகை தானுற்ற குடியோடு கூடாதென்றும், உட்பகையுண்டாய குடி அப் பகையோடு கூடாதென்றும் உரைப்பாரு முளர்" என்று பரிமே லழகர் கூறியிருப்பதினின்று, அவர் இங்கு உட்பகையை ஒற்றுமையின்மை

யெனக் கொண்டதாகத் தெரிகின்றது. பகைவருக்குத் தம் குடும்பத்தை அல்லது இனத்தைக் காட்டிக்கொடுக்கும் உட்பகை வேறு; அங்ஙனங் காட்டிக் கொடாது தமக்குள்ளேயே கருத்து வேறுபாட்டால் ஒற்றுமையின்றியிருக்கும் பிளவுநிலை அல்லது பிரிவினை வேறு. உட்பகையுற்ற குடிக்கு உவமமாகக் கூறப்பட்டுள்ள செப்பின் புணர்ச்சியிற் செப்பும் மூடியுமாக இரு பகுதிகளிருப் பதையும், இவ் வதிகார முகவுரையில், "புறப்பகைக்கு இடனாக்கிக்கொடுத்து அது வெல்லுந் துணையும் உள்ளா- நிற்கும் பகை" என்று பரிமேலழகரே உட்பகைக்கு இயல்வரையறை கூறியிருப்பதையும் நோக்குக. ஏகாரம் தேற்றம். பேராயக் கட்சித் தமிழர் பொது விழாக்களில் நேர்பாட்டுக் கட்சித் தமிழரொடு கூடிக்கொள்ளினும், இந்தியார்க்குத் தம் இனத்தைக் காட்டிக் கொடுப்பதிலேயே முனைந்திருப்பது, இக் குறட்குச் சிறந்த எடுத்துக்காட்டாம்.

### *888. அரம்பொருத பொன்போலத் தேயு முரம்பொரு*
### *துட்பகை யுற்ற குடி.*

**(இ-ரை.)** உட்பகை உற்ற குடி - உட்பகை யுண்டான குடி; அரம் பொருத பொன்போலப் பொருது உரம் தேயும் - அரத்தால் அராவப்பட்ட இரும்பு போல உட்பகையால் அராவப்பட்டு வலிமை குன்றும்.

பொருது என்னும் வினையெச்சம் தேயும் என்னும் வினைமுற்றுக் கொண்டு முடிந்தது. உட்பகை பொருது தேயும் என்பது புலியடித்துச் செத் தான் என்பது போன்ற வழக்கு, குடி புரந்தேயும் என்பதில் சினைவினை முதல் வினையாக நின்றது. இவ் விருகுறளாலும் ஒரு குடும்பம் அல்லது உறவுத் தொகுதி உட்பகையாற் கெடுவது கூறப்பட்டது. 'பொன்' இங்கு இனம்பற்றி இரும்பைக் குறித்தது.

### *889. எட்பக வன்ன சிறுமைத்தே யாயினு*
### *முட்பகை யுள்ளதாங் கேடு.*

(இ-ரை.) உட்பகை எள் பகவு அன்ன சிறுமைத்தே ஆயினும் - உட்பகை சிறிய கூலப் பொருளான எள்ளின் பகுதிபோன்ற சிற்றளவினதே யாயினும்; கேடு உள்ளது ஆம் - வலிமைமிக்க தனிப்பட்டவனையும் குடும்பம் அல்லது இனத்தையும் அரசையும் அழிக்க வல்லதாம்.

நஞ்சு சிறுதுளியளவினதாயினும் பெரிய யானையையுங் கொன்று விடுவதுபோல, உட்பகை எத்துணைச் சிற்றளவினதேனும் பெரிய குடியை

யும் அரசையும் அழித்துவிட வல்லதாதலால், அதன் சிறுமைபற்றி இகழக் கூடாதென்பதாம். ஏகாரம் தேற்றம். உம்மை இழிவுசிறப்பு.

**890. உடம்பா டிலாதவர் வாழ்க்கை குடங்கருட்**
**பாம்போ டுடனுறைந் தற்று.**

**(இ-ரை.)** உடம்பாடு இலாதவர் வாழ்க்கை - மனப்பொருத்த மில்லாத வரோடு வடி வாழும் வாழ்க்கை; குடங்கருள் பாம்போடு உடன் உறைந்த அற்று - ஒரு குடிசையுள் ஒருவன் பாம்போடு கூடி வதிந்தாற்போலும்.

இடச்சிறுமையாலும் உடனுறைவாலும் பாம்பாற் கொல்லப்படுதல் போல், உட்பகையால் அழிவுறுதல் திண்ணமாதலால் அதனொடு கூடி வாழற்க என்பதாம். உடம்பாடின்மை யென்பது இங்கு அன்பின்மையோடு பகைவர்க்குக் காட்டிக் கொடுத்தலையுந் தழுவிய தென்பது, அதிகாரத்தாற் கொள்ளப்படும், "குடங்க மென்னும் வடசொற் றிரிந்து நின்றது" என்றார் பரிமேலழகர். அது தென்சொல்லே யென்பதைப் பின்னிணைப்பிற் காண்க.

## அதி. 90 - பெரியாரைப் பிழையாமை

*அதாவது, அறிவாலும் ஆற்றலாலும் பெரியாரை இகழ்ந்து தவறு செ-யாமை. அறிவாற் பெரியார் பெரும் புலவர்; ஆற்றலாற் பெரியார் பேரரையர்; இரண்டிலும் பெரியார் முற்றத் துறந்த முழு முனிவர். புலவராற்றல் சூழ்ச்சி வலிமையென்றும், அரையராற்றல் படைவலிமை யென்றும், முனிவராற்றல் தவவலிமை யென்றும் வேறுபாடறிக. பெரியார் பகை பிறர் பகையினும் கொடியதாதலால், அது நேராமற் காத்தல் பிற பகைகளின் பின் வைக்கப்பட்டது.*

**891. ஆற்றுவா ராற்ற லிகழாமை போற்றுவார்**
**போற்றலு ளெல்லாந் தலை.**

**(இ-ரை.)** ஆற்றுவார் ஆற்றல் இகழாமை - எடுத்துக்கொண்ட வினை முயற்சிகளை யெல்லாம் வெற்றியாக முடிக்கவல்லவரின் வல்லமையைத் தாழ்வாக மதியாமை; போற்றுவார் போற்றலுள் எல்லாம் தலை - தமக்குக் கேடுவராமற் காத்துக்கொள்வார் செ-யுங் காவல்க ளெல்லாவற்றுள்ளும் தலைமையானதாம்.

'ஆற்றல்' என்பது ஆக்கற்கும் அழித்தற்கும் ஏதுவான பல்வகை வலிமைகள். இகழ்ந்தவிடத்து அழித்துவிடுவார் என்பது தோன்ற 'ஆற்று

வார்' என்றும், படை, அரண், நட்பு முதலிய பிற காவல்கள் அவரால் அழிக்கப்பட்டுவிடுமாதலின் 'தலை' என்றும் கூறினார். இதனால் பெரியாரைப் பிழையாமையின் இன்றியமையாமை கூறப்பட்டது.

**892. பெரியாரைப் பேணா தொழுகிற் பெரியாராற்**
**பேரா விடும்பை தரும்.**

**(இ-ரை.)** பெரியாரைப் பேணாது ஒழுகின் - அறிவாற்றல் மிக்க பெரியாரை அரசர் நன்கு மதித்துப் போற்றாது ஒழுகுவராயின்; பெரியாரால் பேரா இடும்பை தரும் - அது அப் பெரியாரால் அவர்க்கு எப்போதும் நீங்காத துன்பங்களை உண்டாக்கும்.

துன்பங்கள் இருமையிலும் தம்மாலும் பிறவுயிர்களாலும் தெ-வத்தாலும் இடையறாது நேர்வன. அவை தாமே தேடிக்கொண்டவை யென்பது தோன்ற, ஒழுக்கத்தை வினைமுதலாக்கியும் பெரியாரைக் கருவியாக்கியும் கூறினார். இதனாற் பெரியாரைப் பிழைத்தலின் தீமை பொதுவகையாற் கூறப்பட்டது.

**893. கெடல்வேண்டிற் கேளாது செ-க வடல்வேண்டி**
**னாற்று பவர்க ணிழுக்கு.**

**(இ-ரை.)** கெடல் வேண்டின் - ஒருவன் தான் கேடடைவதை விரும்பினனாயின்; அடல்வேண்டின் ஆற்றுபவர்கண் இழுக்கு - பிறரைக் கொல்ல விரும்பின் அப்பொழுதே கொல்லவல்ல பெரியாரிடத்துத் தவற்றை; கேளாது செ-க - தன் அமைச்சரின் அல்லது துணைவரின் அறிவுரையைப் பொருட்படுத்தாது செ-க.

"காலனுங் காலம் பார்க்கும் பாராது
வேலீண்டு தானை விழுமியோர் தொலைய
வேண்டிடத் தடூஉம் வெல்போர் வேந்தே" (புறம். 41)

"குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது" (குறள். 26)

என்பவற்றால், அடல்வேண்டி னாற்றும் இருவகைப் பெரியாரையும் அறிந்து கொள்க.

**894. கூற்றத்தைக் கையால் விளித்தற்றா லாற்றுவார்க்**
**காற்றாதா ரின்னா செயல்.**

**(இ-ரை.)** ஆற்றுவார்க்கு ஆற்றாதார் இன்னா செயல் - தாம் கருதியதை உடனே முடிக்கும் ஆற்றலுடைய பெரியார்க்கு, அஃதில்லாத சிறியார் தாம் முற்பட்டுத் தீமை செ-தல்; கூற்றத்தைக் கையால் விளித்த அற்று - குறித்த காலத்தில் தானே தப்பாது வரக்கடவனாகிய கூற்றுவனை, அதற்கு முன்பே வலியக் கைதட்டி அழைத்தாற்போலும்.

கையால் விளித்தல் தொலைவிலிருப்பவரை உடனே வருவித்தற் குறிப்பினது. இவ் விருகுறளாலும் பெரியாரைப் பிழைப்பவர் தம் கேட்டைத் தாமே விரைந்து வருவித்துக் கொள்ளுதல் கூறப்பட்டது. 'ஆல்' அசைநிலை.

**895. யாண்டுச்சென் றியாண்டு முளராகார் வெந்துப்பின்**
**வேந்து செறப்பட் டவர்.**

**(இ-ரை.)** வெம் துப்பின் வேந்து செறப்பட்டவர் - கடுவலிமையுள்ள பேரரையனாற் சினக்கப்பட்டவர்; யாண்டுச் சென்று யாண்டும் உளர் ஆகார் - அவனுக்குத் தப்பி எங்குச் செல்லினும் எங்கும் உயிரோடிரார்.

வெம்மை தீப்போல அழித்துவிடும் கடுமை. வெந்துப்பின் வேந்த னுக்குப் பன்னாட்டிலும் அதிகாரமோ அச்சப்பாடோ சா-காலோ இருக்கு மாதலானும், அவனுக்குத் தப்பியோடியவர் எந்நாட்டுப் புகுந்தாலும் அந் நாட்டரசனால் கொல்லப்படுவதோ வேந்தனிடம் ஒப்புவிக்கப்படுவதோ உறுதியாதலானும், 'யாண்டுச்சென் றியாண்டு முளராகார்' என்றார். 'சென்றும்' என்னும் எச்சவும்மை தொக்கது. 'வேந்து' வேந்தன் என்பதன் மரூஉ. உம்மை முற்றும்மை.

**896. எரியாற் சுடப்படினு மு-வுண்டா மு-யார்**
**பெரியார்ப் பிழைத்தொழுகு வார்.**

**(இ-ரை.)** எரியால் சுடப்படினும் உ-வு உண்டாம் - ஒருவன் வீடு பற்றி வேகும்போது அல்லது விளக்குத் தன்மேல் பட்டபோது தீயாற் சுடப்பட்டா னாயினும், எண்ணெயாலும் மருந்தாலும் ஒருகால் சாவினின்று தப்புதல் கூடும்; பெரியார்ப் பிழைத்து ஒழுகுவார் உ-யார் - ஆயின், தவத்தாற் பெரியார்க்குத் தவறாக நடந்தவர் ஒருவகையாலும் தப்பார்.

தீச்சுட்ட புண் சிறிதாயிற் கேடில்லை. உடம்பு முழுதுமாயின் ஓரிரு நாளிற் சாவுண்டாம். இவ் விரண்டிற்கும் இடைப்பட்ட நிலைமையாயின் பண்டுவத்தாற் பிழைத்தலுங் கூடும். ஆயின், 'குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி' நொடிநேரமுந் தடுக்க முடியாததாதலின், 'உ-யார்' என் றார். உம்மை உயர்வுசிறப்பு. மாதவர் சினத்திற்கு ஆளாகாது காத்துக் கொள்க என்பது கருத்து.

### 897. வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளு மென்னாந் தகைமாண்ட தக்கார் செறின்.

**(இ-ரை.)** தகைமாண்ட தக்கார் செறின் - ஆக்க வழிப்பிற் கேதுவாகிய ஆற்றல் மாட்சிமைப்பட்ட மாதவர் அரசரை வெகுள்வாராயின், வகை மாண்ட வாழ்க்கையும் வான் பொருளும் என் ஆம் - ஆறுறுப்புகளும் மாட் சிமைப்பட்ட அவர் அரச வாழ்வும் அவர் தமக்குச் சொந்தமாக ஈட்டிவைத்த பெருஞ் செல்வமும் என்ன ஆகும்! ஒரு நொடியுள் வெந்து சாம்பலா- விடுமே!

படை, குடி, நாடு, கூழ், அமைச்சு, அரண் என்பன ஆறுறுப்புகள். நட்பு என்பது அரசனின் வலிமையை மிகுப்பதேயன்றி நாட்டுறுப்பன்று.

''மிகுதியான் மிக்கவை செ-தாரைத் தாந்தம்
தகுதியான் வென்று விடல்'' **(குறள். 158)**

என்று இல்லறத்திற்கும்,

''இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை'', **(குறள். 310)**

''இன்னாசெ- தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செ-து விடல்'' **(குறள். 314)**

என்று துறவறத்திற்குங் கூறியிருப்பதால், 'செறின்' என்பது முற்றத்துறந்த முழு முனிவர் செறாமை தோன்ற நின்றது. 'வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளு மென்னாம்' என்றது, அருந்தவரின் பெருந்திறலை யுணர்த்தி அரசர் தம் செல்வச் செருக்கால் அவருக்குத் தவறு செ-யாவாறு எச்சரித் ததே யன்றி வேறன்றென வுணர்க.

### 898. குன்றன்னார் குன்ற மதிப்பிற் குடியொடு நின்றன்னார் மா-வர் நிலத்து.

**(இ-ரை.)** குன்று அன்னார் - மலைபோலும் மாதவர்; நிலத்து நின்ற அன்னார் குன்ற மதிப்பின் - இந் நிலவுலகத்தில் அழிவின்றி நிலைபெற் றவர்போல் தோன்றும் பெருஞ்செல்வப் பேரரசர் கெடக் கருதுவ ராயின்; குடியொடு மா-வர் - அவர் தம் இனத்தொடும் அழிந்துபோவர்.

தட்பவெப்பத்தையும் பிறர் செ-த தீங்கையும் பொறுத்துக் கொள்ளு தலும், சூறாவளி வீசினும் பெருந்துன்பம் நேரினும் உடலுளம் அசையாமை யும். ஒழுக்க நெறியில் நிலைத்து நிற்றலும் இம்மை மறுமை வீடென்னும் மும்மையும்பற்றிய அறிவுப் பொருள் வளமும், ஆவிவளர்ச்சிப் பெருமை யும், நெடுந்தொலைவுந் தோன்றுஞ் சீர்த்தியும் உடைமையால், 'குன்றன்னார்' என்றார். "மல்லன் மலையனைய மாதவரை" என்று சிந்தாமணி கூறுவதும் (முத்தி. 191) இக் கருத்துப்பற்றியே. குன்றென்னுஞ் சொல் இங்குத் தன் சிறப்புப் பொருளைக் குறியாது மலையென்னும் பொதுப்பொருள் குறித்து நின்றது. 'மதிப்பின்' என்பதற்கும் 'குடியொடு மா-வர்' என்பதற்கும், முந்திய குறளில் 'செறின்' என்பதற்கும், 'வகைமாண்ட...... என்னாம்' என்பதற்கும் உரைத்தவா றுரைக்க.

**899. *ஏந்திய கொள்கையார் சீறி னிடைமுரிந்து***
***வேந்தனும் வேந்து கெடும்.***

**(இ-ரை.)** ஏந்திய கொள்கையார் சீறின் - உயர்ந்த நோன்புகளைக் கடைப் பிடித்த அருந்தவர் சீற்றங்கொள்ளின்; வேந்தனும் இடை முரிந்து வேந்து கெடும் - தேவருலக அரசனும் இடையே தன் பதவியிழந்து கெடுவான்.

"வேந்தன் மேய தீம்புன லுலகமும்" என்பது தொல்காப்பியம் (பொருள். அகத். 5). நல்வினை செ-த இல்லறத்தாருள் பொதுமக்கள் தேவராகவும் மூவேந்தரான அரசர் தேவர்க்கரசராகவும், மறுமையில் தேவருலகத்தில் தோன்றுவர் என்பதும், விண்ணுலக வேந்தனை நல்வினையால் வென்ற மண் ணுலக வேந்தன் மறுமையில் விண்ணுலக வேந்தனாவனென்பதும் பண்டைத் தமிழர் கொள்கை. போர்க்களத்திற் பின்வாங்காது, மறத்தொடு பொருதிறப் பதும் நல்வினை போன்றே விண்ணுலகத் தகுதியாகக் கொள்ளப்பட்டது. பிராமணர்க்கு விருந்தோம்பல் முதலிய நல்வினைத் தகுதியும் போர் செ-திறக்கும் மறவினைத் தகுதியும் இன்மையால், வேள்வி செ-தலையே விண்ணுலக வேந்தன் தகுதியாகத் தம் தருமசாத்திரம் என்னும் அல்லற நூல் களில் வரைந்துகொண்டனர். இந்திரன் என்னும் வடசொல்லும் அரசன் என்றே பொருள்படுவதையும். தேவேந்திரன், நரேந்திரன் கவீந்திரன், மிருகேந்திரன்,

கசேந்திரன் எனப் பொதுச்சொல்லாயும் வழங்குவதையும், கிறித்துவிற்கு முன் தமிழகம் முழுதும் மூவேந்தர் ஆட்சிக்குட்பட்டே யிருந்தமையையும், வேந்தனும் இந்திரனும் மழைத்தெ-வமாகவே வணங்கப்பட்டமையையும் வேந்தன் விழாவே இந்திர விழாவென வடநாட்டில் வழங்கியமையையும், ஆரியர் தென்னாடு வந்தபின் அவ் வடநாட்டு வழக்கே தமிழகத்திலும் புகுத்தப்பட்டமையையும், நோக்குக. நகுடன் அகத்தியனால் வெகுளப்பட் டுத் தன் இந்திரப் பதவியை இழந்தானென்று, பரிமேலழகர் கூறியிருக்கும் ஆரியக் கட்டுக்கதை இங்கு எடுத்துக்காட் டாகாது. உம்மை உயர்வுசிறப்பு. இக் குறளால் விண்ணுலக வேந்தனும் முனிவர் வெகுளிக்குத் தப்ப முடியாமை கூறப்பட்டது.

**900. *இறந்தமைந்த சார்புடைய ராயினு மு—யார்***
***சிறந்தமைந்த சீரார் செறின்.***

**(இ-ரை.)** சிறந்து அமைந்த சீரார் செறின் - மாபெருந் தவமுனிவர் வெகுள்வாராயின்; இறந்து அமைந்த சார்பு உடையராயினும் உ-யார் - அவரால் வெகுளப்பட்டவர் தலைசிறந்த துணையை யுடையவராயினும் தப்பிப் பிழையார்.

சீருடைய தவவலிமை 'சீர்' எனப்பட்டது. 'இறந்தமைந்த சார்பு'கள் சோவரண், மாபெருந் தொல்படை, பேரரையர் நட்பு முதலியன. 'செறின்' என்பதற்கு 897ஆம் குறளில் உரைத்தவா றுரைக்க. இவ் வைந்து குறளாலும் முனிவரைப் பிழைத்தலின் தீமை கூறப்பட்டது. உம்மை உயர்வுசிறப்பு.

## அதி. 91 - பெண்வழிச் சேறல்

*அதாவது, காமவின்பக் கழிபேராசைபற்றி, தனக்கு அடங்கி நடக்க வேண்டிய தன் மனைவிக்குத் தான் அடங்கி நடத்தல். இதனாற் கடமை தவறுதலும் அறஞ்செ-யாமையும் வீண் செலவுந் தீவினையுஞ் செ-தலும் நேர்தலால், இது பகையோடொத்ததாகவும் பெரியாரைப் பிழைத்தற்கு இடந்தருவதாகவும் இருத்தல்பற்றி, பெரியாரைப் பிழையாமையின் பின் வைக் கப்பட்டது. சேறல் செல்லுதல். அஃது இங்கு நடத்தலைக் குறித்தது.*

*“ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே” என்னும் பழமொழிக்கேற்ப, பெண்டிருள் நல்லமைச்சர் போன்றவரும் தீயமைச்சர் போன்றவரு மிருப்பினும், ஏற்புழிக்கோடல் என்னும் உத்தியால், இங்குப் பெண் என்றது தீயமைச்சர் போன்ற பெண்டிரையே என அறிந்துகொள்க.*

**901. *மனைவிழைவார் மாண்பய னெ—தார் வினைவிழைவார்***
***வேண்டாப் பொருளு மது.***

**(இ-ரை.)** மனை விழைவார் மாண்பயன் எ-தார் - இன்பம்பற்றி மனை வியை அளவிறந்து காதலித்து அவள் விருப்பப்படி நடப்பவர் சிறந்த பயன் தரும் அறத்தினைச் செ-யார்; வினைவிழைவார் வேண்டாப் பொருளும் அது - இனி இன்பத்திற்கும் அறத்திற்குமேதுவான பொருளீட்டுதலை விரும்பி மேற்கொள்வார், அதற்குத் தடையென்று கருதி விரும்பாத செ-தியும் மனைவிக்கு அடிமையாக்கும் அப் பெண்ணின்பப் பித்தமே.

'மனை' ஆகுபெயர். 'விழைதல்' ஆகுபெயர் போன்ற ஆகுவினை. 'பயன்' என்றது அறப்பயனை. இம்மைக்கேயுரிய பெண்ணின்பத்தினும் மும்மைக்கு முரிய அறப்பயன் சிறந்ததாதலின், அதனை 'மாண்பயன்' என்றார். வினை யென்பது பாலாற் பொருளீட்டும் வினையைக் குறித்தது. முப்பொருள்களுள் ஏனை யிரண்டும் பெறுதற்குக் கருவியாயிருக்கும் பொருட்பொருளை யீட்டுதற்குத் தடையாயிருத்தலின், மனைவி விருப்பப்படி யொழுகுதல் கூடாதென்பதாம். உம்மை இறந்தது தழுவிய எச்சம்.

**902. *பேணாது பெண்விழைவான் ஆக்கம் பெரியதோர்***
***நாணாக நாணுத் தரும்.***

**(இ-ரை.)** பேணாது பெண்விழைவான் ஆக்கம் - தன் ஆண்மை மேம்பாட்டைக் காவாது தன் மனைவிக்கு அடிமையாகுமளவு அவளைக் காதலிப்பவன் பெற்ற செல்வம்; பெரியது ஓர் நாணாக நாணுத் தரும் - தன் பாலார்க்கெல்லாம் மிகுந்த நாண முண்டாகுமாறு தனக்கு வெட்கக்கேட்டை விளைவிக்கும்.

'ஆக்கம்' என்று அடைகொடாமற் கூறியது, முதுசொம் என்னும் முன்னோர் தேட்டாகவோ மனைவிவழிச் சொத்தாகவோ பெறப்பட்ட தென்று குறித்தற்கு. பெண்வழிச் செல்வானுக்குப் பொருளீட்டும் ஆற்றலிராதென்பது கருத்து. செல்வத்தை நுகர்ந்தும் ஈந்தும் பயன்படுத்துபவள் மனைவியாதலின், ஆண்மைத் தன்மை அவளிடத்தும் பெண்மைத் தன்மை கணவனிடத்தும் உள்ளன வென்று ஆடவர் நாணிக் கடிந்துரைத்தபின், அவரை மீண்டும் பார்த்தற்கு அவன் நாணுதலால், 'நாணாக நாணுத் தரும்' என்றார்.

**903. *இல்லாள்கட் டாழ்ந்த வியல்பின்மை யெஞ்ஞான்று***
***நல்லாரு ணாணுத் தரும்.***

**(இ-ரை.)** இல்லாள்கண் தாழ்ந்த இயல்பு இன்மை - ஒருமை தன் மனைவிக்குப் பணியும் ஆண்மையின்மை; எஞ்ஞான்றும் நல்லாருள் நாணுத்தரும் - எப்போதும், அஃதில்லாத நல்லாடவருடன் பழகும்போது அவனுக்கு நாணத்தைப் பிறப்பிக்கும்.

ஆடவனுக்கு ஆண்மை இயல்பாதலின், அஃதின்மை இயல்பின்மை யாயிற்று. அண்ணாளன் என்றும் பெண்ணிற்கடங்கி யென்றும் பிறர் பழிப்ப தாலும், அதற்கேதுவான ஆண்மையின்மை ஒருகாலும் நீங்காமையாலும், 'எஞ்ஞான்றும் நாணுத்தரும்' என்றார்.

### 904. *மனையாளை யஞ்சு மறுமையி லாளன்*
### *வினையாண்மை வீறெ-த லின்று.*

**(இ-ரை.)** மனையாளை அஞ்சும் மறுமை இலாளன் - தன் மனைவிக்கு அஞ்சி நடக்கும் மறுமைப்பயன் இல்லாதவனது; வினை ஆண்மை வீறு எ-தல் இன்று - வினைமுயற்சி வெற்றி பெறுவதில்லை.

இல்லறஞ் செ-தற் குரிய உரிமையின்மையின் 'மறுமையி லாளன்' என்றும், ஆண்மையின்மையின் 'வீறெ-த லின்று' என்றும் கூறினார்.

### 905. *இல்லாளை யஞ்சுவா னஞ்சுமற் றெஞ்ஞான்று*
### *நல்லார்க்கு நல்ல செயல்.*

**(இ-ரை.)** இல்லாளை அஞ்சுவான் - தன் மனைவிக்கு அஞ்சி நடப்ப வன்; நல்லார்க்கு நல்ல செயல் எஞ்ஞான்றும் அஞ்சும் - தான் தேடிய பொரு ளைக்கொண்டும் நல்லவர்க்கு நல்லவை செ-ய எப்போதும் அஞ்சுவான்.

நல்லார் - அரசனொழிந்த ஐங்குரவர், சான்றோர், அருந்தவர், நல்விருந் தினர் முதலியோர். நல்லவை செ-தல் விருந்தோம்பலும் வேளாண்மை செ-தலும். விழாநாளிலும் மனைவி மகிழ்ந்திருக்கும் போதும் என்பார் 'எஞ்ஞான்றும்' என்றார்.

> ''இல்லாளை யஞ்சி விருந்தின்முகங் கொன்றநெஞ்சிற்
> புல்லாள னாக'' **(சீவக. 2319)**

என்பது சிந்தாமணி.

> ''இருந்து முகந்திருத்தி யீரோடு பேன்வாங்கி
> விருந்து வந்ததென்று விளம்ப – வருந்திமிக

**ஆடினாள் பாடினா ளாடிப் பழமுறத்தாற்**
**சாடினா ளோடோடத் தான்"**

என்னும் பிற்காலத்து ஔவையா ரொருவர் தனிப்பாடல் கடைப்பட்ட பெண்ணஞ்சி நிலைமையைக் குறிக்கும்.

## 906. இமையாரின் வாழினும் பாடிலரே யில்லா ளமையார்தோ ளஞ்சு பவர்.

**(இ-ரை.)** இல்லாள் அமை ஆர் தோள் அஞ்சுபவர் - தம் மனைவியின் பசுமூங்கில் போலும் தோளிற்கு அஞ்சுபவர்; இமையாரின் வாழினும் பாடு இலரே - போர்மறத்தால் விண்ணுலகடைந்த தேவர்போல் இவ் வுலகத்தில் வாழ்ந்தாராயினும் உயர்ந்தோராற் பாராட்டப்பெறும் பெருமையில்லாதவரே.

இமைகொட்டாதவர் இமையார், தேவர்க்குக் கண் இமைக்கா தென்பது கொள்கை.

**"கண்ணிமைத்த லானடிகள் காசினியிற் றோ—தலால்**
**... ... ... ... .....................................................................................**
**அறிந்தாள் நளன்றன்னை யாங்கு"** **(நள. 153)**

என்று நளவெண்பா கூறுதல் காண்க. தேவர்போல் வாழ்தலாவது ஆண்டகை யென்று அரசராலும் மதிக்கப்பட்டு வாழ்தல். பெண்ணிற் கஞ்சி அங்ஙனம் வாழ்தல் கூடாமையின், 'வாழினும்' என்பது எதிர்மறையும்மை. மூங்கில் பசுமையும் வழுவழுப்பும் உருட்சிதிரட்சியும்பற்றிப் பெண்டிர் தோளுக்கு உவமம். முயக்கவின்பம்பற்றித் தோள் சிறப்பித்துக் கூறப்பட்டது. இல்லாள் தோளிற் கஞ்சுதல் என்னுங் கூற்று, விண்ணுலகடையும் போர்மறவர் தம் பகைவரான மறவரின் தோள்வலிக் கஞ்சாமைக் கருத்தைக் குறிப்பா- உணர்த்திற்று. 'அமையார் தோள்' என்பது சிறிதும் அஞ்சத் தக்க தன்றென்னுங் குறிப்பினது. ஏகாரம் தேற்றம். 'ஆர்' உவமை யுருபு. பெண்ணிற்கஞ்சும் ஆடவர்க்குப் பெருமையில்லை யென்பது கருத்து.

## 907. பெண்ணேவல் செ—தொழுகு மாண்மையி னாணுடைப் பெண்ணே பெருமை யுடைத்து.

**(இ-ரை.)** பெண் ஏவல் செ-து ஒழுகும் ஆண்மையின் - நாணமின்றித் தன் மனைவிக்கு ஏவல்தொழில் செ-து வாழ்பவனின்

ஆண்டன்மையை விட; நாண் உடைப் பெண்ணே பெருமை உடைத்து - நாணமுள்ள ஒரு பெண்ணின் பெண்டன்மையே மேன்மை யுடையது.

உறழ்ந்து கூறப்பட்ட ஆண் பெண் இருவருள் பெண்ணிற்கு 'நாணுடை' என்று அடை கொடுத்ததால், ஆணிற்கு நாணின்மை பெறப்பட்டது. நாண மின்றியும் தன் ஆண்மையைக் காவாதும் இருப்பவனின் ஆண்பான்மை யினும், நாணத்தொடு கூடியும் தன் பெண்மையைக் காத்துக்கொண்டும் இருப்பவளின் பெண்பான்மை மேம்பட்டதென்பதாம். நாணஞ் சிறந்த பெண் தன் கணவனை ஏவல்கொள்ள விரும்பாளாதலின், இங்குப் பெண் என்றது பெண்வழிச் செல்வானின் மனைவியல்லாத பெண்ணென்று கொள்வதே சிறந்ததாம். 'ஏவல்' ஆகுபெயர். 'பெண்' ஆகுபொருளது. ஏகாரம் பிரிநிலை. ஆண்மை மறத்தொடு கூடிய ஆளுந்தன்மை; பெண்மை - விரும்பப்படுந் தன்மையொடு கூடிய அமைதித்தன்மை.

**908. *நட்டார் குறைமுடியார் நன்றாற்றார் நன்னுதலாள்***
***பெட்டாங் கொழுகு பவர்.***

**(இ-ரை.)** நல் நுதலாள் பெட்ட ஆங்கு ஒழுகுபவர் - தாம் விரும்பிய வாறன்றி அழகிய நெற்றியையுடைய தம் மனைவி விரும்பியவாறே நடப் பவர்; நட்டார் குறை முடியார் - தம் நண்பருக்குத் தேவையானவற்றைச் செ-து தீர்க்கமாட்டார்; நன்று ஆற்றார் - அதோடு மறுமைக்குத் தமக்குத் துணையான அறமுஞ் செ-யமாட்டார்.

மனைவியின் விருப்பப்படி யொழுகுதற்குக் கரணியமான நெற்றி யழகுபற்றியும், அங்ஙனம் ஒழுகாவிடின் செ-யும் நெற்றி நெறிப்புப் (brow beating) பற்றியும், 'நன்னுதலாள்' என்றார். நட்டார் குறை முடித்தலையும் நன்றாற்றலையும் மனைவியுஞ் செ-யாமையின் இருமைக்கும் வேண்டுவன செ-யப்படா என்பதாம்.

**909. *அறவினையு மான்ற பொருளும் பிறவினையும்***
***பெண்ணேவல் செ—வார்க ணில்.***

**(இ-ரை.)** அறவினையும் - அறச்செயலும்; ஆன்ற பொருளும் - அதைச் செ-தற்கு வேண்டிய பொருள் முயற்சியும்; பிறவினையும் - அவ் விரண்டின் வேறான இன்ப நுகர்ச்சிகளும்; பெண் ஏவல் செ-வார்கண் இல் - தம் மனைவிக்கு அடங்கி நடப்பவரிடம் இல்லனவாம்.

பெண்ணின்பம் நோக்கி அறத்தையும் பொருளையுங் கைவிட்டவர்க்குப் பின்பு மனைவியே ஏவல் கொள்ளும் தலைவியாதலின், அவளாற் பெறக்கூடிய இன்பமும் இல்லாமற்போம் என்பதாம். முப்பொருள்களுள் அறத்தையும் பொருளையுங் கிளந்து கூறிவிட்டதனால், 'பிறவினை' என்றது இன்பவினைகளை யென்பது அறியப்படும். புலன் ஐந்தாதலால் இன்பவினைகளும் ஐந்தாதல்பற்றிப் 'பிறவினை' யெனப் பன்மையாற் கூறினார்.

> "கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு
> மொண்டொடி கண்ணே யுள" (குறள். 1101)

என்று ஆசிரியரே கூறுதல் காண்க. பெண்ணேவல் செ-வார்க்கு முப்பொருட்பேறும் இல்லையென்பது இதனாற் கூறப்பட்டது.

**910. எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க் கெஞ்ஞான்றும்
பெண்சேர்ந்தாம் பேதைமை யில்.**

**(இ-ரை.)** எண் சேர்ந்த நெஞ்சத்து இடன் உடையார்க்கு - வினைச் சூழ்ச்சித் திறனுடைய உள்ளத்தையும் அதனாலுண்டான செல்வத்தையும் உடையவர்க்கு; பெண் சேர்ந்து ஆம் பேதைமை எஞ்ஞான்றும் இல் - மனைவியொடு கூடுதலாலேற்படும் பேதைமை ஒருகாலத்தும் உண்டாகாது.

இவ் வுலகில் வாழ்வதற்கு எல்லாவகையிலும் இடந்தருவதால் செல்வம் இடனெனப்பட்டது. "இடனில் பருவத்தும்" (குறள். 218) என்று ஆசிரியர் வேறிடத்துங் கூறுதல் காண்க. இளமைக் காலத்தையும் உள்ளடக்குமாறு 'எஞ்ஞான்றும்' என்றார். பேதைமையாவது விழைதல், தாழ்தல், அஞ்சுதல், ஏவல் செ-தல், அறம் பொருள் கைவிடுதல் ஆகியவற்றிற்கு ஏதுவான அறியாமை, பெண்வழிச் சேறலால் ஏற்படுங் கேடுகளெல்லாம் இக் குறளால் தொகுத்துக் கூறப்பட்டன.

## அதி. 92 - வரைவின் மகளிர்

*அதாவது, இல்லறம் புகாதும், கற்பைக் காவாதும், அழகு, துப்புரவு, புனைவு, முத்தமிழ்க் கலை முதலியவற்றால் ஆடவரை மயக்கி, வெளிப்படையான கொடிய நோயும் துப்புரவில்லாது தீநாற்றம் வீசும் அருவருப்பான தோற்றமுமில்லாத ஆடவர்க்கெல்லாம், குலமத பருவ நிலைமை வேறுபாடின்றித் தம் நலத்தைப் பொருட்கு விற்கும் பொதுமகளிர் தொடர்பு. பலரொடும் வரையாது கூடுதலால் வரைவின் மகளிர் எனப்பட்டனர். இத்*

*தொடர்பும் பொருளீட்டுதற்குத் தடையா-ப் பகைபோல்வதாலும், மணந்த மனைவிக்கு அடங்கி நடப்பதினுங் கேடு விளைத்தலாலும், பெண்வழிச் சேறலின் பின்வைக்கப்பட்டது.*

### *911. அன்பின் விழையார் பொருள்விழையு மா–தொடியா ரின்சொ லிழுக்குத் தரும்.*

**(இ-ரை.)** அன்பின் விழையார் பொருள்விழையும் ஆ-தொடியார் - ஒருவனை அன்புபற்றி விரும்பாமற் பொருள்பற்றி விரும்பும் அழகிய வளையலணிந்த விலைமகளிர்; இன்சொல் - தாம் கருதிய பொருள் பெறுமட்டும் தாம் அன்பு கனிந்தவராகக் கூறும் இனிய சொல்; இழுக்குத் தரும் - அன்று இன்பந்தருவதுபோல் தோன்றினும் பின்பு துன்பத்தையே விளைவிக்கும்.

'ஆ-தொடி', 'இன்சொல்' என்பன ஆடவருள்ளத்தைக் கவரும் கருவிகளுள் இரண்டைக் குறித்தன. 'பொருள்விழையும்' ஐந்தாம் வேற்றுமைத் தொகை. ஆ-தொடி ஆரா-ந்தெடுத்த தொடி; வினைத்தொகை.

### *912. பயன்றூக்கிப் பண்புரைக்கும் பண்பின் மகளிர் நயன்றூக்கி நள்ளா விடல்.*

**(இ-ரை.)** பயன்தூக்கிப் பண்பு உரைக்கும் பண்பு இல் மகளிர் - ஒருவனிடமிருந்து பெறக்கூடிய பொருளின் அளவை ஆரா-ந்தறிந்து அதைப் பெறும்பொருட்டுத் தாம் அன்புடையவராகச் சொல்லும் அன்பில்லா விலை மகளிரின்; நயன் தூக்கி நள்ளாவிடல் - ஒழுக்க வகையை ஆரா-ந்தறிந்து அவரொடு கூடாது விடுக.

பண்பு சொல்லளவாக வாயிலல்லது உண்மையாக உள்ளத்தி லில்லாமையால் 'பண்பின் மகளிர்' என்றும், அது அவர் குலவியல்பாதலை உரையளவையால் மட்டுமன்றிக் காட்சியளவையாலும் அறிதல் கூடுமாதலின் 'நயன்றூக்கி' யென்றும், பின்பு பார்த்தலுமின்றி வரையறவாக விட்டுவிலக வேண்டுமென்பார் 'விடல்' என்றும் கூறினார். 'நள்ளா' ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம்.

### *913. பொருட் பெண்டிர் பொ–ம்மை முயக்க மிருட்டறையி லேதில் பிணந்தழீஇ யற்று.*

**(இ-ரை.)** பொருட்பெண்டிர் பொ-ம்மை முயக்கம் - பொருள் கொடுப்பாரை விரும்பாது அவர் கொடுக்கும் பொருளையே விரும்பும்

விலை மகளிரின் பொ-யான தழுவல்; இருட்டு அறையில் ஏது இல் பிணம் தழீஇய அற்று - கூலிக்கு அமர்த்தப்பட்டவன் இருட்டறையில் யாதொரு தொடர்பு மில்லாத கன்னிப்பெண்ணின் பிணவுடம்பைப் பொருளாசை கருதித் தழுவினாற் போலும்.

இதிலுள்ள உவமத் தொடருக்கு, “பிணமெடுப்பார் இருட்டறைக் கண்ணே முன்னறியாத பிணத்தைத் தழுவினாற் போலும்” என்று பரிமே லழகர் உரைத்திருப்பது பொருந்தாது. ‘முயக்கம்’, ‘தழீஇ’ இரண்டும் இடக்க ரடக்கல். பிணமெடுத்தலையே ஆசிரியர் கருதியிருப்பின், பிணமெடுத்தற்று என்றோ பிணந்தூக்கியற்று என்றோ யாத்திருப்பார். மேலும், உயிர் போனபின் பே-வந்து அண்டும் என்று கருதி விளக்கேற்றி வைப்பது தமிழர் வழக்கமேயன்றி, இருட்டறையிற் சவத்தையிட்டு வைப்பதன்று. இங்கு முயக்கம் கூட்டத்தைக் குறிப்பதால், அதற்கு உவமமான தழுவலும் அத னையே குறித்தல் வேண்டும். தொடுதல் அல்லது தூக்குதல்மட்டும் முயக் கத்திற்கு உவமமாகாது. உவமையைக் கூர்ந்து நோக்கின், பொருளாசையும் உள்ளத்தொடு பொருந்தாத கூட்டமும் பொதுத்தன்மை யென்பது பெறப் படும். இத்தகைய பிணந்தழுவும் வழக்கம் தமிழரல்லாத வேற்றினத்தா ரிடையே ஆசிரியர் தம் காலத்தில் இருந்தது கண்டு, அதை உவமமாக அமைத்திருத்தல் வேண்டும்.

18ஆம் நூற்றாண்டிற்கும் 19ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் (1792-1823) தென்னாட்டில் வாழ்ந்த பிரெஞ்சுக் கிறித்தவ சமயக் குரவராகிய அப்பர் தூபாயிசு, தம் தா-மொழியில் எழுதிய ‘இந்துப் பழக்க வழக்கங்களும் சடங்குகளும்’ என்னும் பொத்தகத்திற் கீழ்வருமாறு வரைந்திருக்கிறார்:

“இதே மக்களிடை, இனி, அருவருப்பானதும் வெறுப்புண்டுபண்ணு வதுமான ஒரு வழக்கத்தைக் கொண்ட நம்பூதிரி என்னும் ஒரு தனிக் குலமும் உள்ளது. இக் குலப் பெண்கள் வழக்கமாகப் பூப்படையுமுன் மணஞ் செ-து வைக்கப்படுகின்றனர்; ஆயின், பூப்புக் குறிகள் வெளிப்படையாகத் தோன்றும் பருவத்தையடைந்த பெண் ஆடவனொடு கூடுமுன் இறக்க நேரின், அவள் சவவுடம்பைப் பே-த் தன்மையான புணர்ச்சிக்குட்படுத்த வேண்டுமென்பது கண்டிப்பான குலமரபாம். இதன் பொருட்டு அப் பெண்ணின் பெற்றோர் அத்தகைய அருவருப்பான மணவகையை முற்றுவித்தற்கு இசையும் ஒரு வெங்கப் பயலைப் பணப்பரிசு கொடுத்து அமர்த்த வேண்டியுள்ளது.

ஏனெனின், அம் மணம் முற்றுவிக்கப் பெறாவிடின், அக் குடும்பம் தன் மானத்தை இழந்துவிட்டதாகக் கருதிக்கொள்ளும்." (மூன்றாம் பதிப்பு, பக். 16-17)

இதுபற்றி 17ஆம் பக்கத்தில் பதிப்பாசிரியர் வரைந்துள்ள அடிக்குறிப்பு வருமாறு:

"அந்த அப்பர் (Abber) காலத்தில் செ-தி எவ்வாறா யிருந்திருப் பினும், இக்காலத்தில் இவ் வழக்கங்கள் இல்லை. இதுபற்றித் திரு. உலோகன் (W. Logan) தம் 'மலைவாரக் கைப்பொத்தகம்' (Manual of Malabar) என்னும் நூலிற் பின்வருமாறு வரைகின்றார்:

"மணவாதிறக்கும் பெண்டிர்க்குப் பிந்திய சிற்றீடு - இத்தகைய பெயர் அது பெறத் தகுந்ததாயின் - செ-தற்கு (ஐரோப்பிய மணவாழிக்கொத்த இந்துச் சின்னமாகிய) தாலி ஈமத்தின்மேற் கிடத்தப்பட்டிருக்கும் சவத்தின் கழுத்தில் முறைகாரனான ஓர் உறவினனாற் கட்டப்படும்வரை, அதை எரிக்க முடியாதென்று சொல்லப்படுகின்றது. நம்பூதிரிமார் தம் இழவுச் சடங்குகளும் கைக்கொள்வுகளும்பற்றி அளவிறந்து வா-வாளாமை மேற்கொள்கின்றனர். இத் தனி வியப்பான ஈம மணத்தைச் சேர்ந்த பிற கைக்கொள்வுகள்பற்றித் தமக்குச் சொல்லப்பட்டதை அப்பர் தூபாயிசு வரைந்திருப்பது உறுதிப்படுத்தப்பட வேண்டியுள்ளது. நம்பூதிரி குமுகத் தலைமக்களையும் மலைவாரத்தில் நம்பூதிரி வழக்கங்களை நெருங்கிப் பழகியறிந்த பிறரையும் உசாவிய கவனமான உசாக்களால், அந்த அப்பர் இங்கு வரைந்திருக்கும் பழக்கத்தைப்பற்றி அவருக்குச் சொன்னவன் கூற்றை அவர் தவறாக உணர்ந் திருக்க வேண்டுமென்று எனக்குத் தெரிகின்றது. அத்தகைய நிகழ்ச்சியிற் செ-யப்படுவதென்ன வென்றால், இந்துத் திருமணங்களில் வழக்கமாகச் செ-யப்படும் மதவியற் சடங்குகளை, இறந்த பெண்ணின் உடம்பைச் சுட்டெரிக்குமுன் அதன்மிசை நிகழ்த்துவதே. இங்கு மணமென்பது திருமணச் சின்னமாகிய தாலியைக் கட்டுவதேயன்றி மணமுற்றுவிப்பு வினையன்று."

பதிப்பாசிரியர் இங்ஙனம் மறுத்திருப்பினும், அப்பர் தூபாயிசு கூற்று வலியிழந்துவிடாது. கீழ்க்காணும் ஏதுக்குறிப்புகள் கவனிக்கத்தக்கன:

(1) இந்திய ஆரியப் பூசாரியர் முதற்காலத்தில் பல அருவருப்பான சடங்குகளை ஆற்றிவந்தமை, சென்ற நூற்றாண்டில் மார்க்கசகாய ஆச்சாரியார் வெளியிட்ட 'சித்தூர் அதாலத்துக் கோர்ட்டுத் தீர்ப்பு' என்னுஞ் சுவடியினின்று தெரிய வருகின்றது.

(2). திருவள்ளுவர் காலம் கி.மு. 2ஆம் நூற்றாண்டாதலால், அப் பழங் கால நம்பூதிரி வழக்கம் ஆங்கில நாகரிகம் தென்னாட்டிற் புகும்வரை தொடர்ந்திருக்கலாம்.

(3). அப்பர் தூபாயிசு தம் நூலை எழுதி முடித்த ஆண்டு (1806). அந் நூலின் 3ஆம் பதிப்பு வெளிவந்த ஆண்டு (1905) ஆதலால், பதிப் பாசிரியர் காலத்திற் பண்டை வழக்கம் நின்று போயிருக்கலாம். நம்பூதிரிக்குல முதியோர் நினைவிலிருந்திருப்பினும், இழிவுபற்றி அவரால் மறைக்கவும் மறுக்கவும்பட்டிருக்கலாம்.

(4). அப்பர் தூபாயிசு மதிநுட்பமும் உண்மையும் நடுவுநிலைமையும் உடைய துறவியராதலாலும், தென்னாடு வந்து தமிழ வாழ்வு வாழ்ந்து பதினாலாண்டு எல்லா மக்களொடும் நெருங்கிப் பழகிய பின் தம் நூலை எழுதினமையாலும், அவர் பிறன் கூற்றைப் பிறழவுணர்ந்தோ பொறுப்பற்றதனமாகவோ எழுதியிருக்க முடியாது.

(5) முறைகாரன் தாலிகட்டற்கும் உறவினனல்லாத ஒரு பரபஞ்சை பணம் பெற்றுத் தழுவற்கும் பெரு வேறுபாடிருப்பதால், ஒன்றை யின்னொன்றாகப் பிறழவுணரவோ உணருமாறு கூறவோ முடியாது.

(6) மணமென்பது உண்மையிற் கூட்டமேயாதலால், பூப்படைந்து மணமாகாத அல்லது மணச்சடங்குமட்டும் நடந்து கூட்டம் நிகழாத பெண் இறந்தபின் அவள் ஆவியைப் பொந்திகைப்படுத்தற்குச் செ-யும் சடங்கு முதற்காலத்திற் கூட்டமாகவே யிருத்தல் வேண்டும். நாகரிகமடைந்த பிற்காலத்திலேயே, அது ‘கொடும்பாவி’ கட்டியிழுத்தல் போல அடையாளச் சடங்காக மாறியிருத்தல் வேண்டும். (பொந்திகை = திருப்தி(வ.).

(7) “நம்பூதிரிமார் தம் இழவுச் சடங்குகளும் கைக்கொள்வுகளும்பற்றி அளவிறந்த வா-வாளாமை மேற்கொள்கின்றனர்” என்று திரு. உலோகன் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

(8) “இருட்டறையில் ஏதில் பிணந்தழீஇ யற்று” என்னும் திருக்குறள் உவமத்திற்கு, அப்பர் தூபாயிசு கூற்றே சிறந்த விளக்கமாகப் பொருந்துகின்றது.

(9) பூப்படையுமுன் பெண்ணிற்கு மணஞ்செ-து வைப்பதும், மணந்த பின் மணமக்கள் கூட்டத்தைத் தள்ளிவைப்பதும், பூப்படைந்த பெண் கூட்டத்திற்குமுன் இறப்பின் அவள் சவவுடம்பின் கழுத்தில் தாலி கட்டுவதும், பண்டைத் தமிழர் வழக்கமல்ல.

(10) திருவள்ளுவர் சேரநாடு சென்றிருக்க வேண்டுமென்பது முன்னரே "வெள்ளத் தனைய மலர்நீட்டம்" என்னும் குறளுரை யில் (565) கூறப்பட்டது.

'தழீஇ' இன்னிசை யளபெடை.

### 914. பொருட்பொருளார் புன்னலந் தோயா ரருட்பொரு ளாயு மறிவி னவர்.

**(இ-ரை.)** அருட்பொருள் ஆயும் அறிவினவர் - அருளோடு கூடிய பொருளை ஆரா-ந்து ஈட்டும் அறிவினையுடையார்; பொருட் பொருளார் புல் நலம் தோயார் - அறத்தையும் இன்பத்தையும் நோக்காது பொருளையே பொருளாகக் கொண்ட விலைமகளிராற் பெறும் இழிந்த சிறிய இன்பத்திற் படியார்.

காட்சியுங் கருத்துமாகிய எல்லாப் பொருள்கட்கும் பொருள் என்பது பொதுப்பெயராதலின், 'பொருட்பொருள்' என இருபெயரொட்டாக்கினார். புன்மை தன்மையிலும் அளவிலுஞ் சிறுமை. தோ-தல் தொடுதல் அல்லது படிதல். "தாடோ- தடக்கை" (புறம். 14.), "கானிலந் தோயாக் கடவுளை" (நாலடி. கடவுள் வாழ்த்து) என்பன காண்க. முழுகுதல் என்னும் பொருளும் உள்ள தேனும் அது இங்கு ஆழ்ந்து ஈடுபடுதலைக் குறிக்குமாதலின் விலக்கப் பட்டது. அறவழியில் ஈட்டும் பொருளை 'அருட்பொருள்' என்றும், அதற்குத் தடையாயிருத்தலால் 'புன்னலந் தோயார்' என்றும் கூறினார்.

### 915. பொதுநலத்தார் புன்னலந் தோயார் மதிநலத்தின் மாண்ட வறிவி னவர்.

**(இ-ரை.)** மதி நலத்தின் மாண்ட அறிவினவர் - இயற்கையான மதி நுட்பத்தால் மாட்சிமைப்பட்ட செயற்கையான கல்வியறிவினை யுடையார்; பொதுநலத்தார் புல் நலம் தோயார் - பொருள் கொடுத்தா ரெல்லாரும் பொது வாக நுகர்தற்குரிய விலைமகளிராற் பெறும் இழிந்த சிறிய இன்பத்திற் படியார்.

இயற்கையான மதிநலம் முற்பிறப்புகளிற் செ-த நல்வினைகளாலும் கற்ற கல்வியாலும் அமைவது. மதிநலத்தாலேயே கல்வியறிவு மாட்சிமைப்படுதலால்

'மதிநலத்தின் மாண்ட அறிவினவர்' என்றும், மாட்சிமைப்பட்ட அறிவினர்க்கு விலைமகளிர் நலத்தின் பொதுமையும் புன்மையும் விளங்கித் தோன்றுதலால் 'தோயார்' என்றும் கூறினார்.

## 916. *தந்நலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப்*
## *புன்னலம் பாரிப்பார் தோள்.*

**(இ-ரை.)** தம் நலம் பாரிப்பார் - கல்வியறிவாலும் நற்குண நற்செ-கை யாலும் தம் புகழை உலகத்திற் பரவச்செ-யும் உயர்ந்தோர்; தகை செருக்கிப் புல் நலம் பாரிப்பார் தோள் தோயார் - ஆடல், பாடல், ஒப்பனை முதலியவற்றால் தம் திறத்தை மிகுத்துத் தம்மால் ஆடவர் பெறும் இன்பத்தைப் பொருள் கொடுப்பாரிடத்தெல்லாம் பரப்பும் விலைமகளிரின் தோளைத் தீண்டார்.

தகை அழகு. தோயின் புகழ் கெடுமாதலின் 'தோயார்' என்றார். 'தந்நலம்' என்பதில் 'நலம்' ஆகுபொருளது. இம் மூன்று குறளாலும் உயர்ந் தோர் விலைமகளிரைத் தீண்டாமை கூறப்பட்டது.

## 917. *நிறைநெஞ்ச மில்லவர் தோ—வர் பிறநெஞ்சிற்*
## *பேணிப் புணர்பவள் தோள்.*

**(இ-ரை.)** நிறைநெஞ்சம் இல்லவர் - தீயவழியிற் செல்லாதவாறு மனத்தைத் தடுத்து நிறுத்தும் ஆற்றலில்லாத ஆடவர்; நெஞ்சில் பிற பேணிப் புணர்பவர் தோள் தோ-வர் - காதலாலும் மதிப்பாலும் உள்ளத்திற் கூடாமல் பொருளையும் அதனாற் பெறுவனவற்றையுமே விரும்பி உடம்பால்மட்டும் கூடும் விலைமகளிர் தோள்களைத் தழுவுவர்.

உள்ளத்தாற் கூடாமற் பொருளாசைபற்றி உடம்பால்மட்டும் கூடும் விலைமகளிர், பொருள் கொடுத்தால் அன்றுமட்டும் தரும் இன்பத்தின் பொதுமை சிறுமை பொ-ம்மை நோ-மைகளை அறிந்து தம் மனத்தை அடக்கியவர் தோயாராதலின், அவரல்லாதவர் தோ-வர் என்றார்.

## 918. *ஆயு மறிவின ரல்லார்க் கணங்கென்ப*
## *மாய மகளிர் முயக்கு.*

**(இ-ரை.)** மாய மகளிர் முயக்கு - அழகு, ஒப்பனை, நளினம், தளுக்கு, ஆடல், பாடல் முதலியவற்றால் ஆடவரை, சிறப்பாக இளைஞரை, மயக்கி வஞ்சிக்கும் விலைமகளிரின் தழுவலை; ஆயும் அறிவினர் அல்லார்க்கு

அணங்கு என்ப - அவ் வஞ்சனையை ஆரா-ந்தறியும் அறிவில்லார்க்குக் காமினிப்பே- தாக்கு என்பர் அறிஞர்.

அணங்கென்றது அணங்குதாக்கை. அணங்கு காமவழியால் ஆடவர் உயிரைக் கவரும் அழகிய பெண்பே-. தாக்குத் தழுவல். முன் இன்பஞ் செ-வதுபோல் தோன்றிப் பின் வறுமையாலும் நோயாலும் வாழ்நாளைக் குறுக்கும் விலைமகளிர் முயக்கத்திற்கு, முன் இன்பமாகத் தோன்றிப் பின் உயிர் கவரும் காமினிப்பேயின் தழுவலை உவமங் கூறினார். அணங்குதல் வருத்துதல். அணங்கும் பெண்பேயை அணங்கென்றது முதனிலைத் தொழிலாகுபெயர். 'அணங்கு' இங்கு அணங்குதாக்கைக் குறித்தலால் ஆகுபொருளி. 'அணங்கென்ப' என்பது அணங்குதாக்குப் போல்வதென்பர் என்றே பொருள்படுதலால், உவமையாவதன்றி உருவகமாகாது. இதை "மாதரடிக்கு நெருஞ்சிப் பழம்" என்பதுபோற் கொள்க.

### 919. *வரைவிலா மாணிழையார் மென்றோள் புரையிலாப்*
### *பூரியர்க ளாழு மளறு.*

**(இ-ரை.)** வரைவு இலா மாண் இழையர் மெல்தோள் - உயர்ந்தோர் இழிந்தோர் என்னும் வேறுபாடுபற்றி ஒருவரையும் விலக்காது பொருள் கொடுத்தார் யாவரையுந் தழுவும் விலைமகளிரின் மெல்லிய தோள்கள் ; புரை இலாப் பூரியர்கள் ஆழும் அளறு - அக் குற்றத்தை யறியும் உயர்வில்லாத கீழ்மக்கள் புகுந்து அழுந்தும் நரகாம்.

"மாணிழையார்' சிறந்த அணிகல மணிந்த பெண்டிர். இதனால் ஒப் பனையும், 'மென்றோள்' என்பதனால் உருவ அழகும் அறியப்படும். "புரை யுயர் வாகும்" (தொல். 785). அளறுபோல் துன்பந் தருவதை 'அளறு' என்றும், விலைமகளிரொடு கூடின கீழ்மக்கள் அவரை ஒருகாலும் விடார் என்பது தோன்ற 'ஆழும்' என்றும் கூறினார்.

### 920. *இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறுந்*
### *திருநீக்கப் பட்டார் தொடர்பு.*

**(இ-ரை.)** இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும் - இருவேறுபட்ட மனத்தையுடைய விலைமகளிரும் கள்ளும் சூதும்; திருநீக்கப்பட்டார் தொடர்பு - திருமகளால் நீக்கப்பட்டவரின் உறவாம்.

பொருள்மேல் விருப்பும் ஆள்மேல் விருப்பின்மையுமாக உடம்பாற் கூடுதலும் உள்ளத்தாற் கூடாமையும் ஒருங்கே யுடையார் மனத்தை 'இரு

மனம்' என்றார். வரைவின் மகளிர்போன்றே கள்ளுஞ் சூதும் பொருட்பகை யாதலின், உடன் கூறப்பட்டன. இதனால் அடுத்துவரும் ஈரதிகாரங்கட்கும் தோற்றுவா- செ-யப்பட்டது.

**"பலவயி னானும் எண்ணுத்திணை விரவுப்பெயர்**
**அஃறிணை முடிபின செ–யு ளுள்ளே"** **(தொல். 534)**

என்றவாறு, இங்கு இருதிணையும் விரவிவந்த எழுவா-கள் 'தொடர்பு' என்னும் அஃறிணை முடிபு கொண்டன. 'திரு' ஆகுபெயர். மூவகை யுறவு களுள் ஏதேனுமொன் றிருப்பினும், புதிதாகப் பொருள் சேராமையோடு இருந்த பொருளும் போ-விடும் என்பதாம். இந் நான்கு குறளாலும் விலை மகளிரொடு கூடுவோர் இழிந்தோர் என்பது கூறப்பட்டது.

## அதி. 93 - கள்ளுண்ணாமை

*அதாவது, நீராகவோ கட்டியாகவோ புகையாகவோ இருந்து வெறி யினால் உணர்வை மறைக்கும் பொருள்களை யுண்ணாமை. கள்ளுதல் மறைத்தல். இவ் வினை இன்று வழக்கற்றது. கள் - கள்ளம்= மறைப்பு. கள் - களவு = மறைப்பு.*

*கள் என்னும் பெயர் முந்நிலைப் பொருட்கும் பொதுவேனும், பெரு வழக்குப்பற்றி நீர்வடிவான பொருளையே குறிக்கும். அது இயற்கையுஞ் செயற்கையும் என இருவகைத்து; முன்னது பனை தென்னை முதலிய மரங்களினின்று இறக்குவது; பின்னது அரிசி கா-கனி முதலியவற்றைப் புளிக்கவைத்தும் கா-ச்சியும் எடுப்பது.*

*விலைமகளிர் கூட்டம் போன்றே கட்குடியும் பொருளீட்டற்குத் தடை யாயும் விளைவளவிற் பகைபோன்றும் இருத்தலால், விலக்கப்பட்டு வரை வின் மகளிரின் பின் வைக்கப்பட்டது.*

### 921. உட்கப் படாஅ ரொளியிழப்ப ரெஞ்ஞான்றுங்
### கட்காதல் கொண்டொழுகு வார்.

**(இ–ரை.)** கள் காதல் கொண்டு ஒழுகுவார் - கள்ளின்மேற் பெருவிருப் பங்கொண்டு நடப்பவர்; எஞ்ஞான்றும் உட்கப்படார் - ஒரு போதும் பகை வரால் அஞ்சப்படார்; ஒளி இழப்பர் - அதுவேயுமன்றித் தாம் பெற்றிருந்த நற்பெயரையும் இழப்பர்.

பேரரசராயினும் கள்ளுண்டு வெறித்தவிடத்துச் சிறுபிள்ளையாலும் எளிதா-க் கொல்லப்படுவராதலாலும், அந் நிலைமையடையுமாறு எவ்வேளை யிலும் உட்பகைவராற் கள்ளூட்டப்படுவ ராதலாலும், எஞ்ஞான்றும் 'உட்கப்படார்' என்றும், ஒழுக்கக்கேடும் மானக்கேடும்பற்றி இகழப்படுவ ராதலால் 'ஒளியிழப்பர்' என்றும் கூறினார். 'படாஅர்' இசைநிறை யளபெடை.

## 922. உண்ணற்க கள்ளை யுணிலுண்க சான்றோரா னெண்ணப் படவேண்டா தார்.

**(இ-ரை.)** கள்ளை உண்ணற்க - உயிரையும் மதிப்பையுங் காத்துக் கொள்ள விரும்புபவர் கள்ளை உண்ணாதிருக்க; உணில் சான்றோரான் எண்ணப்பட வேண்டாதார் உண்க - அங்ஙனமன்றி உண்ணவே விரும்பின், அறிவுடையோரால் மக்களாகக் கருதப்படுதலை விரும்பாதவர் உண்க.

ஆறறிவிற்குரிய மக்கட்பிறப்பையும் அதனாற் பெறக்கூடிய கல்வி யறிவையும் பெற்றும், கட்குடியால் அவற்றை யிழந்துவிடுதலால், இயற்கை யாகவே அவையில்லாத அஃறிணையினுங் கீழாகிப் பொதுவான உயிரினத்திலும் சேர்க்கப்படார் என்னும் கருத்துத் தோன்ற 'எண்ணப்பட வேண்டா தார்' என்றார்.

## 923. ஈன்றாண் முகத்தேயு மின்னாதா லென்மற்றுச் சான்றோர் முகத்துக் களி.

**(இ-ரை.)** ஈன்றாள் முகத்தேயும் களி இன்னாது - மக்கள் எக்குற்றஞ் செ-யினும் பொறுத்துக்கொள்ளும் மட்டற்ற அன்புள்ள தா- முன்பும் கள்ளுண்டு வெறித்தல் துன்பந் தருவதாம்; மற்றுச் சான்றோர் முகத்து என் - பின்பு எக்குற்றமும் பொறாத அறிவுடையோர்முன் அது எத்தகையதாம்?

ஐம்புலனு மடங்கி அடியோடு உணர்விழத்தலும், வா-காவது மறை வெளிப்படுத்தலும், பித்தர்போற் பிதற்றலும், ஆடை விலகலும், அற்றம் மறையாமையும், தீநாற்றம் வீசுதலும், வா- நுரைதள்ளுதலும், வழியிற் கிடத்தலும், வழிப்போக்கர் பழித்தலும், ஈ மொ-த்தலும், இளஞ்சிறார் சிரித் தலும் கண்ணாரக் காணின், பெற்ற தாயும் பொறாது கண்டனஞ் செ-வ ளாதலின், கள்ளைக் கண்ணாலுங் காணப் பொறாது நெடுந்தொலைவில் நீங்கும் தூயவொழுக்கமுள்ள சான்றோர்க்கு, அக் காட்சி அளவிறந்த அருவருப்பையும் வெறுப்பையும் விளைக்கும் என்பதைச் சொல்ல

வேண்டுவதில்லை யென்பதாம். உம்மை உயர்வுசிறப்பு. 'மற்று' பின்மைப் பொருளது. 'ஆல்' அசைநிலை.

**924. *நாணென்னு நல்லாள் புறங்கொடுக்குங் கள்ளென்னும்***
***பேணாப் பெருங்குற்றத் தார்க்கு.***

**(இ-ரை.)** கள் என்னும் பேணாப் பெருங் குற்றத்தார்க்கு - கள்ளுண்டல் ஆகிய பழித்தற்குரிய பெருங் குற்றத்தைச் செ-தவர்க்கு; நாண் என்னும் நல்லாள் புறம் கொடுக்கும் - நாணம் என்று சொல்லப்படும் பெண்தெ-வம் முகத்தில் விழிக்கவும் அருவருத்துப் புறங்காட்டி நிற்பாள்.

பெற்ற தா-க்கும் வெறுப்பை விளைத்தலின் 'பேணா' என்றும், ஒழுக்கக்கேட்டை மட்டுமன்றி உயிர்க்கேட்டையும் உண்டாக்குதலின் 'பெருங்குற்றம்' என்றும், கள்வெறியர் மானத்தை அறவே இழந்துவிடுதலின் 'நாண்.....புறங்கொடுக்கும்' என்றும் கூறினார். 'நல்லாள்' என்பது அழகுபற்றிப் பெண்ணிற் கொருபெயர். 'நல்லபிள்ளை' என்னும் உலக வழக்கையும். "மைப்படு மழைக்க ணல்லார்" (சீவக. 2881) என்னும் செ-யுள் வழக்கையும் நோக்குக. நாண் மென்மைக் குணமாதலின் பெண்ணாக வுருவகித்தார். "பெண்பாலாக்கியது வடமொழி முறைமைபற்றி" என்பது பரிமேலழகர் நச்சுக்கூற்று. 'கள்' ஆகுபொருளது. இம் மூன்று குறளாலும் கள்ளுண்டல் ஒளியிழத்தற்குக் கரணியமென்று கூறப்பட்டது.

**925. *கையறி யாமை யுடைத்தே பொருள்கொடுத்து***
***மெ-யறி யாமை கொளல்.***

**(இ-ரை.)** பொருள் கொடுத்து மெ- அறியாமை கொளல் - ஒருவன் விலைப்பொருள் கொடுத்துக் கள்ளால் வரும் மெ-ம்மறதியை வாங்குதல்; கை அறியாமை உடைத்தே - செ-யும் முறைமையறியாமையைக் கரணிய மாக வுடையதே.

'கை' செ-கை; கருவியாகுபெயர். கையறுதல் செயலறுதல். கையறி யாமை செ-கை அல்லது செ-யும் முறையை யறியாமை. "கையறியாப் பேதை" என்று ஆசிரியர் வேறிடத்துங் (குறள். 836) கூறுதல் காண்க. உலகத்தார் எங்கும் என்றும் நல்ல பொருளையே விலை கொடுத்து வாங்குவது இயற்கை. பொதுவாக மெ-ம்மறதி மயக்கம் என்னும் நோயால் உண்டாவது. நோ- நீக்கும் மருந்தையன்றி நோயை விலைக்கு வாங்கார். கள்ளை விலை கொடுத்து வாங்கி அதனால் மயக்கத்தைப் பெறுவது, நோயை விலைக்கு வாங்குவது போன்றதே.

இது அறிவில்லாத சிறுவரும் அறிவுதிரிந்த பித்தரும் செ-யுஞ் செயல்போன் றிருத்தலால், 'கையறியாமை யுடைத்தே' என்றார். இதற்குப் பழவினையைக் கரணியமாகக் காட்டுவர் பரிமேலழகர். ஏகாரம் தேற்றம்.

**926. *துஞ்சினார் செத்தாரின் வேறல்ல ரெஞ்ஞான்று***
***நஞ்சுண்பார் கள்ளுண் பவர்.***

**(இ-ரை.)** துஞ்சினார் செத்தாரின் வேறு அல்லர் - உறங்குபவர் உயி ருடையரேனும் அறிவும் மனவுணர்வும் அந் நிலையிலின்மையால் இறந்த வரை யொப்பர்; கள் உண்பவர் எஞ்ஞான்றும் நஞ்சு உண்பார் - அதுபோல், கள்ளுண்பவர் இறவாதிருப்பினும் அறிவையும் உடல்நலத்தையும் என்று மிழத்தலால் நாள்தோறும் நஞ்சுண்பவரை யொப்பர்.

"இதனை நிரனிறையாக்கி, திரிக்கப்படுதலால் உறங்கினாரும் நஞ்சுண் பாரு மொப்பர்; கைவிடப்படுதலாற் செத்தாருங் கள்ளுண்பாரு மொப்ப ரென்றுரைப்பாரு முளர். அதிகாரப் பொருள் பின்னதாயிருக்க யாது மியை பில்லாத நஞ்சுண்பார்க்கு உவமை புணர்த்து ஈண்டுக் கூறல் பயனின்றாக லானும், சொற்கிடக்கை நிரனிறைக் கேலாமையானும், அஃதுரையன்மை யறிக" என்று ஒருசாரா ருரையைப் பரிமேலழகர் மறுத்திருப்பது முற்றும் சரியே. இக் குறளில் வந்துள்ளது எடுத்துக்காட்டுவமை அணி, 'துஞ்சினார்', 'செத்தார்' என்பன இங்குச் சிறப்புப்பொருள் குறித்தன வல்ல.

**927. *உள்ளொற்றி யுள்ளூர் நகப்படுவ ரெஞ்ஞான்றுங்***
***கள்ளொற்றிக் கண்சா- பவர்.***

**(இ-ரை.)** கள் ஒற்றிக் கண்சா-பவர் - கள்ளை மறைந்துண்டு அதனால் வெறியேறி அறிவு தளர்பவர்; உள் ஊர் உள் ஒற்றி எஞ்ஞான்றும் நகப்படுவர் - உள்ளூரரால் உள்ளத்திலுள்ள மறைபொருள்கள் உ-த்துணரப்பட்டு எப்போதும் நகையாடப்படுவர்.

கள்வெறியினால் உணர்விழந்தவர், பொருள் விளங்காத தொடர்களை மட்டுமன்றி, நனவுக் காலத்தில் தம் உள்ளத்தில் மறைத்து வைத்திருந்தனவும் தமக்கு மாறானவும் தம்மைத் தாழ்த்துவனவுமான செ-திகளையும் வெளிவிடுவராதலின், 'உள்ளொற்றி யுள்ளூர் நகப்படுவர்' என்றார். "கள்ளைக் குடித்தால் உள்ளதைச் சொல்வான்", "கள்ளைக் கொடுத்துக் கருமத்தை (காரியத்தை) அறி" என்பன பழமொழிகள். 'உள்ளூர்' இலக்கணப்போலி. 'ஊர்', 'கண்' ஆகுபெயர்கள். 'உண்டு' என்பது அவா-நிலையான் வந்தது.

**928. களித்தறியே னென்பது கைவிடுக நெஞ்சத்
தொளித்ததூஉ மாங்கே மிகும்.**

**(இ-ரை.)** களித்து அறியேன் என்பது கைவிடுக - கள்ளை மறைவாக உண்டுவருபவன், அதை யுண்ணாத வேளையில், "நான் கள்ளுண்டறியேன்" என்று தன்னை ஒழுக்கமுள்ளவனாகக் காட்டிக் கொள்வதை விட்டுவிடுக; நெஞ்சத்து ஒளித்ததும் ஆங்கே மிகும் - பிறரறியின் இழிவென்று முன்பு தன் மனத்தில் மறைத்து வைத்திருந்த குற்றமும், மறுமுறை யுண்டபொழுதே முன்னினும் அதிகமாக வெளிப் பட்டுத் தோன்றும்.

களித்தல் கள்ளுண்டல் அல்லது கள்ளுண்டு வெறித்தல். வெறிக்கா விடினும் வா-நாற்றமே கள்ளுண்டதைக் காட்டிவிடுதலால், 'ஒளித்ததூஉ மாங்கே மிகும்' என்றார். 'ஒளித்ததூஉம்' இன்னிசை யளபெடை. ஏகாரம் பிரி நிலை. இவ் விருகுறளாலும் கள்ளுண்டல் மறைக்கப்படாமை கூறப்பட்டது.

**929. களித்தானைக் காரணங் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று.**

**(இ-ரை.)** களித்தானைக் காரணம் காட்டுதல் - கள்ளுண்டு வெறித்த வனை இது தகாதென்று ஏதுக்களைக் காட்டித் தெளிவித்தல்; நீர்க்கீழ்க் குளித்தானைத் தீத்துரீஇய அற்று - நீர்க்குள் முழுகினவனை விளக்கொளி யால் தேடிப்பார்த்தலை யொக்கும்.

விளக்கொளி நீருட் செல்லாதது போன்று ஏதுரை கட்குடியன் மனத்துட் செல்லா தென்பதாம். களித்தானைக் காட்டுதல் என்பது களித்தானுக்குக் காட்டுதல் என்று பொருள்கொள்ளின் வேற்றுமை மயக்கமும், களித் தானைக் காணச் செ-தல் என்று பொருள் கொள்ளின் வேற்றுமை யியல்பும் ஆம். இங்ஙனமே "அவளைக்காட் டென்றானோ" என்னுங் கலித்தொகைத் தொடருங் (72) கொள்ளப்படும் கீழ்நீர் இலக்கணப்போலி 'துரீஇ' இன்னிசை யளபெடை. இக் குறளால் அடிப்பட்ட கட்குடியனைத் திருத்த முடியாமை கூறப்பட்டது.

**930. கள்ளுண்ணாப் போழ்திற் களித்தானைக் காணுங்கா
லுள்ளான்கொ லுண்டதன் சோர்வு.**

**(இ-ரை.)** கள் உண்ணாப் போழ்தில் - கள்ளுண்பா னொருவன் தான் அதை உண்ணாது தெளிந்திருக்கும் வேளையில்; களித்தானைக்

காணுங்கால் - கள்ளுண்டு வெறித்த பிறனைக் காணும்போது; உண்டதன் சோர்வு உள்ளான் கொல் - தான் உண்டபொழுது தனக்கிருந்த மயக்கத்தையும் உவமை யளவையாலறிந்து, அதுவும் இத்தகையதே யென்று கருதான் போலும்!

கள்ளுண்டு வெறித்த நிலையின் இழிவை, உவமையளவையாலும் கருத்தளவையாலும் அறிந்தபின்னும் திருந்தாத கட்குடியன் நிலைமை நோக்கி, ஆசிரியர் வருந்திக் கூறியவாறு. 'கொல்' ஐயம்.

## அதி. 94 - சூது

*அதாவது, கள்ளுண் போன்றே அறம்பொரு ளின்பங்கட்குத் தடையா-நின்று பகைபோல் தீங்கு விளைக்கும் கவறாட்டு. சூது என்பது ஒருவகைக் கா-. அதன் பெயர் இங்கு அதைக் கருவியாகக் கொண்டு ஆடும் கவறாட் டைக் குறித்தது ஆகுபெயர். கள்ளுண்போல் சூதாட்டமும் விலக்கப்படுவ தாதலின், இவ் வதிகாரம் கள்ளுண்ணாமையின் பின் வைக்கப்பட்டது.*

**931. வேண்டற்க வென்றிடினுஞ் சூதினை வென்றதூஉந்**
**தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று.**

**(இ-ரை.)** வென்றிடினும் சூதினை வேண்டற்க - தான் வெல்லுந் திறமை யும் வா-ப்பும் உடையனாயினும் சூதாட்டை விரும்பற்க; வென்றதூஉம் தூண்டில் பொன் மீன் விழுங்கிய அற்று - வென்று பொருள் பெற்றதும் இரை யால் மறைக்கப்பட்ட தூண்டில் முள்ளை இரையென்று கருதி மீன் விழுங் கினாற் போன்றதே.

வெல்லுதல் உறுதியின்மையின் 'வென்றிடினும்' என்றும், தீயவழியிற் பொருள் வருதலான் 'வேண்டற்க' என்றும் கூறினார். தொடக்கத்தில் வென்ற பொருள் சூதாட்டை விட்டு ஒருபோதும் நீங்காதவாறு பிணிக்கும் பொறி யென்பதும், அதனாற் பின்பு பொருளெல்லாம் இழந்து உயிரும் துறக்க நேருமென்பதும், உவமையாற் பெறப்படும். சூதாட்டின் தன்மையுள்ள சீட்டாட்டும் சூதாட்டே. சூதாட்டின் தன்மைகள்: வெற்றி உறுதியின்றிக் குருட்டு வா-ப்பாயிருத்தல், சில வலக்காரங்கள் கையாளப் பெறுதல், தோற்றார் வைத்த பணந்திரும்பாமை, ஒருவன் உழைப்பின்றி விரைந்து பிறர் பணத்தாற் செல்வனாதல், இழக்குந்தொறும் ஆசையுண்டாகி மேன்மேலும் வறுமை மிகுதல், வென்றார்மீது பொறாமையுண்டாதற் கிடமாதல், உழைப்பில் விருப் பஞ் செல்லாமை என்பனவாம். சீட்டின் விலை மிகக் குறைந்தும் பரிசுத் தொகை மிகவுயர்ந்தும் பரிசுகள் மிகப் பல்கியும் இருப்பது, தூண்டில் முள்ளை மறைக்கும் இரைபோற் கவர்ச்சிக் குரியதாம். செல்வரது பொருளாலன்றி

வறியவரது பொருளால் ஒருவன் செல்வனாதல், திருவள்ளுவர் அறநெறிக்கும் பொருள்நூற் கொள்கைக்கும் முற்றும் மாறாம். 'வென்றதூஉம்' இன்னிசை யளபெடை. 'பொன்' ஆகுபெயர். இங்குப் பொன்னென்றது கரும்பொன்னாகிய இரும்பை.

### 932. *ஒன்றெ-தி நூறிழக்குஞ் சூதர்க்கு முண்டாங்கொ*
*னன்றெ-தி வாழ்வதோ ராறு.*

**(இ-ரை.)** ஒன்று எ-தி நூறு இழக்கும் சூதர்க்கும் - தூண்டில் முள்ளைப் பொதிந்த இரையைப் பெற்றுப் பின்பு உயிரையிழக்கும் மீன்போல, முத லாட்டத்தில் வென்று ஒரு தொகையைப் பெற்று பின்பு இன்னும் பெறுவோம் என்னும் ஆசையால் மேலும் மேலும் ஆடி, முன்பு பெற்றதுபோல் நூறு மடங்கு இழந்து வறியராகிய வாழ்நாள் குன்றியிருக்கும் சூதாடிக்கட்கும்; நன்று எ-தி வாழ்வது ஓர் ஆறு உண்டாம் கொல் - அறமும் இன்பமும் பெற்று நன்றாக வாழ்வதொரு வழியும் உண்டாகுமோ? உண்டாகாது.

பொருளைச் சூதாட்டிலேயே தொடர்ந்து செலவழிப்பதாலும் வரவரப் பொருள் குன்றி வருவதாலும், 'நன்றெ-தி' வாழும் வழியில்லை யென்றார். 'ஒன்று', 'நூறு' என்பன பொருள் குறியாது அளவு குறித்தன. 'நூறு' என்பது இங்குப் பேரெண்ணைக் குறித்தது. உம்மை இழிவுசிறப்பு. 'கொல்' வினா.

### 933. உருளாய மோவாது கூறிற் பொருளாயம்
போஒ-ப் புறமே படும்.

**(இ-ரை.)** உருள் ஆயம் ஓவாது கூறின் - ஒருவன் உருள்கின்ற கவற் றொடு சேர்ந்த பணையத்தை இடைவிடாது சொல்லிச் சூதாடுவானாயின்; பொருள் ஆயம் போ-ப் புறமே படும் - அவன் தேடிய செல்வமும் பொருள் வருவாயும் அவனை விட்டு நீங்கி எதிரிகளிடம் போ-ச் சேரும்.

'ஆயம்' இரண்டனுள் முன்னது சூதாட்டைக் குறித்தது; தாயம் என்னும் சொல்லின் திரிபு; பின்னது வருவாயைக் குறித்தது; வா என்னும் சொல்லி னின்று திரிந்தது. 'உருளாயம்' வினைத்தொகை. 'பொருளாயம்' உம்மைத் தொகை. ஆயம் என்னும் சூதாட்டுப் பெயர் உருள் என்னும் அடையால் சூதாட்டுக் கருவியையும், கூறின் என்னும் வினையால் பணையத்தையும் குறித்து இருமடியாகு பெயராயிற்று. பணையம் பந்தயப் பொருள்; வட்டினி யென்றும் பெயர்பெறும். ஒவ்வொரு சூதாட்டத்திலும் பணையங் கூறிய

பின்னரே கா-களைப் பா-ச்சுதலால், அக் கூற்றுக் கருவியொடு சார்த்திக் கூறப்பட்டது. 'போஒ-' இசைநிறை யளபெடை. பொருள்களையெல்லாம் பணையமாக வைத்துத் தோற்றபின், அவற்றின் வருவா-களையும் வைப்பது வழக்கமாதலின், 'பொருளாயம் ..... புறமே படும்' என்றார். 'ஆயம்' வட மொழித் திரிசொல்'' என்பது பரிமேலழகர் நச்சுக் கூற்று. ஏகாரம் பிரிநிலை.

**934. *சிறுமை பலசெ–து சீரழிக்குஞ் சூதின்***
***வறுமை தருவதொன் றில்.***

**(இ-ரை.)** பல சிறுமை செ-து சீர் அழிக்கும் சூதின் - பல்வேறு இழிவு தருந் துன்பங்களைச் செ-து உள்ள பெருமையையுங் கெடுக்கும் சூதாட் டைப்போல; வறுமை தருவது ஒன்று இல் - கொடிய வறுமையைத் தரக் கூடியது வேறொன்றுமில்லை.

நளன்போல் மக்களைவிட்டுப் பிரிவதும், காதல் மனைவியைக் காட்டில் விட்டு நீங்குவதும்; பாண்டவர்போல் மனைவியையும் பணையமாக வைத்திழப்பதும், பகைவர் அவள் கூந்தலைப் பிடித்து அம்பலத்திற் கிழுத்து வந்து மானக்கேடா-ப் பேசித் துகிலுரியப் பார்த்திருப்பதும், வென்றவர்க்கு அடிமையராகி மேலாடையைக் களைவதும் பல்வகைச் சிறுமைகளாம். சூது ஐம்பெருங் குற்றங்களுள் ஒன்றாதலாலும், அதை யாடுவோர் தீயோரொடு சேர்த்து எண்ணப்படுவதாலும், தோற்றவர் நாட்டையும் செல்வத்தையும் இழத்தலாலும், 'சீரழிக்கும்' என்றார்.

**935. *கவறுங் கழகமுங் கையுந் தருக்கி***
***யிவறியா ரில்லாகி யார்.***

**(இ-ரை.)** கவறும் கழகமும் கையும் தருக்கி இவறியார் - சூதாட்டும் சூதாடுகளமும் கவறுருட்டுங் கைத்திறமும்பற்றிப் பெருமை பாராட்டிப் பற்றுள்ளங்கொண்டு ஆடியவரும்; இல்லாகியார் - தம் எல்லாச் செல்வமும் இழந்தவராயினர்.

> ''கேடில் விழுச்செல்வங் கேடெ–து சூதாடல்
> ஏடவிழ்தார் மன்னர்க் கியல்பேகாண்'' **(நள. 9)**

என்றவாறு, இது பண்டு சூதாடித் தம் பொருள் முற்றுமிழந்த அரசரையுஞ் செல்வரையும் நோக்கிப் பொதுப்படக் கூறியதாகும். கைத்திறமாவது வேண்டியவா றெல்லாம் கவறுருட்டும் தேர்ச்சி. அத்தகைத் திறவோரும்

தோற்பரென்பது புட்கரனும் சகுனியும் இறுதியில் தவறியதால் அறியப்படும். சிறப்பும்மை தொக்கது. 'கவறு', 'கை' என்பன ஆகுபெயர். பலர் கூடுங் கூட்டத்தைக் குறிக்கும் கழகம் என்னுஞ் சொல், அம்பலம், மன்றம் என்னுஞ் சொற்கள்போல் இங்குக் கூடுமிடத்தைக் குறித்தது. கல - கள - (களகு) - கழகு - கழகம். தருக்குதலும் இவறுதலும் கைத்திறமையின் விளைவாகும். பாண்ட வர்க்குச் சூதாடும் வழக்கமும் விருப்பமும் இருந்ததில்லை யென்பதும், அதற்கு மாறாக அதன்மேல் வெறுப்பே யிருந்த தென்பதும்,

"அடியு மாண்மையும் வலிமையுஞ் சேனையு
மழகும் வென்றியுந் தத்தங்
குடியு மானமுஞ் செல்வமும் பெருமையுங்
குலமு மின்பமுந் தேசும்
படியு மாமறை யொழுக்கமும் புகழுமுன்
பயின்ற கல்வியுஞ் சேர
மடியு மான்மதி யுணர்ந்தவர் சூதின்மேல்
வைப்ப ரோமனம் வையார்" (வில்லி. பார. சபா. சூது. 65)

என்று தருமன் விதுரனிடங் கூறியதினின்று அறியப்படும். ஆதலால், "அவ் விவறுதலாற் பாண்டவர் தம் மரசுவிட்டு வனத்திடைப் போ- ஆண்டு மறைந்தொழுகினரென அனுபவங் காட்டியவாறு" என்று பரிமேலழகர் உரைத்திருப்பது பொருந்தாதென்ப. பாண்டவர் சூதாகச் சூதில் ஈடுபடுத்தப் பட்டாரேயன்றித் தாமாக விரும்பி யாடினாரல்லார்.

**936. அகடாரா ரல்ல லுழப்பர் சூதென்னு
முகடியான் மூடப்பட் டார்.**

**(இ-ரை.)** சூது என்னும் முகடியான் மூடப்பட்டார் - சூதாட்டு என்னும் மூதேவியால் ஆட்கொள்ளப்பட்டவர்; அகடு ஆரார் அல்லல் உழப்பர் - இம்மையில் வயிறார உண்ணப்பெறார்; மறுமையில் நரகத்துன்பத்தால் வருந்துவர்.

பொருளீட்டும் முயற்சியைக் கெடுத்து வறுமையைக் கொடுத்தலால் 'முகடி' யென்றும், புதிதாகப் பொருளீட்டாது பழம்பொருளையும் பணையமாக வைத்திழத்தலால் 'அகடாரார்' என்றும், பொ-யும் வஞ்சனையுங் களவும் பழகுதலால் 'அல்லலுழப்பர்' என்றும் கூறினார். வயிறு நிரம்பாமை சொல் லவே, பிற புலன் நுகர்ச்சியில்லாமை சொல்லாமலே பெறப்படும். வீட்டு

முகட்டு வளையில் தங்குகின்றவள் என்னும் கருத்துப்பற்றி முகடியென்னப் பட்டாள் போலும்!

**937. *பழகிய செல்வமும் பண்புங் கெடுக்குங்***
***கழகத்துக் காலை புகின்.***

**(இ-ரை.)** காலை கழகத்துப் புகின் - ஒருவன் அறம்பொரு ளின்பங்கட்குச் செலவிட வேண்டிய காலத்தில் சூதாடுகளம் புகுந்து ஆடுவானாயின்; பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும் - அது தொல்வரவாகிய பழஞ்செல்வத்தையும் நற்குணங்களையும் நீக்கும்.

களம் என்றே பொருள்படும் கழகம் என்னும் பொதுச்சொல், இங்கு இடம்பற்றிச் சூதாடு குறித்தது. 'பழகிய' என்னும் அடை பண்பையுந் தழுவும். ஆதலால், பண்பென்றது இங்கு வழிமுறைப் பண்பை. முன்னோர் தேட்டு முதுசொம் எனப்படும். தான் புதிதாகச் செ-துகொள்ளும் அறம்பொருளே யன்றி முன்னோரிடமிருந்து வழிவழி வந்த செல்வமும் நற்பண்பும் இல்லாமற் போமென்பதாம்.

**938. *பொருள்கெடுத்துப் பொ—மேற் கொளீஇ யருள்கெடுத்***
***தல்ல லுழப்பிக்குஞ் சூது.***

**(இ-ரை.)** சூது - சூதாட்டு; பொருள் கெடுத்து - தன்னைப் பயில்கின் றவன் தோல்வியால் அவன் செல்வத்தைக் கெடுத்து; பொ- மேற்கொளீஇ - வெற்றி பெறும் பொருட்டுப் பொ-யை மேற்கொள்ளப் பண்ணி; அருள் கெடுத்து - தோல்வி வருத்தத்தாலும் வென்றவன்மீது கொள்ளும் பொறா மையாலும் எழும் சினத்தால் அருள் நோக்கைக் கெடுத்து; அல்லல் உழப் பிக்கும் - இங்ஙனம் இருமையிலும் துன்புற்று வருந்தச் செ-யும்.

மூவகைத் தீங்குகளுள், முன்னதன் விளைவு இம்மையிலும் பின்ன வற்றின் விளைவு மறுமையிலும் நிகழ்வனவாம். "பொருள் கொடுத்து என்பது பாடமாயின், அவ் வெச்சத்திற்கு முடிவு மேற்கொளீஇ என்புழி மேற்கோடலாகிய வினை, முதல்வினை" என்னும் பரிமேலழகர் உரை பொருந்துவதே. 'கொளீஇ' சொல்லிசை யளபெடை.

**939. *உடைசெல்வ மூணொளி கல்வியென் றைந்து***
***மடையாவா மாயங் கொளின்.***

**(இ-ரை.)** ஆயம் கொளின் - ஒருவன் சூதாட்டைப் பொழுதுபோக்காகவோ பொருளீட்டும் வழியாகவோ மேற்கொள்ளின்; ஒளி கல்வி செல்வம் ஊண் உடை என்னும் ஐந்தும் அடையாவாம் - அவனைப் பெயர் விளங்கலும் கல்வியும் செல்வமும் ஊணும் உடையும் ஆகிய ஐந்தும் சேராவாம்.

அகவுடைமையும் புறவுடைமையுமாகிய எல்லாப் பொருள்களும் இல்லாதவனாவான் என்பதாம். சூதாட்டிலேயே காலங்கழிப்பவனுக்குப் புதுப்பொருள் வராமையாலும் பழம்பொருள் போ-விடுதலாலும், 'ஐந்தும்' அடையாவாம்' என்றார். அரசனாயின், அவன் செல்வம் படை, குடி, நாடு, கூழ், அரண், கருவூலம், உரிமைச் சுற்றம் முதலியனவாம். 'ஒளி', 'கல்வி' முதலியன செ-யுள் நடைநோக்கி முறைமாறி நின்றன. ஆயம் சூதாட்டு. 'ஐந்தும்' முற்றும்மை. சூதாட்டிலேயே காலங்கழிப்பவனுக்குக் கல்வி கற்க நேரமின்மையாலும், ஏற்கெனவே கற்றதும் "நூறு நாள் ஓதி ஆறுநாள் விடத் தீரும்" என்ற பழமொழிப்படி மறந்து போமாதலாலும், மறவாத ஒழுக்க நெறி முறைகளும் கைக்கொள்ளப்படாவாதலாலும், அடையாப் பொருள்களுள் கல்வியும் ஒன்றாகக் கொள்ளப்பட்டது. ஊண்போல் உடையும் இல்லாமற் போவானென்றது பொதுப்பட வறுமை குறித்ததேயன்றி, நளன் நாடிழந்து காடடைந்தபின் ஓதிமத்தை (அன்னத்தை) வளைத்து ஆடை யிழந்ததையும், பாண்டவர் தம்மைப் பணையமாக வைத்தாடித் தோற்றுத் தம் மேலாடை யிழந்ததையும் குறித்ததன்று.

**940. இழத்தொறூஉங் காதலிக்குஞ் சூதேபோற் றுன்ப**
**முழத்தொறூஉங் காதற் றுயிர்.**

**(இ-ரை.)** இழத்தொறும் காதலிக்கும் சூதேபோல் - பணையம் வைத்த பொருள்களை இழக்குந்தோறும் அவற்றை மீட்டற்பொருட்டும் மேற்கொண்டு ஈட்டற்பொருட்டும் சூதின்மேற் பற்று வைக்குஞ் சூதன்போன்றே; உயிர் துன்பம் உழத்தொறும் காதற்று - ஆதன்(ஆன்மா) உடம்பால் மூவழித் துன்பங்களையும் பட்டு வருந்துந்தோறும் அதன்மேற் பற்றுவைக்குந் தன்மையதாம்.

உயிர்வினையை உவமமாகவும் சூதன் வினையைப் பொருளாகவுங் கூறுவதே அதிகார முறையாயினும், முன்னதன் முதன்மைபற்றி மாற்றிக் கூறினார். இங்ஙனம் இருவகைக் காதலையுங் கூறியது பெரும்பான்மை பற்றியாகலின், உடம்பை வெறுத்துத் துறவுபூணுவதும் சூதை வெறுத்து நல்வழிப்படுவதும் சிறுபான்மை யுண்டெனவறிக. துன்பப்படுந்தொறும்

உடம்பின்மேற் பற்றுவைப்பது, எதிர்காலத்திலேனும் இன்பநுகரலாம் என் னும் நம்பாசைபற்றி. 'தொறூஉம்' ஈரிடத்தும் இன்னிசை யளபெடை. 'சூது' ஆகுபொருளது; உயிருக்கொத்தவன் சூதனேயாதலின். சூதன் சூதாடு வோன். ஏகாரம் பிரிநிலை.

## அதி. 95 - மருந்து

*அதாவது, அறம்பொரு ளின்பத்திற்குத் தடையா-ப் பகைபோல் நின்று வருத்தும் பல்வகை நோ-களையுந் தடுப்பனவும் தீர்ப்பனவுமான பல்வேறு நலப்பொருள் தொகுதி.*

*நோ- வரும் வழிகள் அல்லது கரணியங்கள் பழவினை, முன்னோர் தொடர்பு, இயற்கை, ஒட்டுவாரொட்டு, ஊண், உடை, நஞ்சு, உறுப்பறை, வறுமை, பஞ்சம், செ-வினை, அச்சம், போர், இறைவன் முதலியன. தாக்கும் பகுதிபற்றி அகக்கரண நோ-. புறக்கரணநோ- என நோ-கள் இரு பாற்படும்.*

*நோ-நீக்கும் மருத்துவ முறைகள் உட்கொள்வு, முகர்வு, பூச்சு, அணிவு, சுடுகை, ஒத்துகை, வேர்பிடிப்பு, குளிப்பு, அலுப்பு, மந்திரம், மந்திரத் தூக்கம்(Hypnotism), வழிபாடு, இறும்பூது(Miracle), நம்பகம் (Faith) முதலியனவாகப் பலதிறப்படும். பழவினையால் வந்த நோ-க்கு மருந்தில்லையென்பர். இறைவனால் வந்த நோ-க்கு மருந்தில்லையென்பர். இறைவனால் வந்தநோ- இறைவழிபாட்டால் நீங்கும். இவ் விருவகையு மல்லாத பிறவகை நோ-ப் பண்டுவமே(Treatment) இவ் வதிகாரத்தில் ஆசிரியராற் கூறப்பட்டுள்ளது.*

*மருந்து இயற்கை மருந்து செயற்கை மருந்து என இருவகைப்படும். வேருந் தழையும் போல்வன இயற்கை; மாத்திரையும் பாம்புணிக் கருங் கல்லும் போல்வன செயற்கை, தமிழ மருத்துவத்தில் இயற்கை மருந்துகளே பெரும்பான்மையாம். "வேர்பார், தழைபார், மெல்ல மெல்லச் செந்தூர நீறு (பற்பம்) பார்" என்பது தமிழ மருத்துவப் பழமொழி. மருத்துவ வேருந்தழை யும் அவற்றாற் செ-யப்பட்ட கலவைகளும், பொதுவாகச் சிறப்பான நறு மணமுடைமையால் மருந்து எனப் பெயர் பெற்றன. மரு என்பது நன்மணம். மருக்கொழுந்து என்னும் உலக வழக்கையும், "மருவார் கொன்றை" (தேவா. 530 : 1) என்னும் செ-யுள் வழக்கையும் நோக்குக. மரு - மருந்து. சிறந்த மருந்துத் தழைகளெல்லாம் மலைகளிலிருப்பதாலும், மலைகளில் வாழும் சித்தரே அவற்றைப்பற்றிய அறிவில் தேர்ச்சி பெற்றிருந்ததினாலும், தமிழக*

*மருத்துவ அகரமுதலி மலையகராதியென்றும், தமிழ மருத்துவம் சித்த மருத்துவம் என்றும் பெயர்பெற்றன.*

*பெரியாரைப் பிழைத்தல், கள்ளுண்டல் என்னும் பகைகள் பெரியா ரைப் பிழையாமையென்றும், கள்ளுண்ணாமையென்றும் எதிர்மறை வடிவிற் கூறப்பட்டதுபோன்றே, நோ- என்னும் பகையும் இங்கு மருந்து என்னும் மாற்றுப்பெயராற் கூறப்பட்டதென்க. மற்றப் பகைகளைப் போலாது இஃது அம்மை யிம்மை யும்மையென்னும் மும்மையுந் தழுவுவுதால், இறுதியில் வைக்கப்பட்டது.*

### 941. *மிகினுங் குறையினு நோ—செ—யு நூலோர்*
### *வளிமுதலா வெண்ணிய மூன்று.*

**(இ-ரை.)** நூலோர் வளிமுதலா எண்ணிய மூன்று - மருத்துவ நூலார் ஊதை (வாதம்) முதலாக எண்ணிய முக்கூறுகளும்; மிகினும் குறையினும் நோ- செ-யும் - தாம் இருக்க வேண்டிய அளவிற்குக் கூடினாலும் குறைந்தாலும் உடம்பிற் பல்வேறு நோ-களை உண்டுபண்ணும்.

'வளிமுதலா வெண்ணிய மூன்று' ஊதை பித்தங் கோழை (சிலேட்டுமம்) என்பன. ஐ அல்லது ஐயம் என்பது கோழைக் கொருபெயர். இம் மூன்றும் உடம்பிலிருந்து வெவ்வேறு நற்றொழில் செ-யும் இன்றியமையாக் கூறுகளேயன்றி, நோ-களல்ல. மூச்சும் பேச்சும் உட்பொருளிடமாற்றமும் வெளியேற்றமும் தனித்தும் பிற தாதுக்களோடு கூடியும் நிகழ்த்துவது ஊதையின் தொழில்கள்; உண்டதன் செரிமானத்திற்கு உதவுவது பித்தநீர்; தசைநார்களின் மழமழப்பான இயக்கத்திற்கு உணவுடை செயல்களின் ஒவ்வாமையாலும் இயற்கை வேறுபாட்டாலும் மிகுதலுங் குறைதலும் நேரும்பொழுதே, அவற்றின் விளைவாக நோ-கள் உண்டாகும் என அறிக. இதற்கு மாறாக, மிகுதல் குறைதல்களை உணவு செயல்களின் தொழிலாக வுரைத்துள்ளார் பரிமேலழகர். உணவொவ்வாமையாவது, சுவை மணம் ஆற்றல்களால் உடற்கூற்றொடும் கால விடங்களொடும் பொருந்தாமை. உடையொவ்வாமையாவது காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்காமை. செயலொவ்வாமை மிகையுந் தகாமையும், முற்றும்மை தொக்கது. ஆக என்னும் வினையெச்ச வீறு. 'ஆ' எனக் கடைக்குறைந்து நின்றது. 'நூலோர்' என்பதற்கு ஆயுள்வேத முடையோர் என்று பரிமேலழகர் உரைத்ததும் நச்சுக் கூற்றே. சித்த மருத்துவத்தின் வடநாட்டு வேறுபாடே ஆயுர்வேதம் என அறிக.

மேலையர் ஊதை முதலிய முக்கூறுகளையும் அரத்தம் (blood), கோழை (phlegm), பித்தம் (choler), கரும்பித்தம் (melancholy) என நால்வகை நீரங்களாகப் (humours) பகுப்பர்.

**942.** ***மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய***
***தற்றது போற்றி யுணின்.***

**(இ-ரை.)** அருந்தியது அற்றது போற்றி உணின் - ஒருவன் தான் முன்னுண்டது செரித்ததைக் குறிகளால் தெளிவாக அறிந்து அதன்பின் உண்பானாயின்; யாக்கைக்கு மருந்து என வேண்டாவாம் - அவனுடம்பிற்கு மருந்தென்றே ஒன்றுந் தேவையில்லை.

பெரும்பாலும் நோ-களெல்லாம் செரியாவுணவாலும் பொருந்தா வுணவாலும் மிகையுணவாலுமே நேர்வதால், இது முதல் ஆறு குறள்களில் ஆசிரியர் உணவுநெறிபற்றியே கூறுகின்றார். செரிமானத்தை யறியுங் குறிகள் வயிற்றிற் கனமின்மை, ஏப்பத்தின் செம்மை, இருவகைக் கரணங்களும் தொழில் செ-யத் தகுதியாயிருத்தல். பசியுண்டாதல், உண்டு ஐந்து மணி நேரத்திற்கு மேலாயிருத்தல் என்பன. 'யாக்கை' ஆகுபெயர். எழுவகைத் தாதுக்களால் யாக்கப்பட்டது யாக்கை. யாத்தல் கட்டுதல், 'உணின்' என்பது அதன் அருமையையும் நிலைப்பாட்டையும் உணர்த்திற்று. இக் குறளால் உண்டது செரித்தபின் உண்டால் நோ- வராதென்பது கூறப்பட்டது.

தமிழகத்து உணவு தொன்றுதொட்டு மருத்துவ முறையிற் சமைக்கப் பட்டு வருகின்றது. பச்சரிசி சூடுண்டாக்குமாதலால் வெப்பநாட்டிற் கேற்கா தென்று புழுங்கலரிசி யாக்கப்படுகின்றது. அதைச் சரிதண்ணீர் வைத்துச் சமைத்தல் வேண்டும். சுவைமிகுத்தற்குத் தீட்டும்போது நீக்குந் தவிட்டைத் தனியாகக் கொழுக்கட்டை பிடித்துத் தின்பது வழக்கம். வாழைக்கா-வளிமிகுப்பதென்று பிஞ்சுநிலையில் சமைக்கப்படும். சீனியவரையென்னுங் கொத்தவரை பித்தமிகுப்பதென்று முதலில் அவித்து இறுக்கப்படும். காற லுண்டாக்குங் கா-கட்குப் புளி சேர்க்கப்படும். காயச்சரக்காகக் கூட்டுவன வற்றுள் மஞ்சள் நெஞ்சுச் சளியை முறிக்கும்; கொத்துமல்லி பித்தத்தையடிக்கும்; சீரகம் வயிற்றுச் சூட்டைத் தணிக்கும்; மிளகு தொண்டைக் கட்டைத் தொலைக்கும்; பூண்டு வளியகற்றி வயிற்றளைச்சலை நிறுத்திப் பசிமிகுக் கும். வெங்காயம் குளிர்ச்சியுண்டாக்கிக் குருதியைத் தூ-மைப்படுத்தும்; பெருங்காயம் வளியை வெளியேற்றும்; இஞ்சி பித்தத்தை யொடுக்கிக் கா-ச்சலைக் கண்டிக்கும்; தேங்கா- நீர்க்கோவை யென்னுந் தடுமத்தை

(மூக்குச்சளியை) நீக்கும்; கறிவேப்பிலை மணமூட்டி உணவு விருப்பை யுண்டாக்கும். கடுகு வயிற்றுவலி வராமற் காக்கும்; நல்லெண்ணெ- கண் குளிர்ச்சியும் மதித்தெளிவும் உண்டாக்கும். இவையெல்லாஞ் சேர்த்த துவரம் பருப்புக் குழம்பும் சீரகம் பூண்டு கலந்த மிளகுநீரும் சூட்டைத் தணித்துச் செரிமான ஆற்றலை மிகுக்கும் மோரும், கூடிய முப்படையற் சோற்றைக் கொழுமைப்படுத்திக் குடற்புண்ணாற்றும் நெ-யொடும் உடலுக் குரஞ்செ-து கழிமாசுக்கட்டை (மலபந்தத்தை) நீக்கும் கீரையொடும், குளிர்ச்சி தந்து பித்தம் போக்கும் எலுமிச்சை யூறுகாயொடும், அறுசுவைப்பட வுண்ட தமிழன் 'அற்றது போற்றியுணின்' நோயண்டாதாகலின், 'மருந்தென வேண்டாவாம்' என்றார். 'யாக்கைக்கு' என்றது உடம்பைப் பொறுத்தமட்டில் என்றவாறு. உள்ளத் தைத் தாக்கும் நோ- வேறுவகைப்பட்டதாகலின், அதைப் பின்னர்க் கூறுவார்.

**943.** ***அற்றா லளவறிந் துண்ணுக வஃதுடம்பு***
***பெற்றா னெடிது-க்கு மாறு.***

**(இ-ரை.)** அற்றால் அளவு அறிந்து உண்க - முன்னுண்டது செரித்து விட்டால் பின்னுண்பதைச் செரிமான ஆற்றல், பசி, பருவம், உழைப்பு, உணவு வலிமை முதலியவற்றின் அளவறிந்து, உடல்நிலைக்கும் காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்ப அளவாக உண்ணுக; அஃது உடம்பு பெற்றான் நெடிது உ-க்கும் ஆறு - அங்ஙனம் உண்பதே பெறற்கரிய மாந்தனுடம்பைப் பெற்றவன் அதை நெடுங்காலங் கொண்டு செலுத்தும் வழியாகும்.

இம்மை மறுமை வீடென்னும் மும்மையின்பத்திற்கும் வேண்டிய முயற்சி செ-யக் கூடியது மாந்தப் பிறப்பொன்றேயாதலின் 'உடம்பு பெற் றான்' என்றும், அவ் வுடம்பு நீடுநிற்பின் அம் முயற்சியும் அதன் விளைவான இன்பமும் பெருகுமாதலின் 'நெடிது-க்கு மாறு' என்றும் கூறினார்.

"அரிதரிது மானிட ராத லரிது
மானிட ராயினுங் கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்த லரிது
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமுங் கல்வியு நயத்த லரிது
ஞானமுங் கல்வியு நயந்த காலையும்
தானமுந் தவமுந் தாஞ்செய லரிது
தானமுந் தவமுந் தாஞ்செ—வ ராயின்
வானவர் நாடு வழிதிறந் திடுமே." **(தனிப்பாடல்)**

"உடம்பா ரழியி னுயிரா ரழிவர்
திடம்பட மெ—ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கு முபாய மறிந்தே
உடம்பை வளர்த்தே னுயிர்வளர்த் தேனே." (திருமந். 724)

"உடம்பினை முன்ன மிழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே யுத்தமன் கோயில்கொண் டானென்
றுடம்பினை யானிருந் தோம்புகின் றேனே." (திருமந். 725)

உடம்பானது வாழ்க்கை நெறியிற் செலுத்தும் சகடம் போன்றிருத்த லால், உடம்போடுகூடி வாழ்தலை உ-த்தல் என்றார். உடம்பைச் செலுத்துவது அல்லது இயக்குவது என்னும் பொருட்கரணியம்பற்றியே உயிர் என்ற சொல்லும் எழுந்தது. உ- - உயிர். 'உண்க' என்னும் பாடவேறுபாடு பொருந்துவதன்று. பிறரெல்லாம் 'உண்க' என்றே பாடமோதினர். அப் பாடத்திற்கு இயற்சீர் வெண்டளை தட்டுதலின் அது பாடமன்மை யறிக. தமிழை ஆரிய அடிப்படையிற் கற்றவர், ஆ-தத்தை வடமொழி விசர்க்கம் போற் கொண்டு அது சிலவிடத்து ஒரு மாத்திரை கொண்ட உயிர்மெ- யாகவும் ஒலிக்கும் என்பர். அவர் அறியார்.

"மெ—யின் அளபே அரையென மொழிப" (11)

"அவ்வியல் நிலையும் ஏனை மூன்றே" (12)

என்று தொல்காப்பியங் கூறுதல் காண்க. "குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆ-தம் என்ற முப்பாற் புள்ளியும்" (2) ஏனை மூன்றாம். ஆ-தம் ஒரோவழி கால்மாத்திரையாகக் குறுகுமன்றி ஒருபோதும் ஒருமாத்திரையாக நீளாது.

"உருவினும் இசையினும் அருகித் தோன்றும்
மொழிக்குறிப் பெல்லாம் எழுத்தின் இயலா
ஆ—தம் அஃகாக் காலை யான" (40)

என்னும் தொல்காப்பிய நூற்பாவை நோக்குக. 'சொல்வான்' என்னும் சொல் 191ஆம் குறளிற் சொல்லுவான் என்றும், 'சொல்க' என்னும் சொல் 197ஆம் குறளிற் சொல்லுக என்றும், தளைக்கேற்ப விரிந்தவடிவில் நிற்றல் போன்றே, 'உண்க' என்னும் சொல்லும் உண்ணுக என விரிந்து நின்றதென்க.

அற்றேல்,

"அற்றா ரழிபசி தீர்த்த லஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி" (226)

"கற்றில னாயினுங் கேட்க வஃதொருவற்
கொற்கத்தி னூற்றாந் துணை" (414)

"இன்பங் கடன்மற்றுக் காம மஃதடுங்காற்
றுன்ப மதனிற் பெரிது" (1165)

என்னுங் குறள்களின் முதலடியில் இயற்சீரான மூன்றாம் சீரும்,

"வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை
யாண்டு மஃதொப்ப தில்" (393)

என்னுங் குறளின் ஈற்றடியின் முதற் சீரும் எங்ஙனந் தட்குமெனின், அவற்றி லெல்லாம் அடுத்துவரும் அஃது என்னுஞ் சொல் அது என்றே, முதலில் இருந்திருக்க வேண்டுமென்றும் பிற்காலத்தில் வடநூல்வழித் தமிழ்ப் புலவரோ ஏட்டைக் கெடுத்த எழுத்தாளரோ அதை ஆ-தச் சொல்லாக மாற்றியிருத்தல் வேண்டுமென்றும் அறிந்துகொள்க. அல்லாக்கால்,

"அன்பீனு மார்வ முடைமை யதுவீனும்
நண்பென்னு நாடாச் சிறப்பு." (74)

"ஈத லிசைபட வாழ்த லதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு." (231)

"கல்லார்ப் பிணிக்குங் கடுங்கோ லதுவல்ல
தில்லை நிலக்குப் பொறை" (570)

என்னுங் குறள்களில் 'அது' என்னுஞ்சொல் நின்றிரா தென்க, மேலும்,

"வீழ்நாள் படாஅமை நன்றாற்றி னஃதொருவன்" (38)
"அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்" (49)
"அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்கு" (80)
"அழுக்கற் றகன்றாரு மில்லையஃ தில்லார்" (170)
"ஒப்புரவி னால்வருங் கேடெனி னஃதொருவன்" (220)
"தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்" (236)

“அவாவில்லார்க் கில்லாகுந் துன்பமஃ துண்டேல்” (368)
“மனநலத்தி னாகு மறுமைமற் றஃதும்” (495)
“மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை யஃதின்றேல்” (556)
“கண்ணோட்டத் துள்ள துலகிய லஃதிலார்” (572)
“கண்ணிற் கணிகலங் கண்ணோட்ட மஃதின்றேல்” (575)
“உடைய ரெனப்படுவ தூக்கமஃ தில்லார்” (591)
“உரமொருவற் குள்ள வெறுக்கையஃ தில்லார்” (600)

என்னு மிடங்களிலெல்லாம் ஆ-தம் அரைமாத்திரையே கொண்டிருத் தலையும் நோக்குக. இக் குறளால் அளவறிந் துண்ண வேண்டுமென்பது கூறப்பட்டது.

### 944. அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல
### துடீக்க துவரப் பசித்து.

**(இ-ரை.)** அற்றது அறிந்து - முன்னுண்டது செரித்த நிலைமையை அறிந்து; துவரப் பசித்து - முற்றப் பசித்தபின்; மாறு அல்ல கடைப்பிடித்துத் து-க்க - உடற்கூறு பருவம் விருப்பம் காலம் இடம் முதலியவற்றொடு மாறுகொள்ளாதனவும், மணஞ்சுவை வலிமைகளால் மாறுகொள்ளாதனவு மான உணவுகளைக் குறிக்கொண்டு உண்க.

‘அற்றது போற்றி’ (942) என்றும், ‘அற்றா லளவறிந்து’ (943) என்றும், முன்பு இருமுறை கூறியதோ டமையாது மீண்டும் இங்கு ‘அற்ற தறிந்து’ என்றது, செரிமானத்தின் இன்றியமையாமையை வலியுறுத்தற் பொருட்டாம். ஆசிரியர் இதை முதன்மையாகக் கொண்டதினாலேயே, இன்பத்துப்பாலில் உலகிற் சிறந்த இன்பத்தைக் கூறுமிடத்தும்,

“உணலினும் உண்ட தறலினிது காமம்
புணர்தலி னூட லினிது” (1326)

என உவமமாகக் கூறியிருத்தல் காண்க. உண்டது செரித்த பின்பும் அதன் சுவையும் மணமும் சற்று நேரம் நிற்குமாதலின், ‘துவரப் பசித்து’ என்றார். பசித்தல் என்னுஞ் சினைவினை இங்கு முதல் வினையாக நின்றது. ஊதை பித்த கோழைகளை மிகுப்பனவும் குறைப்பனவுமாக உணவுகள் உடற் கூற்றொடும், இளமைக்குரிய வுணவுகளை முதுமையி லுண்பது பருவத் தொடும், அருவருப்பான தோற்றமும் நாற்றமுமுள்ள வுணவுகள் விருப்பத்

தொடும், கோடைக்குரிய வுணவை மாரிநாளிலும் காலைக்குரிய வுணவை மாலையிலும் உண்பது பெரும்பொழுதும் சிறுபொழுதுமான காலத்தொடும், வெப்பநாட்டிற்குரிய வுணவைக் குளிர்நாட்டிலுண்பது இடத்தொடும், மாறுகொள்வனவாம். தேனும் நெ-யும் தம்முள் அளவொத்து நஞ்சாதல் போல்வன சுவை வலிமைகளால் மாறுகொள்வனவாம்.

அறுசுவைகளுள், துவர்ப்பையும் புளிப்பையும் ஊதைக் கூற்றோடும், உவர்ப்பையும் கைப்பையும் பித்தக் கூற்றோடும், இனிப்பையும் கார்ப்பையும் கோழைக் கூற்றோடும், தொடர்புபடுத்திக் கூறுவர் மருத்துவர். ஒரே சுவை யுள்ள கா-கனிகள் நேர்மாறான குணஞ் செ-வதாலும், ஒரே கனி வேறுபட்ட வளர்ச்சி நிலையிலும் வேறுபட்ட நிலத்தாலும் வேறுபட்ட காலத்தாலும் சுவை வேறுபடுதலாலும், சுவையை மட்டும் நோக்காது பொருளையும் நோக்கி, ஏற்பதும் ஏற்காததும் அறிந்துகொள்வதுந் தள்ளுவதுஞ் செ-தல் வேண்டும். அயலிடங் களில் உடற்கூறு முதலியவற்றோடு மாறுகொள்ளும் உணவுகளை உண்ண நேரினும், அவற்றிற்குரிய மாற்றுகளை உடனே உண்டு விடுவது நோ- வராமல் தடுக்கும் முற்காப்பாம். ஒவ்வோருணவுப் பொருளிலும் சிற்றள வாகவோ பேரளவாகவோ ஒவ்வொரு குற்றமிருந் தாலும், ஒருவருடற் கொத்தது இன்னொருவ ருடற்கொவ்வாமையாலும், பித்தத்தையுங் கா-ச் சலையும் நீக்கினும் தாது வளர்ச்சியைக் குறைக்கும் இஞ்சி சுக்குப் போல ஒன்றிற்காவது இன்னொன்றிற் காகாமையானும், அளவிற்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாதலாலும், எல்லாவற்றின் இயல்பையும் உரையளவையால் அல்லது பட்டறி வாலறிந்து, எல்லா நிலைமைக்கும் ஏற்ப உடம்பிற்கொத்த வுணவை அளவாக வுண்டு நோயின்றி இன்புறுக என்பார். ‘கடைப்பிடித்து மாறல்ல து-க்க’ என்றார். இக் குறளால் ஒத்த வுணவை நன்றா-ப் பசித்த பின்னரே யுண்ணவேண்டுமென்பது கூறப்பட்டது.

**945.** ***மாறுபா டில்லாத வுண்டி மறுத்துண்ணி***
***னூறுபா டில்லை யுயிர்க்கு.***

**(இ-ரை.)** மாறுபாடு இல்லாத உண்டி - உடற்கூறு முதலியவற்றோடு மாறுகொள்ளாத உணவை; மறுத்து உண்ணின் - ஒருவன் தன் விருப்பத் திற்கு இடங்கொடாது மேலும் இரு கவளத்திற்கு வயிற்றில் இடமிருக்கு மளவு குறைத்து உண்பானாயின்; உயிர்க்கு ஊறுபாடு இல்லை - அவனுயிர்க்கு நோயினால் துன்பமுறுதல் இராது.

செரிமானத்தைப் போன்றே ஒத்த வுணவை யுண்பதும் இன்றியமை யாததாதலின், 'மாறல்ல' என்று மேற்கூறியதையே இங்கு 'மாறுபா டில்லாத வுண்டி' என்று வழிமொழிந்தார். மறுத்தலென்பது நிரம்ப வுண்ணவேண்டு மென்னும் ஆசைக்கிணங்காமை. 'உண்ணின்' என்பது அதன் அருமை தோன்ற நின்றது. 943ஆம் குறளில் 'அளவறிந் துண்ணுக' என்றதனை இங்கு 'மறுத்துண்க' என வரையறுத்தார். ஊறு என்பது நேர்ச்சி. அது இங்கு வழக்குப் பற்றித் துன்பநேர்ச்சியைக் குறித்தது. இங்குக் குறித்த துன்பம் நோ-. உறுவது ஊறு; படுவது பாடு என்பது போல. துன்பமுறுவது உயிரேயாதலின் அதன்மேல் வைத்துக் கூறப்பட்டது. ஒத்த வுணவையும் ஒருசிறிது குறைத்துண்டல் நன்றென்பதாம்.

## 946. இழிவறிந் துண்பான்க ணின்பம்போ னிற்குங்
## கழிபே ரிரையான்க ணோ–.

**(இ–ரை.)** இழிவு அறிந்து உண்பான்கண் இன்பம்போல் - குறைத்துண் பதன் நன்மையைப் பட்டறிவாலறிந்து அம் முறையை நெடுகலும் கடைப் பிடிப்பவனிடத்து இன்பம் நிலைத்து நிற்பது போல்; கழிபெரு இரையான்கண் நோ– நிற்கும் - மிகப் பேரளவாக வுண்பவனிடத்து நோ- நிலைத்து நிற்கும்.

இழிவென்றது இன்றியமையாத அளவிற்கு மேற்பட்டதின் நீக்கத் தையே. இன்பமாவது உணவுச்சுவை மிகுதலும், எளிதா யியங்கி வினை செ-தலும், ஊதை பித்த கோழைகள் தத்தம் அளவில் நிற்றலால் ஒருவகை நோயுமின்மையும், ஏனை யின்பங்களையும் நுகர்தலும், மனமகிழ்ச்சியுமாம். 'கழிபெரு' மீமிசைச் சொல். 'இரை' யென்பது விலங்கினுந் தாழ்ந்த பறவை யூரிகளின் உணவைக் குறிக்குஞ் சொல்லாதலால், இங்கு இழிவு குறித்து நின்றது. 'கழிபே ரிரையான்' என்பதை மிடாவிழுங்கி என்பதுபோலக் கொள்க. 'நோ-' வகுப்பொருமை. அளவூணின் நன்மையும் மிகையூணின் தீமையும் இங்கு ஒருங்கு கூறப்பட்டன. மிகையூண் என்பது அளவு மிகுதியையன்றி வேளை மிகுதியையுங் குறிக்கும்.

"ஒருபொழு துண்பானே ஒகியொரு நாளில்
இருபொழு துண்பான்நன் றாகி – வருபொழுது
முப்பொழு துண்பானேல் நோகியாம் நாற்பொழுது
கப்புவான் சாகி கடிது."

### 947. தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணி
### னோயள வின்றிப் படும்.

**(இ-ரை.)** தெரியான் தீ அளவு அன்றிப் பெரிது உண்ணின் - ஒருவன் தன் உடற்கூற்றையும் அதற்கேற்ற வுணவையும் அதை யுண்ணுங் காலத் தையும் அறியாது, தான் விரும்பிய வுணவுகளையெல்லாம் விரும்பிய பொழுதெல்லாம் தன் பசியளவிற்கு அல்லது செரிமான ஆற்றலுக்கு மேற் பட்டுப் பேரளவாக உண்பானாயின்; நோ- அளவு இன்றிப் படும் - அவ னிடத்துப் பல்வகை நோயும் தோன்றி வளரும்.

தெரியாமை வினைக்குச் செயப்படுபொருள்கள் மேற்குறள்களிற் கூறப்பட்டவை. பசியெடுத்தல் தீயெரிதல் போன்றும் உண்டது செரித்தல் தீயால் எரிக்கப்படுதல் போன்றும் இருத்தலால், பசி அல்லது செரிமான ஆற்றல் வயிற்றுத்தீ யெனப்படும். அவ் வழக்கு நோக்கித் 'தீயள வன்றி' என்றார். 'வயிற்றுத் தீத்தணிய' என்பதுங் காண்க..

"கனல்வாதை வந்தெ-தின்" (தாயு. சச்சிதா. 5) என்று தாயுமானவரும் கூறுதல் காண்க. 'நோ-' வகுப்பொருமை. இக் குறளால் செரிமான ஆற்றலளவிற்குத் தக்கவாறு உண்ணவேண்டு மென்பது கூறப்பட்டது. 'தெரியான்' எதிர்மறை முற்றெச்சம்.

### 948. நோ-நாடி நோ-முதல் நாடி யதுதணிக்கும்
### வா-நாடி வா-ப்பச் செயல்.

நோ-நாடி - மருத்துவன் நோயாளியின் சொல்லினாலும் நாடியினா லும் பிற வுடற்குறிகளாலும் சிறுநீர் கழிபொருள்களின் இயல்பினாலும் நோ- இன்னதென்று ஆ-ந்து துணிந்து; நோ- முதல் நாடி - பின்பு அது உண்டான கரணியத்தை ஆரா-ந்தறிந்து; அது தணிக்கும் வா- நாடி - அதன் பின் அந் நோயைப் படிப்படியாக நீக்கும் வழியை ஆ-ந்துகொண்டு; வா-ப்பச் செயல் - அது வெற்றியாக நிறைவேறுமாறு கையாள்க.

இவ் வதிகாரத்தின் முதற்குறளில் மூவகை உடற்கூறும்பற்றிய நோ-கள் உண்டாகும் வகையைப் பொதுப்படச் சொல்லி, அதன் பின் உணவுவகையில் நோ- வராமல் தடுக்கும் முற்காப்பை ஆறு குறள்களாற் கூறி, பின்பு எஞ்சிய முக்குறள்களில், உணவுத் தவற்றாலும் பிற வகையாலும் நோ- வந்தவிடத்து மருத்துவன் செ-யும் பண்டுவ முறையைப்பற்றிக் கூறுகின்றார்.

சித்த மருத்துவத்தில் நோ- நாடும் சிறந்த முறை நாடி பார்த்தலே. அது தமிழராலேயே கண்டுபிடிக்கப்பட்டது. அவரிடத்தினின்றே ஆரிய மருத்துவரும் ஏனை மருத்துவரும் அதைக் கற்றுக்கொண்டனர். அதை இங்கு வெளிப்படையாகக் கூறாவிடினும் 'நோ- நாடி', 'நோ- முதல் நாடி', 'வா-நாடி' என்று மும்முறை 'நாடி' என்னுஞ் சொல்லை ஆள்வதால் முந்நாடியும் குறிப்பாக வுணர்த்தினர் என்றே கொள்ளல் வேண்டும். இது உடம்பொடு புணர்த்தல் என்னும் உத்திவகையாம். நாடி பேசும் வேளையும் நேரமும் வருமாறு:

| நாடி | வேளை | நேரம் |
|---|---|---|
| ஊதை (வளி) | பகலும் இரவும் | 6-10 மணி |
| பித்தம் | பகலும் இரவும் | 10-2 மணி |
| கோழை (ஐ) | பகலும் இரவும் | 2-6 மணி |

இம் மூன்றும் இம் முறையில் நடப்பதனாலேயே "வளிமுதலா எண்ணிய மூன்று" என்றார் ஆசிரியர். இவற்றின் ஒப்புநோக்கிய அளவு முறையே ஒன்றும் அரையும் காலும் ஆகும்.

மேலை மருத்துவம் நூற்கல்வியாலும் கருவித் துணைகொண்டும் செ-யப்படுவதால், அது பலராலும் பயிலப்படும். நாடி பார்த்தல் தெ-வத் தன்மையான நுண்ணருங் கலையாதலால், சித்த மருத்துவம் அதற்கென்று இறைவனால் படைக்கப்பெற்ற ஒருசிலராலேயே பயிலப்படும் என வேறுபாடறிக.

நோ-க்கரணியம் உணவு, உடை, செயல், தொழில், வாழ்நிலம், வானிலை (weather), நச்சுக்கடி முதலியனவாகப் பலவகைப்படும். அவற்றை ஆ-வதால் நோயும் அதை நீக்கும் வாயும் அறியப்படும். நோ- நீக்கும் வகைகள் உண்பித்தல், முகர்வித்தல், பூசுவித்தல், அணிவித்தல், குளிப்பித்தல், அரத்தங் களைதல், அறுத்தல், சுடுதல், நம்பக முறுத்துதல், ஆசை தீர்த்தல் முதலி யனவாகப் பல திறத்தன. மருத்துவப் பண்டுவத்தோடு அறுவைப் பண்டுவமும் தமிழ மருத்துவத்திலுண்மை, கண்ணப்ப நாயனார் காளத்தி நம்பி படிமைக்குக் கண்ணிடந் தப்பியதினாலும்,

"உடலிடைத் தோன்றிற் றொன்றை யறுத்தத னுதிர மூற்றிச்
சுடலுறச் சுட்டு வேறோர் மருந்தினால் துயரம் தீர்வர்" **(கம்பரா. கும்ப. 149)**

“ஆரார் தலைவணங்கார் ஆரார்தாம் கையெடார்
ஆரார்தாம் சத்திரத்தில் ஆறாதார் – சீராரும்
தென்புலியூர் மேவும் சிவனருள்சேர் அம்பட்டத்
தம்பிபுகான் வாசலிலே தான்.” (கம்பர் தனிப்பாடல்)

“கருவியிட் டாற்றுவார் – புண்வைத்து மூடார் பொதிந்து.” (நீதிநெறி. 55)

“வாளா லறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல் நோயா ளன்போல்” (திவ். 5 : 4)

என்பனவற்றாலும் அறியப்படும். “ஊனுக்கு ஊனிடுக” என்னும் மருத்துவ நெறிமுறையால், பண்டைத் தமிழ் மருத்துவத்தில் ஒட்டறுவை (plastic surgery) இருந்தமையும் அறியப்படும்.

உணவுவகைபற்றித் தமிழ மருத்துவம் மரக்கறி மருத்துவமும் புலால் மருத்துவமும் என இருதிறப்படுமேனும், திருவள்ளுவர் தழுவியது மரக்கறி மருத்துவமே. புலாலுணவில் மரக்கறியுணவுங் கலந்திருத்தல்போல், புலால் மருத்துவத்தில் மரக்கறி மருத்துவமுங் கலந்துள்ளதென்பதை அறிதல் வேண்டும்.

நம்பக மருத்துவம் (faith cure) மந்திரித்தல், குழையடித்தல், மந்திரம் போல் ஏதேனுமொரு சொல்லை வா-க்குட் பன்முறை சொல்லுதல், இறைவனை வேண்டல், ஏதேனுமொன்றை உண்பித்தல், ஏதேனுமொன்றைப் பூசுதல் அல்லது அணிவித்தல், ஏதேனுமொன்றைச் சொல்வித்தல் அல்லது நினைப்பித்தல், ஏதேனுமொன்றைச் செ-வித்தல், ஏதேனுமோரிடத்திற்குச் செல்வித்தல், ஏதேனுமொரு பொருளைக் காணச் செ-தல் முதலிய பல்வேறு வழிகளால் நோயாளிக்கு நோ- நீங்கிவிடுமென்னும் நம்பிக்கை யூட்டுதலாம்.

“மணிமந்திர மாதியாம் வேண்டுசித் திகளுலக
மார்க்கத்தில் வைக்க விலையோ”

என்றார் தாயுமான அடிகளும்.

நோ-களெல்லாம் உடல்நோ-, உளநோ- என இருபாற்படும். தீவினைக் கேதுவான தீய வுள்ளமல்லாத தூய வுள்ளநிலையில் நேரக்கூடிய உள நோ-களுள், சூடு முற்றிய பித்தத்தினாலும் அளவிற்கு மிஞ்சிய மூளை யுழைப்பினாலும் அளவிறந்த காதலாலும் உண்டாகும் கோட்டி அல்லது கிறுக்கு என்னும் பித்தியம், மருத்துவத்தினால் நீக்கப்படும்; ஆயின், பெற்ற

தாயைவிட்டுப் பிரிந்த பிள்ளையின் ஏக்கமும், ஒரு குமரியின்மேல் ஒரு குமரன் கொண்ட உண்மையான ஆழ்ந்த காதலும், அவற்றிற்குரிய ஆசைப் பொருளை அடைந்தாலன்றி நீங்கா. “தூங்கின பிள்ளை பிழைத்தாலும் ஏங்கின பிள்ளை பிழைக்காது.”

**“பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை**
**தன்நோ–க்குத் தானே மருந்து.”** **(குறள். 110)**

ஒரு பெண்ணின்மேல் வைத்த ஆசையால் நலிவுற்று நாள்தோறும் மெலிவுற்ற ஓர் இளைஞனின் காதலியை, ஒரு மருத்துவன் பின்வருமாறு நாடி பார்த்துக் கண்டுபிடித்தான். அவ் விளைஞன் வாழ்ந்த நகரப்பகுதிகளின் பெயர்களை ஒவ்வொன்றாகச் சொல்லி வருங்கால் அவன் காதலி குடியிருந்த பகுதியைச் சொல்லும் போதும், அப் பகுதியிலுள்ள தெருப் பெயர்களைச் சொல்லிவருங்கால் அவள் குடியிருந்த தெருப்பெயரைச் சொல்லும்போதும், அத் தெருவிலுள்ள வீட்டு எண்களைச் சொல்லிவருங்கால் அவள் குடியிருந்த வீட்டு எண்ணைச் சொல்லும் போதும், அவ் வீட்டிலுள்ள ஆள்களின் பெயர்களைச் சொல்லி வருங்கால் அவள் பெயரைச் சொல்லும் போதும், அவன் நாடி அதிகமா–த் துடித்தது.

இங்ஙனம் பல்வேறு வழிகளெல்லாம் அடங்குதற்கு, ‘அது தணிக்கும் வா–நாடி வா–ப்பச் செயல்’ என்றார். பல்வேறு நஞ்சுகளை மாற்றும் அல்லது வெளியேற்றும் நஞ்சு மருத்துவமும் பே–க்கோளாறுகளை நீக்கும் பே–மருத்துவமும் தனிப்பட்ட மருத்துவத் துறைகளாம்.

## 949. *உற்றா னளவும் பிணியளவுங் காலமும்*
## *கற்றான் கருதிச் செயல்.*

**(இ–ரை.)** கற்றான் – சித்த மருத்துவத்தைக் கற்றவன்; உற்றான் அளவும் பிணி அளவும் காலமும் கருதிச் செயல் – நோயாளியின் அளவையும் அவ னது நோயின் அளவையும் காலத்தின் நிலைமையையும் நோக்கி, அவற்றிற் கேற்றவாறு தன் நூலறிவையும் பட்டறிவையும் பயன்படுத்தி மருத்துவஞ் செ–க.

‘உற்றான்’ என்றது பிணியுற்றவனை. பின்னாற் பிணியென்று வருகின் றமையின் உற்றானென்று கூறியொழிந்தார். நோயாளியளவு உடற்கூறு, பருவம், உடல்வலிமை, உளவலிமை ஆகியவற்றின் அளவு, நோயளவு; வன்மை மென்மை யென்னும் தாக்கல் வேறுபாடும், தொடக்கம் இடை

முதிர்ச்சி என்னும் நிலை வேறுபாடும், இயல்வது இயலாதது ஐயுறவானது என்னும் நிலைமை வேறுபாடும் முதலியன. காலம்: கோடை மாரி முதலிய பெரும்பொழுது வேறுபாடும், காலை மாலை முதலிய சிறுபொழுது வேறு பாடும், பகல் இரவு என்னும் நாட்பகுதி வேறுபாடும், இயல் திரிவு என்னும் வானிலை வேறுபாடுமாம். இவை யெல்லாவற்றையும் எண்ணிச் சமையத் திற்கும் நிலைமைக்கும் ஏற்றவாறு செ-க என்பார் 'கருதிச் செயல்' என்றார்.

'கற்றான்' என்பதற்கு ஆயுள்வேதத்தினைக் கற்ற மருத்துவன் என்றுரைத்ததும், நோயாளியை ஆதுரன் என்றதும், நோ-க்குச் சாத்தியம் அசாத்தியம் யாப்பியம் என்று சாதிவேறுபாடு கூறியதும், பரிமேலழகரின் ஆரியக் குறும்புத்தனத்தையும் வடமொழி வெறியையுங் காட்டுவனவாம்.

**950. *உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்***
***றப்பானாற் கூற்றே மருந்து.***

**(இ-ரை.)** மருந்து - நோ-க்குச் செ-யும் மருத்துவம்; உற்றவன் - நோயாளி; தீர்ப்பான் - மருத்துவன்; மருந்து - அவனுக்குக் கருவியாகிய மருந்து அல்லது மருத்துவமுறை; உழைச்செல்வான் - அவனுக்குத் துணை வனாயிருந்து நோயாளியிடம் சென்று மருந்து கொடுப்பவன்; என்று அப்பால் நால் கூற்றே - என்று அப் பகுதிப்பட்ட நான்கு திறத்ததே.

***உற்றவன் திறமாவன:*** நோ-நிலை யுணர்த்தல், மருத்துவன் சொற் கடைப்பிடித்தல், பொருளீதல், மருத்துவத்துன்பம் பொறுத்தல் என்பன. ***நோ-தீர்ப்பான் திறமாவன:*** நோயாளியிடத் திரக்க முடைமை, நோ- நீக்குங் குறிக்கோளுடைமை, பரந்த மருத்துவக்கல்வி, மதிநுட்பம், நீடிய பட்டறிவு, பேராசையின்மை என்பன. இவற்றுள் பட்டறிவின் இன்றியமையாமை "இளங்கணியன் முதுமருத்துவன்" ("வாலிப சோதிடன் வயோதிக வைத் தியன்"), "ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை மருத்துவன்", "ஆயிரம் வேரைக் கொன்றவன் அரை மருத்துவன்" என்பவற்றால் அறியப்படும். ஆயிரம் வேர் என்றது வேரின் வகையையே யன்றித் தொகையை யன்று, "நோயாளி ஊழாளி (விதியாளி) யானால் மருத்துவன் (பரிகாரி) பேராளி" ஆதலால், ஆயிரம்பேரைக் கொன்றவன் என்பதாற் பெரிதும் இழுக்கும் இழிவும் இல்லையென்க. ***மருந்தின் திறமாவன:*** உடற்கூற்றோடொத்தல் ஊறு செ-யாமை ஆற்றலுடைமை எளிதிற் பெறப்படுதல் என்பன. ***உழைச் செல்வான் திறமாவன:*** மருத்துவன் சொன்ன வண்ணஞ் செ-யுந் திறமை, நோயாளியிடத் தன்புடைமை, இன்சொலனா யிருத்தல், உண்மையுடைமை

என்பன. இவையெல்லாங் கூடியவழியல்லது நோ- தீராமையின், 'அப்பானாற் கூற்றே மருந்து' என்று தேற்றேகாரங் கொடுத்துக் கூறினார். 'உற்றவன்', 'தீர்ப் பான்' என்னும் இரண்டிற்கு முரிய செயப்படுபொருள் முந்திய குறளினின்று வந்தது. உழைச்செல்வான் மருந்து கொடுப்பவனாக மட்டுமன்றிச் செ-ப வனாகவு மிருந்தால், மேலைமுறை மருத்துவமனையிலுள்ள கலக்குநரினும் (compounder) மருத்துவ அறிவாற்றலிற் சிறந்தவனாவன்.

'அப்பானாற் கூற்று' என்பதற்கு "நான்கு பகுதியையுடைய நான்கு திறத்தது" என்று உரையும், "நான்கென்னு மெண் வருகின்றமையின், அது நோக்கி 'அப்பா'லென் றொழிந்தார் என்று சிறப்பும் கூறினார் பரிமேலழகர். அது பொருந்தாமை,

"அவற்றுள்
அஇஉ
எஒ என்னும் அப்பா லைந்தும்
ஓரள பிசைக்குங் குற்றெழுத் தென்ப" (3)

"ஆ ஈ
ஊ ஏ ஐ
ஓ ஔ என்னும் அப்பா லேழும்
ஈரள பிசைக்கும் நெட்டெழுத் தென்ப" (4)

என்னும் தொல்காப்பிய நூற்பா யாப்பை நோக்கி யுணர்க. இனி, இவ் வதி காரம் முழுதும் ஆயுள்வேதம் என்னும் ஆரிய மருத்துவ நூன்முறையைத் தழுவியதாகப் பரிமேலழகர் ஆங்காங்கு உரைத்திருப்பது, உண்மைக்கு நேர்மாறாம்; ஆரியர் வருமுன் வடநாவலத்திலும் பனிமலைவரை தமிழரும் திரவிடருமே மிகுதியாயப் பரவியிருந்தனரென்றும், வடநாட்டுச் சித்த மருத்துவமே பிற்காலத்தில் ஆயுள்வேதமெனப் பெயர் மாற்றப்பட்ட தென் றும், இது பழந்தமிழிசையே இன்று பாகுபாடும் குறியீடுகளும் மாற்றப்பட்டுக் கருநாடக சங்கீதம் என வழங்குவது போன்ற தென்றும், அறிந்துகொள்க.

***உறுப்பியலில் நட்புப் பகுதி முற்றிற்று.***

*இனி, அரசியலுறுப்புகள் ஏழுள் இறுதியான குடியைப்பற்றிப் பதின் மூன் றதிகாரங்களாற் கூறத் தொடங்கி, முதற்கண் குடிமை கூறுகின்றார்.*

## அதி. 96 - குடிமை

*அதாவது, அரசனுடைய குடிகளுள் அறிவாலும் ஒழுக்கத்தாலும் உயர்ந்த சரவடியில் அல்லது குடும்பத்திற் பிறந்தாரது தன்மை. 'சிறப்புடைப் பொருளை முற்படக் கிளத்தல்' என்னும் முறைமையாலும், பிறருங் கண்டு பின்பற்றற் பொருட்டும், இது முன்வைக்கப்பட்டது.*

*"உயர்ந்த குடிப்பிறப்பு நால்வகை வருணத்தார்க்கும் இன்றியமையாத தாகலின், அச் சிறப்புப்பற்றி இது முன்வைக்கப்பட்டது" என்று வேண்டாதும் முரண்படவும் கூறியுள்ளார் பரிமேலழகர். ஆரியக் குலப்பாகுபாடு தமிழ்ப் பாகுபாட்டின் திரிப்பேயாயினும், நிறத்தை அடிப்படையாகக் கொண்டதும் ஏற்றத்தாழ் வுறுத்தப்பட்டது மாகும். ஆதலால் உயர்குடிப் பிறப்பு நாலாம் வருணத்தானான சூத்திரனுக்கு இருக்க முடியாது. தமிழ்க் குலப்பாகுபாடு கல்வி, காவல், வணிகம், உழவு என்னும் பரந்த தொழிற்பகுப்புப்பற்றிய அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் நாற் பெரும்பால் அல்லது வகுப்பே யாகும். "வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்" என்று (புறம். 183) ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் கூறியது இக் கருத்துப்பற்றியே.*

"கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனு மவன்கட் படுமே" **(புறம். 183)**

*என்று கூறியதும், செல்வத்தாலும் அதிகாரத்தாலும் உயர்ந்த அரசனும் அவற்றில் தாழ்ந்த அல்லது அவையில்லாத வேளாளன் அல்லது தொழிலாளி மகனான புலவனிடம் அல்லது ஆசிரியனிடம் கற்பதுபற்றியே. "தோணி யியக்குவான்" என்னும் நாலடியார்ச் செ-யுளையும் (136) நோக்குக.*

### 951. இற்பிறந்தார் கண்ணல்ல தில்லை யியல்பாகச்
### செப்பமு நாணு மொருங்கு.

**(இ-ரை.)** செப்பமும் நாணும் ஒருங்கு - ஒழுக்க நேர்மையும் பழிக்கு நாணுதலும் ஒருசேர; இல் பிறந்தார்கண் அல்லது இயல்பாக இல்லை - குடிப்பிறந்தாரிடத் தல்லது பிறரிடத்து இயற்கையாக வாகா.

இங்கு இல் என்றது சேக்கிழார் குடிபோலுஞ் சரவடியை அல்லது சேர சோழபாண்டியர் குடிபோலுங் கொடிவழியை.

"நாடும் ஊரும் இல்லும் குடியும்
பிறப்பும் சிறப்பும் இறப்ப நோக்கி" **(தொல். களவு. 23)**

என்பதில் 'இல்' கொடிவழியையும், 'குடி' சரவடியையும், 'பிறப்பு' குடும்பத்தையும், 'சிறப்பு' அரசாளற்குரிமையையும் குறிக்கும். செப்பமாவது கருத்து சொல் செயலாகிய முக்கரணமும் தம்முள் முரணாத செம்மை. நாணென்பது பழி பளகம் (பாவம்) பற்றிய அச்சமும் அருவருப்பும் கொண்ட வெட்கம். இவை நல்ல குடிப்பிறந்தார்க்கு இயற்கையாக அமையும்; பிறர்க்கு எத்துணைக் கற்பிப்பினும் அமையா.

**952. ஒழுக்கமும் வா–மையு நாணுமிம் மூன்று**
**மிழுக்கார் குடிப்பிறந் தார்.**

**(இ-ரை.)** குடிப்பிறந்தார் - நல்ல குடியிற் பிறந்தவர்; ஒழுக்கமும் வா-மையும் நாணும் இம் மூன்றும் இழுக்கார் - ஒழுக்கம் மெ-ம்மை பழிநாணல் ஆகிய முத்திறத்தும் ஒருபோதும் தவறார்.

ஒழுக்கம் முதலிய மூன்றும், முறையே, மெ- மொழி மனம் என்னும் முக்கரணம் பற்றியன.

**953. நகையீகை யின்சொ லிகழாமை நான்கும்**
**வகையென்ப வா–மைக் குடிக்கு.**

**(இ-ரை.)** வா-மைக் குடிக்கு - எக்காலத்துந் திரிபில்லாது ஒரே சரியா- ஒழுகும் உயர்குடிப் பிறந்தார்க்கு; நகை ஈகை இன்சொல் இகழாமை நான்கும் - இரவலரும் இரப்போரும் வறிய வுறவினரும் தம்மை யடைந்தபோது, முகம் மலர்தலும் இயன்றன கொடுத்தலும் இன்சொற் சொல்லுதலும் தாழ்வாகக் கருதாமையும் ஆகிய நான்கு குணமும்; வகை என்ப - இயல்பாக வுரிய கூறென்பர் அறிந்தோர்.

எக்காலத்தும் தவறாது ஒழுகுதலும் வழங்குதலும்பற்றி வைகையைப் "பொ-யாக் குலக்குடி" (சிலப். 13: 170) என்றதுபோல, நற்குடியை 'வா-மைக் குடி' என்றும், இல்லாரை இல்லாளும் ஈன்றாளும் உட்பட எல்லாரும் எள்ளுவாராகலின், இகழாமையைக் குடிப்பிறந்தார்க்குச் சிறப்பாக்கியும் கூறினார். 'குடி' ஆகுபெயர். இரவலராவார் புலவர் பாணர் கூத்தர் முதலியோர். "நான்கின் வகையென்பது பாடமாயின், வா-மைக் குடிப்பிறந்தார்க்குப் பிறரின் வேறுபாடு இந் நான்கான் உளதாமென் றுரைக்க" என்று பரிமே லழகர் கூறியிருப்பது பொருத்தமே. இம் மூன்று குறளாலும் குடிப்பிறந்தாரது இயல்பு கூறப்பட்டது.

### 954. *அடுக்கிய கோடி பெறினுங் குடிப்பிறந்தார்*
### *குன்றுவ செ—த லிலர்.*

**(இ-ரை.)** குடிப்பிறந்தார் - உயர்குடிப் பிறந்தவர்; அடுக்கிய கோடி பெறி னும் - பலவாக அடுக்கிய கோடிக்கணக்கான பொன்னைப் பெறுவதாயிருப் பினும்; குன்றுவ செ-தல் இலர் - தம் ஒழுக்கங் குன்றுவதற் கேதுவான இழிசெயல்களைச் செ-யார்.

செல்வம் பொதுவாகக் காசளவில் மதிக்கப்படுவதனாலும், நன் கொடையாகவுங் கையூட்டாகவுங் கொடுக்கப்பெறுவது பெரும்பாலுங் காசேயாதலாலும், காசுகளில் உயர்ந்தது பொற்காசாதலாலும், இங்குக் கோடி என்பதற்குக் கோடிப் பொன் என்று உரைக்கப்பட்டது. பொன் என்றது உயர்ந்த பொற்காசை. 'கோடி', 'பொன்' என்பன ஆகுபெயர்கள். 'அடுக்கிய கோடி' என்று பொதுப்படச் சொன்னதனால், தாமரை (கோடாகோடி), சங்கம் (பத்துக் கோடாகோடி, பரதம் (இலக்கங் கோடிக் கோடாகோடி) முதலிய மாபேரெண் களெல்லாம் தழுவப்பெறும். உம்மை உயர்வுசிறப்போடு கூடிய எச்சம்.

### 955. *வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி*
### *பண்பின் றலைப்பிரித லின்று.*

**(இ-ரை.)** பழங்குடி - தொன்றுதொட்டு வருகின்ற நற்குடியிற் பிறந்தார்; வழங்குவது உள்வீழ்ந்தக் கண்ணும் - தாம் கொடுக்கும் பொருள் சுருங்கிப் போன விடத்தும்; பண்பின் தலைப்பிரிதல் இன்று - தம் கொடுக்குந் தன்மை யினின்று நீங்குதல் இல்லை.

கொடைத்தன்மை தலைமுறைதோறும் ஆழ வேரூன்றுதலால், பழங் குடிக்கு அது நீங்காத பிறவிக் குணமா-ப் போ-விடுமென்பது கருத்து. உம்மை இறந்தது தழுவிய எச்சம். "தொன்றுதொட்டு வருதல் சேரசோழ பாண்டிய ரென்றாற்போலப் படைப்புக்காலந் தொடங்கி மேம்பட்டு வருதல்" என்று பரிமேலழகர் உரைத்திருப்பது பாராட்டத்தக்கது.

"ஆற்றுப் பெருக்கற் றடிசுடு மந்நாளும்
ஊற்றுப் பெருக்கா லுலகூட்டும் – ஏற்றதொரு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ரானாலும்
இல்லையென மாட்டா ரிசைந்து." (நல்வழி, 9)

### 956. *சலம்பற்றிச் சால்பில செ—யார்மா சற்ற*
### *குலம்பற்றி வாழ்துமென் பார்.*

**(இ-ரை.)** மாசு அற்ற குலம்பற்றி வாழ்தும் என்பார் - வசையற்று வரு கின்ற எங்குடி மரபோடொத்து ஒழுகக்கடவேம் என்னும் பூட்கை கொண் டவர்; சலம்பற்றிச் சால்பு இல செ-யார் - வறுமை வந்தவிடத்தும் வஞ்சனை யைக் கையாண்டு சான்றாண்மையொடு பொருந்தாத செயல்களைச் செ-யார்.

பூட்கை பூணுங்கொள்கை. இம் மூன்று குறளாலும் குடிப்பிறந்தார் வறுமையுற்றபோதும் தங்குடிப் பண்பிற் குன்றாரென்பது கூறப்பட்டது.

**957. *குடிப்பிறந்தார் கண்விளங்குங் குற்றம் விசும்பின்***
***மதிக்கண் மறுப்போ லுயர்ந்து.***

**(இ-ரை.)** குடிப் பிறந்தார்கண் குற்றம் - உயர்குடிப் பிறந்தவரிடத்துள்ள குற்றம்; விசும்பின் மதிக்கண் மறுப்போல் உயர்ந்து விளங்கும் - வானத்தின் கண் வெண்ணிலாவிலுள்ள களங்கம்போல் எல்லார்க்குந் தெரியுமாறு உயர்ந்து விளங்கித் தோன்றும்.

விசும்பு மதி மறு என்னும் மூன்றும், முறையே, குடி குடிப்பிறந்தார் குற்றம் என்னும் மூன்றற்கும் உவமமாம். குடியின் உயர்வினாலும், வெண் ணிலாப் போன்ற குடிப் பண்பொடு பொருந்தாமையாலும், கறைபோலுங் குற்றம் உலகெங்கும் விளங்கித் தோன்றுமென்பதாம்.

**958. *நலத்தின்க ணாரின்மை தோன்றி னவனைக்***
***குலத்தின்க ணையப் படும்.***

**(இ-ரை.)** நலத்தின்கண் நார் இன்மை தோன்றின் - குடிச் சிறப்புடைய வனா-ப் பிறந்தவனிடத்தில் அன்பின்மை காணப்படின்; அவனைக் குலத்தின்கண் ஐயப்படும் - உலகம் அவனை அக் குடிப் பிறப்புப்பற்றி ஐயுறவு கொள்ளும்.

நாரின்மையாவது "நகையீகை யின்சொ லிகழாமை நான்கும்" இன்மை. 'தோன்றின்' என்பது உண்மையான உயர்குடிப் பிறப்பில் நாரின்மை பெரும் பாலுந் தோன்றாமையைக் காட்டி நின்றது. நிற்கவே, நாரின்மைத் தோற்றம் உயர்குடிப் பிறப்பின்கண் ஐயுறவை யுண்டுபண்ணுவதும் இயல்பாயிற்று. நலம், குலம் என்பன ஆகுபொருளன. உலகம் என்னும் எழுவா- அவா- நிலையால் வந்தது. 'ஐயப்படல்' என்பது பாடமாயின் ஐயப்படுக என ஏவ லாக்கி யுரைக்க. இவ் விரு குறளாலும் குடிப்பிறந்தாரின் தன்மை திரிந்த விடத்து உண்டாகும் இழிவு கூறப்பட்டது.

**959. *நிலத்திற் கிடந்தமை கால்காட்டுங் காட்டுங்***
***குலத்திற் பிறந்தார்வா—ச் சொல்.***

**(இ-ரை.)** நிலத்தில் கிடந்தமை கால் காட்டும் - நிலத்தின் இயல்பை அதில் முளைத்த விதையின் முளை தெரிவிக்கும்; குலத்தில் பிறந்தார் வா-ச்சொல் காட்டும் - அதுபோலக் குலத்தின் இயல்பை அதிற் பிறந்தவர் உரைக்குஞ் சொல் தெரிவிக்கும்.

“விளையும் பயிர் முளையில் தெரியும்.” அதனால் அது நன்னிலத்தில் முளைத்தமை அறியப்படும். முளைநலமே விளைநலத்தைத் தெரிவித்தல் போல், மக்களின் சொன்னலமே அவர் செயல்நலத்தையும் தெரிவிக்கும். “மாற்ற முரைக்கும் வினைநலம்” (நான்மணி. 45.). ‘கிடந்தமை’ இருந்த நிலைமை. நிலம், குலம், கால், சொல் என்று பொதுப்படச் சொன்னமையால் முளை நலமின்மை நிலத்தின் புன்மையையும், சொன்னலமின்மை குலத்தின் இழிவையும் காட்டும் என்பதும் பெறப்படும். “குலத்தளவே யாகுங் குணம்” என்றார் ஔவையார். குலத்தின் இயல்பை என்பது அவா-நிலையால் வந்தது. இக் குறளில் உள்ள அணி எடுத்துக்காட்டுவமை.

**960. *நலம்வேண்டி னாணுடைமை வேண்டுங் குலம்வேண்டின்***
***வேண்டுக யார்க்கும் பணிவு.***

**(இ-ரை.)** நலம் வேண்டின் நாண் உடைமை வேண்டும் - ஒருவன் தனக்கு இம்மை மறுமை நன்மைகளை வேண்டுவானாயின், தான் நாண முடையவனா யிருத்தல் வேண்டும்; குலம் வேண்டின் யார்க்கும் பணிவு வேண்டுக - தன் உயர்குடிப் பிறப்பைக் காத்துக்கொள்ள விரும்புவானாயின், பெரிய ரெல்லாரிடத்தும் பணிவுடையவனா யிருத்தல் வேண்டும்.

இம்மை நன்மை புகழும், மறுமை நன்மை அறப்பயனுமாம். ‘வேண்டும்’ என்பது கட்டாயம்பற்றிய நெறியீடு (விதி), ‘நாண்’ என்றது கருமத்தால் நாணுதலை (குறள். 1011). ஐங்குரவர், அந்தணர், சான்றோர், அடியார் முதலிய அனைவரும் அடங்க ‘யார்க்கும்’ என்றார். ‘பணிவு’ இருக்கைவிட் டெழு தலும் எதிர்செலவும் கைகுவிப்பும் முதலியன. இவ் விருகுறளாலும் உயர் குடிப்பிறப்பைக் காத்துக்கொள்ளும் வகை கூறப்பட்டது.

## அதி. 97 - மானம்

*அதாவது, உயர்குடிப் பிறப்பிற்குரிய பண்புகளுள் ஒன்றான தன் மதிப்பு. அது ஒருபோதுந் தன் நிலைமையினின்று தாழாமையும் தெ-வத்*

*தால் தாழ்வு வந்தவிடத்து வாழாமையுமாம். இது உயர்குடிப் பண்புகட்கு அடிப்படையாதலின் முற்கூறப்பட்டது.*

**961. *இன்றி யமையாச் சிறப்பின வாயினுங்***
***குன்ற வருப விடல்.***

**(இ-ரை.)** இன்றி அமையாச் சிறப்பின ஆயினும் - செ-யாதவிடத்துத் தாம் வாழமுடியாத அளவு முதன்மை வா-ந்தன வெனினும்; குன்ற வருப விடல் - தம் குடிப்பிறப்புத் தாழ்வதற் கேதுவான இழிசெயல்களைச் செ-யா தொழிக.

அமையாமை உயிரொடு பொருந்தாமை; அஃதாவது இறத்தல், குடிப் பிறப்பு என்பது அதிகார முறையால் வந்தது. "இறப்ப வருவழி இளிவந்தன செ-தாயினும் உ-க வென்னும் வடநூன் முறைமையை மறுத்து, உடம்பினது நிலையின்மையையும் மானத்தினது நிலையுடைமையையும் தூக்கி, அவை செ-யற்க வென்பதாம்" என்று பரிமேலழகர் இங்குக் கூறியிருப்பது பாராட்டத்தக்கதாம். அந்த அளவிற்கு வள்ளுவர் தமிழவறம் வடவர் ஆரிய வறத்தை வென்றிருப்பது கவனிக்கத் தக்கது. உம்மை உயர்வுசிறப்பு.

**962. *சீரினுஞ் சீரல்ல செ-யாரே சீரொடு***
***பேராண்மை வேண்டு பவர்.***

**(இ-ரை.)** சீரொடு பேராண்மை வேண்டுபவர் - புகழொடு மானத்தை நிலைநிறுத்துதலை விரும்புபவர், சீரினும் சீர் அல்ல செ-யார் - புகழைச் செ-யுமிடத்தும் தம் குடிப்பிறப்பிற் கொவ்வாத இழிசெயல்களைச் செ-ய மாட்டார். ஏகாரம் தேற்றம். எந்நிலைமையிலுந் தளராத மனத்திண்மை யுடைமையால் மானம் பேராண்மை யெனப்பட்டது. சீரினுஞ் சீரல்ல செ-தல் அன்முறையா-க் கொள்ளையடித்து அறச்சாலை நிறுவுதல் போல்வது.

**963. *பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய***
***சுருக்கத்து வேண்டு முயர்வு.***

**(இ-ரை.)** பெருக்கத்துப் பணிதல் வேண்டும் - குடிப்பிறந்தார்க்கும் தன்மானியர்க்கும் பெருமை நிறைதற்கேற்ற செல்வக் காலத்தில் யாவரிடத் தும் தாழ்மையாயிருத்தல் வேண்டும்; சிறிய சுருக்கத்து உயர்வு வேண்டும் - பெருமை குறைதற் கேதுவான வறுமைக் காலத்தில், அக் குறையை நிறைத்தற்பொருட்டுத் தாழ்மையில்லாதிருத்தல் வேண்டும்.

"எல்லார்க்கு நன்றாம் பணித லவருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வந் தகைத்து." (குறள். 125)

"நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினு நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும்." (குறள். 1046)

ஆதலால், செல்வக் காலத்தில் தாழ்மை மேன்மையைத் தருதலையும் வறுமைக் காலத்தில் தாழ்மை தாழ்வையே தருதலையும் நோக்கி, பெருக்கத்துப் பணிவும் சுருக்கத்து உயர்வும் வேண்டும் என்றார். இங்குப் பணியாமை யென் றது செருக்கற்ற தன்மான நிலையை. தன்மானியார் என்று தனிப்படக் குறித்தது குடிப்பிறப்பின்றியும் கல்வி யொழுக்கங்களால் மேம்பட்டுத் தன்மானங் காப்பவரை. இம் மூன்று குறளாலும் மானங்காக்கும் வழிகள் கூறப்பட்டன.

## 964. *தலையி னிழிந்த மயிரனையர் மாந்தர்*
*நிலையி னிழிந்தக் கடை.*

**(இ-ரை.)** மாந்தர் - குடிப்பிறந்த மக்கள்; நிலையின் இழிந்தக் கடை - தம் உயர்ந்த நிலையினின்றும் ஒழுக்கக் கேட்டால் தாழ்ந்தவிடத்து; தலையின் இழிந்த மயிர் அனையர் - தலையினின்று கழிந்த மயிரை யொப்பர்.

குடிப்பிறந்தார் தம் பிறப்பிற்குரிய பண்பாட்டு நிலையில் நின்றவிடத்து மதிக்கப்படுதலும், அதினின்று தவறியவிடத்து அவமதிக்கப்படுதலும், உவமத்தாற் பெறப்பட்டன. இழிதல் என்னும் சொல் கீழ்விழுதலையும் இழிவடைதலையும் இங்கு ஒருங்கே உணர்த்தும்.

## 965. *குன்றி னனையாருங் குன்றுவர் குன்றுவ*
*குன்றி யனைய செயின்.*

**(இ-ரை.)** குன்றின் அனையாரும் - குடிப்பிறப்பால் மலைபோல் உயர்ந்தோரும்; குன்றுவ குன்றி அனைய செயின் - தாம் தாழ்தற்கேதுவான இழிசெயல்களை ஒரு குன்றிமணியளவே செ-வாராயினும்; குன்றுவர் - தம் நிலையினின்றுந் தாழ்வர்.

குன்று என்னும் சொல் இங்குத் தன் சிறப்புப் பொருளை யுணர்த்தாது பொதுப் பொருளை யுணர்த்திற்று. குன்றியனைய செயினும் என்னும் இழிவு சிறப்பும்மை தொக்கது. இங்குள்ள அணி சொற்பின் வருநிலை.

## 966. *புகழின்றாற் புத்தேணாட் டு-யாதா லென்மற்*
*றிகழ்வார்பின் சென்று நிலை.*

**(இ-ரை.)** இகழ்வார்பின் சென்று நிலை - ஒருவன் தன்மானமின்றித் தன்னை அவமதிப்பார் பின்னே சென்று நிற்கின்ற நிலை; புகழ் இன்று - இவ் வுலகத்து நிற்கும் புகழைத் தராது; புத்தேள் நாட்டு உ-யாது - மறுமையில் தேவருலகத்திற்குச் செலுத்தாது; மற்று என் - இனி அது அவனுக்கு வேறு என்ன பயனைச் செ-யும்?

'மற்று' பிறிதுபொரு ளிடைச்சொல். 'ஆல்' ஈரிடத்தும் அசைநிலை. இம் மூன்று குறளாலும் மானம் பேணாமையின் இழிபு கூறப்பட்டது.

**967. ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலி னந்நிலையே**
**கெட்டா னெனப்படுத னன்று.**

**(இ-ரை.)** ஒருவன் ஒட்டார் பின் சென்று வாழ்தலின் - ஒருவன் தன்னை யிகழ்வார் பின் சென்று அவர் தரும் பொருள் பெற்று அதனால் உயிர் வாழ் தலினும்; அந் நிலையே கெட்டான் எனப்படுதல் நன்று - தான் பொருளற்ற அப்பொழுதே உயிர் துறந்தான் அல்லது இறந்தான் என்று சொல்லப்படுவது அவனுக்கு நன்றாகும்.

ஒட்டுதல் உள்ளத்தாற் பொருந்துதல். அந் நிலை யென்றது ஒட்டார்பின் செல்லாத முன்னை நிலையை. ஏகாரம் பிரிநிலை. புகழும் புத்தேணாடும் பெறாவிடினும் பொருள்பெற்று வாழலாமே யெனின், அங்ஙனம் மானங் கெட்டு வாழ்வதினும் மானங்காத்து மாள்வதே சிறந்ததென்று கூறியவாறு.

**968. மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை**
**பீடழிய வந்த விடத்து.**

**(இ-ரை.)** பெருந்தகைமை பீடு அழிய வந்த விடத்து - உயர்குடிப் பிறப்புத் தன் பெருமிதமாகிய மானங்கெட வந்தவிடத்து; ஊன் ஓம்பும் வாழ்க்கை மற்று மருந்தோ - இறவாது நின்று இகழ்வாரை வேண்டிப் பொருள் பெற்று இழிந்த வுடம்பைக் காக்கும் வாழ்க்கை பின்பும் இறவாமலிருத்தற்கு மருந்தாகுமோ? ஆகாதே!

உயர்குணங்கட்கு இடமாதல்பற்றி உயர்குடிப் பிறப்பைப் 'பெருந் தகைமை' யென்றும், அப் பிறப்பிற்குப் பெருமிதத்தைத் தரும் மானத்தைப் 'பீடு' என்றும், அஃதழிந்தபின் உடம்பைப் பேணுதல் இழிந்ததாதலின் அதனை 'ஊனோம்பும் வாழ்க்கை' யென்றும், பின்னும், இறத்தல் உறுதியாதலின் 'மருந்தோ' என்றும் கூறினார். 'மற்று' பின்மைப்பொரு ளிடைச்சொல்.

**969. *மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னா***
***ருயிர்நீப்பர் மானம் வரின்.***

**(இ-ரை.)** மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார் - தனக்குச் சிறப் பாகக் கருதும் மயிர்த்தொகுதியில் ஒரு மயிர் நீங்கினும் உயிர்வாழாத கவரிமாவை யொத்த மானியர்; மானம் வரின் - தமக்குச் சிறப்பாகக் கருதும் மானம் என்னும் உயிர்நாடிப் பண்பு கெடும் நிலைவரின்; உயிர் நீப்பர் - அப் பண்பைக் காத்தற்பொருட்டு வேறொன்றுங் கருதாது உடனே தம் உயிரை விட்டுவிடுவர்.

இங்கு 'மானம்' என்றது மானங்கெடு நிலையை. கவரிமா மயிர் நீப்பின் வாழாது தன் மானத்தைக் காத்துக்கொள்வதால் மானமா எனப் பெறும். மானமாக்கள் போன்றே மானமக்களும் தம் மானங் கெடவரின் உடனே உயிர்நீத்து அதைக் காத்துக்கொள்வர். இஃது, ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் கோவலனைக் கொல்வித்ததால் தன் கோல் கோடியபோது, தன் உயிர் துறந்து அதை நேராக்கியது போல்வதாம்.

**"கடமா தொலைச்சிய கானுறை வேங்கை**
**இடம்வீழ்ந்த துண்ணா திறக்கும் – இடமுடைய**
**வானகங் கையுறினும் வேண்டார் விழுமியோர்**
**மானம் அழுங்க வரின்."** **(நாலடி. 300)**

**970. *இளிவரின் வாழாத மான முடையா***
***ரொளிதொழு தேத்து முலகு.***

**(இ-ரை.)** இளிவரின் வாழாத மானம் உடையார் ஒளி - தமக்கோ ரிழிவு வந்தவிடத்து அதைத் தாங்காது உடனே உயிர் நீத்த மானியரின் புகழுடம்பை; உலகு தொழுது ஏத்தும் - உலகத்தார் கும்பிட்டு வழுத்துவர்.

இம்மைப் புகழை ஒளி யென்னும் வழக்குப்பற்றி மானங்காக்க உயிர் நீத்தவரின் புகழுடம்பை 'ஒளி' என்றார். மறத்துறையிலும் மதத்துறையிலும் போன்றே, பண்பாட்டுத் துறையிலும் தம் கொள்கைபற்றி உயிர் நீத்தவர் தெ-வமாகத் தொழப்பெறுவர் என்பது கருத்து. தொழுதேத்துதல் என்னும் வினைக்கேற்ப, ஒளி என்பது ஒளிவடிவு(புகழுடம்பு) என உரைக்கப்பட்டது. 'உலகு' இடவாகுபெயர். இந் நான்கு குறளாலும் மானங்காக்க உயிர் நீத்தலின் சிறப்புக் கூறப்பட்டது.

## அதி. 98 - பெருமை

*அதாவது, அறிவாற்ற லொழுக்கங்களால் மக்கள் அல்லது குடிகள் அடையக்கூடிய உயர்வு. படிப்படியாக மேன்மே லுயரக்கூடிய நிலைமை மானத்தின் வழிப்பட்டதாகையால், இஃது அதன்பின் வைக்கப்பட்டது.*

### 971. ஒளியொருவற் குள்ள வெறுக்கை யிளியொருவற்
### கஃதிறந்து வாழ்து மெனல்.

**(இ-ரை.)** ஒருவற்கு ஒளி உள்ள வெறுக்கை - ஒருவனைச் சிறப்பித்து அவன் பெயரை விளங்கச் செ-யும் பெருமை, பிறராற் செயற்கரிய செ-வேம் என்னும் ஊக்க மிகுதியால் ஏற்படுவதே; ஒருவற்கு இளி அஃது இறந்து வாழ்தும் எனல் - ஒருவனுக்கு இழிவாவது, அவ் வருஞ்செயலும் அதற்கேது வான ஊக்கமுமின்றி எளிதா- வாழக்கடவேம் என்றெண்ணுவதே.

ஒருவன் பெயரை விளங்கச் செ-வதால் அவன் பெருமையை ‘ஒளி’ என்றும், அப் பெருமைக்குக் கரணியமாகிய அருஞ்செயற்கு ஏதுவான ஊக்க மிகுதியை அதன் மும்மடிக் கருமியமாகிய ஒளியொடு சார்த்தியும் கூறினார். ஒளி, இளி என்பன இங்கு ஒன்றிற்கொன்று எதிராக வந்த சொற்கள். ‘செயற் கரிய’ என்று முற்கூறியது (குறள். 26) துறவுபற்றிய தென்றும், இங்குக் கொள் வது புரவுபற்றியதென்றும், வேறுபாடறிக. வெறுக்கை - செல்வம். அது இங்கு மிகுதியைக் குறித்தது. வெறுத்தல் செறிதல், புரவுபற்றிய அருவினைகள் ஈகையும் ஒப்புரவும், ‘வாழ்தும்’ என்னும் பன்மை நெஞ்சொடு கிளத்தல்பற்றிய எண் வழுவமைதி, இக் குறளாற் பெருமைக்கு ஏது கூறப்பட்டது.

### 972. பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
### செ—தொழில் வேற்றுமை யான்.

**(இ-ரை.)** எல்லா உயிர்க்கும் பிறப்பு ஒக்கும் - மாந்தரெல்லார்க்கும் தா-வயிற்றுப் பிறத்தலாகிய பிறப்புமுறை ஒருதன்மையதே; செ-தொழில் வேற்றுமையான் சிறப்பு ஒவ்வா - ஆயின், அவரவர் செ-யுந் தொழில்களின் வேறுபாட்டால் ஏற்படும் சிறப்பு நிலைமைகள் ஒருநிகரனவல்ல.

**தொழில் வேறுபாடுகள்:** அதிகாரமுள்ளது, அதிகாரமில்லது; வருமானம் மிக்கது, வருமானங் குறைந்தது; தற்சார்பானது, மற்சார்பானது; நிழலிற் செ-வது, வெயிலிற் செ-வது; மனவுழைப்புள்ளது; உடலுழைப்புள்ளது; துப்புரவானது, துப்புரவற்றது; ஒழுக்கக் கேட்டிற் கிடமுள்ளது, ஒழுக்கக்

கேட்டிற் கிடமில்லது; இன்றியமையாதது. இன்றியமையாத தல்லாதது; பிறரை இன்புறுத்துவது, பிறரை இன்புறுத்தாதது; நல்லது தீயது என்பன. இவற்றுள் ஒவ்வோரிணைக்கும் இடைப்பட்ட நிலைமையுமுண்டு. தொழில் வேறு பாட்டால் ஏற்படும் சிறப்பு நிலைமைகள் உயர்வு, தாழ்வு, இடைநிகர்வு, மிகவுயர்வு, மிகத்தாழ்வு என்பன.

"வினைவயத்தாற் பஞ்சபூத பரிணாமமாகிய யாக்கையைப் பொருந்தி நின்று அதன் பயனனுபவித்தல் எல்லா வருணத்தார்க்கு மொத்தலிற் 'பிறப் பொக்கு' மென்றும், பெருமை சிறுமைகட்குக் கட்டளைக் கல்லாகிய தொழிற் பாகுபாடுகள் வருணந்தோறும் யாக்கைதோறும் வேறுபடுதலிற் 'சிறப்பொவ்வா' வென்றும் கூறினார்" என்பது பரிமேலழகரின் ஆரியச் சார்பு சிறப்புரை.

## 973. மேலிருந்து மேலல்லார் மேலல்லர் கீழிருந்துங் கீழல்லார் கீழல் லவர்.

**(இ-ரை.)** மேல் அல்லார் மேல் இருந்தும் மேல் அல்லர் - பிறப்பொடு தொடர்புள்ள ஆரியக் குலப்பிரிவினையால் ஏற்பட்ட குமுகாயப் படிமுறை யொழுங்கில், பிராமணர் என்னும் ஆரியப் பார்ப்பனர் உச்சியிலிருந்தும், ஒழுக்கங் கெட்டவராயின் உயர்ந்தோரல்லர்; கீழ் அல்லவர் கீழ் இருந்தும் கீழ் அல்லார் - உண்மையாகத் தாழ்ந்தவரல்லாத தென்னாட்டுத் தொல்குடித் தமிழர், பிராமணரால் தாழ்த்தப்பட்டிருப்பினும் தாழ்ந்தவ ராகார்.

**"மறுப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்**
**பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்"** **(குறள். 134)**

என்று முன்பும்,

**"பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா**
**செ—தொழில் வேற்றுமை யான்"**

என்று இங்கும் ஆசிரியர் கூறியிருப்பதால், "செயற்கரிய செ-கலாது சிறிய ராயினார், உயர்ந்த வமளி முதலியவற்றின் மிசையிருந்தா ராயினும், பெரிய ராகார்; அவை செ-து பெரியராயினார் தாழ்ந்த வறுநிலத்தி லிருந்தாராயினும் சிறியராகார்.

"மேலிருத்தல் கீழிருத்தல்களாற் செல்வ நல்குரவுகளும் மேல்கீழ்களாற் பெருமை சிறுமைகளும் கருதப்பட்டன" என்று பரிமேலழகர் உரைத்திருப்பது பொருந்தாது. இதிலுள்ள அணி சொற்பொருட் பின்வருநிலை. இவ் விருகுறளாலும் பிறப்பாற் சிறப்பில்லை யென்பது கூறப்பட்டது.

**974. ஒருமை மகளிரே போலப் பெருமையுந்**
**தன்னைத்தான் கொண்டொழுகி னுண்டு.**

**(இ-ரை.)** ஒருமை மகளிரே போல - ஒரே கணவனைக் காதலித்துத் தம் கற்பைக் காத்துக்கொள்ளும் குலமகளிர்போல; தன்னைத் தான் கொண் டொழுகின் - ஓர் ஆடவனும் ஒரே மனைவியைக், காதலித்துத் தன் கற்பைக் காத்துக்கொண்ட போதே; பெருமையும் உண்டு - பெருமைக் குணமும் அவனிடத்தில் உளதாகும்.

இதனால் கற்பென்பது இருபாற்கும் பொது வென்பதும், அது பெருமை பெறும் பெண்பாற்குப் போன்றே ஆண்பாற்கும் இன்றியமையாத தென்பதும் பெறப்பட்டன. இன்பத்தைச் சிறப்பாகக் கொண்ட அகப்பொருள் (இலக்கண) நூலார்க்கும் அறத்தைச் சிறப்பாகக் கொண்ட அறநூலார்க்கும் உள்ள கருத்து வேறுபாடும் இதனால் அறியப்படும். உம்மை எச்சவும்மை.

> "அடங்காத் தானை வேந்த ருடங்கியைந்
> தென்னொடு பொருது மென்ப வவரை
> ஆரம ரலறத் தாக்கித் தேரொ
> டவர்ப்புறங் காணே னாயிற் சிறந்த
> பேரம ருண்க ணிவளினும் பிரிக" (புறம். 71)

என்னும் பூதப்பாண்டியன் வஞ்சினமும்,

> "பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட் டீமம்
> நுமக்கரி தாகுக தில்ல வெமக்கெம்
> பெருந்தோட் கணவன் மா–ந்தென வரும்பற
> வள்ளித ழவிழ்ந்த தாமரை
> நள்ளிரும் பொ–கையுந் தீயுமோ ரற்றே" (புறம். 246)

என்னும் அவன் தேவியின் பாலைநிலைக் கூற்றும், இங்குக் கவனிக்கத்தக்கன. இக் குறளாற் பெருமைக் கின்றியமையாத துணைப் பண்பு கூறப்பட்டது.

**975. பெருமை யுடையவ ராற்றுவா ராற்றி**
**னருமை யுடைய செயல்.**

(இ-ரை.) பெருமை உடையவர் - பெருமைக் கேதுவான பண்பை இயற்கையாக வுடையவர்; அருமை உடைய செயல் ஆற்றின் ஆற்றுவார் - பிறராற் செயற்கரிய நற்செயல்களை நெறிப்படி செ–து முடிப்பர்.

"........பெருமையுடைய ராயினார் தாம் வறியராய வழியும் பிறராற் செயற்கரியவாய தஞ்செயல்களை விடாது அவை செ-யு நெறியாற் கடை போகச் செ-தலை வல்லராவர்.

"வறியராய வழியு மென்பது, முன்பு செ-து போந்தமை தோன்றப் 'பெருமையுடையவ' ரென்றதனாலும், 'ஆற்றுவா' ரென்றதனானும் பெற்றாம்" என்பது பரிமேலழகருரை. இக் குறளாற் பெருமையின் வெளிப்பாடு கூறப்பட்டது.

**976. *சிறியா ருணர்ச்சியு ளில்லை பெரியாரைப்***
***பேணிக்கொள் வேமென்னு நோக்கு.***

(இ-ரை.) பெரியாரைப் பேணிக் கொள்வேம் என்னும் நோக்கு - கல்வி யறிவாற்ற லொழுக்கங்களாற் பெரியாரைப் போற்றி அவரைப் பின்பற்று வோம் என்னும் குறிக்கோள்; சிறியார் உணர்ச்சியுள் இல்லை - அந் நால் வகையிலும் சிறியவராயிருப்பவரின் உள்ளத்தில் தோன்றுவதில்லை.

இம் மனப்பான்மை அறியாமை, செருக்கு, தன்னலம் ஆகியவற்றால் உண்டாவது. மறைமலையடிகள் காலத்தில் அவர்களைத் தமிழர் போற்றா திருந்ததே இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாம்.

**977. *இறப்பே புரிந்த தொழிற்றாஞ் சிறப்புந்தான்***
***சீரல் லவர்கட் படின்.***

**(இ-ரை.)** சிறப்பும் தான் - பெருமையைத் தரும் செல்வம், கல்வி, அதிகாரம், அதிநுட்பம் முதலியவற்றின் மிகுதிதானும்; சீர் அல்லவர் கண்படின் - தன்னைக் கொண்டிருத்தற்குத் தகுதியில்லாத சிறியோரிடம் சேரின்; இறப்பே புரிந்த தொழிற்றாம் - அடக்கமின்றிச் செருக்கே மிகுந்த செயல்களைச் செ-யும் இயல்பினதாம்.

"உடைப்பெருஞ் செல்வத் துயர்ந்த பெருமை
அடக்கமி லுள்ளத்த னாகி – நடக்கையின்
ஒள்ளிய னல்லான்மேல் வைத்தல் குரங்கின்கைக்
கொள்ளி கொடுத்து விடல்." (பழ. 255)

இவ் விருகுறளாலும் சிறியோ ரியல்பு கூறப்பட்டது.

**978. பணியுமா மென்றும் பெருமை சிறுமை**
**அணியுமாந் தன்னை வியந்து.**

**(இ-ரை.)** பெருமை என்றும் பணியும் - பெருமை யுடையார் எக்காலத் துஞ் செருக்கின்றி அடங்கியொழுகுவர்; சிறுமை (என்றும்) தன்னை வியந்து அணியும் - மற்றச் சிறுமை யுடையார் எக்காலத்துந் தம்மை மெச்சி உயர்வு படுத்திக் கூறுவர்.

மாந்தரின் செயல்கள் அவர் பண்பின்மேல் ஏற்றிக் கூறப்பட்டன. 'என்றும்' என்பது இரு தொடருக்கும் பொதுவா- நின்றது. 'ஆம்' ஈரிடத்தும் அசை நிலை.

**979. பெருமை பெருமித மின்மை சிறுமை**
**பெருமித மூர்ந்து விடல்.**

**(இ-ரை.)** பெருமை பெருமிதம் இன்மை - பெருமைக் குணமாவது பெரு மிதத்திற் கேற்ற சிறப்பிருந்தும் அதை யியல்பெனக் கொண்டு அமைந் திருத்தல்; சிறுமை பெருமிதம் ஊர்ந்து விடல் - சிறுமைக் குணமாவது ஒரு சிறப்பும் இல்லாதிருந்தும் அதைத் தன்மேல் ஏற்றிக்கொண்டு செருக்கின் எல்லைவரை சென்றுவிடுதல்.

இங்கும் மாந்தர் செயல்கள் அவர் பண்பின்மேல் ஏற்றிக் கூறப்பட்டன. 'ஊர்ந்துவிடல்' முடிவிடம்வரை ஏறிச்செல்லுதல்; குறிப்புருவகம். 'விடும்' என்பது மணக்குடவ காலிங்கர் பாடம்.

**980. அற்ற மறைக்கும் பெருமை சிறுமைதான்**
**குற்றமே கூறி விடும்.**

**(இ-ரை.)** பெருமை அற்றம் மறைக்கும் - பெருமையுடையார் பிறர் மானச் செ-திகளையே கூறி அவமானச் செ-திகளை மறைத்துவிடுவர்; சிறுமை குற்றமே கூறிவிடும் - மற்றச் சிறுமையுடையாரோ பிறர் குணத்தை யெல்லாம் மறைத்துக் குற்றங்களையே கூறிவிடுவர்.

இங்கும் மாந்தர் செயல்கள் அவர் பண்பின்மேல் ஏற்றிக் கூறப்பட்டன. மறைத்தலும் கூறுதலும் ஏனையிடத்தும் இயைந்தன. 'தான்' அசைநிலை. ஏகாரம் பிரிநிலை. இம் மூன்று குறளும் வேற்றுமை யணிகொண்டு இரு சாரார் செயலையும் ஒருங்கு கூறின.

## அதி. 99 - சான்றாண்மை

*அதாவது, பல நற்குணங்களாலும் நிறைந்து அவற்றை யாளுந் தன்மை, சாலுதல் நிறைதல்; பல நற்குணங்களாலும் என்பது அவா-நிலையால் வந் தது. ஆண்மை ஆளுதல், அவற்றை என்னும் செயப்படுபொருட் சுட்டுப் பெயரும் அவா-நிலையால் வந்ததே, மானமும் பெருமையும் அல்லாத நற்குணங்கள் பலவற்றையும் தொகுத்துக்கொண்டு நிற்றலால், இது அவற் றின்பின் வைக்கப்பட்டது. சான்றாண்மை சால்பு எனவும் படும்.*

***981.*** **கடனென்ப நல்லவை யெல்லாம் கடனறிந்து**
**சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.**

**(இ-ரை.)** கடன் அறிந்து சான்றாண்மை மேற்கொள்பவர்க்கு - இது நமது கடமையென்றறிந்து சான்றாண்மையை மேற்கொண்டொழுகுவார்க்கு; நல்லவை எல்லாம் கடன் என்ப - நல்வினைகளெல்லாம் செ-யப்பட வேண்டிய கடமையாகும் என்று கூறுவர் அறிஞர்.

சான்றாண்மை நற்குணத் தொகுதியாதலின் அதை மேற்கொண் டவர்க்கு நல்வினையெல்லாங் கடமை யென்பது கருத்து.

**982.** **குணநலஞ் சான்றோர் நலனே பிறநல**
**மெந்நலத் துள்ளதூஉ மன்று.**

**(இ-ரை.)** சான்றோர் நலன் குணநலமே - சான்றோர் நலமாவது குணங் களாலான நலமே; பிற நலம் எந்நலத்து உள்ளதும் அன்று - மற்ற உறுப்புநலம் ஒரு நலத்தோடுங் கூட்டன்று.

குடிப்பிறப்பு, கல்வி முதலியனவாக நூலோரால் வகுக்கப்பெறும் எந் நலத்தோடும் சேர்த்தெண்ணப்படாமையால், உறுப்புநலத்தை 'எந்நலத் துள்ளதூஉ மன்று' என்றார். 'உள்ளதூஉம்' இன்னிசை யளபெடை, ஏகாரம் பிரிநிலை.

***983.*** **அன்புநா ணொப்புரவு கண்ணோட்டம் வா—மையொ**
**டைந்துசால் பூன்றிய தூண்.**

**(இ-ரை.)** அன்பு - எல்லார் மேலுமுள்ள அன்பும்; நாண் - பழி தீவினைகள் செ-யப் பின்வாங்கும் நாணமும்; ஒப்புரவு - வேளாண்மையும்; கண்ணோட்டம் - எளியார்க்கும் சட்டநெறியறியார்க்குங் காட்டுஞ் சிறப்பிரக்

கமும்; வா-மையொடு - உண்மையுடைமையும் என; சால்பு ஊன்றிய தூண் ஐந்து - சான்றாண்மை யென்னும் மண்டபத்தைத் தாங்குந் தூண்கள் ஐந்தாம்.

"என்றும் எனவும் ஒடுவுந் தோன்றி
ஒன்றுவழி யுடைய எண்ணினுட் பிரிந்தே" (தொல். 779)

என்னும் தொல்காப்பிய நூற்பாப்படி, எண்ணொடு முன்னவற்றொடும் ஒன்றியது, இவ் வைங்குணமும் இல்லாவிடத்துச் சால்பு நில்லாமையின், இவற்றைத் தூணென வுருவகித்தார். சால்பை மண்டபமென வுருவகியாமையின், இது ஒருமருங் குருவகம். இங்கு, எளியார் என்றது செல்வம், கல்வி, உடல்வலிமை, அகவை முதலிய பலவகையிலுந் தாழ்ந்தவரை.

**984.** ***கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு.***

**(இ-ரை.)** நோன்மை கொல்லா நலத்தது - நோன்மை கொல்லாமையைத் தனக்குரிய அறங்களுள் சிறப்பாகக் கொண்டுள்ளது; சால்பு பிறர் தீமை சொல்லா நலத்தது - அது போலச் சான்றாண்மை பிறர் குற்றத்தைச் சொல்லாமையைத் தனக்குரிய குணங்களுள் சிறப்பாகக் கொண்டுள்ளது.

'நலம்' ஆகுபொருளது. இக் குறள் எடுத்துக்காட்டுவமை அணி.

**985.** ***ஆற்றுவா ராற்றல் பணித லதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை.***

**(இ-ரை.)** ஆற்றுவார் ஆற்றல் பணிதல் - ஒரு கருமத்தை வெற்றிபெறச் செ-து முடிப்பாரது ஆற்றலாவது, அக் கருமத்திற்குத் துணையாவாரைத் தாழ்ந்து வேண்டித் தம்மொடு சேர்த்துக்கொள்ளுதல்; சான்றோர் மாற்றாரை மாற்றும் படை அது - இனி, சால்புடையார் தம் பகைவரைத் தம் துணைவராக மாற்றுதற்குக் கையாளுங் கருவியும் அதுவேயாம்.

'ஆற்றல்' ஒன்றைச் செ-து முடிக்கும் திறமை. இறந்தது தழுவிய எச்சவும்மை தொக்கது.

"பகைசேரு மெண்ணான்கு பற்கொண்டே நன்னா
வகைசேர் சுவையருந்து மாபோல் – தொகைசேர்
பகைவரிட மெ–யன்பு பாவித் தவராற்
சுகமுறுதல் நல்லோர் தொழில்" (நீதிவெண்பா, 5)

என்னும் செ-யுள் இங்குக் கவனிக்கத் தக்கது.

**986. சால்பிற்குக் கட்டளை யாதெனிற் றோல்வி
துலையல்லார் கண்ணுங் கொளல்.**

**(இ-ரை.)** சால்பிற்குக் கட்டளை யாது எனின் - சான்றாண்மை யென் னும் பொன்னின் மாற்றை யறிதற்கு உரைகல்லாகிய செயல் எதுவெனின்; துலை அல்லார்கண்ணும் தோல்வி கொளல் - தம்மினும் வலியாரிடத்துத் தாம் அடையுந் தோல்வியைத் தம்மினும் மெலியாரிடத்துமே விரும்பி ஏற்றுக்கொள்ளுதல்.

துலை ஒப்பு. 'துலையல்லார்' என்னும் பகைவர் நிலையினாலும் 'கொளல்' என்னும் வினையினாலும், தாமே விட்டுக் கொடுத்து வேண்டுமென்றே தோல்வியடைந்து கொள்ளுதல் பெறப்பட்டது. இது, வளர்ந்தவனொருவன் ஒரு குழந்தை தன்னை அடிக்கும்பொழுது, அதைப் பொறுத்துக்கொள்வது அல்லது விரும்பி யேற்றுக்கொள்வது போல்வது. வலியொத்த பகைவர் வெல்வதற்கு இடமிருத்தலின், அவரிடம் ஏற்றுக்கொள்ளும் தோல்வியாற் சால்பு வெளிப்படாமை நோக்கித் 'துலையல்லார்கண்' என்றார். உம்மை இழிவு கலந்த எச்சம்.

**987. இன்னாசெ– தார்க்கு மினியவே செ–யாக்கா
லென்ன பயத்ததோ சால்பு.**

**(இ-ரை.)** இன்னா செ-தார்க்கும் இனியவே செ-யாக்கால் - தமக்குத் தீயன செ-தவர்க்கும் நல்லனவே செ-யாவிடின்; சால்பு என்ன பயத்தது - ஒருவரின் சான்றாண்மையால் என்ன பயனாம்?

வினா எதிர்மறைப் பொருளது, 'ஓ' இரக்கங் குறித்த அசைநிலை. உம்மை இழிவுசிறப்பு. ஏகாரம் பிரிநிலை. சால்பில்லார் போன்றே சால்புடையாரும் நன்மைக்கு நன்மையும் தீமைக்குத் தீமையுஞ் செ-வராயின், அவர் சால் பினால் ஒரு பயனுமில்லை யென்பதாம். இவ் வைங்குறளாலும் சால்பின் தன்மை சிறப்புவகையாற் கூறப்பட்டது.

**988. இன்மை யொருவற் கிளிவன்று சால்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்.**

**(இ-ரை.)** சால்பு என்னும் திண்மை உண்டாகப் பெறின் - சான்றாண்மை யென்று சொல்லப்படும் உரம் வா-த்திருப்பின் ஒருவற்கு; இன்மை இளிவு அன்று - ஒருவனுக்கு வறுமை இழிவாகாது.

உள்ளத்திற்கு உறுதியுண்டாக்குதலின், சால்பு உரமாயிற்று. இன்மை பொருளின்மை, 'கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே' (மூதுரை, 4) என்பதாம்.

**989. *ஊழி பெயரினுந் தாம்பெயரார் சான்றாண்மைக்***
***காழி யெனப்படு வார்.***

**(இ-ரை.)** சான்றாண்மைக்கு ஆழி எனப்படுவார் - சால்பு என்னும் கடலிற்குக் கரையாகச் சொல்லப்படுவார்; ஊழி பெயரினும் - ஊழி முடிந்து உவர்க்கடல் கரைகடப்பினும்; தாம் பெயரார் - தாம் தம் சால்பெல்லை கடவார்.

சால்பின் பெருமைபற்றி அதனைக் கடலாக்கியும், அதன் எல்லையில் நிற்றலின் அதை யுடையாரை அதன் கரையாக்கியும் கூறினார்.

**990. *சான்றவர் சான்றாண்மை குன்றி னிருநிலந்தான்***
***றாங்காது மன்னோ பொறை.***

**(இ-ரை.)** சான்றவர் சான்றாண்மை குன்றின் - நற்குணங்கள் பலவும் நிறைந்தவர் தம் தன்மை குன்றுவராயின்; இரு நிலம் தான் பொறை தாங்காது - ஞாலமும் (பூமியும்) தன் பொறையைத் தாங்காததா- முடியும்.

தானும் என்னும் எச்சவும்மை தொக்கது. "அவர்க்கது குன்றாமையும் அதற்கது தாங்கலும் இயல்பாகலான், அவை யெஞ்ஞான்று முளவாகா வென்பது தோன்ற நின்றமையின். 'மன்' ஒழியிசைக்கண் வந்தது. ஓகாரம் அசை" என்னும் பரிமேலழகர் இலக்கணக் குறிப்புரை உரையாசிரியரின் உரைமரபு தழுவியது. 'மன்னோ' (அரசே!) என்பது ஆடூஉ முன்னிலையாக வும், 'மாதோ' (பெண்ணே) என்பது மகடூஉ முன்னிலையாகவும், முதற் காலத்தில் வழங்கிப் பின்பு பொருள் மறைந்து இவ் வீரசைநிலைகளாகப் பிரிக்கப்பட்டதாகத் தெரிகின்றது.

இக் குறளின் தலைமைச் சொற்றொடர்க்கு, "இருநிலம் பொறை தாங்கு வது சான்றவர் துணையாக வருதலான், அதுவும் அது தாங்கலாற்றாது" என்றோருரை யிருந்ததாகப் பரிமேலழக ருரையால் தெரிய வருகின்றது.

இம் முக்குறளாலும் சால்புடையாரது சிறப்புக் கூறப்பட்டது.

## அதி. 100 - பண்புடைமை

*அதாவது, சான்றாண்மையை மேற்கொண்டு நின்றே அவரவர் பண் பறிந்து அறிதற்கேற்றவாறு ஒழுகுதல், "பண்பெனப்படுவது பாடறிந்*

*தொழுகல்" என்றார் நல்லந்துவனார் (கலித். 133). அதிகார முறைமையும் இதனால் விளங்கும்.*

**991. எண்பதத்தா லெ-த லெளிதென்ப யார்மாட்டும்**
**பண்புடைமை யென்னும் வழக்கு.**

**(இ-ரை.)** யார் மாட்டும் எண்பதத்தால் - எல்லாரிடத்தும் எளிய செவ்வி யராயிருத்தலால்; பண்புடைமை என்னும் வழக்கு எ-தல் எளிது என்ப - பண்புடையரா- ஒழுகும் நெறியை எளிதா யடையலாமென்று கூறுவர் அறநூலார்.

நற்குணங்கள் நிறைந்து எளிய செவ்வியராகவு மிருப்பின், பண்புடைமை தானே யுண்டாகுமாதலின், 'எண்பதத்தா லெ-த லெளிதென்ப' என்றார். எளிய செவ்வியாவது, எளிதா-க் கண்டுரையாடற் கேற்ற நிலைமை. 'என்ப' என்றதனால், திருக்குறட்கு முன்பும் தமிழறநூல்கள் இருந்தமை யறியப்படும்.

**992. அன்புடைமை யான்ற குடிப்பிறத்த லிவ்விரண்டும்**
**பண்புடைமை யென்னும் வழக்கு.**

**(இ-ரை.)** அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ் விரண்டும் - எல் லார் மேலும் அன்புடைமையும் எல்லா நல்லிணக்கமும் அமைந்த குடியிற் பிறத்தலும் ஆகிய இவ் விரண்டும்; பண்புடைமை என்னும் வழக்கு - பண் புடைமையென்னும் ஒழுக்கத்திற்கு இன்றியமையாத இயல்களாம்.

அமைதல் நிறைதல். உம்மை முற்றும்மை, வழக்கிற்குக் கரணிய மானவற்றை வழக்கென்றே கருமியமாகச் சார்த்திக் கூறினார். இவ் விரு குறளாலும் பண்புடைமைக்கு ஏதுவான நிலைமைகள் கூறப்பட்டன.

**993. உறுப்பொத்தன் மக்களொப் பன்றால் வெறுத்தக்க**
**பண்பொத்த லொப்பதா மொப்பு.**

**(இ-ரை.)** உறுப்பு ஒத்தல் மக்கள் ஒப்பு அன்று - உயிரொடு பொருந்தாத முகவுறுப்பால் அல்லது முழுவுடம்பால் ஒத்திருப்பது ஒருவனுக்கு நன்மக் களை ஒக்கும் ஒப்பாகாது; வெறுத்தக்க பண்பு ஒத்தல் ஒப்பது ஆம் ஒப்பு - உயிரொடு பொருந்தத்தக்க பண்பினால் ஒத்தலே உண்மையாக ஒக்கும் ஒப்பாம், 'ஆல்' அசைநிலை.

மக்கள் என்னும் சொல், தொல்காப்பியக் கொள்கைப்படியும் ஆசிரியர் கருத்துப்படியும், மாந்தருள் உயர்ந்தோரையே இங்குக் குறித்தது. மாந்த

ருடம்பை ஒப்புநோக்குவது பெரும்பாலும் முகமும் முகவுறுப்புங்கொண்டே யாதலால், 'உறுப்பொத்தல்' என்றார். வெறுத்தல் செறிதல் அல்லது பொருந்துதல். உடம்பும் உறுப்பும் போலாது, உயிரும் உள்ளமும் அவற்றின் பண்பும் ஒருவரிடத்தும் பலரிடத்தும் ஒன்றிப் பொருந்தும் தன்மையனவாதலால் 'வெறுத்தக்க பண்பு' என்றார். உறுப்பும் உடம்பும் உயிரின் வேறாயிருத்த லொடு, பிறப்பில் இயற்கையா- அமைந்தனவும் வாழ்நாள் முழுதும் மாறா தனவும், சேதப்படத்தக்கனவும், அறிவில்லாதனவும், உயிர் நீங்கியபின் மண்ணாக மாறுவனவுமா யிருத்தலின், அவற்றாலொத்தலால் ஒருசிறப்பும் பயனுமின்றாம். ஆகவே மக்களைப் பின்பற்றிப் பண்பாலேயே அவரை யொத்துப் பிறரும் மக்களாக வேண்டுமென்பது கருத்து. இக் குறளில் உள்ளது சொற்பொருட் பின்வருநிலை அணி. "வடநூலார் அங்கமென்றமையின் உறுப்பென்றார்" என்னும் பரிமேலழகர் கூற்று ஆரியக் குறும்பே.

**994.** ***நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்***
***பண்புபா ராட்டு முலகு.***

**(இ-ரை.)** நயனொடு நன்றி புரிந்த பயன் உடையார் பண்பு - நேர்பாட்டையும் (நீதியையும்) நல்வினையையும் விரும்புதலாற் பிறர்க்குப் பயன்படும் நல்லோர் பண்பை; உலகு பாராட்டும் – உலகத்தார் போற்றிப் புகழ்வர்.

'புரிந்த' என்னும் பெயரெச்சம் கரணியப் பொருளது, நயனொடு நன்றி புரிந்த பயனுடையார் உலகிற்குப் பயன்படுதலாலும் ஒருசிலரே யாதலாலும் உலகுபாராட்டும் என்றார். உலகு ஆகுபெயர்.

**995.** ***நகையுள்ளு மின்னா திகழ்ச்சி பகையுள்ளும்***
***பண்புள பாடறிவார் மாட்டு.***

**(இ-ரை.)** நகையுள்ளும் இகழ்ச்சி இன்னாது - விளையாட்டாகவேனும் ஒருவரைப் பழித்தல் அவருக்குத் துன்பந்தருவதாம்; பாடு அறிவார் மாட்டுப் பகையுள்ளும் பண்பு உள -ஆதலாற் பாடறிந்தொழுகுவாரிடத்திற் பகைமை யுள்ள போதும் இனிய பண்புகளே உண்டாவன.

பாடறிந்தொழுகுவார் பிறருக்குத் துன்பந் தருவதை விலக்குவராதலின், பகைவருக்கும் நன்மையே செ-வார் என்பது கருத்து. உம்மைகள் இழிவு சிறப்பு.

**996.** ***பண்புடையார்ப் பட்டுண் டுலக மதுவின்றேன்***
***மண்புக்கு மா-வது மன்.***

**(இ-ரை.)** உலகம் பண்பு உடையார்ப் பட்டு உண்டு - உலக நடப்புப் பண்புடையாரிடத்துப் படுதலால் இடையறாது தொடர்ந்து வருகின்றது; இன்றேல் அது மண்புக்கு மா-வது - அங்ஙனமில்லாக்கால் அது மண்ணுட் புகுந்து மறைந்து போவதாம்.

இது "உண்டா லம்மவிவ் வுலகம்......... பிறர்க்கென முயலுந ருண்மை யானே" என்னும் புறப்பாட்டின் (182) கருத்தை யொத்தது. படுதல் அமைதல். 'உலகு' ஆகுபெயர். பண்பிலார் சார்பின்மையால் அது மண்புக்கு மாய வில்லை என்னுங் கருத்துப்பட நின்றமையின், 'மன்' ஒழியிசை யிடைச்சொல். இந் நான்கு குறளாலும் பண்புடையார் உயர்வு கூறப்பட்டது.

**997.** ***அரம்போலுங் கூர்மைய ரேனு மரம்போல்வர்***
***மக்கட்பண் பில்லா தவர்.***

**(இ-ரை.)** மக்கட் பண்பு இல்லாதவர் - நன்மாந்தர்க்குரிய பண்பில்லா தவர்; அரம்போலும் கூர்மையரேனும் - அரத்தின் கூர்மை போலுங் கூரிய மதியுடையரேனும்; மரம்போல்வர் - அறுக்குங் கூர்மையில்லாத மரத்தையே ஒப்பர்.

கூர்மை யிரண்டனுள், முன்னது பருப்பொருளாகிய முட்கூர்மை; பின்னது நுண்பொருளாகிய மதிக்கூர்மை. உவமம் இரண்டனுள், முன்னது அறுக்குங் கூர்மை பற்றியது; பின்னது அறுக்குங் கூர்மையின்மை பற்றியது. மதிநுட்பமிருந்தும் அதற்குரிய மக்கட் பண்பின்மையால், அரம்போற் கூரிய தாயிருந்தும் அறுக்கும் வன்மையில்லாத மரம்போல்வர் என்றார்.

மக்கட்குரிய ஆறறிவில்லாத உயிரினங்கள் ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூவறிவுயிர், நாலறிவுயிர், ஐயறிவுயிர் என ஐவகைப்பட்டிருத்தலின், மக்கட் பண்பில்லாதவரை ஓரறிவுயிர்க்கே ஒப்பாகக் கூறுவது அத்துணைப் பொருத்த மாகத் தோன்றவில்லை. எனினும், பரிமேலழக ருரையையுங் கீழ்க் காண்க:

"நன்மக்கட்கே யுரிய பண்பில்லாதவர், அரத்தின் கூர்மை போலும் கூர்மையை யுடையரே யாயினும் ஓரறிவிற்றாகிய மரத்தினை யொப்பர்."

"'அரம்' ஆகுபெயர். ஓரறிவு ஊற்றினையறிதல். உவமை யிரண்டனுள் முன்னது தான் மடிவின்றித் தன்னையுற்ற பொருள்களை மடிவித்தலாகிய தொழில்பற்றி வந்தது. ஏனையது விசேட வறிவின்மையாகிய பண்புபற்றி வந்தது. அவ் விசேட வறிவிற்குப் பயனாக மக்கட் பண்பின்மையின், அது தானுமில்லை யென்பதாயிற்று." உம்மை உயர்வுசிறப்பு.

**998.** ***நண்பாற்றா ராகி நயமில செ—வார்க்கும்***
***பண்பாற்றா ராதல் கடை.***

**(இ-ரை.)** நண்பு ஆற்றாராகி நயம் இல செ-வார்க்கும் - தம்மொடு நட்புக்கொள்ளாது தமக்குத் தீமையே செ-தொழுகுவாரிடத்தும்; பண்பு ஆற்றார் ஆதல் கடை - தாம் பண்புடையரா யொழுகாமை அறிவுடையார்க்குக் கடைப்பட்ட குற்றமாம்.

தாமும் அவர் தன்மையராதலால் 'கடை' என்றார். உம்மை இழிவுசிறப்பு.

**999.** ***நகல்வல்ல ரல்லார்க்கு மாயிரு ஞாலம்***
***பகலும்பாற் பட்டன் றிருள்.***

**(இ-ரை.)** நகல்வல்லர் அல்லார்க்கு - பண்பின்மையால் ஒருவரொடுங் கலந்துரையாடி மகிழுந் திறமில்லாதவர்க்கு; மா இரு ஞாலம் பகலும் இருட் பாற் பட்டன்று - மிகப் பெரிய இவ் வுலகம் பட்டப்பகலிலும் இருள் நிறைந் திருப்பதாகும்.

ஒருவரோடுங் கலந்தறியப் பெறாத பண்பிலிகட்கு உலகியல் முற்றும் தெரியாதென்பது கருத்து. பட்டன்று என்பது உடன்பாட்டுச் சொல்லாதலின், 'பாழ்பட்டன்றிருள்' என்று பாடமோதி, 'இருள் நீங்கிற்றன்று' என்றுரைப்பது பொருள் கெடாவிடினும் பொருந்தாது. 'மாயிரு' மீமிசைச்சொல்.

**1000.** ***பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வ நன்பால்***
***கலந்தீமை யாற்றிரிந் தற்று.***

**(இ-ரை.)** பண்பு இலான் பெற்ற பெருஞ்செல்வம் - பண்பில்லாதவன் பழம் பிறப்பிற் செ-த நல்வினையின் பயனாக அடைந்த பெருஞ்செல்வம், ஒருவற்கும் பயன்படாது கெடுதல்; நல் பால் கலம் தீமையால் திரிந்த அற்று - நல்ல ஆவின்பால் வார்த்த கலத்தின் குற்றத்தாற் களிம்பேறிக் கெட்டாற் போலும்.

கலத்தீமை என்பது இன்னோசைபற்றிக் கலந்தீமை யென மெலிந்தது. வினையுவமை யாதலின், பொருளின்கண் ஒத்த தொழில் வருவிக்கப்பட்டது. முன்னை நல்வினைப்பயன் என்பது தோன்றப் 'பண்பிலான்' என்றும், ஈட்டும் ஆற்றலிலன் என்பது தோன்றப் 'பெற்ற' என்றும், எல்லாப் பயனும் பெறுதற் கேற்றது என்பது தோன்றப் 'பெருஞ்செல்வம்' என்றும், உடையவனுக்கும்

பயன்படாமை தோன்றத் 'திரிந்தற்று' என்றும் கூறினார். இதனால் வருகின்ற அதிகாரத்திற்குத் தோற்றுவா- செ-யப்பட்டது. இந் நான்கு குறளாலும் பண்பிலாரின் இழிவு கூறப்பட்டது.

## அதி. 101 - நன்றியில் செல்வம்

*அதாவது, ஈட்டியவனுக்கும் பிறருக்கும் பயன்படாத செல்வத்தின் தன்மை. உடையவனது குற்றம் உடைமையின்மே லேற்றப்பட்டது. 'பண் பிலான் பெற்ற பெருஞ் செல்வம்' என்று மேலதிகார ஈற்றில் இதற்குத் தோற்று வா- செ-யப்பட்டதே இதன் அதிகார முறைமையைக் காட்டும்.*

### 1001. வைத்தான்வா– சான்ற பெரும்பொரு ளஃதுண்ணான்
### செத்தான் செயக்கிடந்த தில்.

**(இ-ரை.)** வா-சான்ற பெரும்பொருள் வைத்தான் அஃது உண்ணான் - தன் மனையிட மெல்லாம் நிறைதற்கேதுவான பெருஞ் செல்வத்தை ஈட்டி வைத்தும், கஞ்சத்தனத்தால் அதை நுகராதவன்; செத்தான் - உடம்போ டுளனாயினும் செத்தவனாவன்; செயக்கிடந்தது இல் - அதைக்கொண்டு அவன் செ-யக் கிடந்ததொரு செயலுமில்லை.

செல்வமிருந்தும் அதை நுகராமையால், செத்தவனுக்கு ஒப்பாவன் என்பது கருத்து. 'வைத்தான்' முற்றெச்சம்.

**"உண்ணா னொளிநிறா னோங்கு புகழ்செ–யான்**
**துன்னருங் கேளிர் துயர்களையான் – கொன்னே**
**வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அஆ**
**இழந்தானென் றெண்ணப் படும்."** **(நாலடி. 9)**

### 1002. பொருளானா மெல்லாமென் றீயா திவறு
### மருளானா மாணாப் பிறப்பு.

**(இ-ரை.)** பொருளான் எல்லாம் ஆம் என்று - செல்வ மொன்றுமட்டு மிருந்தால் அதனால் எல்லாக் கருமமும் ஆகுமென்று கருதி; ஈயாது இவறும் மருளான் - அதைப் பிறர்க்கீயாது இறுகப்பற்றும் மயக்கத்தினால்; மாணாப் பிறப்பு ஆம் - இழிவான பிறப்பு உண்டாம்.

இம்மைக்கும் மறுமைக்கு முரிய வினையின்பங்கள் யாவும் அடங்க 'எல்லாம்' என்றார். மருளாவது செல்வம் நிலையானதென்றும், பிறர்க்கு

ஈவதாற் குறைந்துவிடுமென்றும் கருதுதலும்; ‘‘செல்வம் சகடக்கால் போல வரும்’’ என்றும் (நாலடி. 2), ‘‘செல்வத்துப் பயனே யீதல்’’ (புறம். 189) என்றும், ‘‘இறைக்க வூறும் மணற்கேணி, ஈயப் பெருகும் பெருஞ்செல்வம்’’ என்றும், ‘‘இம்மைச் செ-தது மறுமைக் காம்’’ (புறம். 134) என்றும் அறியாமையுமாம், மாணாப் பிறப்பாவன:

> ‘‘சிறப்பில் சிதடு முறுப்பில் பிண்டமும்
> கூனுங் குறளு மூமுஞ் செவிடும்
> மாவும் மருளும்’’ (புறம். 28)

என்னும் எண்பேரெச்சமும் அலியுமாம். இனி, வீணாகப் புதையலைக் காக்கும் பேயும் பூதமும் எனினுமாம்.

***1003. ஈட்ட மிவறி யிசைவேண்டா வாடவர்
தோற்ற நிலக்குப் பொறை.***

**(இ-ரை.)** ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர் தோற்றம் - பிறரொடு போட்டியிட்டுப் பெரும்பொரு ளீட்டுவதையே பெருவிருப்பக் குறிக்கோ ளாகக் கொண்டு, அதன் பயனாகிய புகழை விரும்பாத ஆண்மக்களின் பிறப்பு; நிலக்குப் பொறை – இந் நிலவுலகிற்குச் சுமையாவதன்றி ஒரு பயனும் படுவதன்று.

> ‘‘உரைப்பா ருரைப்பவை யெல்லா மிரப்பார்க்கொன்
> றீவார்மே னிற்கும் புகழ்’’, (குறள். 232)

> ‘‘ஈத லிசைபட வாழ்த லதுவல்ல
> தூதிய மில்லை யுயிர்க்கு’’, (குறள். 231)

> ‘‘வசையென்ப வையத்தார்க் கெல்லா மிசையென்னு
> மெச்சம் பெறாஅ விடின்’’, (குறள். 238)

> ‘‘வசையிலா வண்பயன் குன்று மிசையிலா
> யாக்கை பொறுத்த நிலம்’’ (குறள். 239)

என்று முன்னரே கூறியுள்ளமையால், ‘நிலக்குப் பொறை’ என்று அதை இங்கு நினைவுறுத்தினார். வெளியூரும் வெளிநாடுஞ் சென்று பெரும்பொருளீட்டுவது வணிகருள் ஆண்மக்கள் செயலாதலின் ‘ஆடவர்’ என்றார். ‘‘வினையே ஆடவர்க் குயிரே’’ (குறுந். 135) ‘‘முந்நீர் வழக்கம் மகடூஉவோ டில்லை’’ (தொல். 980). ‘தோற்றம்’ என்றது தோன்றிய வுடம்பை. ‘நிலக்கு’ அத்துச் சாரியை தொக்கது.

### *1004. எச்சமென் றென்னெண்ணுங் கொல்லோ வொருவரா னச்சப் படாஅ தவன்.*

**(இ-ரை.)** ஒருவரால் நச்சப்படாதவன் - ஒரு பொருளும் ஈந்தறியா மையால் ஒருவராலும் விரும்பப்படாதவன்; எச்சம் என்று என் எண்ணுங் கொல் - தனக்குப் பின் தன்னை மகிழ்ச்சியுடன் நினைப்பிக்குமாறு எஞ்சி நிற்பதாக எதனைக் கருதுவானோ?

மக்கள், பொருள், புகழ் என்னும் மூவகை யெச்சங்களுள், புகழே சிறந்த தாதலின், 'என்னெண்ணுங் கொல்லோ' என்றார். ஓகாரம் அசைநிலை. 'கொல்' ஐயப்பொரு ளிடைச்சொல். 'படாஅ' இசைநிறை யளபெடை. இழிவுசிறப் பும்மை தொக்கது.

### *1005. கொடுப்பதூஉந் து–ப்பதூஉ மில்லார்க் கடுக்கிய கோடியுண் டாயினு மில்.*

**(இ-ரை.)** கொடுப்பதும் து-ப்பதும் இல்லார்க்கு - பிறருக்கீவதும் தாம் நுகர்வதுமாகிய இரண்டு மில்லாதவருக்கு; அடுக்கிய கோடி உண்டாயினும் இல் - கோடிக் கணக்கான செல்வமிருப்பினும் அது செல்வமிருப்ப தாகாது.

செல்வத்தின் இரு பயனுமின்மையால் 'இல்' என்றார். இன்பத்தினும் அறஞ் சிறந்தமையால் முற்கூறப்பட்டது. 'கோடி' அளவையாகு பெயர். 'கொடுப்ப தூஉம்', 'து-ப்பதூஉம்' இன்னிசை யளபெடைகள். உம்மை உயர்வுசிறப்பு.

**"எனதென தென்றிருக்கு மேழை பொருளை**
**எனதென தென்றிருப்பன் யானும் – தனதாயின்**
**தானு மதனை வழங்கான் பயன்றுவ்வான்**
**யானு மதனை யது"** **(நாலடி. 276)**

என்பது இங்குக் கவனிக்கத் தக்கது.

### *1006. ஏதம் பெருஞ்செல்வந் தான்றுவ்வான் றக்கார்க்கொன் றீத லியல்பிலா தான்.*

**(இ-ரை.)** தக்கார்க்கு ஒன்று ஈதல் இயல்பு இலாதான் - தகுதியுடைய வர்க்கு அவர் வேண்டிய தொன்றை ஈயும் இயல்பில்லாதவனா-; தான் துவ்வான் - அதன்மேல் தானும் நுகராதவனாயிருப்பவன்; பெருஞ்செல்வம்

ஏதம் - அவ் விரண்டுஞ் செ-தற்கேற்ற தன் பெருஞ் செல்வத்திற்கு ஒரு நோயாவன்.

செல்வத்தின் பயன்படுந் தன்மையை நோ-போற் கெடுத்தலின், 'நோ- ' என்றார். 'தக்கார்' அந்தணர், அடியார், புலவர் முதலியோர். 'தக்கார்' என்றதனால், தகுதியில்லார்க்கு ஈதல் தவறென்பது பெறப்படும். 'ஏதம்' ஆகு பெயர். எச்சவும்மை தொக்கது. இனி, அவ் விருபயனும் கொள்ளாதவனது பெருஞ்செல்வம் துன்பமே தரும் என்பது அத்துணைச் சிறந்ததன்று.

### *1007. அற்றார்க்கொன் றாற்றாதான் செல்வ மிகநலம்*
### *பெற்றா டமியள்மூத் தற்று.*

**(இ-ரை.)** அற்றார்க்கு ஒன்று ஆற்றாதான் செல்வம் - ஒரு பொருளு மில்லாதார்க்கு அவர் வேண்டிய தொன்றைக் கொடாதவனது செல்வம் வீணா-க்கழிதல்; மிக நலம் பெற்றாள் தமியள் மூத்த அற்று - குணத்திற் சிறந்த கட்டழகி யொருத்தி மணஞ்செ-து கொடுப்பாரின்மையால் கணவனின்றித் தனித்தவளா- மூத்த தன்மைத்து.

இதில் வந்துள்ள உவமம் பெண்ணின் உரிமையின்மையைக் காட்டுத லால், பெரும்பாலும் பண்டைக் காலத்திற்கே ஏற்றதாம். எனினும். இக் காலத் திலும் இது நிகழக்கூடிய தாதலால் உவமமாதற்கு எள்ளளவும் இழுக்கில்லை யென்க. 'நலம்' அகத்தழகு புறத்தழகு என்னும் இரண்டையுங் குறிக்கும். 'பெற்றாள்' என்பது இரண்டையும் ஒருங்கே பெறுதலின் அருமையை உணர்த்தும். பயன்படாமை செல்வத்திற்கும் பெண்ணிற்கும் பொதுவேனும், செல்வம் நுகர்ச்சிப் பொருளாகவே யிருப்பதென்றும், பெண் கணவனை நோக்க நுகர்ச்சிப் பொருளாகவும் தன்னை நோக்க நுகர்வாளாகவும் இருப் பவள் என்றும், வேறுபாடறிதல் வேண்டும். இதனால் தன் விருப்பப்படியே இறுதிவரை மணஞ் செ-யாதிருக்கும் குணமணிக் கட்டழகி, இக் குறட்கேற்ற உவமமாகாள் என்பதையும் அறிந்துகொள்க.

### *1008. நச்சப் படாதவன் செல்வ நடுவூரு*
### *ணச்சு மரம்பழுத் தற்று.*

**(இ-ரை.)** நச்சப் படாதவன் செல்வம் - வறியவர்க்கு அருகிலிருந்தும் ஒன்றுங் கொடாமையின் அவரால் விரும்பப்படாதவன் செல்வமுடையவனா யிருத்தல்; நடு ஊருள் நச்சு மரம் பழுத்த அற்று - ஊர் நடுவில் எட்டிமரம் பழுத்தாற் போலும்.

இரண்டும் அருகிலிருந்தும் பயனில்லை யென்பதாம். 'நடுவூர்' என்பது 'புறநகர்' என்பது போன்ற இலக்கணப் போலி.

### *1009. அன்பொரீஇத் தற்செற் றறநோக்கா தீட்டிய*
### *வொண்பொருள் கொள்வார் பிறர்.*

**(இ-ரை.)** அன்பு ஒரீஇ - ஒருவன் தன் கஞ்சத்தனத்தினால், உறவினரிடத்தும் நண்பரிடத்தும் அன்புசெ-தலை யொழிந்து; தற்செற்று - தனக்கு வேண்டியவற்றை நுகராது தன்னையுங் கெடுத்து; அறம் நோக்காது - வறியார்க்கு ஈதலாகிய அறத்தைக் கருதவுஞ் செ-யாது; ஈட்டிய ஒண்பொருள் பிறர் கொள்வார் - வருந்தித் தேடிய சிறந்த பொருளைக் கள்வருங் கொள்ளைக்காரரு மாகிய பிறரே கவர்ந்து பயன் பெறுவர்.

'ஈட்டிய' என்பதால் சிறிது சிறிதாக நீண்ட காலம் வருந்தித் தொகுத்த தென்பதும், ஒண்பொருள் என்பதால் நன்றா-ப் பயன்படக்கூடிய தென்பதும், 'பிறர்' என்பதால் சிறிதும் தொடர்பற்றவ ரென்பதும் பெறப்படும். 'ஒரீஇ' இன்னிசை யளபெடை.

> "ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்" **(கொன்றை. 4)**

என்று இரட்டுறலாகக் கூறினார் ஔவையார். ஈயார் = ஈயாதவர், ஈக்கள். தேட்டு = தேடிய சொத்து, தேன். தீயார் = கொடியவர், தீப்பந்தத்தை யுடைய குறவர்.

### *1010. சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி*
### *வறங்கூர்ந் தனைய துடைத்து.*

**(இ-ரை.)** சீர் உடைச் செல்வர் சிறுதுனி - ஈகையாற் புகழ் பெற்ற செல்வர் குறுங்கால வறுமை யடைதல்; மாரி வறம் கூர்ந்த அனையது உடைத்து - உலகத்தை வழங்கிவரச் செ-வதாகிய முகில் (மேகம்) சிற்றிடைக்காலம் பெ-யாது வறட்சி மிகுந்தாற்போன்ற தன்மை யுடையது.

எல்லார்க்கும் இல்லையென்னாது வழங்கும் செல்வர் அதனால் வறுமையடைந்த பின்பும், சிறிது காலம் பொறுத்தது மீண்டுஞ் செல்வராகி முன்போற் பயன்படுவ ரென்பது உவமத்தாற் பெறப்பட்டது. இதனால், நன்றியில் செல்வம் இடையறாதிருந்தும் எக்காலும் பயன்படாதென்பதும் எதிர்மறை யளவையாற் பெறப்பட்டதாம். "இதற்குச் சீருடைச் செல்வர் இரவலரோடு வெறுக்கும் நிலையில் வெறுப்பு மாரி வறங்கூர்ந்தனைய தன்மையை யுடைத்தென, அதிகாரத்தோடு பொருந்தாமை மேலும் ஓர்

பொருட்டொடர்புபடாம லுரைப்பாரு முளர்'' என்னும் பரிமேலழகர் மறுப்புரை மிகப் பொருத்தமானதே. துனி - வெறுப்பு; அதனை விளைத் தலால் வறுமை துனியெனப்பட்டது, முனியத்தக்க தாழ்வு முனிவு எனப் பட்டது போன்று (புறம். 192). இந் நான்கு குறளாலும் பயனில் செல்வத்தின் குற்றங் கூறப்பட்டது.

## அதி. 102 - நாணுடைமை

*அதாவது, உயர்குடிப் பிறந்து மானம் பெருமை சால்பு பண்பு ஆகிய குணங்களையுடையோர் தமக்குப் பொருந்தாத கருமங்களைச் செ-ய நாணுந்தன்மை. அதிகார முறைமையும் இதனால் விளங்கும்.*

***1011.*** ***கருமத்தா னாணுத னாணுத் திருநுத***
***னல்லவர் நாணுப் பிற.***

**(இ-ரை.)** நாணுக் கருமத்தால் நாணுதல் - நன்மக்கள் நாணாவது தீய வினைகள் செ-ய வெட்கிப் பின்வாங்குதல்; பிற திருநுதல் நல்லவர் நாணு - அஃதன்றித் தனித்து வெளிச் செல்லுதல், அறியாதவரும் முறைகாரருமான ஆடவரொடு உரையாடல், ஆடவருள்ள அவையிற் பேசுதல் முதலிய பிறவற்றிற்கு வெட்கப்படுதலும் கூச்சப்படுதலும் அழகிய நெற்றியை யுடைய குலமகளிர்க்கே யுரிய நாண்களாம்.

'திருநுதல் நல்லவர்' என்பது பாராட்டுப்பற்றிய புகழ்ச்சிச் சொல். 'பிற திருநுதல் நல்லவர் நாணு' என்பதனால் ஏனையது நன்மக்கள் நாண் என்பதும், 'நாணுதல்' என்றதனால் கருமத்தின் இழிவும் பெறப்பட்டன. நாணும் வினைப்பன்மைபற்றிப் 'பிற' என்றார். இக் குறளின் பிற்பகுதிக்கு, ''அஃதல்லாத நாணம் அழகிய நுதலினாலே நல்லாராகிய கணிகையர் நாணத்தோடு ஒக்கும் என்றவாறு.'' என்றுரைத்தார் மணக்குடவர். ''இனி அற்ற மறைத்தல் முதலியன பொதுமகளிர் நாணோ டொக்குமென் றுரைப்பாரு முளர். அவர்க்கு நாண் கேடு பயக்குமென விலக்கப்பட்டமையானும், அவர் பெயராற் கூறப்படாமையானும், அஃதுரையன்மை அறிக'' என்று பரிமே லழகர் கூறியிருப்பது சரியே. இதனால் நாணின் இலக்கணங் கூறப்பட்டது.

***1012.*** ***ஊணுடை யெச்ச முயிர்க்கெல்லாம் வேறல்ல***
***நாணுடைமை மாந்தர் சிறப்பு.***

**(இ-ரை.)** ஊண் உடை எச்சம் உயிர்க்கு எல்லாம் வேறு அல்ல - உணவும் உடையும் அவை யொழிந்த பிறவும் மக்களுயிர்க்கெல்லாம்

பொதுவாக வுரியனவாம்; நாண் உடைமை மாந்தர் சிறப்பு - ஆயின், நாணுடைமையோ நன்மக்கட்கே சிறப்பாக வுரியதாம்.

ஊணுடையொழிந்தன அணி மனை பேச்சு கல்வி முதலியன. 'அச்சம்' என்னும் பாடம் சரியானதன்று.

*1013. ஊனைக் குறித்த வுயிரெல்லா நாணென்னு
நன்மை குறித்தது சால்பு.*

**(இ-ரை.)** உயிர் எல்லாம் ஊனைக் குறித்த - எல்லா வுயிர்களும் உடம்பைத் தமக்கு நிலைக்களமாகக் கொண்டு அதனைப் பற்றும்; சால்பு நாண் என்னும் நன்மை குறித்தது - அதுபோலச் சான்றாண்மை நாண் என்னும் நற்குணத்தைத் தனக்கு நிலைக்களமாகக் கொண்டு அதனைப் பற்றும்.

உயிர் உடம்பொடு கூடியல்லது வாழாதது போல, சால்பு நாணோடு கூடியல்லது நடவாது என்பதாம். 'ஊன்' ஆகுபெயர். 'உடம்பு' வகுப்பொருமை. 'நன்மை' ஆகுபொருளது. 'ஊணை' என்று பாடங்கொள்வர் மணக்குடவ காலிங்க பரிப்பெருமாளர்.

*1014. அணியன்றோ நாணுடைமை சான்றோர்க்கஃ தின்றேற்
பிணியன்றோ பீடு நடை.*

**(இ-ரை.)** சான்றோர்க்கு நாண் உடைமை அணி அன்றோ - அறிவு நிறைந்தோர்க்கு நாணுடைமை ஓர் அணிகலமே; அஃது இன்றேல் பீடுநடை பிணி அன்றோ - அவ் வணிகல மில்லையாயின் அவரது பெருமித நடை அவருக்கொரு நோயேயாம்.

அணி செ-வதை 'அணி' யென்றும், இயல்பிற்கு மாறானதைப் 'பிணி' யென்றும் கூறினார்; எதிர்மறையடுத்த ஓகார வினாக்கள் ஓசை வேறுபாட்டால் உடன்பாட்டுப் பொருள் தந்து அதைத் தேற்றஞ் செ-தன. இக் குறளின் பிற்பகுதிக்கு, "அவ் வாபரண மில்லையாயின் அவர் பெருமிதத்தையுடைய நடை கண்டார்க்குப் பிணியாம்.... பொறுத்தற் கருமையிற் 'பிணி' யென்றுங் கூறினார்" என்பது பரிமேலழகருரை. இம் முக்குறளாலும் நாணுடைமையின் சிறப்புக் கூறப்பட்டது.

*1015. பிறர்பழியுந் தம்பழியு நாணுவார் நாணுக்
குறைபதி யென்னு முலகு.*

**(இ-ரை.)** பிறர் பழியும் தம் பழியும் நாணுவார் - பிறர்க்கு வரும் பழியையும் தமக்கு வரும் பழியையும் ஒப்ப மதித்து அவ் விரண்டிற்கும் நாணு

வாரை; உலகு நாணுக்கு உறைபதி என்னும் - உலகத்தார் நாணிற் குறை விடமென்று சொல்வர்.

ஒப்ப மதித்தலாவது பிறர் பழியையும் தம் பழிபோற் கருதுதல், 'உலகு' ஆகுபெயர்.

***1016. நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்***
***பேணலர் மேலா யவர்.***

**(இ-ரை.)** மேலாயவர் - உயர்ந்தோர்; வேலி நாண் கொள்ளாது - தமக்குப் பாதுகாப்பாகிய நாணினைக் கொள்வதன்றி; வியன் ஞாலம் பேணலர் - பரந்த ஞாலத்தைக் கைப்பற்ற விரும்பார்.

நாணும் ஞாலமுமாகிய இரண்டிலொன்றைத் தெரிந்துகொள்ள வேண்டிய நிலைமை நேர்ந்தவிடத்து, ஞாலத்தையே தெரிந்துகொள்வர் என்பதாம். பழி பளகு, நேராமற் காத்தலின் நாணை 'வேலி' என்றார். "மன் னும் ஒவும் அசை" என்றார் பரிமேலழகர். முற்காலத்தில் 'மன்னோ' என்பது ஆடூஉ முன்னிலையாயிருந்தமை முன்னரே 190ஆம் குறளுரையிற் கூறப் பட்டது. நாணாகிய வேலியைப் பெற்றல்லது ஞாலம் பெற விரும்பார் என் னும் உரை, முரண்பாடு கொள்ளுதலின் பொருந்தாது.

***1017. நாணா லுயிரைத் துறப்ப ருயிர்ப்பொருட்டா***
***னாண்டுறவார் நாணாள் பவர்.***

**(இ-ரை.)** நாண் ஆள்பவர் - நாணை உயிர்நாடிப் பண்பாகக் கொள் பவர்; நாணால் உயிரைத் துறப்பர் - நாணும் உயிருந் தம்முள் மாறான விடத்து நாணைக் காத்தற்பொருட்டு உயிரை நீப்பர்; உயிர்ப்பொருட்டு நாண் துறவார் - உயிரைக் காத்தற்பொருட்டு நாணினை நீக்கார்.

உயிரினும் நாண் சிறந்ததென்பது கருத்து. "உயிரினுஞ் சிறந்தன்று நாணே." (தொல், களவு. 22). இவ் விரு குறளாலும் நாணுடையார் செயல் கூறப் பட்டது. 'ஆல்' அசைநிலை.

***1018. பிறர்நாணத் தக்கது தானாணா னாயி***
***னறநாணத் தக்க துடைத்து.***

**(இ-ரை.)** பிறர் நாணத் தக்கது தான் நாணானாயின் - கண்டாருங் கேட்டாருமாகிய பிறர் நாணத்தக்க பழியை ஒருவன் தான் நாணாது செ-

வானாயின்; அறம் நாணத் தக்கது உடைத்து - அந் நாணாமை அறம் நாணி அவனைவிட்டு நீங்கத் தக்க குற்றத்தை யுடையதாம்.

நாணில்லாதவனை அறஞ்சாராது என்பது ஆட்படையணி, நாணின்றி அறமில்லை யென்பது கருத்து.

***1019. குலஞ்சுடுங் கொள்கை பிழைப்பி னலஞ்சுடு***
***நாணின்மை நின்றக் கடை.***

**(இ-ரை.)** கொள்கை பிழைப்பின் குலம் சுடும் - ஒருவன் தன் கொள்கை தவறி யொழுகின், அத் தவறு அவன் குடிப்பிறப்பைமட்டும் கெடுக்கும்; நாண் இன்மை நின்றக்கடை நலம் சுடும் - ஆயின், ஒருவனிடத்து நாணின்மை நிலைத்து நின்றவிடத்தோ, அந் நிலைப்பு அவன் நலம் எல்லாவற்றையுங் கெடுத்து விடும்.

கொள்கையாவது குடியுயர்வைப் பேணும் நெறிமுறை. 'நலம்' வகுப் பொருமை. நலவகைகள் பிறப்பு, இயற்கையறிவு, கல்வி. பண்பு, செயல் முதலியன. ஒழுக்க மின்மையினும் நாணின்மை மிகத் தீயது என்பதாம்.

***1020. நாணகத் தில்லா ரியக்க மரப்பாவை***
***நாணா லுயிர்மருட்டி யற்று.***

**(இ-ரை.)** அகத்து நாண் இல்லார் இயக்கம் - தம் மனத்தில் நாணில்லாத மாந்தர் நாணுடையர் போன்றே நடமாடும் நடமாட்டம்; மரப்பாவை நாணால் உயிர் மருட்டிய அற்று - மரத்தினாற் செ-த சிறு படிமை, தன்னை யாட்டும் பொறிக்கயிற்றா லேற்பட்ட தன் ஆட்டத்தினால், தான் உயிருள்ளது போல் தோன்றுமாறு பார்ப்பவர் கண்களை மயக்கினாற் போலும்.

நாணில்லாதவன் செத்தவனை யொத்தவன் என்பது கருத்து. 'உயிர் மருட்டி யற்று' என்பதால், பாவையின் அழகும் உயிரோவிய வேலைப்பாடும் அக்காலத் தமிழரின் படிமைக்கலைத் தேர்ச்சியும் உணரப்படும். இம் மூன்று குறளாலும் நாணில்லாரின் இழிவு கூறப்பட்டது.

## அதி. 103 - குடிசெயல்வகை

*அதாவது, ஒருவன் தான் பிறந்த குடியை மேன்மே லுயரச் செ-தலின் திறம். இது தாழ்வுபற்றி நாணுடையார்க்கே உள்ளதாதலின், நாணுடைமையின் பின் வைக்கப்பட்டது.*

*இங்குக் குடியென்றது சேரசோழ பாண்டியர் குடிகளும் சேக்கிழார் குடியும் போலக் கொடிவழியையுஞ் சரவடிமையுமேயன்றி, இற்றைக் குலங்களை யன்று.*

*ஆரியத்தால் தாழ்த்தப்பட்ட தமிழ இனத்தை முன்னேற்றிய நயன் மைக்கட்சி(Justice Party) யாட்சியும், அதன் வழிப்பட்ட இற்றைத் திராவிடர் முன்னேற்றக் கழக ஆட்சியும், விரிவுபட்ட குடிசெயல் வகைகளே. ஆயின், தமிழ இனத்தின் ஒற்றுமையைச் சிதைப்பதும், ஆரியவழி நின்று குலத்தைப் பிறப்பொடு தொடர்புபடுத்துவதுமான சில தமிழ வகுப்புகளின் தனித்தனி முன்னேற்ற முயற்சி திருவள்ளுவர் போலும் அறிஞர் போற்றத்தக்க தன்று.*

*பரந்த நோக்கொடு விரிந்த வகையில் குடிசெயல் தொண்டாற்றிய தனிப்பட்ட தமிழ்த் தலைவர் திருவள்ளுவர் ஒருவரே.*

### *1021.* கருமஞ் செயவொருவன் கைதூவே னென்னும்
### பெருமையிற் பீடுடைய தில்.

**(இ-ரை.)** கருமம் செயக் கை தூவேன் என்னும் பெருமையின் - தான் பிறந்த குடியை மேன்மேலும் முன்னேற்றும் முயற்சியைக் கைவிடேன் என்னும் பெருமைபோல; பீடு ஒருவன் உடையது இல் - சிறந்த பெருமை ஒருவனுக்கு வேறொன்று மில்லை.

குடி செ-தற்கு என்பது அதிகாரத்தால் வந்தது. குடி என்பது குடும்பம் முதல் நாட்டினம்(Nation) வரை பல்வேறு அளவுள்ள மக்கள் வகுப்பு களைக் குறித்தாலும், குடிசெயல் என்பது அரசியல் போலக் காத்தலைமட்டுஞ் செ-யாது மேன்மே லுயர்த்துதலையும் மேற்கொள்ளுதலாலும், 'பெருமையிற் பீடுடைய தில்.' என்றார். "குடிசெ-தற் கருமமே நடத்தலால்" தன் கருமஞ் செ-யவென்று முரைப்பாரு முளர்; தன் கருமமும் அதுவே யாகலானும், பிறரேல் செ-தல் தலைமையன்மையானும், அவை யுரையன்மை அறிக" என்னும் பரிமேலழகர் மறுப்புக் கொள்ளத் தக்கதாம்.

### *1022.* ஆள்வினையு மான்ற வறிவு மெனவிரண்டி
### னீள்வினையா னீளுங் குடி.

**(இ-ரை.)** ஆள்வினையும் ஆன்ற அறிவும் என இரண்டின் நீள்வினை யான் - முயற்சியும் நிறைந்த அறிவும் என்று சொல்லப்படும் இரண்டினையு முடைய இடையறாத செயலால்; குடி நீளும் - ஒருவனது குடி உயரும்.

ஆள்வினை ஆண்டு நடத்துஞ் செயல். ஆனுதல் நிறைதல். அறிவு நிறைதலாவது இயற்கை யறிவொடு செயற்கையறிவுஞ் சேர்தல். ஆள்வினை சோம்பலை நீக்கற்கும் ஆன்றவறிவு வெற்றிபெறச் சூழ்தற்கும் வேண்டியனவாம். 'நீள்வினை' விடாமுயற்சி. குடி நீள்தல் தொடர்தலும் உயர்தலும்.

***1023. குடிசெ–வ லென்னு மொருவற்குத் தெ–வ***
***மடிதற்றுத் தான்முந் துறும்.***

**(இ–ரை.)** குடிசெ-வல் என்னும் ஒருவற்கு - என் குடியை மேன் மேலுயர்த்தக் கடவேன் என்னும் பூட்கைகொண்டு, அதற்கேற்ற முயற்சியைச் செ-யும் ஒருவனுக்கு; தெ-வம் மடி தற்றுத் தான் முந்து உறும் - உதவி செ-யும் பொருட்டுத் தெ-வமும் தன் ஆடையை வரிந்து கட்டிக்கொண்டு அவனுக்கு முன் வந்து நிற்கும்.

சொல்லுதல் செயலையுந் தழுவிற்று. தறுதல் இறுகவுடுத்தல். ஒன்றைத் தப்பாது செ-து முடிப்பதாக உள்ளத்திற் பூணுதல் பூட்கை. குடிசெ-தல் வினை இறைவனுக்கும் இசைந்ததென்பது கருத்து.

***1024. சூழாமற் றானே முடிவெ–துந் தங்குடியைத்***
***தாழா துஞற்று பவர்க்கு.***

**(இ–ரை.)** தம் குடியைத் தாழாது உஞற்றுபவர்க்கு - தம் குடியை யுயர்த்துதற்கேற்ற வினையைத் தயக்கமின்றி முயல்வார்க்கு; சூழாமல் தானே முடிவு எ-தும் - அம் முயற்சி அதற்கேற்ற சூழ்வினை வேண்டாது தானாகவே வெற்றியாக முடியும்.

தெ-வத்துணை யிருத்தலால், விரைந்த முயற்சி மட்டுமிருப்பின் எளிதா- முடியும் என்பதாம். 'குடி' ஆகுபொருளது.

***1025. குற்ற மிலனா–க் குடிசெ–து வாழ்வானைச்***
***சுற்றமாச் சுற்று முலகு.***

**(இ–ரை.)** குற்றம் இலனா-க் குடிசெ-து வாழ்வானை - ஒரு குற்றமுஞ் செ-யாது தன் குடியை யுயரச் செ-தொழுகுவானை; உலகு சுற்றமாச் சுற்றும் - அவன் குடியைச் சேர்ந்தார் அனைவரும், அவனுக்குச் சுற்றமாயிருத்தலை விரும்பித் தாமே சென்று அவனைச் சூழ்வர்.

குற்றங்கள் அறநயன் (நீதி), முறை (நியாயம்), நடுநிலைகட்கு மாறான செயல்கள். சுற்றம் உறவினராகச் சுற்றியிருக்கும் கூட்டம். ‘உலகு’ வரையறுத்த ஆகுபெயர்.

### *1026. நல்லாண்மை யென்ப தொருவற்குத் தான்பிறந்த வில்லாண்மை யாக்கிக் கொளல்.*

**(இ-ரை.)** ஒருவற்கு நல் ஆண்மை என்பது - ஒருவனுக்கு நல்ல ஆண் மையென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது; தான் பிறந்த இல் ஆண்மை ஆக்கிக் கொளல் - தான் பிறந்த குடியை ஆளுந் தன்மையைத் தனக்கு உண்டாக்கிக் கொள்ளுதல்.

குடியாளுந் தன்மையாவது குடியிலுள்ளவரை முன்னேற்றித் தன் வயப்படுத்துதல். போராண்மையினின்று வேறுபடுத்தற்கு ‘நல்லாண்மை’ யென்றார். இவ் விரு குறளாலும் குடிசெ-வாரின் தலைமை கூறப்பட்டது.

### *1027. அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்து மாற்றுவார் மேற்றே பொறை.*

**(இ-ரை.)** அமர் அகத்து வன்கண்ணர் போல - போர்க்களத்திற்குச் சென்றார் பலராயினும், போரைத் தாங்கும் பொறுப்பு ஒருசில கடுமறவர் மேலேயே இருத்தல்போல; தமர் அகத்தும் பொறை ஆற்றுவார் மேற்றே - ஒரு குடியிற் பிறந்தார் பலராயினும், அதை முன்னேற்றும் பொறுப்பு அதைச் செ-யவல்ல ஒருசிலர் மேலேயே உள்ளதாம்.

விளக்கம்பற்றி உவமத்திற்கும் பொருட்கும் வேண்டிய சொற்கள் வருவிக்கப்பட்டன. உம்மை இறந்தது தழுவிய எச்சம். ஏகாரம் பிரிநிலை. இக்குறளால் குடிசெ-வாரின் பொறுப்புக் கூறப்பட்டது.

### *1028. குடிசெ—வார்க் கில்லை பருவ மடிசெ—து மானங் கருதக் கெடும்.*

**(இ-ரை.)** மடிசெ-து மானம் கருதக் கெடும் - தங்குடியை முன்னேற்று வார். அத் தொண்டைக் கவனியாது காலநிலைமை நோக்கிச் சோம்பியிருந்து கொண்டு தன் மானத்தையும் பெரிதா-க் கருதுவராயின், அவர் குடிகெடும்; குடிசெ-வார்க்குப் பருவம் இல்லை - ஆதலால், குடிசெயல் தொண்டர்க்குக் காலவரம்பில்லை.

காலத்தை நோக்கிச் சோம்பியிருத்தலாவது, வெயில் மழை பனிக் காலங்கள் கழிந்தபின் செ-வோமென்று கடத்தி வைத்தல். தன்மானங் கருதுதலாவது, இக் குடியிலுள்ள ஏனையோரெல்லாம் இன்புற்றிருக்க நான் மட்டும் ஏன் துன்புற வேண்டுமென்று எண்ணுவதும், முன்னேற்றப் பகைவரின் கல்லடிகளையுஞ் சொல்லடிகளையும் பொறுத்துக் கொள்ளாமையுமாம். முன்பு காலமறிதல் என்னும் அதிகாரத்தில் “இகல் வெல்லும் வேந்தர்க்கு வேண்டும் பொழுது” என்று கூறியதனால், குடிசெ-வார்க்குங் காலம் வேண்டுமோ என்று கருதுவாரை நோக்கி அது வேண்டுவதில்லை யென்று ஐயமகற்றியவாறு.

### *1029. இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ குடும்பத்தைக்*
### *குற்ற மறைப்பா னுடம்பு.*

**(இ-ரை.)** குடும்பத்தைக் குற்றம் மறைப்பான் உடம்பு - அடிமைத்தனம், அறியாமை, வறுமை என்னும் மூவகை நிலைமையாலும் தன் குடிக்கு வருந் துன்பங்களை நீக்கப் பாடுபடும் குடிசெயல் தலைவனது உடம்பு; இடும்பைக்கே கொள்கலங் கொல் - துன்பத்தையே இட்டு நிறைத்து வைத் தற்கு ஏற்பட்டதொரு ஏனமோ?

மூவகைத் துன்பநிலைமையாலும் முட்டுண்டு வருந்துங் குடியை முன்னேற்ற முயலுந் தலைவன், வாழ்நாள் முழுவதும் அல்லும் பகலும் ஓயாது படும் மெ-வருத்தத்திற்கு அளவின்மையால், அவன் உடம்பு இடும்பையே இடும் பையோ! என்று ஓர் அறிஞன் இரங்கிக் கூறியவாறு, ஏகாரம் பிரிநிலை. ‘கொல்’ வினாவிடைச்சொல். ஓகாரம் இரங்க லிடைச்சொல். மறைத்தல் தடுத்தலும் நீக்குதலும். ‘குற்றம்’ வகுப்பொருமை. இவ் விரு குறளாலும் குடிசெ-யும் வகை கூறப்பட்டது.

### *1030. இடுக்கண்கால் கொன்றிட வீழு மடுத்தூன்று*
### *நல்லா ளிலாத குடி.*

**(இ-ரை.)** அடுத்து ஊன்றும் நல் ஆள் இலாத குடி - பக்கத்தில் ஊன்றும் விழுதுபோல் முட்டுக் கொடுத்துத் தாங்கவல்ல நல்ல ஆண்மகன் பிறவாத குடியாகிய ஆலமரம்; இடுக்கண் கால் கொன்றிட வீழும் - துன்பமாகிய சிதல் (கறையான்) தன் அடியை அரித்துத் தின்றுவிட ஒரு தாங்கலுமின்றி விழுந்து விடும்.

"சிதலை தினப்பட்ட ஆல மரத்தை
மதலையா– மற்றதன் வீழூன்றி யாங்கு
குதலைமை தந்தைகண் தோன்றின்தான் பெற்ற
புதல்வன் மறைப்பக் கெடும்." (நாலடி. 197)

"தூங்குசிறை வாவலுறை தொன்மரங்க ளன்ன
வோங்குகுல நையவத னுட்பிறந்த வீரர்
தாங்கல் கடன்...." (சீவக. காந்தருவ. 6)

பரிமேலழகர் குடியைப் பொதுமரம் போன்றதாகக் கொண்டு '"துன்ப மாகிய நவியம் புகுந்து தன் முதலை வெட்டிச் சா-க்க ஒரு பற்றின்றி வீழா நிற்கும்; அக்காலத்துப் பற்றாவன கொடுத்துத் தாங்கவல்ல நல்ல வாண்மகன் பிறவாத குடியாகிய மரம்" என்று உரைத்தார். நவியம் முதலை வெட்டிச் சா-க்கும்போது மரத்தைப் பற்றுக்கொடுத்துத் தாங்கினும் பயனின்மையின் அது உரையன்மை அறிக.

மேலும், 'இடுக்கண் கால் கொன்றிட' என்னுந் தொடருக்குக் கோடரி வெட்டிச் சா-க்க' என்னும் பொருளினும் கறையான் அரிக்க என்னும் பொருளும்; 'அடுத்தூன்றும்' என்னும் தொடருக்குப் பற்றுக்கொடுத்துத் தாங்கும் என்னும் பொருளினும் பக்கத்தில் ஊன்றும் விழுதுபோல் தாங்கும் என்னும் பொருளும், சிறப்பாகப் பொருந்துதலையும் நோக்குக. "தூங்குசிறை வாவலுறை தொன்மரங்க ளன்ன" என்னும் மேற்கோளைப் பரிமேலழகரும் எடுத்துக் காட்டியும், அதை ஆலமரமென்று அவர் அறியாமற்போனது சற்று மருளற் குரியதே. 'வீழும் அடுத்தூன்றும் நல்லா ளிலாத குடி' எனவே, வீழாது அடுத்தூன்றும் நல்லாள் உள்ள குடி என்பது பெறப்படும். இதற்குக் கோடரி வெட்டும் மரத்தை முட்டுக் கொடுத்துத் தாங்குதல் என்பது உவம மாகாமை அறிக. மரத்தை வீழ் தாங்குவதிலும் குடியை ஆள் தாங்குவதிலும் தாங்குதல் தன்வினையென்பதையும், மரத்தை ஒருவன் முட்டுக்கொடுத்துத் தாங்குவதில் தாங்குதல் பிறிதின்வினை யென்பதையும் அறிதல் வேண்டும். முட்டுக் கொடுப்பினுங் கொடாவிடினும், கோடரி வெட்டும் மரம் விழுந்தே தீரும். முட்டுச் செ-யக் கூடியதெல்லாம் திடுமென விழுவதை மெள்ள விழச்செ- வதே. இதனால், வெட்டுண்டு விழுந்த மரம் மீள அடியொடு பொருந்தித் தளிர்க்காது. நல்லாள் அடுத்தூன்றிய குடியோ இடுக்கண் நீங்கி மீளத் தழைத் தோங்கும். தொன்மரம் என்பது ஆலமரத்திற்கொரு பெயர். ஆலமரம் பழுத்தால் வாவல்கள் வந்து தங்கும். இக் குறள் குறிப்புருவகம். இதனால் குடிசெ-வார் இல்லாத குடியின் கேடு கூறப்பட்டது.

## அதி. 104 - உழவு

*அதாவது, அரசனுக்கும் அவனுடைய குடிகட்கும் அல்லது ஒரு நாட்டு மாந்தர்க்கெல்லாம் இன்றியமையாத உணவை விளைப்பதும், கைத்தொழிற் கும் வாணிகத்திற்கும் ஓரளவு கரணியமாயிருப்பதும், அரசியல் நடத்தற்கு வேண்டும் இறையிற் பெரும் பகுதியை நல்குவதும், குடிகளுட் சிறந்த வேளாளர் என்னும் வகுப்பார்க்குரியதும் ஆன பயிர்த்தொழில். அது உழு தலாகிய அதன் முதல் வினைபற்றி உழவு எனப்பட்டது. உழவுத்தொழிலைப் பாண்டியம் என்பது இலக்கிய வழக்கு. பாண்டி - எருது. பாண்டியின் துணையாற் செ-யப்படுவது பாண்டியம். "பகடு நடந்தகூழ்" என்று நாலடி யார் (2) கூறுதல் காண்க. அரசர்குடி உட்பட எல்லாக் குடிகளும் வாழ்வதற்கும் முன்னேறுவதற்கும் இன்றியமையாததாதலின், இது குடிசெயல்வகை யின்பின் வைக்கப்பட்டது.*

*"சிறுபான்மை வாணிகர்க்கும் பெரும்பான்மை வேளாளர்க்கு முரித் தாய உழுதற்றொழில் செ-விக்குங்கால் ஏனையோர்க்கு முரித்து. இது மேற் குடியுயர்தற் கேதுவென்ற ஆள்வினை வகையாதலின், குடிசெயல்வகையின் பின் வைக்கப்பட்டது" என்னும் பரிமேலழகர் அதிகாரப் பாயிரம், ஆரிய முறை தழுவியதும் பொருளொடு பொருந்தாதது மாதலின், ஈண்டைக்கு ஏற்கா தென்க.*

**1031. சுழன்றுமேர்ப் பின்ன துலக மதனா**
**லுழந்து முழவே தலை.**

**(இ-ரை.)** சுழன்றும் உலகம் ஏர்ப் பின்னது - உழவுத்தொழிலால் உண் டாகும் உடல் வருத்தம் நோக்கி வேறு பல்வகைத் தொழில்களைச் செ-து திரிந்தாலும், அதன் பின்னும் வேளாளரல்லாத உலகத்தா ரெல்லாரும் உழவுத் தொழிலின் வழிப்பட்டவரே; அதனால் உழந்தும் உழவே தலை - ஆதலால், எல்லா வருத்தமுமுற்றும் உழவுத்தொழிலே உலகில் தலையாயதாம்.

பிற தொழில்களாற் பொருள் தேடிய பின்பும், உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாத உணவின்பொருட்டு உழவரிடமே செல்லவேண்டி யிருத் தலின், 'சுழன்று மேர்ப்பின்ன துலகம்' என்றும், பிற தொழில்கள் வருத்த மின்றிச் செ-வன வேனும் கடைப்பட்டவை யென்பது தோன்ற 'உழவே தலை' என்றும் கூறினார். 'ஏர்' ஆகுபெயர். 'உலகம்' வரையறுத்த ஆகுபெயர். ஏகாரம் பிரிநிலை. உம்மை யிரண்டனுள், முன்னது எச்சத்தின்பாற் பட்ட பின்மை; பின்னது இழிவின்பாற் பட்ட ஒத்துக்கொள்வு.

### *1032. உழுவா ருலகத்தார்க் காணியஃ தாற்றா தெழுவாரை யெல்லாம் பொறுத்து.*

**(இ-ரை.)** உழுவார் உலகத்தார்க்கு ஆணி - உழவுத்தொழிலைச் செ-வார் உலகத்தாராகிய தேர்க்கு அச்சாணியாவர்; அஃது ஆற்றாது எழுவாரை எல்லாம் பொறுத்து - அத் தொழிலைச் செ-யும் வலிமையின்றிப் பிற தொழில்களை மேற்கொள்வாரை யெல்லாம் தாங்குதலால்.

தேரோட்டத்திற்கு அச்சாணி போல உலக நடப்பிற்கு உழவர் இன்றி யமையாதவராதலின் 'ஆணி' யென்றார். தொழில்பற்றிய நால்வகுப்பாருள், உழவராகிய வேளாளரும் ஏனை வகுப்பார் போன்றே இருபிரிவார். அவர் சிறுநிலமே யுடைமையால் தாமே உழுதுண்பாரும் பெருநில முடைமையாற் பிறரைக் கொண்டு உழுவித்துண்பாரும் முறையே கருங்களமர் அல்லது காராளர் என்றும், வெண்களமர் அல்லது வெள்ளாளர் என்றும் பெயர் பெறு வர். வேளாளர் என்பது அவ் விரு பிரிவார்க்கும் பொதுப்பெயராம். விருந் தோம்பி வேளாண்மை செ-பவர் வேளாளர். 'உலகத்தார்' என்றது இங்கு உழவரல்லாதாரை. உலகத்தாரைத் தேரென்னாமையால் இங்குள்ளது ஒரு மருங் குருவகம்.

மணக்குடவ காலிங்க பரிதி பரிப்பெருமாளர் நால்வரும், 'அஃதாற்றார் தொழுவாரே யெல்லாம் பொறுத்து' என்று பாடங் கொண்டுள்ளனர். அதற்கு "அதனைச் செ-யாதாரே (செ-யாதவர்) பிறர் பெருமிதத்தினால் செ-வன வெல்லாம் பொறுத்துத் தொழுது நிற்பார்" என்பது மணக்குடவ பரிப்பெரு மாளர் உரை. ஏனை யிருவ ருரையும் இதையொத்ததே.

### *1033. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம் தொழுதுண்டு பின்செல் பவர்.*

**(இ-ரை.)** உழுது உண்டு வாழ்வாரே வாழ்வார் - எல்லாரும் உண்ணும் வகை உழவுத்தொழிலைச் செ-து அதனால் தாமும் உண்டு வாழ்பவரே, உரிமையுடன் வாழ்பவராவர்; மற்று எல்லாம் தொழுது உண்டு பின்செல்பவர் - மற்றோரெல்லாம் பிறரை வணங்கி அதனால் உண்டு அவர்பின் செல்லும் அடிமையரே.

உழவர் தம் விருப்பப்படியும் பிறர் விருப்பப்படியும் தொழில் செ- பவர் என்பது கருத்து. இது மக்கள்தொகை மிக்க இக்காலத்திற்கு ஏற்காது. தொல்காப்பியர் காலத்தில் அஃறிணையைக் குறித்த எல்லாம் என்னும் சொல்

திருவள்ளுவர் காலத்தில் உயர்திணையையுங் குறித்தது வழக்குப்பற்றிய திணை வழுவமைதி. ஏகாரம் பிரிநிலை.

## *1034. பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்ப ரலகுடை நீழ லவர்.*

**(இ-ரை.)** அலகு உடை நீழலவர் - நெல்லை விளைக்கும் ஈர நெஞ்சத் தாரான உழவர்; பல குடை நீழலும் தம் குடைக்கீழ்க் காண்பர் - பல வேற் றரசரின் குடைநிழலின் கீழுள்ள நாடுகளையும் தம் அரசன் குடைக்கீழ்க் கொண்டு வருவர்.

அரசனுக்கு ஆறிலொரு கடமை யிறுப்பதனாலும் போர்க்காலத்திற் படைமறவராகச் சென்று பொருது வெற்றி விளைத்தலாலும், 'பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்பர்' என்றார்.

"வேளாண் மாந்தர்க் குழுதூ ணல்ல
தில்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி" **(1581)**

"வேந்துவிடு தொழிலின் படையுங் கண்ணியும்
வா—ந்தன ரென்ப வவர்பெறும் பொருளே" **(1582)**

என்பன தொல்காப்பியம்.

"பொருபடை தரூஉங் கொற்றமு முழுபடை
ஊன்றுசால் மருங்கி னீன்றதன் பயனே" **(புறம். 35)**

என்றார் வெள்ளைக்குடி நாகனார்.

"இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும்
உழவிடை விளைப்போர்......" **(சிலப். 10 : 149–50)**

என்றார் இளங்கோவடிகள். அலகு கதிர். அது இங்கு ஆகுபெயரா- நெல்லைக் குறித்தது. உடைய என்பது உடை எனக் குறைந்து நின்றது. 'நீழலவர்' என்றது இரப்போர்க்கெல்லாம் ஈயும் தண்ணளிபற்றி. 'குடை நீழல்' (நாடு), 'குடை' (ஆட்சி) என்பன ஆகுபெயர்கள். 'தங்குடை' என்றது ஒற்றுமையும் அன்பும்பற்றி, மணக்குடவரும் பரிப்பெருமாளரும் அலகுடை என்று பகுத்து, 'குடையில்லா' என்றும் 'குடையல்லாத' என்றும் முறையே பொருள் கூறுவர்.

## *1035. இரவா ரிரப்பார்க்கொன் றீவர் கரவாது கைசெ—தூண் மாலை யவர்.*

**(இ-ரை.)** கை செ-து ஊண் மாலையவர் இரவார் - தம் கையால் உழுதுண்டலை இயல்பாகவுடைய உழவர் பிறரிடம் தாம் ஒன்றையும் இரவார்; இரப்பார்க்கு ஒன்று கரவாது ஈவர் - தம்மை யிரப்பவர்க்கெல்லாம் அவர் வேண்டியதொன்றை இல்லையென்னாது ஈவர்.

'கைசெ-து' என்னும் மூன்றாம் வேற்றுமைத் தொகைக்கு, உழவு என்னும் செ-பொருள் அதிகாரத்தால் வந்தது. 'கைசெ-தூண் மாலையவர்' என்பது, ஒருகாலும் வற்றாத வருவாயுடையவரென்னும் ஏதுவைக் குறிப்பா-உணர்த்தி நின்றது. "மாலை யியல்பே" என்றார் தொல்காப்பியர் (சொல். உரி. 15). அது இன்று மானை என்று நெல்லைநாட்டில் உலக வழக்காக வழங்குகின்றது.

## *1036. உழவினார் கைம்மடங்கி னில்லை விழைவதூஉம்*
## *விட்டேமென் பார்க்கு நிலை.*

**(இ-ரை.)** உழவினார் கை மடங்கின் - உழவுத்தொழிலைச் செ-வாரின் கை அதைச் செ-யாது ஓ-ந்திருக்குமாயின்; விழைவதும் விட்டேம் என் பார்க்கு நிலை இல்லை - மாந்தராற் சிறப்பாக விரும்பப்படும் பெண் ணின்பத்தையுந் துறந்தோம் என்று பெருமை கூறிக்கொள்ளும் துறவி யர்க்கும், அவர் அறத்தில் நிற்பது இல்லாமற் போம்.

உழவுத்தொழில் நிகழாதாயின் உணவில்லை. உணவில்லையெனின் இல்லறம் துறவறம் ஆகிய ஈரறமும் நிகழா என்பதாம். "யாவரும் விழையு முணவும் யாந்துறந்தே மென்பார்க்கு அவ் வறத்தின்க ணிற்றலு முளவாகா" என்றுரைப்பர் பரிமேலழகர். உணவும் யாந்துறந்தே மென்பார்க்கு உண வின்மையால் யாதொரு கேடுமிராதாதலின், அவ் வுரை தன்முரணா யிருத்தல் காண்க. இனி, "யாதொரு பொருளின்கண்ணும் விரும்புவதனையும் விட் டேம் என்பார்க்கு அந் நிலையின்கண் நிற்றல் இல்லை" என்னும் மணக் குடவருரையும், அங்ஙனமே தன்முரணா யிருத்தலாற் பொருந்தாதாம். 'விழைவதூஉம்' இன்னிசை யளபெடை. என்பார்க்கும் என்னும் எச்சவும்மை தொக்கது. இவ் வைந்து குறளாலும் உழவரது சிறப்புக் கூறப்பட்டது.

## *1037. தொடிப்புழுதி கஃசா வுணக்கிற் பிடித்தெருவும்*
## *வேண்டாது சாலப் படும்.*

**(இ-ரை.)** தொடிப்புழுதி கஃசா உணக்கின் - ஒரு நிலத்தை யுழுதவன் ஒருபலப் புழுதி காற்பலம் ஆகும் வண்ணம் அவ் வுழவடிப் புழுதியைக்

காயவிடுவானாயின்; பிடித்து எருவும் வேண்டாது சாலப்படும் - அந் நிலத் திற் செ-த பயிர் கைப்பிடியெருவுந் தேவையின்றிச் செழித்து வளரும்.

பிடித்து ஒரு பிடிக்குள் அடங்கியது. உம்மை இழிவுசிறப்பு. 'புழுதி' என்றமையால் உழுதபின் கட்டியடித்தலும் பரம்படித்தலும் பெறப்படும்.

***1038. ஏரினு நன்றா லெருவிடுதல் கட்டபி
னீரினு நன்றதன் காப்பு.***

**(இ-ரை.)** ஏரினும் எரு இடுதல் நன்று - பயிர் செ-யவேண்டிய நிலத்தை ஆழவுழுவதினும், அதற்கு வளமான உரமிடுதல் நல்லதாம்; கட்டபின் - அந் நிலத்தில் விதைத்து முளைத்து அல்லது நாற்று நட்டுப் பயிர் வளரும் போது முற்றுங் களையெடுத்தபின்; நீரினும் அதன் காப்பு நன்று - உரிய நாள் முறைப்படி நீர் பா-ச்சுவதினும், அப் பயிர் விளைந்து கதிரறுத்துப் போரடித்துக் கூலம் வீடு வந்து சேரும்வரை தக்க காவல் செ-தல் மிக நல்லதாம்.

'ஏர்' ஆகுபொருளது. காத்தல் பட்டிமாடு பறவைகள் திருடர் பகைவர் முதலியவற்றால் அழிவும் இழப்பும் நேராவாறு காவல் செ-தல். உழுதல், உரமிடுதல், களையெடுத்தல், நீர்பா-ச்சுதல், காவல் செ-தல் ஆகிய முதன்மையான வினைகளை முறைப்படி குறிக்கும் போதே அவற்றை ஒப்பு நோக்கிச் சிறந்தவற்றை விதந்து கூறினார். 'ஆல்' அசைநிலை.

***1039. செல்லான் கிழவ னிருப்பி னிலம்புலந்
தில்லாளி னூடி விடும்.***

**(இ-ரை.)** கிழவன் செல்லான் இருப்பின் - நிலத்திற்குரிய உழவன் நாள்தோறும் சென்று அதற்கு வேண்டியவற்றைச் செ-யாது வீட்டிற் சோம்பியிருப்பின்; நிலம், இல்லாளின் புலந்து ஊடி விடும் - அவன் நன்செ- அல்லது புன்ச-, அவனாற் பேணப்படாத மனைவி போலத் தன்னுள்ளே வெறுத்துப் பின்பு வெளிப்படையாகச் சடைத்துக் கொள்ளும்.

செல்லுதல் ஆகுவினை; அஃதாவது சென்று கவனித்துச் செ-ய வேண்டியவற்றைச் செ-தல். அவை முற்கூறியவற்றொடு பூச்சி புழு நோ-கட்கு மருந்து தெளித்தல், வெள்ளத்தா லுடைந்த வரப்புத் திருத்துதல், வரப்புத் திறந்து மிகைநீரை வெளியேற்றுதல், பள்ளம் விழுந்த இடங்கட்கு மண் கொட்டுதல், காற்றாலும் மழையாலுஞ் சா-ந்த கதிர்களை நிமிர்த்திக் கட்டுதல் முதலியன. "உடையவன் போகா வேலை ஒருமுழங் கட்டை" யாதலால், நிலமுடையான் தானே செல்லவேண்டு மென்பதற்குக் 'கிழவன்' என்றார்.

தன்னிடத்து வந்து தன்னைப் பேணாத கணவனொடு மனைவி ஊடுவது போல் தன்னிடத்து வந்து நாள்தோறும் தன்னைக் கவனியாத நிலக்கிழவ னொடு நிலம் ஊடிவிடும் என்றது, விளையு ளின்மையால் அவன் நுகர்ச்சி யிழத்தல் நோக்கி. 'அலகுடை நீழலவர்' என்று நெல்விளைப்போரை விதந்து கூறியமையால், 'இல்லாளி னூடி விடும்' என்பது மனைவி ஊடுதல் மருத நிலத்திற்குச் சிறந்ததென்னும் அகப்பொருளிலக்கணக் கொள்கையைக் குறிப்பாக வுணர்த்தும். இம் மூன்று குறளாலும் உழவுத்தொழில் செ-யும் வகை கூறப்பட்டது.

***1040. இலமென் றசைஇ யிருப்பாரைக் காணி***
***நிலமென்னு நல்லா ணகும்.***

**(இ-ரை.)** இலம் என்று அசைஇ இருப்பாரைக் காணின் - யாம் பொரு ளில்லேம் என்று மனந்தளர்ந்து சோம்பியிருப்பாரைக் கண்டால்; நிலம் என்னும் நல்லாள் நகும் - நிலமகள் என்னுந் தா- தனக்குள் சிரிப்பாள்.

வறியவரெல்லாரும் நிலத்தை யுழுது பயிர்விளைத்தால், உணவு பெறுவதோடு அவர் வறுமையும் நீங்கும் என்பது கருத்து. நிலமகள் மாந்த ரெல்லாருக்குந் தாயாயிருப்பதனாலும், அவளிடம் போதிய அளவு நில மிருப்பதனாலும், உழவுத்தொழிலை மேற்கொள்ளாத ஏழைச் சோம்பேறி களைக் கண்டு அவள் எள்ளி நகையாடுவதாகக் கூறினார். நல்லாள் என்பது கண்ணிற்கு நன்மையாகிய அழகுபற்றிப் பெண்ணிற்கு ஏற்பட்டதொரு பெயர். அச் சொல் இங்குப் பெண்பாலாகிய தாயைக் குறித்தது. 'அசைஇ' சொல்லிசை யளபெடை. 'இரப்பாரை' என்பது மணக்குடவ காலிங்க பரிப் பெருமாளர் கொண்ட பாடம். உழவுத்தொழில் செ-யாதவர் வறுமையடைவர் என்பதால், அடுத்த அதிகாரத்திற்கு இங்குத் தோற்றுவா- செ-யப்பட்டது.

பண்டைக் காலத்தில் மக்கள்தொகை மிகாது விளைநிலம் மிக்கிருந் ததனால் "இலமென் றசைஇ.... நல்லா ணகும்" என்று கூறினார் ஆசிரியர். இந் நிலைமையே,

"வித்து மேரு முளவா யிருப்ப
ஏ–த்தங் கிருக்கு மேழையும் பதரே" **(வெற்றி. 68)**

என்னும் வெற்றிவேற்கைச் செ-யுளும் குறிக்கும். ஆயின் இக் கூற்று, மக்கள்தொகை வரம்பிறந்தோடி எண்ணிலா வுழவர் அங்கைநிலமு மின்றி அங்கலா-க்கும் இக்காலத்திற்கு, எள்ளளவும் ஏற்காது.

## அதி. 105 - நல்குரவு

*அதாவது, நுகர்வன யாவு மில்லாமை. நல்கூர்வது நல்குரவு. நல் நன்மை; கூர்தல் மிகுதல். நன்மையின்மையை நன்மை மிகுதி என்றது மங்கல வழக்கு, வெறுமையாகிய வறுமை நிரப்பு என்றது போல். இனி, நல்கு + ஊர்தல் என்று பகுத்து, பிறர் கொடுப்பதன்மேல் ஊர்ந்து செல்லுதல் என்று கூறினுமாம். உழவுத்தொழிலின்றேல் சோம்பேறிகள் மட்டுமன்றி ஒரு நாடும் வறுமையடையும் என்னும் கருத்துப்பற்றி, இது உழவின்பின் வைக்கப்பட்டது.*

*நல்குரவுண்டாகும் வழிகள்: முன்னோர் தேட்டின்மை, பெற்றோரின்மை, உழைப்பின்மை, மதிநுட்பமின்மை, பொருளாசையின்மை, தாயத்தாருங் கள்வருங் கொள்ளைக்காரருங் கவர்தல், குடியுஞ் சூதும் விலைமகளி ருறவுமாகிய தீயவொழுக்கம், இயற்கைப் பேரழிவு, நேர்மையின்மை என்பனவாம்.*

***1041. இன்மையி னின்னாத தியாதெனி னின்மையி***
***னின்மையே யின்னா தது.***

**(இ-ரை.)** இன்மையின் இன்னாதது யாது எனின் - ஒருவனுக்கு வறு மையைப் போலத் துன்பந்தருவது எதுவென்று வினவின்; இன்மையின் இன்னாதது இன்மையே - வறுமையைப் போலத் துன்பந்தருவது வறுமையே, வேறொன்றுமில்லை.

ஒப்பதின்மை மிக்கதின்மையையும் உடனுணர்த்திற்று. இதில் வந்துள்ள சொல்லணி சொற்பொருட் பின்வருநிலை; பொருளணி தன்னுவமை.

***1042. இன்மை யெனவொரு பாவி மறுமையு***
***மிம்மையு மின்றி வரும்.***

**(இ-ரை.)** இன்மை என ஒரு பாவி - வறுமையென்று சொல்லப்படுவ தொரு கொடியான்; இம்மையும் மறுமையும் இன்றி வரும் - ஒருவனிடத்து வருங்கால் அவனுக்கு இம்மை யின்பமும் மறுமையின்பமும் இல்லாவாறு வருவான்.

நுகராமையால் இம்மையின்பமும் ஈயாமையால் மறுமையின்பமும் இல்லையென்பதாம். இம்மை, மறுமை என்பன ஆகுபெயர். பாவம்(வ.) செ-தவன் பாவி (வ.); கரிசு (பாவம்), கரிசன் (பாவி - ஆண்பால்), கரிசி (பாவி - பெண்பால்) என்பன தென்சொற்கள். கொடியவனையே இங்குப் 'பாவி'

என்றார். 'இன்றிவிடும்' என்பது மணக்குடவ பரிப்பெருமாளர் கொண்ட பாடம்; வறுமையைக் கொடியான் என்று ஓர் ஆளாக உருவகித்தது ஆட்படையணி.

### *1043. தொல்வரவுந் தோலுங் கெடுக்குந் தொகையாக நல்குர வென்னு நசை.*

**(இ-ரை.)** நல்குரவு என்னும் நசை - வறுமையென்று சொல்லப்படும் ஆசை; தொல்வரவும் தோலும் தொகையாகக் கெடுக்கும் - தன்னைக் கொண்டவனுடைய பழைமையான குடிப்பண்பையும் அக் குடிப்புகழையும் ஒருங்கே கெடுக்கும்.

வறுமையினால் பல பொருள்கள்மேலும் ஆசையுண்டாவதனாலும், அவ்வாசை பல இழிதொழில்களைச் செ-யத் தூண்டுதலாலும் நல்குரவை நசையாக்கி அந் நசை தொல்வரவையுந் தோலையுங் கெடுக்குமென்றார். தோலைப் பரிமேலழகர் பழைய குடிவரவிற்கேற்ற சொல் என்றார். தோல் என்னும் சொல்லை,

> "இழுமென் மொழியான் விழுமியது நுவலினும்
> பரந்த மொழியான் அடிநிமிர்ந் தொழுகினும்
> தோலென மொழிப தொன்மொழிப் புலவர்" (பொருள். செ-. 339)

என்னும் தொல்காப்பிய நூற்பா, ஒருவகை வனப்பு என்னும் பனுவலின் பெயராகக் குறித்தலால், ஒருவரின் பொதுவகையான சொற்களைக் குறிக்குமாறு அதை ஆள்வது அத்துணைப் பொருத்தமாகத் தோன்றவில்லை. மேலும், அடுத்த குறள் இளிவந்த சொல்லைப்பற்றிக் கூறுதலால், அதன்கண் கூறியது கூறல் என்னுங் குற்றமுந் தங்கும். ஆகவே, ஆசிரியர் குறித்த பொருள் தெளிவாகவுந் திட்பமாகவுந் தெரியாதபோது, புகழ் என்னும் பொருள் கொள்வதே பொருத்தமாம். மணக்குடவ பரிப்பெருமாளர் வடிவழகு என்னும் பொருள் கொண்டனர். பரிதியார் உடம்பு என்று கொண்டார். காலிங்கர் வலி என்றார். "குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்" என்னும் மணிமேகலைத் தொடர் (11 : 76). குடிப்பண்பும் புகழும் என்று இடந்தரும்.

### *1044. இற்பிறந்தார் கண்ணேயு மின்மை யிளிவந்த சொற்பிறக்குஞ் சோர்வு தரும்.*

**(இ-ரை.)** இன்மை - வறுமை; இற்பிறந்தார் கண்ணேயும் - தொன்று தொட்டுப் பண்பட்டு வந்த நற்குடியிற் பிறந்தவர் வாயும்; இளிவந்த சொல் பிறக்கும் சோர்வு தரும் - இழிவுதரும் சொல்லைத் தோற்றுவித்தற் கேதுவான தளர்ச்சியை உண்டுபண்ணும்.

உயர்வுசிறப்பும்மை இளிவந்த சொல் பெரும்பாலும் பிறவாமை தோன்ற நின்றது. இளிவந்த சொல் ஒருவரிடம் சென்று ஈயென இரத்தல். "ஈயென் கிளவி இழிந்தோன் கூற்றே" (தொல். 928), "ஈயென இரத்தல் இழிந்தன்று" (புறம். 204). சோர்வு துன்பமிகுதிபற்றித் தம் பிறப்பை மறந்து இளிவந்த சொல் சொல்ல நினைக்கும் மனத்தளர்ச்சி.

## *1045. நல்குர வென்னு மிடும்பையுட் பல்குரைத்*
## *துன்பங்கள் சென்று படும்.*

**(இ-ரை.)** நல்குரவு என்னும் இடும்பையுள் - வறுமையென்று சொல் லப்படும் ஒரு துன்பத்துள்ளே; பல் குரைத் துன்பங்கள் சென்று படும் - பல பெருந்துன்பங்கள் வந்து சேரும்.

பொருளில்லார்க் கிவ்வுலக மில்லையாதலால் வறுமையே துன்ப நிலைமையாம். நுகர்ச்சிப்பொருள்க ளின்மையாகிய துன்பத்தினால், பெற்ற தாயும் விரும்பாமை, மனைவியின் சுடுசொல், மக்கள் உணவின்றிப் படுந் துன்பம், வெயிற்கும் மழைக்கும் பாதுகாப்பின்மை, உறவும் நட்புமின்மை, கற்ற கல்வி பயன்படாமை, ஈயென இரத்தல், இரந்தும் பெறாமை, பெற்றும் போதாமை, ஈவாரைத் தேடியலைதல், கவலை கரைகடத்தல் முதலிய பல்வேறு பெருந்துன்பங்கள் விளைவதால், 'பல்குரைத் துன்பங்கள் சென்று படும்' என்றார். சென்று படுதல் தாமே வந்து சேர்தல். குரை - பெருமை.

**"ஏயுங் குரையும் இசைநிறை அசைநிலை**
**ஆயிரண் டாகும் இயற்கைத் தென்ப"** **(சொல். இடை. 24)**

என்று தொல்காப்பியங் கூறுவதால் பரிமேலழகர் "குரை இசைநிறை" என்றார்.

## *1046. நற்பொரு ணன்குணர்ந்து சொல்லினு நல்கூர்ந்தார்*
## *சொற்பொருள் சோர்வு படும்.*

**(இ-ரை.)** நல்பொருள் நன்கு உணர்ந்து சொல்லினும் - சிறந்த நூற் பொருளைத் தெளிவாக அறிந்து விளக்கமாகவும் இனிதாகவும் எடுத்துச் சொன்னாராயினும்; நல்கூர்ந்தார் சொற்பொருள் சோர்வுபடும் - வறியவர் சொல்லுஞ் சொல் தன் பொருட்சிறப்பை இழந்துவிடும்.

பொருட்சிறப் பிழத்தல், கேட்பாரின் இகழ்ச்சியினாலும் பொருளுதவி வேண்டுவாரென்னும் அச்சத்தினாலுமாம்.

"நொ–தாந் திரணத்தின் நொ–தாகும் வெண்பஞ்சின்
நொ–தாம் இரப்போன் நுவலுங்கால் – நொ–யசிறு
பஞ்சுதனின் நொ–யானைப் பற்றாதோ காற்றெனின்
அஞ்சும்அவன் கேட்ப தறிந்து"

என்னும் நீதிவெண்பாச் செ–யுள் இங்கு நினைக்கத்தக்து. உம்மை உயர்வு சிறப்பு.

### 1047. *அறஞ்சாரா நல்குர வீன்றதா யானும்*
### *பிறன்போல நோக்கப் படும்.*

**(இ–ரை.)** அறம் சாரா நல்குரவு - அறத்தோடு பொருந்தாத வறுமையை யுடையவன்; ஈன்ற தாயானும் பிறன்போல நோக்கப்படும் - தன்னைப் பெற்று வளர்த்த தாயாலும் அயலான்போலப் புறக்கணிக்கப்படுவான்.

அறஞ்சாராமை யாவது, முற்பிறப்பில் அறஞ்செ–யாமையால் கரணி யத் தொடர்பும், இப் பிறப்பில் அறஞ்செ–ய முடியாமையால் கருமியத் தொடர்பும் இன்மை. 'நல்குரவு' ஆகுபொருளது. உயர்வுசிறப்பும்மை பெற்ற தாயின் இயற்கையான அன்புச் சிறப்பைக் காட்டி நின்றது. கொள்வதொன்று மின்மையோடு கொடுக்கவும் நேர்தல்பற்றி, வறியவனை உறவினரெல்லாரும் துறப்பர் என்பதாம்.

### 1048. *இன்றும் வருவது கொல்லோ நெருநலுங்*
### *கொன்றது போலு நிரப்பு.*

**(இ–ரை.)** நெருநலும் கொன்றதுபோலும் நிரப்பு - நேற்றும் வந்து என்னைக் கொன்றதுபோலும் துன்புறுத்திய வறுமை; இன்றும் வருவது கொல் - இன்றும் வருமோ? வந்தால் ஐயோ! நான் என்செ–வேன்!

இது முந்தின நாள் அரும்பாடுபட்டுத் தன் வயிற்றை நிரப்பிய ஓர் இரப்போனின் இரங்கற் கூற்று. உம்மைகள் முறையே இறந்ததும் எதிரதும் தழுவிய எச்சம். 'கொல்' ஐயம். 'ஓ' இரங்க லிடைச்சொல். 'நிரப்பு' மங்கல வழக்கு.

### 1049. *நெருப்பினுட் டுஞ்சலு மாகு நிரப்பினுள்*
### *யாதொன்றுங் கண்பா டரிது.*

**(இ–ரை.)** நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் - ஒருவன் மந்திர மருந்து களால் நெருப்பினுள் கிடந்து உறங்குதலும் கூடும்; நிரப்பினுள்

யாது ஒன்றும் கண்பாடு அரிது - ஆயின், வறுமையிலிருந்துகொண்டு எவ்வகையிலுங் கண்மூடித் தூங்கவே முடியாது.

நெருப்பினும் வறுமை கொடிது என்றவாறு. இதுவும் அவன் துயரக் கூற்று. உம்மை யிரண்டனுள் முன்னது அருமை; பின்னது முற்று. இனி, 'யாதொன்றும்' என்பது ஒருசிறிதும் எனினுமாம் இவ் வும்மை இழிவுசிறப்பு. இத் தொண் (ஒன்பது) குறளாலும் வறுமையின் கொடுமை கூறப்பட்டது. 'நிரப்பு' மேற்கூறியதே.

***1050. துப்புர வில்லார் துவரத் துறவாமை***
***யுப்பிற்குங் காடிக்குங் கூற்று.***

**(இ-ரை.)** துப்புரவு இல்லார் துவரத் துறவாமை - நுகர்ச்சிப் பொருள்க ளில்லாதார் உலகப் பற்றை முற்றத் துறக்கும் நிலைமையிருந்தும் அங்ஙனஞ் செ-யாதிருத்தல்; உப்பிற்கும் காடிக்கும் கூற்று - பிறர் மனைகளிலுள்ள உப்பையும் புளித்த பழங்கஞ்சியையும் உண்டொழித்தற்கேயாம்.

நுகர்ச்சிப் பொருள் ஒன்றுமில்லாதவர் மானமுள்ளவராயின் செ-யத் தக்கது உலகப்பற்றை முற்றத் துறத்தலே. ஏற்கெனவே உலகப் பொருளும் உறவினரும் இல்லாமையால், அவர் துறத்தற்கு எஞ்சி நிற்பது உடம் பொன்றே. ஆதலால், புறப்பற்றுத் தானாக நீங்கிய அவருக்கு அகப்பற்றை நீக்கும் துறவுநெறிச் செலவு எளிதாக இயலும். அதனால், இம்மையில் மானத்தைக் காத்தலொடு மறுமையிற் பெறற்கரிய வீடுபேறும் உண்டாம். அங்ஙனமிருந்தும், அதைச் செ-யாது பிறர் வீடுதொறும் சென்றிரந்து, வாயிற்கு வெளியே அவரிடும் பழங்கஞ்சியை நா-போ லருந்தித் திரிவது, எத்துணை மடமையும் மானக்கேடுமான செயலாம் என்று ஆசிரியர் இரங்கிக் கூறியவாறு. கூற்றுவன் உயிர்கவர்தலை உயிருண்ணல் (குறள். 326) என்னும் வழக்குண்மையின், பழங்கஞ்சி யுண்ணும் இரப்போரை அதற்குக் கூற்று என்றார். "முற்றத் துறவாமையாவது துப்புரவில்லாமையின் ஒருவாற்றாற் றுறந்தாராயினார் பின்னவற்றை மனத்தாற் றுறவாமை" என்றுரைப்பது பொருந்தாது, துறவென்பது மனத்தால் துறத்தலேயாதலின்.

## அதி. 106 - இரவு

*அதாவது, உழைக்க இயலாதவரும் களைகண் இல்லாதவருமான குருடர், கூனர், சப்பாணியர், நொண்டியர், முடவர், நோயாளியர், முதியர் முதலியோர் இரந்துண்டல். இது முன்னோர் தேட்டும் உறவினருதவியும் இல்லாத வறுமையால் நேர்தலின், நல்குரவின் பின் வைக்கப்பட்டது.*

*எச்சப் பிறவியரும் இறைவனாற் படைக்கப்பட்டுக் குடிகளாயிருத்த லாலும், அவரையும் நோயாளியரையும் முதியோரையும் கொல்லுதல் கொலை யாதலாலும், அவருக்கு வாழ்க்கைவழி இரத்தலேயென்று அறநூலார் நெறி வகுத்துள்ளனர். இது மானந்தீரா இரவு. இது இக்காலத்தில் பின்தங்கிய நாடுகள் முன்னேறிய நாடுகளிடம் உதவிபெறுவது போல்வது.*

### *1051.* இரக்க விரத்தக்கார்க் காணிற் கரப்பி *னவர்பழி தம்பழி யன்று.*

**(இ-ரை.)** இரத்தக்கார்க் காணின் இரக்க - இரப்போர் இரக்கத்தக்க ஈகையாளரைக் காணின் அவரிடம் இரக்க; கரப்பின் அவர் பழி தம் பழி அன்று - அவர் இல்லையென்று கரந்தாராயின், அது அவர் குற்றமேயன்றி இரந்தவர் குற்றமன்று.

பழி என்பது இழிபு என்றுமாம். இரத்தலே இழிந்ததும் துன்பந்தருவது மாயிருத்தலின், அதன் மேலும் இழிவும் மனவருத்தமும் நேராமைப் பொருட்டு, 'இரக்க இரக்கத்தக்கார்க் காணின்' என்றார். இரக்கத்தக்கார் முன்பே குறிப்பறிந்து அன்போடு ஈயும் இயல்புடையார். அவர் ஒருசிலரே யாதலின் 'காணின்' என்றும், அவரிடத்தில் இரத்தல் துன்பந்தராமையின் 'இரக்க' என்றும், அவர் கரத்தல் அருமையாதலின் 'கரப்பின்' என்றும், அவர் கரத்தல் அவருக்கே பேரிழிவைத் தருதலின் 'அவர் பழி' என்றும், உழைக்கும் நிலைமையில்லார் இரந்தே பிழைக்க வேண்டியிருத்தலின் 'தம்பழியன்று' என்றும் கூறினார்.

> "ஈயென விரத்த விழிந்தன் றதனெதிர்
> ஈயே னென்றல் அதனினும் இழிந்தன்று." (புறம். 204)

'இர' முதனிலைத் தொழிற்பெயர்.

'இரத்தக்கார்' நாலாம் வேற்றுமைத் தொகை.

### *1052.* இன்ப மொருவற் கிரத்த லிரந்தவை *துன்ப முறாஅ வரின்.*

**(இ-ரை.)** இரந்தவை துன்பம் உறாவரின் - இரந்த பொருள்கள் ஈவாரது பண்பாட்டினால் வா- திறக்குமுன்பே விரைந்து மகிழ்ச்சியொடு கிடைக்கு மாயின்; ஒருவற்கு இரத்தல் இன்பம் - ஒருவனுக்கு இரத்தலும் இன்பந் தருவதாம்.

துன்பம் காலமறிந்து செல்லுதல், காத்திருத்தல், ஈவார் மனநெகிழக் கெஞ்சுதல், அவர் முகந்திரிந்து நோக்குதலும் கடுஞ்சொற் சொல்லுதலும் மறுத்தலும் முதலியவற்றால் வருவது. 'இன்பம்' ஆகுபொருளது. 'உறா' ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம். 'உறாஅ' இசைநிறை யளபெடை. "இரந்தவர் துன்பமுறா வரி"னென்று பாடமோதி, இரக்கப்பட்டவர் பொரு ளின்மை முதலியவற்றாற் றுன்புறாது எதிர்வந் தீவராயி னென்றுரைப்பாரு முளர்" என்று பரிமேலழகர் கூறுவர். இதற்கு,

"என்று முகம னியம்பா தவர்கண்ணுஞ்
சென்று பொருள்கொடுப்பர் தீதற்றோர்"

என்னும் நன்னெறியடிகள் மேற்கோளாம். இரத்தலும் என்னும் இழிவு சிறப்பும்மை தொக்கது.

## *1053. கரப்பிலா நெஞ்சிற் கடனறிவார் முன்னின்*
## *றிரப்புமோ ரேஎ ருடைத்து.*

**(இ-ரை.)** கரப்பு இலா நெஞ்சின் கடன் அறிவார் முன்நின்று இரப்பும் - கரத்தலில்லா நெஞ்சினையுடைய கடமையறிவார் முன்நின்று அவரிடத்து இரத்தலும்; ஓர் ஏர் உடைத்து - இரப்போர்க்கு ஓர் அழகுடையதாம்.

கடனறிவார் இடனில் பருவத்தும் ஒப்புரவிற் கொல்காத கடமை யுணர்ச்சியாளர். உம்மை இழிவுசிறப்பு. 'ஏஎர்' இசைநிறை யளபெடை. சுருங்கிய கண்ணும் மழுங்கிய முகமும் ஒடுங்கிய வுடலும் வளைந்த முதுகும் தளர்ந்த நிலையும் இளிவந்த சொல்லுமின்றி, மிளிர்ந்த கண்ணும் மலர்ந்த முகமுங் கொண்டு ஏக்கமுழுத்தமா- எக்களித்து நிற்கும் நிலையை 'ஏர்' என்றார்.

## *1054. இரத்தலு மீதலே போலுங் கரத்தல்*
## *கனவிலுந் தேற்றாதார் மாட்டு.*

**(இ-ரை.)** கனவிலும் கரத்தல் தேற்றாதார் மாட்டு - தம்மிடத்துள்ள பொருளைக் கனவிலுங் கரத்த லறியாதவரிடத்து; இரத்தலும் ஈதலே போலும் - ஒன்றை யிரத்தலும் வறியார்க்கொன் றீதலே போலும்!

இரந்த பொருள் இழிவுந் துன்பமுமின்றி வருதலாலும், ஈவோனுக்குப் புகழைக் கொடுத்தலாலும், 'இரத்தலும் ஈதலே போலும்' என்றார். உம்மை யிரண்டனுள் முன்னது இழிவுசிறப்பு; பின்னது எச்சம். ஏகாரம் ஈற்றசை.

### *1055. கரப்பிலார் வையகத் துண்மையாற் கண்ணின்*
### *றிரப்பவர் மேற்கொள் வது.*

**(இ-ரை.)** கண்நின்று இரப்பவர் மேற்கொள்வது - வா- திறந்து இளிவந்த சொல்லைச் சொல்லமாட்டாது ஒருவருக்கு முன்நிற்கும் நிலையினாலேயே இரக்கும் மானியர், தம் உயிரோம்பும் பொருட்டு இரத்தலை மேற்கொள்வது; கரப்பு இலார் வையகத்து உண்மையான் - தம்மிடத்துள்ள பொருளைக் கரவாது ஈயும் ஒருசிலர் உலகத்து இருப்பதனாலேயே.

அத்தகையார் இல்லையெனின், தன்மானமுள்ள இரப்போரும் இறப்பர் என்பதாம்.

### *1056. கரப்பிடும்பை யில்லாரைக் காணி னிரப்பிடும்பை*
### *யெல்லா மொருங்கு கெடும்.*

**(இ-ரை.)** கரப்பு இடும்பை இல்லாரைக் காணின் - தம்மிடத்துள்ளதைக் கரத்தலாகிய நோயில்லாதவரைக் கண்டால்; நிரப்பு இடும்பை எல்லாம் ஒருங்கு கெடும் - தன்மானத்தை விடாது இரப்போருக்கு வறுமையால் வருந் துன்பமெல்லாம் ஒருசேரத் தொலையும்.

கரத்தல் மறுமை யின்பத்திற் கேதுவான மனநலத்தைக் கெடுத்தலால், அதை நோ- என்றார். நோ- இடும்பை வகைகளுள் ஒன்றாதலின், இடும்பை இங்கு நோ- எனப்பட்டது. கரவாதவரைக் கண்டமட்டில் மகிழ்ச்சி பொங்கு தலால் 'எல்லாம் ஒருங்கு கெடும்' என்றார். காலிங்கர் 'முழுதுங் கெடும்' என்னும் பாடங் கொள்வர்.

### *1057. இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந்துள்ள*
### *முள்ளு ளுவப்ப துடைத்து.*

**(இ-ரை.)** இகழ்ந்து எள்ளாது ஈவாரைக் காணின் - தம்மை யவமதித்துப் பேசாதும் இழிவாகக் கருதாதும் விரும்பிய பொருளைக் கொடுப்பாரைக் கண்டால்; உள்ளம் மகிழ்ந்து உள்ளுள் உவப்பது உடைத்து - தன்மானமுள்ள இரப்போரின் உள்ளம் மகிழ்ச்சியாற் பொங்கி மேன்மேலும் உள்ளூற இன்புறுந் தன்மையதாம்.

எள்ளுதல் உள்ளத்தின் தொழில்; கருத்தளவா- நிற்பது; இகழ்தல் வாயின் தொழில்; சொல்வடிவில் வெளிப்படுவது. புகழ்தலுக்கு எதிர் இகழ்

தல். 'இகழ்ந் தெள்ளாது' எனவே நன்கு மதித்தலும் இன்சொற் சொல்லுதலும் பெறப்படும். கரவாமையோடு இகழாமையும் சேரவே, மானமுள்ள இரப் போர்க்குப் பெருமகிழ்ச்சி விளைக்கும் என்பதாம். இவ் வாறு குறளாலும் இரக்கத்தக்காரது இயல்பு கூறப்பட்டது.

## *1058. இரப்பாரை யில்லாயி னீர்ங்கண்மா ஞால மரப்பாவை சென்றுவந் தற்று.*

**(இ-ரை.)** இரப்பார் இல் ஆயின் - வறுமையுற்றுங் களைகண் இன்றியும் இரப்பவர் இல்லாவிடின்; ஈர்ங்கண் மாஞாலம் - குளிர்ந்த இடத்தையுடைய பெரிய மாநிலத்துள்ளார் செலவு வரவுகள்; மரப்பாவை சென்று வந்த அற்று - மரத்தினாற் செ-யப்பட்ட உயிரில்லாத பாவை தன்னை இயக்கும் பொறிக்கயிற்றாற் சென்று வந்தாற் போலும்.

"ஈத லிசைபட வாழ்த லதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு." **(குறள். 231)**

"வசையொழிய வாழ்வாரே வாழ்வா ரிசையொழிய
வாழ்வாரே வாழா தவர்" **(குறள். 240)**

என்றமையால், ஈந்து புகழும் அறப்பயனும் பெறாதார் உயிருடையரல்லர் என்பதாம்.

"ஈவாருங் கொள்வாரு மில்லாத வானத்து
வாழ்வாரே வன்க ணவர்"

என்பதால், 'ஈர்ங்கண்' என்னும் சிறப்படை, ஈரமுள்ள நெஞ்சத்தையுங் குறிப் பாக வுணர்த்தி ஞாலத்தின் சிறப்பைக் காட்டும். 'ஞாலம்' வரையறுத்த ஆகு பெயர். உவமத்தோடொத்த தொழில் பொருட்கு வருவிக்கப்பட்டது. ஐகாரம் அசைநிலை. இரப்பவர் என்னும் பாடம் தொடைநயம் நிரம்பியதன்று. காலிங்கர் இன்கண்மா ஞாலம் என்று பாடமோதி, இனிது இடம் உடைத்தாகிய பெரிய உலகம் என்று பொருளுரைப்பர்.

## *1059. ஈவார்க ணென்னுண்டாந் தோற்ற மிரந்துகோண் மேவா ரிலாஅக் கடை.*

**(இ-ரை.)** இரந்துகோள் மேவார் இலாக்கடை - ஒருவரிடம் சென்று ஒரு பொருளை யிரந்து பெறுதலை விரும்புவார் இல்லாவிடத்து; ஈவார்கண் என்

தோற்றம் உண்டாம் - அப் பொருளைக் கொடுப்பார்க்கு என்ன புகழுண் டாம்? ஒன்றுமில்லையே!

கொள்வாரின்றிக் கொடுப்பாரில்லை. இரப்பாரின்றி ஈவாரில்லை. ஈகையின்றிப் புகழில்லை. ஆதலால், ஈவாரின் புகழுக்கு இரப்பாரே கரணியம் என்பதாம். 'தோற்றம்' ஆகுபொருளது, 'மேதல்' வினை உலக வழக்கில் மேவுதல் என வழங்கும். 'இலாஅ' இசைநிறை யளபெடை. இவ் விரு குறளாலும் மக்கட் பண்பு வெளிப்பாட்டிற்கு இரப்பாரின் இன்றியமையாமை கூறப்பட்டது.

## *1060.* இரப்பான் வெகுளாமை வேண்டு நிரப்பிடும்பை தானேயுஞ் சாலுங் கரி.

**(இ-ரை.)** இரப்பான் வெகுளாமை வேண்டும் - இரக்கப்பட்டவன் இரந்த பொருளை ஈயாதவிடத்து இரந்தவன் சினங்கொள்ளாதிருத்தல் வேண்டும்; நிரப்பிடும்பை தானேயும் சாலும் கரி - முற்பிறப்பில் தானும் தன்னை இரந் தார்க்கு ஈயவில்லை என்பதற்குத் தன் வறுமைத் துன்பமே போதிய சான்றாம்.

தான் அளந்த அளவே தனக்கும்; ஆதலாற் சினத்திற் கிடமில்லை யென்பது கருத்து. ஈயாத கஞ்சர் செல்வத்தைக் கள்வர் கவர்வதால் அவர் வறுமையடைவதும், அறநூற் கூற்றும், பிற சான்றுகளாம்.

"ஏதிலார் குற்றம்போற் தங்குற்றங் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னு முயிர்க்கு" (குறள். 190)

என்பதாம். ஏகாரம் பிரிநிலை; உம்மை எச்சவும்மை. கரி = சான்று(evidence), சான்றாளன்(witness).

### அதி. 107 - இரவச்சம்

*அதாவது, உழைக்கக் கூடியவர் மானந்தீர வரும் இரப்பிற்கு அஞ்சுதல் வேண்டியதாதல். அதிகார முறைமையும் இதனால் விளங்கும்.*

## *1061.* கரவா துவந்தீயுங் கண்ணன்னார் கண்ணு மிரவாமை கோடி யுறும்.

**(இ-ரை.)** கரவாது உவந்து ஈயும் கண் அன்னார் கண்ணும் இரவாமை - தம்மிடமுள்ளதை ஒளிக்காது, அரும்பெற லுறவினர் வந்தாரே யென்று அகமகிழ்ந்து கொடுக்குங் கண்போலச் சிறந்தாரிடத்தும் இரவாது வறுமை

கூர்ந்திறத்தல்; கோடி உறும் - அவரிடம் இரந்து நுகர்ச்சிப் பொருளும் செல்வமும் பெறுவதினும் கோடி மடங்கு நன்றாம்.

மானங் கெட இரந்துண்பதினும், அது கெடாது இயன்றவரை யுழைத்து வறுமையிற் செம்மையா- வாழ்தலும் அது இயலாவிடத்து உயிர் துறத்தலும் மேல் என்பதாம். உம்மை உயர்வுசிறப்பு. 'கோடி' ஆகுபொருளது. இக் குறளால் இரத்தலின் இழிவு கூறப்பட்டது.

## *1062.* **இரந்து முயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து கெடுக வுலகியற்றி யான்.**

**(இ-ரை.)** உலகு இயற்றியான் இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் - இவ் வுலகத்தைப் படைத்த இறைவன் இதில் வாழ்வார்க்கு உழைத்துயிர் வாழ்தலேயன்றி இரந்துயிர் வாழ்தலையும் விரும்பி வகுத்தானாயின்; பரந்து கெடுக - அக் கொடியோனும் அவரைப்போன்றே நிலையில்லாது எங்கும் அலைந்து திரிந்து கெடுவானாக.

அக்காலத்தில் மக்கள்தொகை மிகாது நிலவளமும் நீர்வளமும் மிக்கு எவருக்கும் அவர் விரும்பிய வேலைவா-ப்பு எப்போதும் இருந்ததனால், உழைக்க விருப்பமுள்ள யாரும் வறுமையால் வாடவோ இரந்துண்ணவோ எள்ளளவும் ஏதுவில்லை. ஆயினும், சில மானமில்லாச் சோம்பேறிகள் "இது எம் தலையெழுத்து" என்றும், "அன்றெழுதினவன் அழித்தெழுதான்" என்றும் சொல்லிக்கொண்டு இரப்பு வாழ்க்கையை மேற்கொண்டு, பாராத இடங்களைப் பார்த்தும் கிடையாத வுணவுகளை யுண்டும் அங்குமிங்குந் திரிந்தனர். அவரை நோக்கியே இது ஆசிரியர் கூறியதாகும். ஊணும் உடை யும் ஏராளமா யிருந்ததனால், பெரும்பாலும் "பாழா-ப் போகிறது பசுவின் வாயிலே" என்ற முறையிலேயே அக்காலத்து இரப்போர்க்கு அவ் விரண்டும் அளிக்கப்பட்டன. ஆதலால், பொருளாட்சித் துறைப்படி மாபெருங் கேடாம். அதனாலேயே ஆசிரியர் அதை அச் சோம்பேறிகள் கூற்றை யொப்புக் கொள்வது போல், இறைவன்மேல் வைத்து வன்மையா-க் கண்டித்தார். 'வேண்டின்' என்பது வேண்டாமையைத் தெளிவாகக் காட்டி நின்றது. உம்மை இழிவுசிறப்பு.

மக்கள்தொகையும் வளக்குறைவும் பொருள்முடையும் வேலையில்லாத் திண்டாட்டமும் மிக்க இக்காலத்தும், உடம்பாலும் உள்ளத்தாலும் உழைக்க விரும்பும் ஒருவனுக்குப் பொருள்பெறும் வேலை வா-ப்பில்லையெனின், அது நாட்டையாளும் அரசின் குற்றமேயன்றி இறைவன் ஏற்பாடன்று.

"பகுத்துண்டு பல்லுயி ரோம்புத னூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை" (குறள். 322)

என்று ஆசிரியர் அக்காலத்தே கூறிப் போந்தமை காண்க. இக் குறளால் இரவு இறைவன் ஏற்பாடன்மை கூறப்பட்டது.

## 1063. இன்மை யிடும்பை யிரந்துதீர் வாமென்னும் வன்மையின் வன்பாட்ட தில்.

**(இ-ரை.)** இன்மை இடும்பை இரந்து தீர்வாம் என்னும் வன்மையின் - வறுமைத் துன்பத்தை உழைப்பால் நீக்குவோமென்று கருதாது இரப்பால் நீக்குவோமென்று கருதும் வன்மையைப் போல்; வன்பாட்டது இல் - வன்மைப்பாடுள்ளது வேறொன்றுமில்லை.

முதலாவது பிறரிடம் ஒன்று ஏற்பதே இகழ்ச்சி; அதையும் இரந்து பெறுதலோ மிக இழிந்தது. மதிப்பாக வுழைத்து மானத்தோடு வாழ இறைவன் கைகால் முதலிய உறுப்புகளைத் தந்திருக்கவும். அவற்றைப் பயன்படுத்தாது இரத்தலை மேற்கொண்டு ஒரே இல்லத்திற் பெறாது தெருத்தெருவாகவும் வீடுவீடாகவும் சென்று, சிறிது சிறிதாகவும் ஒன்றோடொன் றொவ்வாது பல்வேறு வகைப்பட்டனவாகவும், புதியனவும் பழையனவும் சுவை யுள்ளனவும் இல்லனவுமாகவும், சில மனைகளில் மறுக்கப்பட்டும் சில மனை களில் வெறுக்கப்பட்டும், தொல்லைப்பட்டு மானங்கெட்டுத் தொகுத்த மிச்சிலும் எச்சிலுமான வுணவையுண்டு உடம்பு தாங்கி, நா-போல் திரிய மனங்கொள்வது ஆறறிவு படைத்த மாந்தப் பிறப்பிற்கு எவ்வகையிலும் ஏற்காத மாபெரு வன்செயலாதலின், 'வன்மையின் வன்பாட்ட தில்' என்றார். இதனால் வறுமை நீக்கும் வழி இரவன்றென்பது கூறப்பட்டது.

## 1064. இடமெல்லாங் கொள்ளாத் தகைத்தே யிடமில்லாக் காலு மிரவொல்லாச் சால்பு.

**(இ-ரை.)** இடம் இல்லாக்காலும் இரவு ஒல்லாச் சால்பு - ஒருசிறிதும் பொருளில்லாக் காலத்தும் பிறரிடம் சென்று இரத்தலை யுடம்படாத குண நிறைவு; இடம் எல்லாம் கொள்ளாத் தகைத்தே - உலகங்களெல்லாம் அவற்றில் இட்டுவைக்கும் இடமெல்லாங் கொள்ளாத பெருமையை யுடையதாம்.

மானமும் பெருமையும் நாணும் சால்பின் உறுப்புகளாதலின், அவை இரவை அறவே தடுக்குமென்பதாம். இடம் உலகில் வாழ இடந்தருஞ் செல்

வம். இடம் - இடன், கடைப்போலி. "இடனில் பருவத்தும்" (குறள். 218) என்றமை காண்க. ஏகாரம் தேற்றம், உம்மை இழிவுசிறப்பு.

### *1065. தெண்ணீ ரடுபுற்கை யாயினுந் தாடந்த துண்ணலி னூங்கினிய தில்.*

**(இ-ரை.)** தெள்நீர் அடு புற்கை யாயினும் - தெளிந்த நீர்போல் தெடு தெடுவென்றிருக்குமாறு சமைத்த கூழாயினும்; தாள் தந்தது உண்ணலின் ஊங்கு இனியது இல் - தன் உழைப்பினால் வந்த வுணவை உண்ணுவதிலும் மிக இனியது ஒன்றுமில்லை.

நொந்து சுமந்து பெற்ற பிள்ளை காக்கைக் குஞ்சுபோற் கருத்திருப் பினும், தா-க்குத் தன்பிள்ளை நன்பிள்ளை யாதல்போல, உழைப்பாளிக்குத் தான் வருந்தியுழைத்த வுழைப்பால் வந்த வுணவு, கேழ்வரகு மாவினாற் கா-ச்சிய தெண்கூழாயினும் தேவரமுதாம். உம்மை இழிவுசிறப்பு.

### *1066. ஆவிற்கு நீரென் றிரப்பினு நாவிற் கிரவி னிளிவந்த தில்.*

**(இ-ரை.)** ஆவிற்கு நீர் என்று இரப்பினும் - வேட்கை தணிக்கத் தண் ணீரின்றி இறக்கும் நிலைமையிலுள்ள ஓர் ஆவினுக்காக, ஒருவன் தண்ணீர் தருகவென்று அறம் நோக்கி யிரந்து கேட்கும் போதும்; நாவிற்கு இரவின் இளிவந்தது இல் - அவன் நாவிற்கு அவ் விரவைப் போல இழிவு தருவது வேறொன்றுமில்லை.

உணவை விளைக்கும் உழவுத்தொழிற்கு இன்றியமையாத துணை யாகிய காளையும், தா-ப்பாலில்லாத குழந்தையின் உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாத பாலுதவும் ஆவும், தொன்றுதொட்டுத் தமிழரால் மக்களைப் போற் பேணப்பட்டு வந்துள்ளன. இதற்கு, சாத்தன் சாத்தி, கொற்றன் கொற்றி, மருதன் மருதி என்னும் மக்கள் பெயர் அவற்றிற்கு இடப்பட்டு வந்ததே போதிய சான்றாம். வெட்சித் துறையான ஆதந்தோம்பலும் (தொல். 1003) இதற்குச் சான்று பகரும். பொதுவாகப் பெண்பால் மென்பாலாதலாலும், அஃறிணையுள் ஆவானது அமைதிக்குச் சிறந்தமையாலும் பிறவினத்தினுந் தூ-மையா யிருப்பதனாலும், ஆவைக் காப்பது பேரறம் என்னும் கொள்கை யெழுந்தது. ஆயினும், அதன்பொருட்டும் இரப்பது இழிவென்பது தோன்ற 'ஆவிற்கு' என்றும். இரக்கும் பொருள் விலைகொடுத்துப் பெற வேண்டாத எளிமைய தாகலின் 'நீர்' என்றும், இரக்குஞ் செயல் அதனைச் செ-யும் உறுப்பிற்கும் இழிவென்பதுபட 'நாவிற்கு'

என்றும், இழிவுகட்குள் தலைமையான தாதலின் 'இளிவந்த தில்' என்றும் கூறினார். இதனால் அறத்தின்பொருட்டும் இரத்தல் இழிவென்பது கூறப்பட்டது. இக் கொள்கை இன்று முற்றுந் தளர்ந்துள்ளது.

## *1067. இரப்ப னிரப்பாரை யெல்லா மிரப்பிற்*
## *கரப்பா ரிரவன்மி னென்று.*

**(இ-ரை.)** இரப்பின் - இன்றியமையாமைபற்றி இரக்க நேரின்; கரப்பார் இரவன்மின் என்று - தம்மிட முள்ளதை யில்லை யென்று ஒளிப்பாரைமட்டும் இரக்கவே வேண்டாவென்று; இரப்பாரை எல்லாம் இரப்பன் - இவ் வுலகில் இரப்பாரை யெல்லாம் நான் இரந்து வேண்டிக்கொள்கின்றேன்.

இது ஆசிரியர் கூற்று. இதனால் மேற்கூறிய நெறியின் கடுமையைத் தளர்த்தித் தம்மை நடைமுறைக்கேற்ற வழிகாட்டியாகக் காட்டியுள்ளார். 'கரப்பா ரிரவன்மின்' செ-யுள் நடைபற்றிய இரண்டாம் வேற்றுமைத் தொகை. இதில் வந்துள்ளது சொற்பொருட் பின்வருநிலை அணி. இதனால் மானந்தீர வரும் இரவு விலக்கப்பட்டது.

## *1068. இரவென்னு மேமாப்பி றோணி கரவென்னும்*
## *பார்தாக்கப் பக்கு விடும்.*

**(இ-ரை.)** இரவு என்னும் ஏமாப்பு இல் தோணி - வறுமையென்னுங் கடலைக் கடப்பதற்கு ஒருவன் ஏறிய இரப்பு என்னும் பாதுகாப்பில்லாத தோணி; கரவு என்னும் பார் தாக்கப் பக்கு விடும் - வழியிலுள்ள கரத்தல் என்னும் பாறையால் தாக்கப்படும்போது பிளந்துபோம்.

உழைப்பாற் கடக்கவேண்டிய கடலை இரப்பாற் கடக்கத் தொடங்கிய வன், சேதமின்றித் தன் தோணியைச் செலுத்த முடியாமையால், 'ஏமாப்பி றோணி' என்றார். இது வறுமையென்னுங் கடலைப்பற்றிக் கூறாது அக் கடலி லுள்ள தோணியையும் பாறையையுமே கூறியதனால் சினையுருவகம்.

## *1069. இரவுள்ள வுள்ள முருகுங் கரவுள்ள*
## *வுள்ளதூஉ மின்றிக் கெடும்.*

**(இ-ரை.)** இரவு உள்ள உள்ளம் உருகும் - செல்வ முண்மை யின்மை யால் வேறுபட்டிருப்பினும், மாந்தப் பிறப்பினாலும் உடலுறுப் பமைதியி னாலும் முற்றும் ஒத்திருக்கும் இருவருள், ஒருவன் இன்னொருவன் முன் சென்று நின்று.

''பல்லெலாந் தெரியக் காட்டிப் பருவரல் முகத்திற் கூட்டிச்
சொல்லெலாம் சொல்லி நாட்டித் துணைக்கரம் விரித்து நீட்டி
மல்லெலாம் அகல வோட்டி மானமென் பதனை வீட்டி''

இரக்கும் நிலையின் கொடுமையை நினைந்தால் எம் உள்ளமெல்லாம் நீரா-உருகியோடும்; கரவு உள்ள உள்ளதும் இன்றிக் கெடும் - இனி, இரக்கப்பட்டவன் அந் நிலையைக் கண்ணாரக் கண்டும் இல்லையென்று மறுத்தலின் கொடுமையை நினைந்தாலோ, அவ் வுருகுநிலைதானும் இல்லாது முற்றும் இறந்துபோம்.

இது சான்றோரான கண்டார் கூற்று.

''கரவாத திண்ணன்பின் கண்ணன்னார் கண்ணும்
இரவாது வாழ்வதாம் வாழ்க்கை – இரவினை
உள்ளுங்கா லுள்ள முருகுமா லென்கொலோ
கொள்ளுங்காற் கொள்வார் குறிப்பு.'' (நாலடி. 305)

இரவு கொடிது; கரவு அதனினுங் கொடிது என்பதாம். உம்மை எச்சம். 'உள்ளதூஉம்' இன்னிசை யளபெடை.

## 1070. கரப்பவர்க் கியாங்கொளிக்கும் கொல்லோ விரப்பவர்
## சொல்லாடப் போஒ முயிர்.

**(இ-ரை.)** சொல்லாட இரப்பவர் உயிர் போம் - கரப்பவர் இல்லையென்று சொல்லிய அளவிலேயே இரப்பவர்க்கு உயிர் போ-விடும்; கரப்பவர்க்கு யாங்கு ஒளிக்குங்கொல் - இனி, அவ் வில்லை யென்னுஞ் சொல்லையே வா-திறந்து சொன்னவர்க்கு அதனால் உயிர் போகாமலிருப்பதால், அது எப்புரைக்குட் புகுந்து ஒளிந்து நிற்குமோ! அறிகிலம்.

கேட்டாரைக் கொல்லவல்லதாகிய சொல் சொல்வாரைக் கொல்லுதல் எளிதேனும், அங்ஙனஞ் செ-யாதிருத்தல் மருட்சியைத் தருகின்றது என்பதாம். இரப்பார்க்கு உயிர்போதலாவது, இனி என் செ-வேமென் றேங்கிச் செயலறும் மனநிலை.

''புறத்துத்தன் இன்மை நலிய அகத்துத்தன்
நல்ஞானம் நீக்கி நிறீஇ ஒருவனை
ஈயா– எனக்கென் றிரப்பானேல் அந்நிலையே
மாயானோ மாற்றி விடின்.'' (நாலடி. 308)

'கொல்' ஐயம், 'ஓ' இரக்கம். 'போஒம்' இசைநிறை யளபெடை.

"வறுமையுற்றுழி மறையாது இரக்கப்படுவாராய கேளிர்கட்கும் அதனைச் சொல்லாட உயிர்போம். ஆனபின் மறைக்கப்படுவாராய பிறர்க் குச் சொல்லாடியக்காற் போகாதெங்கே யொளித்துநிற்கும்'; இரண்டானும் போமேயன்றோவென இரவஞ்சினா னொருவன் கூற்றாக்கி யுரைப்பாரு முளர்" என்பது பரிமேலழகர் கூற்றால் தெரியவருகின்றது. இம் மூன்று குற ளாலும் இரவின் குற்றமுங் கரவின் குற்றமும் ஒருங்கே கூறப்பட்டன.

## அதி. 108 - கயமை

*அதாவது, குடிகளுள் கடைப்பட்டவரும் ஐம்பெருங் குற்றங்களையும் துணிந்து செ-பவரும் தண்டிக்கும் அரசனுக்கன்றி வேறு யார்க்கும் அஞ் சாதவருமான கீழ்மக்களின் தன்மை, அதனால், இது இறுதியிற் கூறப்பட்டது.*

***1071. மக்களே போல்வர் கயவ ரவரன்ன***
***வொப்பாரி யாங்கண்ட தில்.***

**(இ-ரை.)** கயவர் மக்களே போல்வர் - கீழ்மக்கள் வடிவால் முற்றும் மேன்மக்களை ஒத்திருப்பர்; அவர் அன்ன ஒப்பாரி யாம் கண்டது இல் - அவர் மேன்மக்களை யொத்திருத்தற் போன்ற வொப்பை வேறெந்த ஈரினத் திடையும் யாம் கண்டதில்லை.

மக்கள் என்றது மக்கட் பண்புள்ள மேலோரை, கயவரென்றது அஃதில்லாத கீழோரை. மாந்த இனத்தைச் சேர்ந்த இவ் விரு வகுப்பாரும் இருவேறினம் போன்றே ஆசிரியராற் கொள்ளப்பட்டிருப்பதை வேறிடத்துங் காண்க (குறள். 410, 420). அறிவிலிகளான கல்லா மாந்தரும் கயவரான பொல்லா மாந்தரும் மாக்கள் எனப்படுவர். அறிவும் ஒழுக்கமும் ஒருங் குடையாரே மக்கள் எனப்பெறுவர், மக்களும் மாக்களுமாகிய இரு மாந்த வகுப்பரும் பண்புண்மை யின்மையாலன்றி வடிவால்மட்டும் வேறுபா டறியப் படாமையின் அவரவர் தன்மையறிந்து மக்களென உறவாடுவதும் விலங்கெனப் பயன்படுத்துவதுஞ் செ-க என்பதாம்.

இனி, இக் குறட்கு, கயவர் மக்களை வடிவால் ஒப்பர். ஆனால் கயவரை வடிவாலும் குணத்தாலும் ஒப்பார் பிறரில்லை யென்றும் உரைப்பர்.

அவர் என்றது அவரிடைப்பட்ட ஒப்புமையை. ஏகாரம் தேற்றம். ஒப்பாரி ஒப்பு. 'ஆரி' ஓர் ஈறு. இனி,

" தன்னொழி மெ-ம்முன் யவ்வரின் இகரந்
துன்னு மென்று துணிநரும் உளரே" (நன். 206)

என்று பவணந்தியார் கூறியுள்ளவாறு, ஒப்பார் + யாம் = ஒப்பாரியாம் என்று புணர்ப்பினுமாம்.

## 1072. நன்றறி வாரிற் கயவா திருவுடையர் நெஞ்சத் தவல மிலர்.

**(இ-ரை.)** நன்று அறிவாரின் கயவர் திரு உடையர் - தமக்கும் பிறர்க்கும் நன்மையானவற்றை யறியும் மேன்மக்களினும் அவற்றை யறியாத கீழ்மக்கள் பேறுபெற்றவராவர்; நெஞ்சத்து அவலம் இலர் - எங்ஙன மெனின் அவைபற்றி அவர்போலத் தம் நெஞ்சத்திற் கவலைப்பட்டு வருந்துவதில்லை.

இளமை, உடல்நலம் முதலியவற்றின் நிலையாமையுணர்ந்து இம்மை யில் எ-ப்பில் வைப்பிற்கும், பிறப்பின் இயல்பறிந்து மறுமையில் நற்பிறப்பு விண்ணின்ப வீடுகட்கும் ஏற்ற முயற்சி செ-வது தமக்கும்; மக்களின் வறுமை பசி பிணி பஞ்சம் முதலியவற்றை நீக்கவுந் தடுக்கவும் திட்டங்கள் வகுத்து அவற்றை நிறைவேற்றுவதும், வேற்றரசாலும் வேற்றினத்தாலும் நாட்டு மொழி, கலை, நாகரிகம், பண்பாடு முதலியவற்றிற்குக் கேடும், நாட்டின் முன்னேற்றத்திற்குத் தடையும் நேரும்போது கிளர்ச்சி செ-து அவற்றைத் தடுப்பதும், தம்மொடு பிறர்க்கும் செ-யும் நன்றுகளாம். இவைபற்றிய கவ லையும் முயற்சியும் உழைப்பும் வருத்தமும் இழப்பும் கயவருக்கின்மையால், 'திரு உடையர்' என்றார். இக் குறளணி வஞ்சப்புகழ்ச்சி. 'நன்று' வகுப் பொருமை.

## 1073. தேவ ரனையர் கயவ ரவருந்தா மேவன செ-தொழுக லான்.

**(இ-ரை.)** கயவர் தேவர் அனையர் - கயவர் தேவரை யொத்தவர்; அவரும் தாம் மேவன செ-து ஒழுகலான் - அவரும் தேவரைப் போல முழுவுரிமையுடையவரா-த் தாம் விரும்பியவற்றை யெல்லாம் செ-து முடித்தலால்.

தேவர்க்குங் கயவர்க்குமுள்ள ஒப்புமை வினையியல்பு பற்றாது அதன் முடிப்புப் பற்றியதாம். இதுவும் வஞ்சப்புகழ்ச்சி. உம்மை எச்சம்.

## 1074. அகப்பட்டி யாவாரைக் காணி னவரின் மிகப்பட்டுச் செம்மாக்குங் கீழ்.

**(இ-ரை.)** கீழ் - கீழ்மகன்; அகப்பட்டி ஆவாரைக் காணின் - பட்டித் தன்மையில் தன்னினுங் குறைந்தவரைக் கண்டானாயின்; அவரின் மிகப் பட்டுச் செம்மாக்கும் - அவ் வொழுக்கத்தில் அவரினும் மேம்பட்டுத் தன் மிகுதிகாட்டி யிறுமாந்து நிற்பான்.

அகப்பட்டி தனக்கு உட்பட்ட அல்லது உள்ளடங்கிய பட்டி. பட்டி யென்பது பட்டிமாடு. பட்டிமாடுபோற் கட்டுக் காவலின்றித் திரிபவனைப் பட்டியென்றது உவமவாகுபெயர். "நோதக்க செ-யுஞ் சிறுபட்டி" (கலித். 51). 'கீழ்' பண்பாகுபெயர்.

## *1075. அச்சமே கீழ்கள தாசார மெச்ச*
## *மவாவுண்டே லுண்டாஞ் சிறிது.*

(**இ-ரை.**) கீழ்களது ஆசாரம் அச்சமே - கீழ்மக்களது ஒழுக்கமெல்லாம் தீயொழுக்கங் கண்டுபிடிக்கப்படின் அரசனால் தண்டனை வரும் என்று அஞ்சும் அச்சத்தினால் ஏற்படுவதே; எச்சம் அவா உண்டேல் சிறிது உண் டாம் - அச்சமில்லாத வழியில், தம்மால் விரும்பப்படும் பயன் விளையு மாயின் அதனாற் சிறிது ஒழுக்க முண்டாம்.

கீழ்மக்களின் ஒழுக்கம் பெரும்பாலும் அச்சமும் சிறுபான்மை தன் னலமும் பற்றியன்றி, இயல்பாக ஏற்படாதென்பதாம். ஆசாரத்தின் கரணி யத்தை 'ஆசாரம்' என்றும் அவாப்படுவதை 'அவா' என்றும், சார்த்திக் கூறி னார். 'கீழ்கள்' ஆகுபெயர். 'எச்சம்' இடப்பொரு ளுருபு தொக்கது.

## *1076. அறைபறை யன்னர் கயவர்தாங் கேட்ட*
## *மறைபிறர்க் கு-த்துரைக்க லான்.*

**(இ-ரை.)** தாம் கேட்ட மறை உ-த்துப் பிறர்க்கு உரைக்கலான் - தாம் தம் காதாற் கேட்ட மருமச் செ-திகளைக் கொண்டுசென்று பிறர்க்கெல்லாஞ் சொல்லுதலால்; கயவர் அறை பறை அன்னர் - கீழ்மக்கள் விளம்பரஞ் செ-தற்குக் கொட்டப்படும் பேரிகை யொப்பர்.

வெளிப்படிற் குற்றமாகுமென்று ஒருவன் மறைத்துச் சொன்ன செ-தி மறை. மறைக்கப்பட்டவர் 'பிறர்'. உ-த்தல் பொறையை ஏற்றிக் கடத்துதல். கீழ்மக்கட்கு மருமச் செ-திகளைப் பிறர்க்குச் சொல்லும்வரை அவற்றை உள்ளத்திற் கொண்டிருத்தல் ஒரு பொறை (பாரம்) போலத் தோன்றுதலால், 'உ-த்து' என்றார்.

'பறையன்னர்' என்றாரேனும், பறையறைந்து சொல்லுதலையே குறித்த லால் இது வினையுவமை. இக் குறளால் கயவர்க்கு மறையடக்க மின்மை கூறப்பட்டது.

***1077. ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்குங்***
***கூன்கைய ரல்லா தவர்க்கு.***

**(இ-ரை)** கொடிறு உடைக்கும் கூன்கையர் அல்லாதவர்க்கு - தம் அலகைப் பெயர்த்தற்கு வளைத்த கையினையுடையா ரல்லாதார்க்கு; கயவர் ஈர்ங்கை விதிரார் - கீழ்மக்கள் தாம் உண்ட எச்சிற்கையில் ஒட்டிய இரண்டொரு பருக்கையையும் உதறி வீழ்த்தார்.

கயவர் வலியார்க்கன்றி மெலியார்க்கு இம்மியுங் கொடார் என்பது, இக் குறளால் கூறப்பட்டது.

***1078. சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோற்***
***கொல்லப் பயன்படுங் கீழ்.***

**(இ-ரை.)** சான்றோர் சொல்லப் பயன்படுவர் - மேன்மக்கள் வலியாரும் மெலியாரும் சென்று தமக்கு வேண்டிய தொன்றைக் கேட்டவளவிற் கொடுத்துதவுவர்; கீழ் கரும்புபோல் கொல்லப் பயன்படும் - ஆனால், கீழ் மக்களோ, வலியார் சென்று கரும்பை ஆலையில் வைத்து நெரித்துப் பிழிந் தாற்போல வருத்தி நெருக்கிய போதே ஒன்றை வருந்திக் கொடுப்பர்.

கீழ்மக்களின் இழிவு விளங்கித் தோன்றுமாறு மேன்மக்கள் இயல்பும் உடன் கூறினார். இது வேற்றுமையணி. 'கீழ்' ஆகுபெயர். வலியாரும் வருத்தினாலன்றிக் கயவர் கொடார் என்பது இக் குறளாற் கூறப்பட்டது.

***1079. உடுப்பதூஉ முண்பதூஉங் காணிற் பிறர்மேல்***
***வடுக்காண வற்றாகுங் கீழ்.***

**(இ-ரை.)** உடுப்பதும் உண்பதும் கீழ் காணின் - பிறர் தம் செல்வத்தின் பயனாக ஒவியப்பூம் பட்டாடை யணிதலையும் அறுசுவை நெ-யுண்டி யுண் டலையும் கீழ்மகன் காணுமாயின்; பிறர்மேல் வடுக்காண வற்று ஆகும் - அவற்றைப் பொறாது அவரிடத்துக் குற்றமில்லாதிருக்கவும் ஒரு குற்றத்தைப் படைத்துக் கூறவல்லவனாம்.

'உடுப்பது', 'உண்பது' தொழிற்பெயர்கள். இவற்றைத் தலைமைபற்றிக் கூறியமையால், அணிதல், பூணுதல், பருகுதல், ஊர்தல் முதலிய பிற செல்வ

வினைகளுங் கொள்ளப்படும். கண்டவளவிற் பொறாமை கொள்ளுதலால் ‘காணின்’ என்றும், பொருந்தப் பொ-த்தல் வல்லமை தோன்ற ‘வற்றாகும்’ என்றும் கூறினார். வல்லது - வற்று (வல் + து), ‘உடுப்பதூஉம்’, ‘உண்பதூஉம்’ இன்னிசை யளபெடைகள். ‘கீழ்’ ஆகுபெயர். இக் குறளால் கீழ்மகன் பிறர் செல்வங் கண்டு பொறாமைப்படுதல் கூறப்பட்டது.

***1080. எற்றிற் குரியர் கயவரொன் றுற்றக்கால்***
***விற்றற் குரியர் விரைந்து.***

**(இ-ரை.)** கயவர் எற்றிற்கு உரியர் - கீழ்மக்கள் எத்தொழிற்குத்தான் உரியராவர்? ஒன்று உற்றக்கால் விரைந்து விற்றற்கு உரியர் - ஏதேனுமொரு துன்பம் நேர்ந்தவிடத்து அதைச் சாக்கிட்டுத் தம்மை விரைந்து பிறருக்கு விற்றற்கே யுரியர்.

‘ஒன்று’ என்றது, பணந் தேவையான ஏதேனுமோர் அமையம் அல்லது பதவியைக் காத்துக்கொள்ளப் பிறர்க்கு அடிமைப்படும் நிலைமை. கொள் பவர் தம் கயமையறிந்து வேண்டாவென்னுமுன் தம்மை விற்றுவிடுதலும், தன்மானமும் உரிமையுணர்ச்சியும் ஒருசிறிதும் இல்லாதவர் என்பதும் தோன்ற, ‘விரைந்து’ என்றார். கீழ்மக்கள் ஒன்றிற்கும் உதவார் என்பது கருத்து. இக் குறளால் அவரின் அடிமை மனப்பான்மை கூறப்பட்டது.

*உறுப்பியல் குடிப்பகுதி முற்றிற்று.*
*பொருட்பால் முற்றிற்று.*

## திருக்குறள்
## அருஞ்சொற் பொருள் அகரவரிசை
**(எண், குறள் எண்ணைக் குறிக்கும்)**

அகடு – வயிறு – **936**
அகத்து – நடுவண் – **727**
அகப்பட்டி – பட்டித்தன்மையில்; மிகக் குறைந்தவர் – **1074**
அகம் – மனம் – **708**
அகலல் – நீங்குதல் – **691**
அடற்றகை – கொல்லும் மறத்திறம் – **768**
அடுத்திருந்து – அண்மையிலிருந்து கொண்டு – **867**
அடுத்து – முட்டுக் கொடுத்து – **1030**
அடையாவாம் – சாராவாம் – **939**
அணியுமாம் – மெச்சி உயர்வு படுத்திக் கூறுவர் – **978**
அணுகாது – மிக நெருங்காவலும் – **691**
அமிழ்தற்று – பாலைப் போன்றது – **720**
அமையாக்கடை – உடன்படாராயின் – **803**
அமைஆர் – பசுமூங்கில் போலும் – **906**
அமைவிலன் – பொருத்தமிலன் – **863**
அருந்தியது – உண்டது – **942**
அருமறை – பெறுதற்கரிய உபதேசப்பொருள்; உயிர்நாடியான மருமச்செய்தி – **847**
அலகு – நெற்கதிர் – **1034**
அலகை – பேய் – **850**
அழிவினவை – கேட்டினைத் தரும் தீநெறிகள் – **767**
அறிகொன்று – அறிவையும் அழித்து – **638**
அறைபோகாதாகி – (பகைவராற்)
கீழறுக்கப்படாத தாய் – **764**
அறைப்படுத்தும் – கீழறுத்துத் திறப்பித்தும் – **747**
அற்றம் – அவமானம், மெலிவு – **980, 1186**
அன்பொரீஇ – அன்புசெய் தலை யொழிந்து – **1006**
ஆக்கிக்கொளல் – உளதாக்கிக் கோடல் – **1026**
ஆயம் – வருவாய் – **933**
ஆர – நிறைய – **837**
ஆரார் – ஆரப்பெறார் – **936**
ஆள்வினை – முயற்சி – **632**
ஆற்றலது – ஆற்றலை யுடையது – **765**
ஆற்றறுக்கும் – களத்திடை வீழ்த்துப்போம் – **814**
ஆற்றறுப்பார் – கைவிடுவார் – **798**
ஆற்றாதார் – ஆற்ற லில்லாதார் – **894**
ஆற்றாதான் – கொடாதான் – **1007**
ஆன்ற – அமைந்த – **681**
இணர் – கொத்து – **650**
இமையார் – அமரர் – **906**
இயல்வது – இனிது நடப்பது – **734**
இரத்தக்கார் – இரத்தற்கேற் புடையார் – **1051**
இலாக்கடை – இல்வழி – **1059**
இல்லாகியார் – முற்காலத்துத்தாமுளராகியே இலராகியொழுகினார் – **635**

இல்லாக்கால் – நல்கூர்ந்த வழி – 1064
இவக்காண் – இங்கேயன்றோ
இவறி – விரும்பி – 1003
இவறியார் – கைவிடாதார் – 935
இழத்தொறூஉம் – இழக்குந் தோறும் –940
இழந்தவன் – ஆடை குலைந்தவன் – 788
இளி – இழிவு – 970
இறந்தமைந்த – தலைசிறந்த – 900
இறல்முறை– இறக்கும் தன்மையான –885
இற்பிறந்தார் – குடிப்பிறந்தார் – 951
இனமுறையர் – எமக்கின்ன முறையினை உடையார் – 998
இனையர் – இத்துணை அன்பினர் – 790
இன்மையா – இல்லாமையாக – 841
இன்துணையா – இனிய துணையாக –875
இன்னம் – இத்தன்மையம் –
ஈகலான் – இவறன்மாலையன் –
ஈர்ங்கண் – குளிர்ந்த இடம் – 1058
ஈர்ங்கை – எச்சிற்கை – 1077
உடம்பாடு – மனப்பொருத்தம் – 890
உடற்றுபவர் – முடியாதாக்கிச் செய்யாதார் – 818
உடன்று – வெகுண்டு – 765
உடுக்கை – ஆடை – 788
உட்கப்படாஅர் – அஞ்சப்படார் – 921
உணக்கின் – காயவிடுவனாயின் – 1037
உண்ணற்க – உண்ணா தொழிக – 922
உலைவிடத்து – தளர்ச்சி வந்தவிடத்து – 762, 883
உல்கு – சுங்கம் – 756
உவரி – கடல் – 763
உழத்தொறூஉம் – வருந்தும்தோறும் – 940
உழந்து – வருந்தமுற்று – 1031
உழப்பிக்கும் – உறுவிக்கும் –
உழையிருந்தான் – அமைச்சன் – 638
உள்வீழ்ந்தக் கண்ணும் – சுருங்கியவிடத்தும் – 955
உள்ளப்படும் – நன்கு மதிக்கப்படும் – 665
உள்ளறிவான் – உள் மருமங்களை அறிவான் – 677
உள்ளற்க – நினையாதொழிக – 798
உள்ளுள் – உள்ளுள்ளே – 1057
உள்ளொற்றி – மறைபொருள்கள்
உய்த்துணரப்பட்டு – 927
உறவரினும் – மிக வருமாயினும் – 669
உறன்முறை – உறவுமுறைத் தன்மை –885
உறாஅ – உறாமல் – 1052
உறாஅதவர் – புறத்தில் அயலார் – 1096
உறுபசி – மிக்க பசி – 734
உறைபதி – உறைவிடம் – 1015
ஊண்மாலையவர் – உண்டலை யியல்பாக வுடையார்
ஊதியம் – பயன்
ஊர – அடர
ஊராண்மை – உதவி செய்தல்
ஊழ்த்தும் – கொத்தாக மலர்ந்திருந்தும் – 650
ஊறுபாடு – துன்பம் விளைதல் –
ஊற்றாம் – பற்றுக்கோடாம்
ஊன்றுநிலை – தாங்குந் திண்மை – 789
எஃகு – படைக்கலம் – 759
எஃகு – கூர்மை – 773
எஞ்சாது –அஞ்சி யொழியாது – 690
எண்ணியாங்கு – எண்ணியவாறு – 666
எதிர்சாய்தல் – ஏற்றுக் கொள்ளாது சாய்ந்து – 885
எற்றா – நீங்காத – 663
எற்றிற்கு – எத்தொழிற்கு – 1080
எற்றென்று – யான் செய்தது
எத்தன்மைத்தென்று – 655
எனைமாட்சித்தாகியக்கண்ணும் – எத்துணை மாட்சிமைப்பட்டாதாயிருப்பினும் – 750
ஏதின்மை – பகைமை – 816
ஏந்திய – உயர்ந்த – 899
ஏமம் – பாதுகாப்பு – 738
ஏமாத்தல் – பாதுகாப்புச் செய்தல் – 660
ஏமுற்றவர் – பித்தம் பிடித்தவர் – 873

ஏர் – அழகு – 1053
ஒட்டார் – பகைவர் – 826
ஒண்மை – நல்லறிவு – 844
ஒப்பாரி – ஒப்பு – 1071
ஒருவுக – விடுக – 800
ஒருவுதல் – ஒழிதல் – 652
ஒரூஉம் – ஒழியும் – 812
ஒல்காமை – தளராமை – 662
ஒல்லாக்கால் – இயலா இடத்து – 673
ஒல்லும் வாய் – இயலுமிடத்து – 673
ஒளியார் – அறிவால் ஒள்ளியார் – 716
ஒள்ளியராதல் – தந்நூலறிவும் சொல்வன்மையும் தோன்ற விரித்தல் – 714
ஒறுக்கிற்பவர் – எள்ளுதற்குரியார் – 779
ஒற்கம் – தளர்ச்சி –
ஒன்றல் – கூடுதல்
ஒன்றா – இணையின்றாக
ஒன்றாமை – பகைமை – 886
ஓட்டன்றோ – புறங்கொடுத்தலாம் – 653
ஓஒதல் – தவிர்தல், ஒதுக்கிவிடல் – 652
ஓரார் – கேளாது – 665
கடுத்தபின் – ஐயுற்றால் – 694
கடுத்தது – மிக்கது – 704
கடைப்பிடித்து – குறிக்கொண்டு – 944
கடைமுறை – முடிவில் – 792
கட்டபின் – களைகட்டால் – 1038
கணத்தார் – இனத்தர் – 720
கண் சாய்பவர் – தம்மறிவு தளர்வார் – 927
கண்ணற – கண்ணோட்ட மற –
கண்பாடு – உறக்கம் – 1049
கரப்பிடும்பை – உள்ளது கரத்தலாகிய நோய் – 1056
கரப்பிலார் – உள்ளது கரவாது கொடுப்பார் – 1055
கவறு – சூது – 920
கவுள் – கபோலம் – 678
கழகம் – களம் – 935
கழாஅக்கால் – தூயவல்ல மிதித்த காலை – 840
களையுநர் – களைவார் – 879
கள்ளொற்றி – கள்ளை மறைந்துண்டு – 927
கற்றக் கடைத்தும் – கற்ற இடத்தும் – 823
காண்கம் – காணக்கட வேம் –
காதற்று – காதலை யுடைத்து – 940
காய்தி – காயாநின்றாய்
காழ்த்த விடத்து – முதிர்ந்த நிலைமைக்கண் – 879
கிழமை – உரிமை – 785
கிளவா – சொல்லாத – 715
கீழல்லார் – சிறியராகார் – 973
கீழ்தல் – சிதைத்தல், விலக்கல் – 801
குடங்கர் – குடில் – 890
குணநலம் – குணங்களானாய நலம் – 982
குழாஅத்து – அவையின்கண் – 840
குறுகுதல் – நணுகுதல் – 820
குன்றன்னார் – குன்றத்தை யொக்கும் அருந்தவர் – 898
குன்றுவர் – தாழ்வர் – 964
கூழ்த்தாகி – உணவிற்றாய் – 745
கூன்கையர் – வளைந்த கையினை யுடையார் – 1077
கெடாஅ – உரிமையறாது – 809
கெடுங்காலை – கெடுங்காலத்து – 799
கெழீஇ – செறிந்த – 816
கெழுதகை – உரிமை – 804
கெழுதகைமை – உரிமை – 700
கேண்மையவர் – நட்பினையுடையார் – 807
கேளார் – பகையாய் ஏற்றுக் கொள்ளாதார் – 943
கைதூவேன் – கையொழியேன் – 1021
கையறியா – செய்யு முறைமையறியாத – 836
கைவேல் – கைப்படையாய வேல் – 774
கொடிறு – கதுப்பு – 1077
கொடுப்பதூஉம் – பிறர்க்கீவதும் – 1005
கொட்பு – திரிபு – 783

கொளப்பட்டேம் – நன்கு மதிக்கப்பட்டேம் – 699
கொளற்கரிதாய் – புறத்தாராற்
கோடற்கரிதாய் – 745
கொளீஇ – பண்ணி – 638
கொள்ளற்க – கொள்ளா தொழிக – 798
சலம் – தீய வினை – 660
சாய – கெடும் வண்ணம் – 749
சாய்தல் – ஒழிதல் – 858
சாலப்படும் – பணைத்துவிளையும் – 1037
சிறக்கணித்தாள் – சிறங்கணித்தாள்
(சிறங்கணித்தல் – சுருங்குதல்) –
சீரல்ல – தங் குடிமைக்கொவ்வாத
இளிவரவுகள் – 662
சூழ்ச்சி – விசாரம் – 671
செம்மல் – தருக்கு – 880
செம்மாக்கும் – இறுமாக்கும் – 1074
செயிர்ப்பவர் – பகைப்பவர் – 880
செய்கலான் – செய்யான் – 848
செய்தாங்கு – செய்தாற்போல – 803
செய்வல் – செய்யக் கடவேன் – 1023
செருக்கி – களித்து –
செல்லும்வாய் – ஏற்றவற்றை – 673
செவ்வியான் – செம்மையுடையவன் –
செறினும் – தடுப்பினும் – 778
சேண் – உயர்ந்த, தொலைவில் அமைந்த
சொல்லாவிடல் – சொல்லாது விடுக – 697
சோரார் – வழுப்படச் சொல்லார் – 721
சோர்விலாள் – பிறர்க்குச் செய்யும்
அறவினைகளிலும்
தளர்ச்சியில்லாதவள்
தகைமாண்ட – ஆற்றல் மாட்சிமைப்பட்ட – 897
தகையவாய் – குணங்களை விரும்பித்தழுவி – 643
தஞ்சம் எளியன் – மிக எளியன் – 863
தணிக்கும் – தீர்க்கும் – 948
தண்டா – தணியா –
தந்நலம் – தம்புகழ் – 916
தரற்கு – வருவிழ்தற்கு – 859
தலைப்பிரிதல் – நீங்குதல் – 955
தலைவந்த – தன்மேல்வந்த – 767
தவல் – நிலைதாழ்தல் – 856
தள்ளா – குன்றாத – 731
தறுகண் – பகைவர்மேற் கண்ணோடாது
செய்யும் மறம் –
தற்று –ஆடைத் தற்றுக் கொண்டு
(தற்றுதல் இறுக உடுத்தல்) – 1023
தார் – தூசிப்படை – 767
தாழ்ச்சி – நீட்டிப்பு – 671
தாழ்விலா – கேடில்லாத – 731
திட்பம் – திண்மை – 661
திரிந்தற்று – கெட்டாற் போலும் – 1000
திருநுதல் – அழகியநுதல் – 1011
திருவுடையார் – நன்மையுடையர் – 1072
திறப்பாடு – முடித்தற்கேற்ற கூறுபாடு – 640
தீர்வாம் – நீக்கக்கடவேம் – 1063
துஞ்சல் – உறங்கல் – 1049
துஞ்சினார் – உறங்கினார் – 926
துணிவு – கலங்காமை – 666
துய்க்க – உண்க – 944
தூஉஇயற்று – நாடுதலையொக்கும் – 929
துலையல்லார் – இழிந்தார் (துலை – ஒப்பு) – 686
துவர – மிக, முற்ற – 944, 1050
துவ்வான – வலியிலன் –
துளக்கற்ற – நுகரக்கருதாய் நிலைபெற்ற – 699
துவ்வான் – வலியிலன் – 842
துளக்கற்ற – நிலைபெற்ற – 699
துறவாமை முற்றத்துறத்தலேயாகவும் அது
செய்யா தொழிதல் – 1050
துனி – வெறுப்பு, புலவி – 769, 1294
தூக்கம் – நீட்டித்தல் – 668
தூங்கற்க – நீட்டியா தொழிக – 672
தூங்காது – நீட்டியாது – 672
தூங்குக – நீட்டிக்க – 672

தூவாத – வெய்யசொற்கள் – 685
தெண்ணீர் – தெளிந்தநீர் – 1065
தெவ் –பகைவர் – 639
தேர்ச்சி – சூழ்ச்சி – 635
தேறற்பாற்றன்று – நம்பத்தக்க முறைமைத்தன்று – 825
தேற்றுதல் – தெளிவித்தல் –
தொகை – தொகுதி – 711
தொல்லை – பழமை – 806
தொல்வரவும் – பழைய குடிவரவினையும் – 1043
தொழுதேத்தும் – கும்பிட்டு வழுத்தும் – 970
தோயார் – தீண்டார் – 914
நகல் – நட்பு – 860
நசை – ஆசை – 1043
நடுக்கற்ற – அசைவில்லாத தெளிந்த – 654
நணித்து – மிக நெருங்கியனவாம் – 856
நயம் – ஈரம், உவகை – 998, 314
நவில்தொறும் – கற்குந்தோறும் – 783
நள்ளா – பொருந்தாது –
நற்பாலவை – தூயவினையான் வந்த பொருள்கள் – 659
நற்பொருள் – மெய்ந்நூற் பொருள் – 1046
நனைகவுள் – மதத்தால் நனைந்தகன்னம் – 678
நன்றறிவார் – நன்மையானவற்றை அறிவார் – 1073
நாணாள்பவர் – நாணை உயிர்நாடிப் பண்பாகக் கொள்பவர் – 1017
நாநலம் – நாவின் நன்மையும் வன்மையும் – 641
நாரின்மை – அன்பின்மை – 833
நார் – அன்பு – 833
நிரந்தவர் – நிரல்படக் கோத்து கூடியொழுகுவார் – 821
நிரந்து – ஒழுங்காக வரிசைப்படுத்தி – 648
நிலைமக்கள் – போரின்கண் நிலையுடைய வீரர் – 770
நில்லன்மின் – நிற்றலை யொழிமித் தவிர்க்க – 771
நீழலவர் – ஈரநெஞ்சத்தாரான உழவர் – 1034
நுட்பம் – நுண்ணறிவு – 636
நுண்ணியம் – யாம் நுண்ணறிவுடையேம் – 710
நோதக்க – வருந்தத்தக்கனவற்றை – 805
நோற்கிற்பவர் – பொறுப்பவர் –
பக்குவிடும் – பிளந்துபோம் – 1068
பட்டன்று – கிடந்தது – 999
பட்டி – பட்டி (பட்டி போன்று வேண்டியவாறு ஒழுகல்) – 1074
பண்பிலது – தீமை பயப்பது – 871
பண்பிலார் – தீக்குணமுடையார் – 811
பண்பின்மை – தீக்குணம் – 851
பதி – இடம் – 1015
பயமிலர் – பயன்படுதலிலர் – 728
பயில்தொறும் – பயிலுந்தோறும் – 783
பழுதெண்ணும் – பிழைப்பவெண்ணும் – 639
பற்றா – வெறுப்பன – 852
பற்றாற்றி – பற்றிய இடம் விடாதே நின்று – 748
பாடிலர் – ஆண்மையிலர் – 906
பாரிக்கும் – வளர்க்கும் – 851
பிழைத்தது – தப்பியவாறு – 779
பீழிக்கும் – வருத்தும் – 843
பீழை – துன்பம் – 658
புணர்ச்சி – ஒரு தேயத்தராதல் – 785
புரளவிடல் – கழிய விடுக – 755
புல்லற்பாற்று – பொருந்தற்பான்மை யுடைத்து – 829
பூரியர் – கீழ்மக்கள் – 919
பெட்டக்கதாகி – விரும்பத்தக்கதாய் – 732
பெட்டாங்கு – வேண்டியவாறு – 908
பெயரார் – திரியார் – 989
பெய்தீரீஇயற்று – நீரைப் பெய்து அதற்கேமஞ் யெத்தனோ டொக்கும் – 660

பெருந்தகைமை – உயர்குடிப்பிறப்பு – 968
பைய – மெல்ல – 1068
பொன்றாமை – இறவாமை – 886
போகவிடல் – கைவிடுதல் – 831
மட்பகை – மட்கலத்தை அறுக்குங் கருவி, மண்ணைப் பகுக்குங் கருவி – 883
மதிநுட்பம் – இயற்கையாகிய நுண்ணறிவு – 636
மருட்டியற்று – மயக்கினாற் போலும் – 1020
மருவுக – பயில்க – 800
மலைந்து – செய்து – 657
மறவர் – வீரர் – 778
மறுமையிலாளன் – மறுமைப்பயன் இல்லாதான் – 904
மனத்திட்பம் – மனத்தினது திண்மை –661
மன்னிய – நிலைபெற்ற – 692
மாசற்ற – குற்றம் அற்ற – 649
மாணாத – ஏலாதன – 867
மாணார் – பகைவர் – 823
மாறல்ல – மாறுகொள்ளாத – 944
மாற்றலர் – பகைவர் – 749
மிகப்பட்டு – தான் மேம்பட்டுத் தன்மிகுதி காட்டி – 1074
முதுவர் – தம்மின் மிக்கார் – 815
முரிந்து – இழந்து – 899
மெய்வேல் – தன்மார்பின்கண் நின்ற வேல் – 774
மேவற்க – மேலிட்டுக் கொள்ளற்க – 877
மையல் – மயங்குதல் – 838
யாக்க – செய்க – 763
யாங்கணும் – எவ்விடத்தும – 864
வல்லரண் – அழியாத நகரி – 737
வறங்கூர்ந்தனையது – வறுமை மிக்காற் போல்வதோர் இயல்பினது – 1010
வன்கணது – தறுகண்மைமையுடையது – 764
வன்பாட்டது – வலிமைப்பாடுடையது –1063
விதிரார் – தெறியார் – 1077
விழைதகை – விழையப்படுந்தன்மை – 804
விளித்தற்று – அழைத்தால் ஒக்கும் – 894
வினையாண்மை – வினையை ஆளுந்தன்மை – 904
வீற்றிருக்கை – அரசிருக்கை – 789
வெறுத்தக்க – செறியத்தக்க – 993
வேலி – ஏமம் – 1016

# திருக்குறள்
## பாட்டு முதற்குறிப்பு அகரவரிசை

(எண் குறள் எண்ணைக் குறிக்கும்)

வைகல் – நாடோறும்

வையகம் – உலகம்


| | |
|---|---|
| அகடாரார் | 938 |
| அகப்பட்டி | 1074 |
| அகலா தணுகாது | 691 |
| அங்கணத்துள் உக்க | 720 |
| அச்சமே கீழ்கள | 1075 |
| அஞ்சும் அறியான் | 863 |
| அடல்தகையும் | 768 |
| அஅடுக்கிய கோடி | 954 |
| அடுத்தது காட்டும் | 706 |
| அணியன்றோ | 1014 |
| அமரகத் தாற்றறுக்கும் | 814 |
| அமரகத்து வன்கண்ணர் | 1027 |
| அரம்பொருத | 888 |
| அரம்போலும் | 997 |
| அருட்செல்வஞ் | – |
| அருமறை | 847 |
| அருளென்னும் | 757 |
| அருளொடும் | 755 |
| அவையறிந் | 711 |
| அவையறியார் | 713 |
| அழக்கொண்ட | 659 |
| அழச்சொல்லி | 795 |
| அழிவந்த | 807 |
| அழிவி னவைநீக்கி | 787 |
| அழிவின் றறைபோகா | 764 |
| அறஞ்சாரா | 1047 |
| அறவினையும் ஆன்ற | 909 |
| அறனறிந் தான்றமைந்த | 635 |
| அறனீனும் இன்பமும் | 754 |
| அறிகொன் றறியான் | 638 |
| அறிவிலார் தாந்தம்மை | 843 |
| அறிவிலான் நெஞ்சுவந் | 842 |
| அறிவின்மை | 841 |
| அறிவுரு வாராய்ந்த | 684 |
| அறைபறை | 1076 |
| அற்றதறிந்து | 944 |
| அற்றம் மறைக்கும் | 980 |
| அற்ற மறைத்தலோ | 846 |
| அற்றார்க்கொன் | 1007 |
| அற்றால்அளவறிந் | 943 |
| அன்பறிவாராய்ந்த | 682 |
| அன்பிலன் ஆன்ற | 862 |
| அன்பின்விழையார் | 911 |
| அன்புடை – இவ் | 992 |
| அன்புடை – ல்வேந் | 681 |
| அன்புநாண் – ஒப்புரவு | 983 |
| அன்பொரீஇத் | 1009 |
| ஆக்கமுங்கேடும் | 642 |
| ஆங்கமை | 740 |
| ஆயும் அறிவினர் | 918 |
| ஆய்ந்தாய்ந்து | 792 |
| ஆவிற்கு நீரென் | 1066 |
| ஆள்வினையும் | 1022 |
| ஆற்றின் அளவறிந்து | 725 |
| ஆற்றின் நிலைதளர்ந் | 716 |
| ஆற்று பவர்க்கும் | 741 |
| ஆற்றுவா – இக | 891 |
| ஆற்றுவா – ல்பணித | 985 |

| | |
|---|---|
| இகலானாம் | 860 |
| இகலிற் கெதிர் | 858 |
| இகலின் மிகலினி | 856 |
| இகலெதிர் | 855 |
| இகலென்ப | 851 |
| இகலென்னும் | 853 |
| இகல்காணான் | 859 |
| இகழ்ந்தெள்ளா | 1057 |
| இடமெல்லாம் | 1064 |
| இடுக்கண் படினும் | 654 |
| இடுக்கண்கால் | 1030 |
| இடும்பைக்கே | 1029 |
| இடைதெரிந்து | 712 |
| இணரூழ்த்து | 650 |
| இமையாரின் | 906 |
| இரக்க இரத்தக்கார்க் | 1051 |
| இனம்போன் | 822 |
| இனையர் இவரெமக் | 790 |
| இன்பத்துள் இன்பம் பயக்கும் | 854 |
| இன்பம் ஒருவற் | 1052 |
| இன்மை இடும்பை | 1063 |
| இன்மையின் இன்னாத | 1041 |
| இன்மை எனவொரு | 1042 |
| இன்மை ஒருவற் | 988 |
| இன்றி அமையாச் | 961 |
| இன்றும் வருவது | 1048 |
| இன்னாசெய் தார்க்கும் | 987 |
| ஈட்டம் இவறி | 1003 |
| ஈர்ங்கை விதிரார் | 1077 |
| ஈவார்கண்என்னுண்டாம் | 1059 |
| ஈன்றாள் முகத்தேயும் | 923 |
| ஈன்றாள் பசிகாண்பான் | 656 |
| உடம்பா டிலாதவர் | 890 |
| உடுக்கை இழந்தவன் | 788 |
| உடுப்பதூஉம் | 1079 |
| உடைசெல்வம் | 939 |
| உட்கப் படாஅர் | 921 |
| உட்பகை அஞ்சித் | 883 |
| உணர்வ துடையார் | 718 |
| உண்டார்க ணல்ல | 1090 |
| உண்ணற்க | 922 |
| உயர்வகலந் | 743 |
| உயிர்ப்ப உளரல்லர் | 880 |
| உருவுகண் | 667 |
| உருளாயம் | 933 |
| உலகத்தார் உண்டென்ப | 850 |
| உலைவிடத் | 762 |
| உழவினார் | 1036 |
| உழுதுண்டு | 1033 |
| உழுவார் உலகத்தார்க் | 1032 |
| உளரெனினும் | 730 |
| உள்ளற்க | 798 |
| உள்ளொற்றி | 927 |
| உறல்முறையான் | 855 |
| உறினட் | 812 |
| உறினுயிர் அஞ்சா | 778 |
| உறுபசியும் | 734 |
| உறுபொருளும் | 756 |
| உறுப்பமைந் | 761 |
| உறுப்பொத்தல் | 993 |
| உறுவது | 813 |
| உறைசிறியார் | 680 |
| உற்றவன் | 950 |
| உற்றான் அளவும் | 949 |
| ஊணுடை | 1012 |
| ஊதியம் என்ப | 797 |
| ஊழி பெயரினும் | 989 |
| ஊறொரால் | 662 |
| ஊனைக்குறித்த | 1013 |
| எச்சமென் | 1004 |
| எட்பக வன்ன | 889 |
| எண்சேர்ந்த | 910 |
| எண்ணிய எண்ணியாங் | 666 |
| எண்பதத்தால் எய்தல் | 991 |
| எப்பொருளும் | 695 |
| எரியாற் சுடப்படினும் | 896 |
| எல்லாப் பொருளும் | 746 |
| எல்லைக்கண் நின்றார் | 806 |

| | |
|---|---|
| எற்றிற் குரியர் | 1080 |
| எற்றென் | 655 |
| எனைத்திட்ப | 670 |
| எனைத்துங் | 820 |
| எனைமாட்சித் | 750 |
| என்றும் ஒருவுதல் | 652 |
| என்னைமுன் | 771 |
| ஏதம் பெருஞ்செல்வம் | 1006 |
| ஏதிலார் ஆரத் | 837 |
| ஏந்திய கொள்கையார் | 899 |
| ஏமுற்றவரினும் | 873 |
| ஏரினும் நன்றால் | 1038 |
| ஏவவுஞ் செய்கலான் | 848 |
| ஐயப்படாஅ | 702 |
| ஒட்டார்பின் | 967 |
| ஒண்பொருள் | 760 |
| ஒருமைச் | 835 |
| ஒருமை மகளிரே | 974 |
| ஒலித்தக்கால் | 763 |
| ஒல்லுங் கருமம் | 818 |
| ஒல்லுமவா யெல்லாம் | 673 |
| ஒழுக்கமும் | 952 |
| ஒளியார்முன் | 714 |
| ஒளியொருவற் | 971 |
| ஒன்றாமை | 886 |
| ஒன்றெய்தி | 932 |
| ஓஒ இனிதே | 653 |
| ஓதி உணர்ந்தும் | 834 |
| கடனறிந்து | 687 |
| கடனென்ப | 981 |
| கடிந்த கடிந்தொரார் | 658 |
| கடைக்கொட்கச் | 663 |
| கரப்பவர்க் | 1070 |
| கரப்பிடும்பை | 1056 |
| கரப்பிலா நெஞ்சிற் | 1053 |
| கரப்பிலார் | 1055 |
| கரவா துவந்தீயும் | 1061 |
| கருமம் செயவொருவன் | 1021 |
| கருமணியிற் | 1123 |
| கருமத்தால் நாணுதல் | 1011 |
| கருவியும் காலமும் | 631 |
| கலங்காது கண்ட | 668 |
| கல்லாத மேற்கொண் | 845 |
| கல்லா தவரிற் | 729 |
| கல்லான் வெகுளும் | 870 |
| கவறும் கழகமும் | 935 |
| கழாஅக்கால் | 840 |
| களித்தறியேன் | 928 |
| களித்தானைக் | 929 |
| கள்ளுண்ணாப் | 930 |
| கற்றதனால் ஆய | – |
| கற்றறிந்தார் | 717 |
| கற்றாருள் கற்றார் | 722 |
| கற்றார்முன் | 724 |
| கற்றுக்கண் | 686 |
| கனவினும் இன்னாது | 819 |
| காணாச்சினத்தான் | 866 |
| காணாதான் | 849 |
| கான முயலெய்த | 772 |
| குடிசெய்வல் | 1023 |
| குடிசெய்வார்க் | 1028 |
| குடிப்பிறந்தார் | 957 |
| குடிப்பிறந்து தன்கண் | 794 |
| குணநலஞ் | 952 |
| குணனிலனாய் | 868 |
| குணனும் குடிமையும் | 793 |
| குலஞ்சுடும் | 1019 |
| குறித்தது | 704 |
| குறிப்பறிந்து | 696 |
| குறிப்பிற் குறிப்புணரா | 705 |
| குறிப்பிற் குறிப்புணர் | 703 |
| குற்றம் இலனாய்க் | 1025 |
| குன்றன்னார் | 898 |
| குன்றின் அனையாரும் | 965 |
| குன்றேறி | 758 |
| கூறாமை நோக்கிக் | 701 |
| கூற்றத்தைக் | 894 |
| கூற்றமோ | 1085 |

| | | | |
|---|---|---|---|
| கூற்றுடன்று | 765 | செறுவார்க்குச் | 869 |
| கெடல்வேண்டிற் | 893 | சொலல்வல்லன் | 647 |
| கெடாஅ வழிவந்த | 809 | சொல்லுக சொல்லைப் | 645 |
| கெடுங்காலைக் | 799 | சொல்லுதல் | 664 |
| கேடறியாக் | 736 | சொல்லப் பயன்படுவர் | 1078 |
| கேட்டார்ப் | 643 | சொல் வணக்கம் | 827 |
| கேட்டினும் | 796 | தந்நலம் | 916 |
| கேளிழுக்கங் | 808 | தம்தலையின் இழிந்த | 964 |
| கையறி யாமை | 925 | தள்ளா விளையுளும் | 731 |
| கைவேல் களிற்றொடு | 774 | தன் றுணை இன்றால் | 875 |
| கொடுத்துங் | 867 | தார்தாங்கிச் | 767 |
| கொடுப்பதூஉம் | 1005 | திறனறிந்து | 644 |
| கொடும்புருவம் | 1086 | தீயள வன்றித் | 947 |
| கொல்லா நலத்தது | 984 | துஞ்சினார் | 926 |
| கொளப்பட்டேம் | 699 | துணைநலம் ஆக்கந் | 651 |
| கொளற்கரிதாய்க் | 745 | துப்புர வில்லார் | 1050 |
| சலத்தாற் | 660 | துன்பம் உறவரினுஞ் | 669 |
| சலம்பற்றிச் | 956 | தூங்குக | 672 |
| சால்பிற்குக் | 986 | தூய்மை துணைமை | 688 |
| சான்றவர் | 990 | தெண்ணீர் அடுபுற்கை | 1065 |
| சிறியார் உணர்ச்சியுள் | 976 | தெரிதலுந் | 634 |
| சிறுகாப்பிற் | 744 | தேவ ரனையர் | 1073 |
| சிறுமை பலசெய்து | 934 | தேறினுந் | 876 |
| சிறுமையும் | 769 | தொகச்சொல்லித் | 685 |
| சீரிடங் காணின் | 821 | தொடிப்புழுதி | 1037 |
| சீரினுஞ் சீரல்ல | 962 | தொல்வரவும் | 1043 |
| சீருடைச் செல்வர் | 1010 | தொழுதகை | 828 |
| சுழலும் இசைவேண்டி | 777 | நகல்வல்லர் | 999 |
| சுழன் றுமேர்ப் பின்ன | 1031 | நகுதற் பொருட்டன் று | 784 |
| சூழாமல் தானே | 1024 | நகையீகை | 953 |
| சூழ்ச்சி முடிவு | 671 | நகையுள்ளும் | 995 |
| செப்பின் புணர்ச்சி | 887 | நகைவகைய | 817 |
| செயற்கரிய யாவுள | 781 | நச்சப் படாஅதவன் | 1008 |
| செயற்கை அறிந்தக் | 637 | நட்டார் குறைமுடியார் | 908 |
| செய்க பொருளைச் | 759 | நட்டார்க்கு | 679 |
| செய்தேமஞ் | 815 | நட்டார்போல் | 826 |
| செய்வினை | 677 | நட்பிற்கு வீற்றிருக்கை | 789 |
| செல்லான் | 1039 | நட்பிற் குறுப்புக் | 802 |
| செவிச்சொல்லுஞ் | 694 | நண்பாற்றார் | 998 |

| | |
|---|---|
| நயனொடு | 994 |
| நலத்தின்கண் | 958 |
| நலம்வேண்டின் | 960 |
| நல்குர வென்னும் | 1045 |
| நல்லாண்மை | 1028 |
| நவில்தொறும் | 783 |
| நற்பொருள் | 1046 |
| நன்றறி வாரிற் | 1072 |
| நன்றென் றவற் | 715 |
| நாடாது நட்டலிற் | 795 |
| நாடென்ப | 739 |
| நாணகத் தில்லார் | 1020 |
| நாணாமை | 833 |
| நாணால் உயிரைத் | 1017 |
| நாணென்னும் | 924 |
| நாண்வேலி | 1016 |
| நாநல | 641 |
| நிலத்திற் | 959 |
| நிலைமக்கள் | 770 |
| நிழல்நீரு மின்னாத | 881 |
| நிறைநீர | 782 |
| நிறைநெஞ்சம் | 917 |
| நீங்கான் வெகுளி | 864 |
| நுண்ணியம் என்பார் | 710 |
| நூலாருள் நூல்வல்லன் | 683 |
| நெருப்பினுள் | 1049 |
| நோய்நாடி | 948 |
| நோவற்க | 877 |
| பகல்கருதிப் | 852 |
| பகைநட்பாக் | 874 |
| பகைநட்பாங் | 830 |
| பகைமையும் | 709 |
| பகையகத்துச் சாவார் | 723 |
| பகையகத்துப் பேடிகை | 727 |
| பகையென்னும் | 871 |
| பணியுமாம் என்றும் | 978 |
| பண்பிலான் | 1000 |
| பண்புடையார்ப் | 996 |
| பயன்தூக்கிப் | 912 |
| பருகுவார் | 811 |
| பலகுடை நீழலும் | 1039 |
| பலசொல்லக் | 649 |
| பலநல்ல கற்றக் | 823 |
| பல்குழுவும் | 735 |
| பல்லவை கற்றும் | 728 |
| பழகிய செல்வமும் | 937 |
| பழகிய நட்பெவன் | 803 |
| பழிமலைந் | 657 |
| பழுதெண்ணும் | 639 |
| பழைமை எனப்படுவ | 801 |
| பழையம் எனக்கருதிப் | 700 |
| பிணியின்மை | 738 |
| பிரித்தலும் | 633 |
| பிறப்பொக்கும் | 972 |
| பிறர்நாணத் | 1018 |
| பிறர்பழியும் | 1015 |
| புகழின்றால் | 966 |
| புணர்ச்சி பழகுதல் | 785 |
| புரந்தார்கண் | 780 |
| புல்லவையுள் | 719 |
| புறங்கூறிப் | |
| பெண்ணேவல் | 907 |
| பெரிதினிது | 839 |
| பெரியாரைப் | 892 |
| பெருக்கத்து | 963 |
| பெருமை பெருமிதம் | 979 |
| பெருமை உடையவர் | 975 |
| பெரும்பொருளாற் | 732 |
| பேணாது பெண்விழைவான் | 902 |
| பேதை பெருங்கெழீஇ | 816 |
| பேதைமையுள் | 832 |
| பேதைமை என்பதொன் | 831 |
| பேதைமை ஒன்றோ | 805 |
| பேராண்மை | 773 |
| பொதுநலத்தார் | 915 |
| பொய்படும் ஒன்றோ | 836 |
| பொருட்பெண்டிர் | 913 |
| பொருட்பொருளார் | 914 |

| | |
|---|---|
| பொருளல் லவரைப் | 751 |
| பொருளானாம் | 1002 |
| பொருளென்னும் | 753 |
| பொருள்கருவி | 675 |
| பொருள்கெடுத்துப் | 938 |
| பொறையொருங்கு | 733 |
| போற்றின் அரியவை | 693 |
| மக்களே போல்வர் | 1071 |
| மணிநீரும் மண்ணும் | 742 |
| மதிநுட்ப | 636 |
| மயிர்நீப்பின் | 969 |
| மருந்தென | 942 |
| மருந்தோமற் | 968 |
| மருவுக மாசற்றார் | 800 |
| மறமானம் மாண்ட | 766 |
| மனத்தின் அமையா | 825 |
| மனமாணா உட்பகை | 884 |
| மனையாளை | 904 |
| மனைவிழைவார் | 901 |
| மன்னர் விழைப | 692 |
| மாறுபா டில்லாத | 945 |
| மிகச்செய்து | 829 |
| மிகல்மேவல் | 857 |
| மிகினும் குறையினும் | 941 |
| முகத்தின் இனிய | 824 |
| முகத்தின்முதுக்குறைந்த | 707 |
| முகநக நட்பது | 756 |
| முகநோக்கி | 708 |
| முடிவும் இடையூறும் | 676 |
| முறைப்படச் | 640 |
| முற்றாற்றி | 748 |
| முற்றியு முற்றா | 747 |
| முனைமுகத்து | 749 |
| மேலிருந்தும் | 973 |
| மையல் ஒருவன் | 838 |
| யாண்டுச்சென் | 895 |
| வகைமாண்ட | 897 |
| வகையறிந்து தற்செய்து | 878 |
| வகையறிந்து வல்லவை | 721 |
| வரைவிலா மாணிழை | 919 |
| வலியார்க்கு | 861 |
| வழங்குவ | 955 |
| வழிநோக்கான் | 865 |
| வன்கண் குடிகாத் | 632 |
| வாளொடென் | 726 |
| வாள்போல் | 882 |
| விடுமாற்றம் | 689 |
| விரைந்து | 648 |
| வில்லேர் உழவர் | 872 |
| விழித்தகண் | 775 |
| விழுப்புண் | 776 |
| விழைதகையான் | 804 |
| விழையார் | 810 |
| வினைபகை | 674 |
| வினைத்திட்பம் | 661 |
| வினையான் | 678 |
| வீறெய்தி | 665 |
| வெகுளி | |
| வெண்மை | 844 |
| வேட்பத்தாஞ் | 646 |
| வேட்பன | 697 |
| வேண்டற்கவென் | 931 |
| வைத்தான்வாய் | 1001 |